இனிமேல் ஶேஷத்வத்துக்குப் புறம்பான ஆத்மாவையும் அநாத3ரிக்கிறவர்களுக்கு ஔபாதி4கமான வர்ணுதி3களை அநாத3ரிக்கச் சொல்லவேணுமோ? என்கிறுர் (ஶேஷத்வேத்யாதி3). ''ந தே3ஹம் ந ப்ராணுந் ந ச ஸுக2மஶேஷாபி4லஷிதம் ந சாத்மாநம் நாந்யத் கிமபி தவ ஶேஷத்வவிப4வாத் । ப3ஹிர்பூ4தம் நாத2 க்ஷணமபி ஸஹே யாது ஶததா4 விநாஶம் தத் ஸத்யம் மது4மத2ந விஜ்ஞாபநமித3ம்'' (ஸ்தோ. ர. 57) என்று - தேவரீருடைய ஶேஷத்வத்துக்குப் புறம்பான தே3ஹாதி3கள் ஒன்றையும் ஸஹியேன்; அவ்வளவேயன்றியிலே ஜ்ஞாநாநந்த3மயமான ஆத்மவஸ்துவையும் ஸஹியேன்; அது ஶதத4ாவாக விநாஶத்தை அடைவுதாக. இது - அஹ்ருத3யமன்று, ஸத்யம். இது அஸத்யமாகில் தேவரீர்ஸந்நிதி4யில் அஸத்யம் சொன்ன மது4 பட்டது படக்கடவேன்

என்று மோக்ஷத்வத்துக்குப் புறம்பானபோது "ஜ்ஞாநாநந்த₃மயஸ்த்வாத்மா" (பாஞ்ச.) என்று ஜ்ஞாநாநந்த₃மயனையும் ஸஹியாதவர்கள், மோக்ஷத்வஜ்ஞாநவிரோதி₄யான அஹங்காரத்துக்கு ஹேதுவாகையாலே த்யாஜ்யமாய், கர்மமடியாக வருவதொன்ருகையாலே ஔபாதி₄கமான வர்ணத்தை ஆத₃ரியார்களென்னுமிடம் சொல்லவேணுமோ? என்கிருர். (88)

89. இதின் ஔபாதி₄கத்வம் ஒரு ராஜா தன்னை மறைமுனிவனுக்கினவன் நீசனுக்குவித்த ராஜாவை வாரே உறுப்பாக யஜிப்பித்து ஸ்வர்க்க₃மேற்றினபோதே தெரியும்.

இந்த வர்ணத்தினுடைய ஔபாதி₄கத்வத்தை உத₃ாஹரணமுக₂த்தாலே வெளியிடுகிருர் (ஒரு ராஜா என்று தொடங்கி). குஶிகவம்ஶோத்₃ப₄வனும் ராஜாவான விஶ்வாமித்ரன் ப்₃ரஹ்மர்ஷித்வத்தை ஆசைப்பட்டு நெடுங்காலம் தபஸ்ஸு பண்ணின தன்னை "மந்திரங்கொள் மறைமுனிவன்" (பெருமா.தி.10 - 2) என்னும்படி ப்₃ரஹ்மர்ஷியாக்கின வஸிஷ்ட₂ன், தன்னுடைய வார்த்தாதிலங்க₄நம் பண்ணின த்ரிஶங்குவைத் தன் புத்ரர்களுடைய ஶாபத்தாலே மார்விலிட்ட யஜ்ஞோபவீதந்தானே வாராம்படி சண்ட₃ாளனுக்குவிக்க, அந்த த்ரிஶங்குவையும் அந்த வாரே யஜ்ஞாங்க₃மான உறுப்புத்தோலாம்படித் தன்னுடைய தபோப₃லத்தாலே யஜிப்பித்து ஸ்வர்க்க₃ாரோஹணம் பண்ணுவித்த போதே வர்ணம் கர்மோபாதி₄கம் என்னுமிடம் ஸுவ்யக்தமென்கிருர்.

ஆக இத்தால் ஒரு க்ஷத்ரியன் ப்₃ரஹ்மர்ஷியானனென்றும், ஒரு க்ஷத்ரியன் சண்டாளனுனென்றும், அந்த சண்டாளனுனவனை அந்த ப்₃ரஹ்மர்ஷியானவன் தபோப₃லத்தாலே ஸ்வர்க்க₃மேற்றினுன் என்றும் சொல்லுகையாலே வர்ணம் ஔபாதி₄கம் என்னுமிடம் ஸுஸ்தி₂ரமாய்த்து. (89)

90. மாவுருவில் கள்ளவேடம், திருந்துவேதமலமான மானிடம்பாடல், ஸர்வவர்ணஶைத்₃ரத்வம், காடுவாழ்சாதியில் கடல்வண்ணன் வேடம், தென்னுரையில் ஹரிகீர்த்தி, ஶ்வபசரில் பத்திபாசனமும் அறிவார் ஆரார் அமரரென்ன ஏற, அறியாதார் சாதியந்தணர்களேலும் தகரவிழுவர்.

ஆக, கீழ் ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ஜ்ஞாநரஹிதமான உத்க்ருஷ்டஜந்மம் அபக்ருஷ்டமாகையாலே அதினளவிலே நிற்கிற ப்ரமாதாக்கள் அநுபாதே₃யரென்றும், ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ஜ்ஞாநமுக₂த்தாலே அபக்ருஷ்டஜந்மம் உத்க்ருஷ்டஜந்மமாகையாலே அதிலே நிற்கிற ப்ரமாதாக்கள் உபாதே₃யரென்றும் சொல்லாநின்றது. இனிமேல் ப்ரமாதாக்களளவேயன்றிக்கே ப்ரமாண-ப்ரமேய-ப்ரமாதாக்கள் மூன்றிலும் த்யாஜ்யமுமுண்டு, உபாதே₃யமுமுண்டு; அப்படி உபாதே₃யமான ப்ரமாண-ப்ரமேயங்களோடு விகல்பிக்கலாம்படியான அந்த ப்ரமாதாக்களுடைய வைப₄வத்தை ப்ரமாணங்களும் ப்ராமாணிகரும்

சொல்லாநிற்க, அத்தை அறியாதே மந்த$_3$மதிகளாய்க்கொண்டு ஜந்மநிரூபணம் பண்ணுமவர்கள் அத$_4$:பதிப்பர்களென்று கீழே "வீட்டின்பவின்பப்பாக்களில் த்$_3$ரவ்ய-ப$_4$ாஷாநிரூபணஸமம் இன்பமாரியிலாராய்ச்சி" என்று உபக்ரமித்த அர்த்த$_2$த்தை நிக$_3$மிக்கிறார் (மாவுருவில் கள்ளவேடம் என்று தொடங்கி).

"எம்மாவுருவும் வேண்டுமாற்றலாவாயெழிலேறே" (திருவா. 5 - 8 - 2) 'எவ்வுருவும் மாவுரு' என்று அவன் பரிக்$_3$ரஹித்த விக்$_3$ரஹமெல்லாம் அப்ராக்ருதமாயிருக்குமென்றும், "இச்ச$_2$ாக்$_3$ருஹீதாபி$_4$மதோருதே$_3$ஹ:" (வி.பு. 6 - 7 - 84) என்று இச்சையாலே பரிக்$_3$ருஹீதமாயிருக்குமென்றும் சொல்லுகிற விக்$_3$ரஹங்களில்வைத்துக்கொண்டு "கள்ள வேடத்தைக்கொண்டுபோய்ப்புரம்புக்கவாறும்" (திருவா. 5 - 10 - 4) என்று, "யத$_2$ா ஹி சோரஸ்ஸ தத$_2$ா ஹி பு$_3$த்$_3$த$_4$:" (ரா.அ. 109 - 73) என்று வேத$_3$த்துக்கு அப்ராமாண்யம் சொல்லுகிற பு$_3$த்$_3$த$_4$முனியான விக்$_3$ரஹமும்,

(திருந்துவேதம்) ஸகலஶப்$_3$த$_3$ங்களும் ஸத்$_3$வாரகமாகவும், அத்$_3$வாரகமாகவும் ஸர்வேஶ்வரனை ப்ரதிபாதி$_3$க்கையாலே கட்டளைப்பட்ட வேத$_3$த்தில் (மலமான மானிடம் பாடல்) "ஓர் மானிடம் பாடலென்னுவதே" (திருவா. 3 - 9 - 3) என்றும், "ந ஸ்மர்த்தவ்யோ விஶேஷேண வேத$_3$மந்த்ரோப்யவைஷ்ணவ: । காவ்யாலாபோபி ஜப்யோஸௌ யத்ர ஸங்கீர்த்யதேச்யுத:" என்றும் சொல்லுகிறபடியே ஹேயரான க்ஷேத்ரஜ்ஞரை ப்ரஶம்ஸிக்கிற வாக்யங்களும்,

(ஸர்வவர்ணஶ்ரேஷ்ட$_3$ரத்வம்) "ந ஶூத்$_3$ரா ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தா விப்ரா ப$_4$ாக$_3$வதாஸ்ஸ்ம்ருதா: । ஸர்வவர்ணேஷு தே ஶூத்$_3$ரா யே ஹ்யப$_4$க்தா ஜநார்த்த$_3$நே" என்று ப$_4$க$_3$வத்$_3$-ப$_4$க்தனல்லாதவன் எல்லா வர்ணங்களிலும் ஶூத்$_3$ரனென்றும், ப்ரமாண-ப்ரமேய-ப்ரமாதாக்கள் மூவரிலும் த்யாஜ்யரையும் சொல்லி, இனிமேல் உபாதே$_3$யரையும் சொல்லுகிறது.

(காடுவாழ்சாதியில் கடல்வண்ணன்வேடம்) "கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான் காடுவாழ் சாதியுமாகப்பெற்றான்" (நா.திரு. 12 - 8) என்று கோ$_3$பாலனைக் கொண்டு காட்டிலே பசுக்களின்பின்னே "கறையினார்" (திருவா. 4 - 8 - 4) என்னும்படி பேணாதே திரியச்செய்தேயும் "கடல்வண்ணன் வேடத்தை வந்து காணீர்" (பெரியா.தி. 3 - 3 - 1) என்னும்படி பிறர்க்கும் அழைத்துக்காட்டவேண்டும்படி த்$_3$ரஷ்டவ்யமான க்ருஷ்ணவிக்$_3$ரஹமும், (தென்னுரையில் ஹரிகீர்த்தி) த்$_2$ராவிட$_3$ப$_4$ாஷாபரிகல்பிதமான ப்ரப$_3$ந்த$_4$ங்களில் வைத்துக்கொண்டு "ஹரிகீர்த்திம் விநைவாந்யத்" (மாத்ஸ்யே) இத்யாதி$_3$ப்படியே ப$_4$க$_3$வத்ப்ரதிபாத$_3$கமானவையும், (ஶ்வபசரில்) "ஶ்வபசோபி மஹீபால விஷ்ணுப$_4$க்தோ த்$_3$விஜாதி$_4$க:" (பாஞ்ச.) என்று ஶ்வபாகரேயாகிலும், (பத்தி பாசனமுமறிவார்) "பெறற்கரிய நின்னபாதபத்தியான பாசனம்" (திருச்ச.விரு. 100) என்று சொல்லுகிறபடியே ஸ்வயத்நத்தாலே பெறுதற்கரிதான ப$_4$க$_3$வச்சரணார-விந்த$_3$ங்களில் ப$_4$க்தியைத் தங்களுக்கு த$_4$நம் என்று அறியுமவர்களுமாகிற ப்ரமாண-ப்ரமேய-ப்ரமாதாக்கள் மூன்றும் உத்க்ருஷ்டதமம் என்றும் சொல்லி,

இந்த உத்க்ருஷ்டதமமான ப்ரமாணப்மேயங்களோடு விகல்பிக்கும்படியான இந்த ப்ரமாதாக்கள்வைப$_4$வத்தை (ஆராரமரரென்ன) "நீரார் முகில்வண்ணன் பேராரோதுவார் ஆராரமரரே" (திருவா. 10 - 5 - 8) என்று விலக்ஷணவிக்$_3$ரஹயுக்தனுன ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களை அநுஸந்திக்கவல்லவர்கள் ஏதேனுமொரு ஜந்மவ்ருத்தங்களை உடையரேயாகிலும் அவர்கள் நித்யஸூரிகள் என்றும், '(ஏற) "இலங்குவான் யாவருமேறுவர் சொன்னுலே" (திருவா. 3 - 8 - 11) என்று ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் அந்வயித்தவர்கள் ஆரேனுமாகிலும் தே$_3$ஶவிஶேஷப்ராப்தி பண்ணுவர்கள் என்றும்,

இப்படி ஸர்வோத்க்ருஷ்டராகச் சொல்லாநிற்க, (அறியதார்) ஜந்மாதி$_3$களால் வந்த அஹங்காரத்தாலே மந்த$_3$மதிகளாய்க்கொண்டு அவர்கள்வைப$_4$வத்தை அறியாதே ஜந்மநிருபணம் பண்ணுமவர்கள் (சாதியந்தணர்களேலும் தகரவிழுவர்) "அமரவோரங்கமாறும்" (திருமாலை 43) என்கிற பாட்டின்படியே "அநாசாராந் து$_3$ராசாராந் அஜ்ஞாத்ருந் ஹீநஜந்மந: । மத்$_3$ப$_4$க்தாந் ஶ்ரோத்ரியோ நிந்த$_3$ந் ஸத்$_3$யஶ்சண்ட$_3$ாளதாம் வ்ரஜேத்" என்றும் சொல்லுகிறபடியே உத்க்ருஷ்டஜந்மத்திலே பிறந்து அங்க$_3$ஸஹிதமான நாலு வேதங்களையும் அதி$_4$கரித்து ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தராயிருந்தார்களேயாகிலும் ஜந்மாதி$_3$களால் குறைய நின்று ப$_4$க$_3$வதீ$_3$யராயிருப்பாருடைய ஜந்மத்தை காத்$_3$ாசித்கமாகவாகிலும் நிருபித்தார்களாகில் அந்நிலையிலே அவர்கள் சண்ட$_3$ாளராவர் என்கையாலே பின்னை ஒருகாலும் உஜ்ஜீவநமில்லாதபடி அத$_4$:பதிப்பர்களென்கிறுர். "ஶூத்$_3$ரம் வா ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தம் நிஷாத$_3$ம் ஶ்வபசம் தத$_2$ா । ஈக்ஷதே ஜாதிஸாமாந்யாத் ஸ யாதி நரகம் நர:" என்றும், "ப்ரத்யக்ஷிதாத்மநாத$_2$நாம் நைஷாம் சிந்த்யம் குலாதி$_3$கம்" என்றும் சொல்லாநின்றதிறே. *(90)*

91. தமிழ்மாமுனிதி$_3$க்கு ஶரண்யமென்றவர்களாலே க்வசித் க்வசித் என்று இவராவிர்ப$_4$ாவம் கலியும் கெடும்போலே ஸூசிதம்.

இப்படி ப$_4$ாக$_3$வதஸாமாந்யத்தாலே ஆழ்வாருடைய உத்பத்தி நிருபிக்கலாகாது என்கிற மாத்ரமன்றிக்கே, ஆழ்வாருடைய அவதாரம் வ்யாஸஶுகாதி$_3$களாலும் ப்ரகாஶிப்பிக்கப் பட்டதென்கிறுர் மேல். (தமிழ்மாமுனிதி$_3$க்கு ஶரண்யமென்றவர்களாலே) "வண்டமிழ் மாமுனி" (பெருமா.தி. 10 - 5) "த$_3$க்ஷிணு தி$_3$க் க்ருதா யேந ஶரண்யா புண்யகர்மணு" (குருகாமாஹாத்ம்யம்) என்று த்$_3$ரவிடஶாஸ்த்ரப்ரவர்த்தகனுன அக$_3$ஸ்த்யன் நின்ற தி$_3$க்கு ஸர்வர்க்கும் புகலிடம் என்ற வ்யாஸஶுகாதி$_3$களாலே (க்வசித் க்வசித் என்று இவர் ஆவிர்ப$_4$ாவம்) "கலௌ க$_2$லு ப$_4$விஷ்யந்தி நாராயணபராயணு: । க்வசித்க்வசிந்மஹாப$_4$ாக$_3$ா த்$_3$ராவிடே$_3$ஷு ச பூ$_4$யஶ: । தாம்ரபர்ணீ நதீ$_3$ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ । காவேரீ ச மஹாப$_4$ாக$_3$ா ப்ரதீசீ ச மஹாநதீ$_3$ । யே பிப$_3$ந்தி ஜலம் தாஸாம் மநுஜா மநுஜேஶ்வர । தேஷாம் நாராயணே ப$_4$க்திர்பூ$_4$யஸீ நிருபத்$_3$ரவா" (வி.பு.) என்றும்,

"க்ருரே கலியுகே$_3$ ப்ராப்தே நாஸ்திகை: கலுஷீக்ருதே । விஷ்ணோரம்ஶாம்ஶஸம்பூ$_4$தோ வேத$_3$வேத$_3$ார்த்த$_2$ஸாரவித் । ஸ்தோத்ரம் வேத$_3$மயம் கர்த்தும் த்$_3$ராவிட$_3$யா ஸ ச ப$_4$ாஷயா ।

ஜநிஷ்யதி ஸதாம் ஶ்ரேஷ்டே$_2$ா லோகாநாம் ஹிதகாம்யயா । கஶ்சிந்மநுஷ்யரூபேண க்ருபயா தத்ர வை முநி: । ப்ரயாஸ்யதி புநஸ்ஸோபி ஸாயுஜ்யம் பரமாத்மந: । அத்$_4$யேதவ்யம் த்$_3$விஜஶ்ஶ்ரேஷ்டை$_2$ர்வேத$_3$ரூபமித$_3$ம் க்ருதம் । ஸ்த்ரீபி$_4$ஶ்ஶூத்$_3$ரா-தி$_3$பி$_4$ஶ்சைவ தேஷாம் முக்தி: கரே ஸ்தி$_2$தா" (குருகாமா.) என்றும், "கலௌ புந: பாபரதாபி$_4$பூ$_4$தே ஸ உத்$_3$ப$_3$பூ$_4$வாஶ்ரிதவத்ஸலத்வாத் । ப$_4$க்தாத்மநா ஸர்வஜநாந் ஸஂகோ$_3$ாப்தும் விஶ்வாதி$_4$கோ விஶ்வமயோ ஹி விஷ்ணு:" என்றும் இவ்வாழ்வா-ருடைய ஆவிர்ப$_4$ாவம் கர்மமூலமன்றிக்கே ப$_4$க$_3$வத$_3$வதாரம்போலே ஜக$_3$த்$_3$ரக்ஷணார்த்த$_2$-மாக ப$_4$க$_3$வதி$_3$ச்சை$_2$யாலே உண்டானதாகையாலே ஆவிர்ப$_4$ாவமென்கிறது. அந்த ஆவிர்ப$_4$ாவம் "கலியும் கெடும்" (திருவா. 5 - 2 - 1) என்று இவர்தாம் திருமங்கை-யாழ்வார், உடையவர்போல்வார் வந்துதித்து கலியுக$_3$ஸ்வப$_4$ாவம் கெடும் என்று அருளிச்செய்தாப்போலே அவர்களாலே ஸூசிப்பிக்கப்பட்டதென்கிறார். (91)

92. அத்ரி-ஜமத$_3$க்$_3$நி-பங்க்திரத$_2$-வஸு-நந்த$_3$ஸூநுவானவ-னுடைய யுக$_3$-வர்ண-க்ரமாவதாரமோ? வ்யாஸாதி$_3$வத$_3$ாவே-ஶமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ? முன்னம் நோற்ற அனந்தன்மேல் புண்ணியங்கள் ப$_2$லித்தவரோ? என்று ஶங்கிப்பர்கள்.

இப்படி அருளிச்செய்கிற இவருடைய அவதாரவைப$_4$வத்தைப்பார்த்து ப$_4$க$_3$வத$_3$வ-தாரங்களில் ஸ்வரூபேண அவதாரமோ? ஆவேஶாவதாரமோ? நித்யரோ? முக்தரோ? ஸித்$_3$த$_4$ரோ? தம்முடைய ஜந்மாந்தரஸஹஸ்ரபுண்யஸஞ்சயங்களாலே வந்தவரோ? ஈஶ்வரனுடைய ப$_4$ாக்$_3$யப$_2$லத்தாலே வந்தவரோ? என்று அதிஶங்கிப்பர்கள் என்கிறார் (அத்ரி ஜமத$_3$க்$_3$நி என்று தொடங்கி).

க்ருதயுக$_3$த்திலே அத்ரிஜமதக்$_3$நிகள்பக்கலிலே த$_3$த்தாத்ரேயராயும், பரஶுராமனாயும், த்ரேதாயுக$_3$த்திலே க்ஷத்ரியனை த$_3$ஶரத$_2$சக்ரவர்த்திபக்கலிலே வந்தவதரித்தும், த்$_3$வாபர-யுக$_3$த்திலே க்ஷத்ரியரில் தண்ணியராகையாலே வைஶ்யப்ராயரான வஸுதேவஸூநு-வாயும், "க்ருஷிகோ$_3$ரக்ஷவாணிஜ்யம் வைஶ்யம் கர்ம ஸ்வப$_4$ாவஜம்" (கீ. 18 - 44) என்று கோ$_3$ரக்ஷணத$_4$ர்மத்தை உடையராகையாலே வைஶ்யரான ஶ்ரீநந்தகோபர்க்குப் புத்ரராயும், யுக$_3$க்ரமத்திலும் அடைவே வர்ணத்ரயத்திலே வந்து அவதரித்துப்போந்த ஸர்வேஶ்வரன் கலியுக$_3$த்திலே நாலாம் வர்ணத்திலே ஆழ்வாராய்த் திருவவதரித்தானோ என்றும்,

"க்ருஷ்ணத்$_3$வைபாயநம் வ்யாஸம் வித்$_3$தி$_4$ நாராயணம் ப்ரபு$_4$ம்" (வி.பு. 3 - 4 - 5) என்கிறபடியே வேதங்களை வ்யஸிக்கைக்காக வ்யாஸாதி$_3$கள்போல் வந்தவதரித்தானோ? என்றும், "கரைகண்டோர்" (திருவா. 8 - 3 - 10)என்று ஸம்ஸாரத்தைக் கரைகண்ட முக்தரிலே ஒருவர் அப்படியே அவதரித்தாரோ? "பாம்பணைமேல் பள்ளிகொண்டரு-ளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" (திருவிரு. 79) என்றும்,

"முக்தாநாம் லக்ஷணம் ஹ்யேதச்ச்₂வேதத்₃வீபநிவாஸிநாம்" (ப₄ார. ஶா. 337 - 40) என்றும் நித்யமுக்தரோடொக்கச் சொல்லலாம்படி இருக்கிற ஶ்வேதத்₃வீபவாஸிகளான ஸித்₃த₄ரிலே ஒருவரோ? "முன்னம் நோற்ற விதிகொலோ" (திருவா. 6 - 5 - 7) என்கிற படியே ஜந்மாந்தரஸஞ்சிதமான தம்முடைய ப₄ாக்₃யத்தாலே பிறந்தவரோ? "அனந்தன் மேல் கிடந்தவெம்புண்ணியா" (திருச்ச. 45) என்று அநந்தஶாயியான ஸர்வேஶ்வர னுடைய ப₄ாக்₃யத்தாலே பிறந்தவரோ? என்று ஶங்கிப்பர்கள் என்கிறார். (92)

93. இதுக்கு மூலம் - யான் நீ என்று மறுதலைத்து வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி நிலையிடம் தெரியாதே தெய்வத்தினம் ஒரு வகைக்கொப்பாக இனத்தலைவன் அந்தாமத்தன்புசெய்ய, சேர்ந்த-மைக்கடையாளம் உளவாக உகந்துகந்து திமிர்கொண்டாலொத்து நாட்டியல்வொழிந்து ஶட₂ரையோட்டி மது₃ரகவிப்₃தர்க்கு அங்குஶ-மிட்டு நடாவிய கூற்றமாய், தீயன மருங்குவாராமல் கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றிப் பட்டெழுபோதறியாதிருந்த ப்ரப₄ாவம்.

இப்படி இவர்கள் ஶங்கிக்கைக்கு ஹேது என்னென்னில், இவருடைய ப்ரப₄ாவம் கண்டு என்கிறார் மேல். (இதுக்கு மூலம்) இப்படி இவர்கள் ஶங்கிக்கைக்கு ஹேது. (யான் நீ என்று மறுதலைத்து) "புவியும் இருவிசும்பும் நின்னகத்த, நீ என் செவியின் வழி புகுந்தென்னுள்ளாய், அவிவின்றி யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார், ஊன்பருகு நேமியாய் உள்ளு" (பெரிய திரு. 75) என்று - உப₄யவிபூ₄தியையும் உன் ஸங்கல்பைகதே₃ஶத்திலே வைத்து என் ஶ்ரவணத்₃வாரா நெஞ்சிலே புகுந்து விச்சே₂த₃-மின்றியிலே நித்யவாஸம் பண்ணுநின்றபின்பு, நானோ, நீயோ பெரியாய்? ஆரென்று ஸர்வாதி₄கனை நீயே விசாரி - என்று ஸர்வேஶ்வரனோடே விகல்பிக்கலாம்படியாய்,

(வானத்து மண்மிசை மாறும் நிகருமின்றி) "இனியாவர் நிகரகல்வானத்தே" (திருவா. 4 - 5 - 8) என்றும், "மாறுளதோ இம்மண்ணின்மிசையே" (திருவா. 6 - 4 - 9) என்றும் உப₄யவிபூ₄தியிலும் எனக்கு ஸத்₃ருஶருண்டோ என்னும்படி த₃ாஸ்யஹ்ருஷ்டோக்தியை உடையராய், (நிலையிடம் தெரியாதே) "வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம்" (திருவிரு. 75) என்று - இந்த விபூ₄திஸ்த₂ரோ? நித்யவிபூ₄திஸ்த₂ரோ? என்று அறுதியிட ஒண்ணாதபடி இருக்கையாலே உப₄யவிபூ₄தியிலும் வ்யாவ்ருத்தராய்,

(தெய்வத்தினம் ஒருவகைக்கொப்பாக) "தெய்வத்தினமோரனையீர்களாய்" (திருவிரு. 23) என்று நித்யஸூரிகளெல்லாரும் கூடினாலும் தம்முடைய ஒருவகைக்கொப்பாக உடையராய், (இனத்தலைவன் இத்யாதி₃) "வானோரினத்தலைவன்" (பெரியதிரு. 25) என்று அப்படிப்பட்ட ஸூரிஸமூஹத்துக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன், "அந்தா-மத்தன்புசெய்து" (திருவா. 2 - 5 - 1) என்று விலக்ஷணமான பரமபத₃த்தில் பண்ணும் வ்யாமோஹத்தை இவர்பக்கலிலே பண்ண, (சேர்ந்தமைக்கடையாளமுளவாக) "திருவருள்களும் சேர்ந்தமைக்கடையாளம் திருந்தவுள" (திருவா. 8 - 9 - 6) என்று

ஸர்வேஶ்வரனுடைய க்ருபையாலே விஷயீக்ருதரானமைக்கு ஸூவ்யக்தமாக லாஞ்ச$_2$ந-மான ராக$_3$த்தை வாய்க்கரையிலே உடையராய், கேவலம் வாய்க்கரையில் ராக$_3$மாத்ர-மன்றிக்கே "உகந்துகந்துள்மகிழ்ந்து குழையுமே" (திருவா. 6 - 5 - 4) என்று பா$_3$ஹ்யா-ப்$_4$யந்தரஹர்ஷத்தாலே ஶிதி$_2$லராய், "திமிர்கொண்டாலொத்துநிற்கும்" (திருவா. 6 - 5 - 2) என்று அநுஸந்த$_4$ாநத்தாலுண்டான ஆத$_3$ராதிஶயத்தாலே "ஸ்தப்$_3$தே$_4$ாஸ்யுத தமாதே$_3$ஶமப்ராக்ஷ்ய:" (சா. 6 - 1 - 3) என்று ஸர்வநியாமகமான ப்$_3$ரஹ்மஸ்வரூப-ஸாக்ஷாத்காரம் பிறந்தாரைப்போலே ஸ்திமிதராய், (நாட்டியல்வொழிந்து) "நாட்டாரோ-டியல்வொழிந்து" (திருவா. 10 - 6 - 2) என்று ஸம்ஸாரிகளோட்டை ஸங்க$_3$த்தை விட்டு, (ஶட$_2$ரையோட்டி) ஶட$_2$கோபராகையாலே ப்ரமாணநுகு$_3$ணமாக தர்க்கம் சொல்லுகை-யன்றிக்கே ஸ்வமநீஷையாகக் கற்பித்துக் கொண்டு, ஶூஷ்கதர்க்கங்களாலே அர்த்த$_2$ஸ்த$_2$ாபநம் பண்ணவிருக்கிற ஶட$_2$ரைத் தம்முடைய உக்திஶ்ரவணமாத்ரத்தாலே தம்முடைய ஸந்நித$_4$ாநத்தில் நில்லாதபடி பண்ணி,

(மத$_3$ாவலிப்தர்க்கு அங்குஶமிட்டு) பராங்குஶராகையாலே "வித்$_3$யாமதே$_3$ா த$_4$நமத$_3$ஸ்-த்ருதீயோபி$_4$ஜநோ மத$_3$: । ஏதே மத$_3$ாவலிப்தாநாம் ஏத ஏவ ஸதாம் த$_3$ம:" என்று அபி$_4$ஜநவித்$_3$யாவ்ருத்தங்களாகிற மத$_3$த்ரயங்களினாலே தூ$_3$ஷிதராயிருக்கிறவர்களை ஸ்வோக்திரூபமான அங்குஶங்களாலே நிர்மத$_3$ராம்படி பண்ணி, (நடாவிய கூற்றமாய்) "பறவையின் பாகன் மதனசெங்கோல் நடாவிய கூற்றங்கண்டீர்" (திருவிரு. 6) என்று வேத$_3$வேத்$_3$யத்வஸூசகமான க$_3$ருட$_3$வாஹநனை ஸர்வேஶ்வரன்விஷயத்திலே, "நின் கண் வேட்கை எழுவிப்பனே" (திருவிரு. 96) என்கிறபடியே எல்லார்க்கும் ப$_4$க்தியை உண்டாக்கி நடத்துமவராய். கூற்றம் என்கையாலே தம்முடைய து$_3$ர்ஶநஸ்த$_2$ருடைய ஸாம்ஸாரிகமான ருசிக்கு விநாஶகரராய். (தீயன மருங்கு வாராமல்) "கொன்றுயிருண்-ணும் விசாதி பகைபசி தீயனவெல்லாம்" (திருவா. 5 - 2 - 6) என்று சேதநரை முடித்து ப்ராணாபஹாரம் பண்ணக்கடவதான ஆதி$_4$வ்யாதி$_4$ரூபமான தோ$_3$ஷங்களும் "வாரேனு மறிகடலோ" (பெரியதிரு. 54) இத்யாதி$_3$ப்படி ஸாம்ஸாரிகது$_3$:க$_2$ஹேதுவான பாபங்-களும் பார்ஶ்வத்திலும் வாராதபடியாய்,

(கலியுகம் நீங்கிக் கிதயுகம் பற்றி) "திரியும் கலியுகம் நீங்கி" (திருவா. 5 - 2 - 3) என்று - "ப$_4$விஷ்யத்யத$_4$ரோத்தரம்" (ப$_4$ார.ஶா.மோ) என்கிறபடியே பதா$_3$ர்த்த$_2$ஸ்வப$_4$ாவங்கள் வேறுபட்டு வருகிற கலியுக$_3$தோ$_3$ஷமும் நீங்கி, "பெரியகிதயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக) (திருவா. 5 - 2 - 3) என்று ஆதி$_3$க்ருதயுக$_3$த்தையொக்க மஹத்தான ஆநந்த$_3$ஸாக$_3$ரம் அபி$_4$வ்ருத்$_3$த$_4$மாக, "பட்டபோதெழுபோதறியாள் விரைமட்டலர் தண்டுழாயென்னும்" (திருவா. 2 - 4 - 9) என்று ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் பே$_4$ாக்$_3$யதாநு-ஸந்த$_4$ாநத்தாலே "நந்த$_3$ந்த்யுதி$_3$த ஆதி$_3$த்யே நந்த$_3$ந்த்யஸ்தமிதே ரவௌ" என்றும், 'ப்ராதர்மூத்ரபுரீஷாப்$_4$யாம் மத்$_4$யாஹ்நே க்ஷுத்பிபாஸயா । ஸாயம் காமேந ப$_3$ாத்$_4$யந்தே ஜந்தவோ நிஶி நித்$_3$ரயா" என்கிறபடியே ஸம்ஸாரிகளுக்குப் புறம்பே காலக்ஷேப-ஹேதுவான தி$_3$வாராத்ரவிப$_4$ாக$_3$மறியாதே அகாலகால்யமான தே$_3$ஶவிஶேஷத்திற் போலே ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வைகபரராய்ப் போந்த இவருடைய ப்ரப$_4$ாவம் கீழ் அப்படி ஶங்கிக்கைக்கு ஹேது என்கிறார். (93)

94. இதுக்கு ஹேது - ஊழிதோறும் சோம்பாது ஒன்றிப் பொரு-ளென்றளிமகிழ்ந்து முற்றுமாய்நின்று நூலுரைத்து யோகுபுணர்ந்து கண்காணவந்து ஆள்பார்க்கிறவன் உலகினதியல்வை நல்வீடுசெய்ய இணக்குப்பார்வைதேடிக் கழறலர்ஞானமுருவின முழுதுமோட்டின பெருங்கண் எங்குமிலக்கற்று அன்பொடு நோக்கான திசையிலே ஆக்கையில் புக்குழன்று மாறிப்படிந்து துளங்குகிறவர் மேலே படப் பக்கநோக்கறப்பண்ணின விஶேஷகடாக்ஷம்.

இவர்க்கு இந்த ப்ரப₄ாவமுண்டாகைக்கடி என் என்னில், ஸ்ருஷ்ட்யாதி₃முக₂த்தாலே ஸம்ஸாரிகளுடைய உஜ்ஜீவநத்துக்கு க்ருஷி பண்ணுகிற ஈஶ்வரன் ஸஜாதீயரைக் கொண்டு இவர்களைத் திருத்தவேணுமென்றுபார்த்து அதுக்காளாவாரை ஸம்ஸாரத்தில் கிடையாத த₃ஶையிலே தே₃வமநுஷ்யாதி₃ஶரீரங்களிலே ப்ரவேஶித்து, தத₃நுஸாரிக-ளாய்க்கொண்டு ஜந்மபரம்பரைகளிலே இழிந்த ஸம்ஸாரஸாக₃ரமத்₄யஸ்த₂ரான இவர் பக்கலிலே நிர்ஹேதுகமாகப்பண்ணின விஶேஷகடாக்ஷமென்கிறார் (இதுக்கு ஹேது ஊழிதோறும் என்று தொடங்கி). இதுக்கு ஹேது - கீழ் ப்ரஸ்துதமான ப்ரப₄ாவத்துக்கு ஹேது.

''ஊழிதோறும் தன்னுள்ளே படைத்துக் காத்துக் கெடுத்துழலும்'' (திருவா. 10 - 7 - 9) என்றும், ''சோம்பாதிப்பல்லுருவையெல்லாம் படர்வித்தவித்தா'' (பெரியதிரு. 18) என்றும், ''ஒன்றியொன்றி உலகம் படைத்தான்'' (திருவா. 3 - 9 - 10) என்றும், ''பொரு-ளென்றிவ்வுலகம் படைத்தவன்'' (திருவா. 2 - 10 - 11) என்றும், ''அளிமகிழ்ந்-துலகமெல்லாம் படைத்தவை'' (திருவா. 3 - 4 - 8) என்றும் சொல்லுகிறபடியே கர்ஷகனானவன் ஒருபோகம் பதறி(?ரி)ற்றென்று, கைவாங்காதே மேலேமேலே க்ருஷி பண்ணுமாப்போலே கல்பந்தோறும் ஸ்ருஷ்டிக்கச்செய்தேயும், அது ஸப₂லமாகாதிருக்-கச்செய்தேயும், பின்னையும் முசியாதே, ப்ரயோஜநமாம், ப்ரயோஜநமாம் என்று திருவுள்ளத்தில் க்ருபையாலே வந்த உகப்போடே அடுத்தடுத்து ஸ்ருஷ்டித்து,

(முற்றுமாய்நின்று) ''தத்ஸ்ருஷ்ட்வா ததே₃வாநுப்ராவிஶத்'' (தை. 2 - 6 - 1) என்கிற படியே ஸ்ருஷ்டமான ஜக₃த்திலே அவற்றினுடைய வஸ்துத்வ-நாமப₄ாக்த்வங்களுக்காக அவற்றைச் சொல்லுகிற ஶப்₃த₃ங்கள் தன்னளவிலே பர்யவஸிக்கும்படி வ்யாப்தனுய்க் கொண்டு ப்ரகாரியாய் நின்று, ''அன்னமதாயிருந்தங்கறநூலுரைத்த'' (திருமொழி 11 - 4 - 8) என்கிறபடியே ஸாராஸாரவிவேகோந்முக₂மான ஹம்ஸரூபியாய்க்கொண்டு ஶாஸ்த்ரப்ரத₃ாநத்தைப்பண்ண, (யோகுபுணர்ந்து) ''தன்கோலச்செந்தாமரைக்கண் உறைபவன் போலவோர் யோகுபுணர்ந்த ஒளிமணிவண்ணன்''(திருவா. 3 - 10 - 2) என்று க்ஷீராப்₃தி₄யில் யோக₃நித்₃ராவ்யாஜத்தாலே சேதநருடைய ரக்ஷணோபாய-சிந்தைபண்ணி,

சிந்தாஸமநந்தரம் தோற்றின உபாயாநுகு₃ணமாக (கண்காணவந்து) ''துயரில் மலியும்

மனிசர்பிறவியில் தோன்றிக்கண்காணவந்து'' (திருவா. 3 - 10 - 6) என்கிறபடியே ''ந மாம்ஸசக்ஷுரபி$_4$வீக்ஷதே தம்'', ''ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சநைநம்'', ''என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுரு'' (பெரியதிரு. 28) என்றும் சொல்லுகிற தான் து$_3$:க$_2$-ப$_3$ஹுளரான மநுஷ்யரோடே ஸஜாதீயராய்க்கொண்டு வந்து பிறந்து அவர்களுடைய மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கு விஷயபூ$_4$தனாய், ''ஆள்பார்த்துழிதருவாய்'' (பெரியதிரு. 60) என்று அப்ராக்ருதவிக்$_3$ரஹவிஶிஷ்டனாய், நிரங்குஶஸ்வதந்த்ரனாய், நிரபேக்ஷனான தான் உற்றாராயிருப்பார் உருமாறிநின்று ஆராயுமாப்போலே *தமருகந்த இத்யாதி$_3$ப்படியே அர்ச்சகர் உகந்த த்$_3$ரவ்யத்தைத் திருமேனியாகக் கொண்டு அவர்களுக்கு அத்யந்த-பரதந்த்ரனாய், அவர்களிடுகிற பத்ரபுஷ்பாதி$_3$களிலே ஸாபேக்ஷனாய்க்கொண்டு கோயில்-களிலேயும், க்$_3$ருஹங்களிலேயும் நின்றருளி, நம்முடைய விஷயீகாரத்துக்காளாவார் ஆர் என்று ஆள்பார்க்கிறவன்.

(உலகினதியல்வை நல்வீடுசெய்ய) ''ஓஓ உலகினதியல்வே'' (திருவாசிரி. 6) என்கிற படியே ஸர்வப்ரகாரரக்ஷகனான தன்னைவிட்டு க்ஷுத்$_3$ரதே$_3$வதைகளை பரஹிம்ஸாதி$_3$-ஸாத$_4$நமுக$_2$த்தாலே வலித்து, க்ஷுத்$_3$ரப்ரயோஜநங்களைப் பெற்று அவற்றை அநுப$_4$விக்-கைக்காக தே$_3$வாதி$_3$ஶரீரப்ரவேஶம் பண்ணி, ஆஶ்சர்யபூ$_4$தையான ப்ரக்ருதிவஶ்யரான ஸம்ஸாரிசேதநர்ஸ்வப$_4$ாவத்தை ''யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடுசெய்யும்'' (திருவிரு. 95) என்று ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் ஏதேனுமொன்றைப் பற்றத்தன்னைவிட்டு நீங்குகையே ஸ்வப$_4$ாவமான வ்ரதத்தை ஸவாஸநமாகப் போக்குகைக்காக,

(இணக்குப்பார்வைதேடி) ஸஜாதீயபு$_3$த்$_3$தி$_4$யாலே தன்னோடு இணக்கவற்றான பார்வை மானைவைத்து ம்ருக$_3$ம்பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக்கொண்டு திருத்தவேணும் என்று பார்த்து, அதுக்காளாவார் ஆரோ என்றுதேடி, (கழறலர் ஞானமுருவின மூழுது-மோட்டின பெருங்கண்) ''கழறலம்'' (திருவிரு. 58) என்கிற பாட்டில் சொல்லுகிற படியே ஜகத்திலே வ்யாப்தமான ஜ்ஞாநத்தையும் அதிக்ரமித்து, ''மண்முழுது-மகப்படுத்துநின்ற'', ''மேலைத்தண்மதியும் கதிரவனும் தவிரவோடி'' (திருநெடு. 5) என்று ஸகலலோகங்களையும் ஆக்ரமிக்கும்படி வ்யாபிக்கப்பெற்ற திருவடிகளிலும் மூற்பட்ட ''அழறலர்தாமரைக்கண்ணன்'' (திருவிரு. 58) என்றும், ''பெருங்கேழலார் தம்பெருங்-கண்மலர்ப்புண்டரீகம்'' (திருவிரு. 45) என்கிற திருக்கண்களானவை, (எங்குமிலக்கற்று) விஷயீகாரத்துக்கு அநுகு$_3$ணமான நன்மை சேதநர்பக்கல் காணாமையாலே எங்கும் இலக்கற்று,

(அன்பொடுநோக்கான திசையிலே) ''அன்பொடுதென்திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்'' (பெருமா.தி. 1 - 10) என்கிறபடியே இவர்கள்பக்கல் நன்மைபெறாத-வளவிலும் இவர்கள்பக்கல் தனக்குண்டான சாபலத்தாலே ஸஸ்நேஹமாக கடாக்ஷித்த திசையிலே, (ஆக்கையில் புக்கு) ''யாதானுமோராக்கையில் புக்கு'' (திருவிரு. 95) என்றும், ''ஆக்கையின் வழியுழல்வேன்'' (திருவா. 3 - 2 - 1) என்றும், ''மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து'' (திருவா. 2 - 6 - 8) என்றும், ''பன்மாமாயப்பல்பிறவியில் படிகின்ற யான்'' (திருவா. 3 - 2 - 2) என்றும், ''பிறவிக்கடலுள் நின்றுநான் துளங்க'' (திருவா. 5 - 1 - 9) என்றும் சொல்லுகிறபடியே தே$_3$வாதி$_3$ஶரீரங்களிலே புக்கு

'தே$_3$வோஹம், மநுஷ்யோஹம்' என்கிறபடியே அவற்றிலே ப$_3$த்$_3$த$_4$ராய், அவற்றின் வழியேபோய் தத்ப$_2$லமான ஜந்மபரம்பரைகளிலே தோள்மாறி அவற்றிலே அவக$_3$ாஹித்துத் தரைகாண ஒண்ணாத ஸம்ஸாரஸமுத்$_3$ரமத்$_4$யஸ்த$_2$ராய்க்கொண்டு நடுங்குகிற இவர்மேலே படும்படி,

"எங்கும் பக்கநோக்கறியான்" (திருவா. *2 - 6 - 2*) என்கிறபடியே நாச்சிமார்வந்து திருமுலைத்தடத்தாலே நெருக்கி அணைத்தாலும் புரிந்து பாராதே "நாஸௌ புருஷகாரேண ந சாப்யந்யேந ஹேதுநா । கேவலம் ஸ்வேச்ச$_2$யைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கத$_3$ாசந" (பாஞ்ச.), "நிர்ஹேதுககடாக்ஷேண மதீ$_3$யேந மஹாமதே । ஆசார்யவிஷயீகாராத் ப்ராப்நுவந்தி பராங்க$_3$திம்" (பாஞ்ச.) என்றும் சொல்லுகிறபடியே ஸ்வேச்சை$_2$யாலே நிர்ஹேதுகமாகப் பண்ணப்பட்ட விஶேஷகடாக்ஷம் என்கிறார்.

ஆக இத்தால் கீழ்ச்சொன்ன அவருடைய ப்ரப$_4$ாவத்துக்கு ஹேது ப$_4$க$_3$வத்கடாக்ஷம் என்றதாய்த்து. (94)

95. ஶ்ரமணீ-விது$_3$ர-ருஷிபத்நிகளைப் பூதராக்கின புண்ட$_3$ரீகாக்ஷன் நெடுநோக்கு சாபமிழிந்தென்னப்பண்ணுமிறே.

நித்யஸம்ஸாரியாய்ப் போந்தாரொருவர்க்கு ப$_4$க$_3$வத்கடாக்ஷத்தாலே ஸாம்ஸாரிகஸகல-பாபங்களும் போய் இந்த ப்ரப$_4$ாவமெல்லாம் உண்டாகக்கூடுமோ என்னில்; ஶப$_3$ரிமுதலானோரை பரிஶுத்$_3$த$_4$மாக்கின ஸர்வேஶ்வரனுடைய தி$_3$வ்யகடாக்ஷம் அவஶ்யமநுபே$_4$ாக்தவ்யமான ஸகலபாபங்களையும் நஶிப்பிக்குமிறே என்கிறார் (ஶ்ரமணீவிது$_3$ர என்று தொடங்கி). (ஶ்ரமணீவிது$_3$ர) "ஶ்ரமணீம் த$_4$ர்மநிபுணாம்" (ரா. ஆ. *1 - 56*) என்கிறபடியே வேடுவிச்சியாயிருக்கிற ஶப$_3$ரியை "சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகு$_4$நந்த$_3$ந । பாத$_3$மூலம் க$_3$மிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்" (ரா. ஆ. *74 - 12*) என்று அவள்தானே 'தேவரீருடைய அழகிய கடாக்ஷத்தினாலே என்னுடைய ப்ராப்திப்ரதிப$_3$ந்த$_4$கங்களெல்லாம் நிஶ்ஶேஷமாகப் போகையாலே பரிஶுத்$_3$தை$_4$யானேன்' என்று சொல்லும்படி பண்ணியும்,

ஸ்ரீவிது$_3$ரரை "பீ$_4$ஷ்மத்$_3$ரோணாவதிக்ரம்ய மாஞ்சைவ மது$_4$ஸூத$_3$ந । கிமர்த்த$_2$ம் புண்ட$_3$ரீகாக்ஷ பு$_4$க்தம் வ்ருஷலபோ$_4$ஜநம்" (ப$_4$ார. உத்$_3$.) என்று எதிரியானவன் சீறிச்-சொல்லாநிற்கச்செய்தேயும் "புண்ட$_3$ரீகாக்ஷ" என்னும்படியான திருக்கண்களாலே அவரை பரிஶுத்$_3$த$_4$ராம்படி பண்ணியும்,

(ருஷிபத்நிகளை) "வேர்த்துப்பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக்கொள்ளும்" (நா. திரு. *12 - 6*) என்கிறபடியே தன்னுடைய நெடுநோக்காலே ப$_4$க்தவிலோசநத்தில் ருஷிபத்நிகளிலே ஒருத்தியை "தத்ரைகா வித்$_4$ருதா ப$_4$ர்த்ரா ப$_4$க$_3$வந்தம் யத$_2$ாஶ்ருதம் । ஹ்ருதோ$_3$பகூ$_3$ஹ்ய விஜஹௌ தே$_3$ஹம் கர்மநிப$_3$ந்த$_4$நம்" (ப$_4$ாக$_3$. *10 - 23 - 34*) என்று தன்பக்கல் ப்ராவண்யத்தாலே

அப்போதே முக்தையாம்படிபண்ணியும், அதிலே சிலர் தன்னை அநுப$_4$விக்கும்படி-யாகவும் பண்ணின விஶேஷகடாக்ஷமானது, (சாபமிழிந்தென்னப்பண்ணுமிறே) "திங்களுமாதித்தியனுமெழுந்தாற்போல் அங்கணிரண்டுங்கொண்டெங்கள்மேல் நோக்குதியேல் எங்கள்மேல் சாபமிழிந்து" (திருப்பாவை 22) என்கிறபடியே ஆஹ்லாத$_3$-கரத்வத்தையும், அதிப்ரகாஶகத்வத்தையும் உடைத்தாகையாலே சந்த்$_3$ராதி$_3$த்யர்களிரு-வரும் உதித்தாற்போலேஇருக்கிற அழகிய திருக்கண்களாலே எங்களைப் பார்த்தருளி-ஞயாகில் ஶாபோபஹதரைப்போலே, அநுப$_4$வித்தல்லது நஶியாத ஸாம்ஸாரிகஸகல-து$_3$ரிதங்களும் நிவ்ருத்தமாம் என்று சொல்லும்படி ஸகலபாபக்ஷபணத்தில் நிபுணங்க-ளாயிறே இருப்பது என்கிருர். (95)

96. கோ$_3$வ்ருத்$_3$தி$_4$க்கு நெரிஞ்சியைப் புல்லாக்கினவன் ஜக$_3$த்$_3$தி$_4$தார்த்-த$_2$மாக "எனக்கே நல்லவருள்கள்" என்னும்படி ஸர்வஸௌஹார்த்த$_3$-ப்ரஸாத$_3$த்தை ஒருமடைசெய்து இவரைத்தன்னுக்க, லோகமாகத் தம்மைப்போலாக்கும்படியானுர்.

ஸர்வேஶ்வரன் இவரை இப்படி நிர்ஹேதுகமாக கடாக்ஷித்ததுக்கு ப்ரயோஜநம் என் என்னில், லோகஹிதார்த்த$_2$மாக என்கிருர் (கோ$_3$வ்ருத்$_3$தி$_4$க்கு நெரிஞ்சியைப் புல்லாக்-கினவன் என்று தொடங்கி). "திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" (திருவா. 10 - 3 - 10) என்று ஸ்வரக்ஷணத்தில் அந்வயமில்லாத கோ$_3$ரக்ஷணத்திலே திருவுள்ளம் உகந்திருக்கையாலே அவற்றினுடைய அபி$_4$வ்ருத்$_3$தி$_4$க்காக "ப்$_3$ருந்த$_3$ாவநம் ப$_4$க$_3$வதா க்ருஷ்ணேநாக்லிஷ்டகர்மணு । ஶுபே$_4$ந மநஸாத்$_4$யாதம் க$_3$வாம் வ்ருத்$_3$தி$_4$மபீ$_4$ப்ஸதா" (வி.பு. 5 - 6 - 28) என்று நெரிஞ்சிக்காட்டை பரஸம்ருத்$_3$த்$_4$யேகப்ரயோஜநமாகத் திருவுள்ளத்தாலே "உத்பந்நநவஶஷ்பாட்$_4$யம்" (வி.பு. 5 - 6 - 37) என்கிறபடியே அவற்றுக்கு போ$_4$க்$_3$யமாக ஸங்கல்பித்தவன். "நமோ ப்$_3$ரஹ்மண்யதே$_3$வாய கோ$_3$-ப்$_3$ராஹ்மணஹிதாய ச । ஜக$_3$த்$_3$தி$_4$தாய க்ருஷ்ணய கோ$_3$விந்த$_3$ாய நமோ நம:" (ப$_4$ாரதம்) என்று பசுக்களினுடைய ரக்ஷணத்தோபாதி ஜக$_3$த்தினுடைய ரக்ஷணத்துக்குக் கடவன் தானுகையாலே அந்த ஜக$_3$த்தினுடைய ஹிதார்த்த$_2$மாக.

(எனக்கே நல்லவருள்கள் என்னும்படி) "எதிர்சூழல்புக்கெனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய - எம்மான் திருவிக்கிரமனை - விதி சூழ்ந்தது" (திருவா. 2 - 7 - 6) என்று - அநேகஜந்மங்கள் நான் பிறந்த ஜந்மங்களுக்கு எதிரே பிறந்துவந்து என்னை விஷயீ-கரிக்கும்படி ஸர்வேஶ்வரனை க்ருபை கால்கட்டிற்று என்றும், "நல்லவருள்கள் நமக்கே தந்தருள்செய்வான்" (திருவா. 8 - 6 - 1) என்றும் தன்பேருக க்ருபைபண்ணி, 'பிராட்டி திருவநந்தாழ்வான் தொடக்கமானுர்க்குக் கூறுகொடாதே எனக்கும் என்னேடு ஸம்ப$_3$ந்த$_4$முடையார்க்கும் தருகிறவன்' என்று இவர் பெறும்படி.

(ஸர்வஸௌஹார்த்த$_3$ப்ரஸாத$_3$த்தை ஒருமடைசெய்து) "ஸுஹ்ருத$_3$ம் ஸர்வபூ$_4$தாநாம் ஜ்ஞாத்வா மாம் ஶாந்திம்ருச்ச$_2$தி" (கீ$_3$தை 5 - 29) என்கிறபடியே ஸர்வபூ$_4$தங்கள்-பக்கலிலும் நடக்கிற தன்னுடைய ஸௌஹார்த்த$_3$த்தாலுண்டான ப்ரஸாத$_3$த்தை

இவரொருவர்பக்கலிலே ஒருமடைப்படச் செய்து விஷயீகரித்து. (இவரைத்தன்னாக்க) "என்னைத்தன்னாக்கி" (திருவா. 7 - 9 - 1) என்கிறபடியே இவரைத் தன்னோடொத்த ஜ்ஞாநஶக்திகளை உடையராகவும், அநந்யார்ஹஶேஷபூ₄தராகவும் பண்ண, அவனாலே விஷயீக்ருதரான இவரும் லோகமாகத் தம்மைப்போலே ஆக்கும்படி ஆனார். "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" (திருவா. 6 - 6 - 2) என்கிறபடியே தாம் அவதரித்த திருநகரி, அத்தோடே சேர்ந்த திருவழுதிவளநாடு, அத்தோடே சேர்ந்த பூ₄லோகம், அவற்றிலுள்ளாரடையத் தம்மைப்போலே ப₄க₃வத₃நுப₄வைகபரராகப் பண்ணும்படி ஆனார் என்கிறார். (96)

97. அதாவது மயர்வற மதிநலமருளுகை.

(அதாவது மயர்வறமதிநலமருளுகை) அதாவது - தன்னாக்குகையாவது என்றபடி. தன்னாக்குகையாவது - தான் "மயர்வறமதிநலமருளினன்" என்று தாமே அருளிச்-செய்யலாம்படி அஜ்ஞாநத்தை ஸவாஸநமாகப்போக்கி ப₄க்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையாலே கொடுக்கை. (97)

98. இருள் துயக்கு மயக்கு மறப்பு என்கிற அநுத₃ய-ஸம்ஶய-விபர்யய-விஸ்ம்ருதிகளற்று, மலர்மிசை எழுகிற ஜ்ஞாநத்தைக் காதல் அன்பு வேட்கை அவா என்னும் ஸங்க₃-காம-அநுராக₃-ஸ்நேஹாத்₃யவஸ்த₂ாநாமங்களோடே பரமப₄க்தித₃ஶையாக்குகை.

அஜ்ஞாநத்தைப்போக்கி ப₄க்திரூபாபந்நஜ்ஞாநத்தைக் கொடுக்கையாவது - ப₄க₃வஜ்-ஜ்ஞாநவிரோதி₄யான நாலு வகைப்பட்டிருக்கிற அஜ்ஞாநம் போய் ஜ்ஞாநப்ரஸரண-த்₃வாரமான மநஸ்ஸு அவித்₃யாதி₃களாலே திரோஹிதமாகையாலே குண்டி₂தமாய், தந்நிவ்ருத்தியிலே விகஸிதமாய்க்கொண்டு மேல்நோக்கிக் கிளருகிற ஜ்ஞாநத்தை பரமப₄க்திபர்யந்தமாக வளர்க்கை என்கிறார்.

(இருள் துயக்கு மயக்கு மறப்பென்கிற) "இருளார் வினைகெட" (திருவிரு. 33), "துயக்கின்றித்தொழுதுரைத்த" (திருவா. 3 - 1 - 11), "மயக்குடை மாயைகள்" (திருவா. 1 - 3 - 10), "மறப்பற என்னுள்ளே மன்னினான்" (திருவா. 1 - 10 - 10) என்கிற ஜ்ஞாநாநுத₃யமென்ன, 'ஸ்த₂ாணுர்வா புருஷோ வா' என்று வஸ்துவை யத₂ாவாக க்₃ரஹிக்கவொட்டாதிருக்கிற ஸம்ஶயமென்ன, ரஜ்ஜுவில் ஸர்ப்பபு₃த்₃தி₄யும், ஸ்த₂ாணுவில் புருஷபு₃த்₃தி₄யும்போலே வஸ்துவை விபரீதமாக க்₃ரஹிக்கையாகிற விபர்யயமென்ன, அநுபூ₄தவிஷயஜ்ஞாநதிரோத₄ாநரூபமான விஸ்ம்ருதியென்ன, இப்படிச்சொல்லுகிற அஜ்ஞாநத்தை வாஸனையோடேபோக்கி.

(மலர்மிசை எழுகிற ஜ்ஞாநத்தை) "மனனகமலமற மலர்மிசை எழுதரும்" (திருவா. 1 - 1 - 2) என்று ஜ்ஞாநப்ரஸரணத்₃வாரமான மநஸ்ஸைப் பற்றிக் கிடக்கிற "காமஃ க்ரோத₄ஶ்ச

லோப$_4$ஶ்ச ஹர்ஷோ மானோ மதே$_3$ாடக்$_4$ருணு । விஷாத$_3$ஶ்சாஷ்டமஃ ப்ரோக்த இத்யேதே மநஸோ மலாஃ'' என்று சொல்லப்படுகிற காமக்ரோத$_4$ாதி$_3$ரூபமாய் அஷ்டவித$_4$மான மலநிவ்ருத்தியாலே விகஸிதமாய்க்கொண்டு மேல்நோக்கிக் கிளருகிற ஜ்ஞாநத்தை. (காதல் அன்பு வேட்கை அவா என்னும்) ''நொந்தாராக்காதல்'' (திருவா. 2 - 1 - 9) என்றும், ''ஆராவன்பு'' (திருவா. 6 - 10 - 2) என்றும், ''பெருகுமால்வேட்கை'' (திருவா. 9 - 6 - 1) என்றும், ''அதனில் பெரிய என்னவா'' (திருவா. 10 - 10 - 10) என்றும் சொல்லப்படுகிற - வஸ்துத$_3$ர்ஶநத்திலே ப்ரத$_2$மப$_4$ாவியாய், ஸ்நேஹாங்குரரூபமான ஸங்க$_3$மென்ன, ''ஸங்க$_3$ாத்ஸஞ்ஜாயதே காமஃ'' (கீ$_3$தை 2 - 62) என்கிற அதினுடைய பரிபாகமான காமமென்ன, அதினுடைய அவிச்சே$_2$த$_3$ரூபமான அநுராக$_3$மென்ன, அநந்தரம் அவ்வஸ்துவை அநுப$_4$வித்தல்லது நிற்கவொண்ணாத அபி$_4$நிவேஶரூபமான ஸ்நேஹமென்ன, இவைதொடக்கமான இப்படி அவஸ்த$_2$ாநுரூபமான நாமங்களை உடைத்தாய்க்கொண்டு பரமப$_4$க்திபர்யந்தமாக அபி$_4$வ்ருத்$_3$த$_4$மாம்படி பண்ணுகை என்கிறார்.

ஆக, இதுக்குக் கீழ், ப$_4$க$_3$வத்கடாக்ஷமடியாக இவருக்கு அஜ்ஞாநநிவ்ருத்திபூர்வகமாய்க் கொண்டு உண்டான ப$_4$க்திரூபாபந்நஜ்ஞாநம் பரமப$_4$க்திபர்யந்தமாக அபி$_4$வ்ருத்$_3$த$_4$மான படி சொல்லிற்று. (98)

99. ஜந்மாந்தரஸஹஸ்ரநற்றவங்களாலே க்$_2$யாதகுலங்களிலே பிறந்து, எழுதி வாசித்து தத்த்வஜ்ஞராய், குளித்து ஓதி உரு- வெண்ணும் அந்தி, ஐவேள்வி அறுதொழில்களால் மிக்கு, ஊன் வாடப் பொருப்பிடைத் தாம் வருந்தி, துன்பவினைகளை விடுத்து, விவேகஶமாதி$_3$கள் வளர, எட்டுநீக்கி, எட்டுமிட்டு, எட்டினைய பேதப்பூவில் சாந்தொடு தேவ- காரியம் செய்து உள்ளம் தூயராய், வாரிப்புன்புலவகத்தினுள் இளைப்பினை அடைவே விளக்கினைக் கண்டு, யோகநீதிநண்ணி, அறந்திகழுமறையோர் மனந்தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெரும் சுடரை *கண்கள்சிவந்திற்படியே மனவுட்கொண்டு நிரந்தரம் மறவாமை துடக்கறு ஸ்ம்ருதியாய், கனவில்மிக்க த$_3$ர்ஶநஸமமாய், ஆகத்துப்புல்கும் அத்யர்த்த$_2$ப்ரிய- மாய், வைகும் சிறப்புவிட்டுக் குற்றேவல் என்றதே அநந்யப்ர- யோஜநமாய், வேத$_3$ந-உபாஸந- ஸேவா-த்$_4$யாநாதி$_3$கள் என்று சொல்லுமது ஸாத்$_4$யஸாத$_4$நப$_4$க்தியாக ஶாஸ்த்ரஸித்$_3$த$_4$ம்.

இனிமேல் இவருடைய இந்த ப$_4$க்தி கர்மஜ்ஞாநஸாத்$_4$யையாய்,உபாஸநரூபையான ஸாத$_4$நப$_4$க்தியோ? அன்றிக்கே ஸித்$_3$த$_4$ஸாத$_4$நபரிக்$_3$ரஹம்பண்ணினவர்கள் கைங்கர்- யோபகரணமாக அபேக்ஷித்துப்பெற்ற ப$_4$க்தியோ? என்னில்; உப$_4$யமுமன்று, ஸஹஜையாய், ஸத்தாப்ரயுக்தையான வ்ருத்த்யுபகரணப$_4$க்தி என்கிறார், அதில்

(ஜந்மாந்தரஸஹஸ்ரநற்றவங்களாலே) என்கிற சூர்ணையாலே உபாஸநரூபையான ப$_4$க்தியினுடைய வேஷத்தை அருளிச்செய்கிறார்.

(ஜந்மாந்தரஸஹஸ்ரநற்றவங்களாலே) "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாந-ஸமாதி$_4$பி$_4$: । நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப$_4$க்தி: ப்ரஜாயதே" (ஸ்க$_4$வத்ரீ-ஸ்ம்ருதௌ) என்றும், "ஒன்றிநின்று நற்றவம் செய்தூழியூழிதோறெலாம்" (திருச்ச. 75) என்றும், "அநேகஜந்மஸம்ஸித்$_3$த$_4$:" (கீ$_3$தை 6 - 45) என்றும் சொல்லுகிறபடியே ஜந்மாந்தரஸஹஸ்ரங்களிலே ப$_2$லாபி$_4$ஸந்தி$_4$ரஹிதமாய், ப$_4$க$_3$வத்ஸமாராத$_4$நரூபமான ஸத்கர்மங்களாலே, (க்$_2$யாதகுலங்களிலே பிறந்து) "ஶுசீநாம் ஸ்ரீமதாம் கே$_3$ஹே யோக$_3$ப்$_4$ரஷ்டோऽபி$_4$ஜாயதே" (கீ$_3$தை 6 - 41) என்றும், "ஜநித்வாஹம் வம்ஶே மஹதி ஜக$_3$தி க்$_2$யாதயஶஸாம் ஶுசீநாம் யுக்தாநாம் கு$_3$ணபுருஷதத்த்வஸ்தி$_2$திவிதா$_3$ம்" (ஸ்தோ. ர. 61) என்றும் சொல்லுகிறபடியே தத்த்வஜ்ஞாநிகளாய், பரமயோகி$_3$கள் என்றும் ப்ரஸித்$_3$த$_4$ரானவர்ஸ்த$_2$லங்களிலே வந்துபிறந்து.

(எழுதிவாசித்து தத்த்வஜ்ஞராய்) "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும்" (நான். திரு. 63) என்று ஶாஸ்த்ராப்$_4$யாஸத்துக்கு யோக்$_3$யமான அக்ஷரஶிக்ஷையென்ன, அந்த அக்ஷர-ராஶிக்$_3$ரஹணரூபமான வேதா$_3$ப்$_4$யாஸமென்ன, அந்த வேத$_3$த்தினுடைய அர்த்த$_2$-விஜ்ஞாநத்துக்குறுப்பான ஶாஸ்த்ராப்$_4$யாஸமென்ன, உப$_4$யத்தினுடையவும் அர்த்த$_2$-ஶ்ரவணமென்ன; அவற்றாலே பிறந்த தத்த்வஜ்ஞாநத்தையுடையராய். (குளித்து) உபாஸநாங்க$_3$மான நித்யகர்மாநுஷ்ட$_2$ாநத்துக்கு உபயுக்தமாக காயஶுத்$_3$த்$_4$யர்த்த$_2$மான ஸ்நாநத்தைப்பண்ணி. (ஓதி உருவெண்ணுமந்தி ஐவேள்வி) ஸந்த்$_4$யாவந்த$_3$ந-கா$_3$யத்ரீஜப-பஞ்சமஹாயஜ்ஞங்களைப்பண்ணி. (அறுதொழில்களால்மிக்கு) "அறுதொழி-லந்தணர்" (திருவெழுகூ.) என்று யஜந-யாஜந-அத்$_4$யயந-அத்$_4$யாபந-தா$_3$ந-ப்ரதிக்$_3$ரஹங்களென்கிற ஷட்கர்மங்களாலே பூர்ணராய்.

"ஊன்வாட உண்ணாதுயிர்காவலிட்டு" (திருமொழி 3 - 2 - 1) என்று அவிகலமான நித்ய-கர்மாநுஷ்ட$_2$ாநத்தாலே தபஶ்சர்யைக்கு யோக்$_3$யமானவாறே தத$_3$ர்த்த$_2$மான காய-ஶோஷணார்த்த$_2$மாக நிராஹாரராய், அவ்வளவிலும் ப்ராணதா$_4$ரணார்த்த$_2$மாக அப்$_3$ப$_4$க்ஷண-வாயுப$_4$க்ஷணங்களைப்பண்ணி. (பொருப்பிடைத்தாம் வருந்தி) "பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து நெருப்பிடையே நிற்க" (மூ.திருவ. 76) என்றும், "வீழ் கனியுமூழிலையுமென்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி" (பெ.திருமடல்) என்றும் சொல்லுகிறபடியே க்$_3$ரீஷ்மகாலங்களில் பர்வதாக்$_3$ரத்திலே நின்றும், பஞ்சாக்$_3$நிமத்$_4$யே நின்றும், ஶீதகாலங்களிலே அருக்கயமான தடாகங்களிலே முழுகிக்கிடந்தும், ஜீர்ண-பர்ணப$_2$லாஶநராயும் இப்படி தபஶ்சர்யையாலே ஶரீரத்தை ஶோஷிப்பித்து. (துன்ப வினைகளை விடுத்து) "மேவுதுன்பவினைகளை விடுத்தும்" (திருவா. 3 - 2 - 8) என்று கீழ்ச்சொன்ன கர்மாநுஷ்ட$_2$ாநத்தாலே "திலதைலவத்$_3$தா$_3$ருவஹ்நிவத்" (ஶர.க$_3$த்$_3$யம்) என்கிறபடியே ஆத்மாவோடு பிரிக்கவொண்ணாதபடி பொருந்திக்கிடக்கிற து$_3$:க$_2$ஹேதுவான பாபங்களை "த$_4$ர்மேண பாபமபநுத$_3$தி" (தை. உப.) என்கிறபடியே க்ஷயிப்பித்து.

(விவேகஶமாதி3கள் வளர) இப்படி பாபவிமோசநம் பிறந்தவாறே மநோநைர்மல்ய-ஹேதுவான விவேக-விமோகாப்4யாஸக்ரியாகல்யாணாநவஸாத3ாநுத்3த4ர்ஷங்களும், "ஶமத3மநியதாத்மா ஸர்வபூ4தாநுகம்பீ விஷயஸுக2விரக்தோ ஜ்ஞாநத்3ருஷ்டி: ப்ரபந்ந: । அநியதநியதாந்நோ நைவ ருஷ்டோ ந ஹ்ருஷ்ட: ப்ரவஸித இவ கே3ஹே வர்த்ததே யஸ்ஸ முக்த:" என்கிற ஶமாதி3களும் அபி4வ்ருத்3த4மாக.
இதில் விவேகமாவது - "ஜாத்யாஶ்ரயநிமித்தாऽது3ஷ்டாத3ந்நாத்காயஶுத்3தி4ர்விவேக:" (போ3தா4யந) என்கிற காயஶுத்3தி4க்கடியான அந்நஶுத்3தி4. விமோகமாவது - காமாநபி4ஷ்வங்க3ம். அப்4யாஸமாவது - "ஆரம்ப4ணஸம்ஶீலநம் புந: புநரப்4யாஸ:" என்று த்4யாநாலம்ப3நவஸ்துவிலே பலகாலும் பரிஶீலநம் பண்ணுகை. க்ரியையாவது - "பஞ்சமஹாயஜ்ஞாத்3யநுஷ்டா2நம் ஶக்தித: க்ரியா" என்று நித்யகர்மங்களை வல்லவளவும் அநுஷ்டி2க்கை. கல்யாணமாவது - "ஸத்யார்ஜவத3யாத3ாநாஹிம்ஸாநபி4த்4யா: கல்யாணநி" என்கிற ஸத்யார்ஜவத3யாத3ாநாஹிம்ஸாதி3கள். அநவஸாத3மாவது - "ஶோகஹேதுஷு மநஸ: கே2த3ராஹித்யம் அநவஸாத3:" என்கிறபடியே ஶோகஹேதுக்கள் உண்டானாலும் நெஞ்சு தளராதிருக்கை. அநுத்3த4ர்ஷமாவது - "தத்3விபர்யயஜா துஷ்டி: - உத்3த4ர்ஷ:, தத்3விபர்யய: - அநுத்3த4ர்ஷ:" என்று ஹர்ஷஹேதுக்கள் உண்டானாலும் அதிப்ரீதனாகாதொழிகை.

(எட்டுநீக்கி) "ஈனமாய எட்டுநீக்கி" (திருச்ச. 114) என்கிறபடியே ஆத்மாவுக்குப் பொல்லாங்கைப் பண்ணக்கடவதான 'காம-க்ரோத4-லோப4-மோஹ-மத3-மாத்ஸர்ய-அஜ்ஞாந-அஸூயை'கள் என்கிறவற்றை விட்டு. (எட்டுமிட்டு) "கந்தமாமலரெட்டு-மிட்டு" (திருமொழி 3 - 5 - 6), "இனமலரெட்டுமிட்டு" (திருமொழி 1 - 2 - 7) என்கிறபடியே "அஹிம்ஸா ப்ரத2மம் புஷ்பம் புஷ்பமிந்த்3ரியநிக்3ரஹ: । ஸர்வபூ4தத3யா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விஶேஷத: । ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்4யாநம் புஷ்பம் ததை2வ ச । ஸத்யமஷ்டவித4ம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் ப4வேத்" என்கிறபடியே அஹிம்ஸாதி3களான அஷ்டவித4புஷ்பங்களை இட்டு. இந்த அஹிம்ஸாதி3கள் திருவுள்-ளத்துக்கு உகப்பாகையாலே புஷ்பமென்கிறது.

(எட்டினைய பேதம்) "எட்டினைய பேதமோடிறைஞ்சி" (திருச்ச. 77) என்கையாலே "மநோபு3த்3த்4யபி4மாநேந ஸஹ ந்யஸ்ய த4ராதலே । கூர்மவச்சதுர: பாத3ாந் ஶிரஸ்-தத்ரைவ பஞ்சமம்" என்றும், "உரஸா ஶிரஸா த்3ருஷ்ட்யா வசஸா மநஸா தத2ா । பத்3ப்4யாம் கராப்4யாம் ஜாநுப்4யாம் ப்ரணமோஷ்டாங்க3 ஈரித:" என்றும், ப4க்3நாபி4-மாநனாய் விழுகையும், மநோபு3த்3தி4களுக்கு ஈஶ்வரனையே விஷயமாக்குகையும், பாணித்3வயமும், பாத3த்3வயமும், ஶிரஸ்ஸும் பூமியிலே பொருந்துகையாகிற அஷ்டாங்க3ப்ரணாமத்தைப்பண்ணி. (பூவில் சாந்தொடு தேவகாரியம் செய்து) "பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து" (திருவா. 5 - 2 - 9), "சாந்தொடு விளக்கம் தூபம் தாமரைமலர்கள் நல்ல ஆய்ந்துதொண்டு" (திருவா. 10 - 2 - 10) என்று ஸமாராத4நோபகரணங்கள் மிகுத்துக்கொண்டு அநந்யப்ரயோஜநராய், "தேவகாரியம் செய்து" (பெரியா. திரு. 4 - 4 - 1) என்கிறபடியே ப4க3வத்ஸமாராத4நத்தைப்பண்ணி.

(உள்ளம் தூயராய்) ''ஒன்றிநின்று நற்றவம் செய்தூழியூழிதோறெலாம் நின்று நின்றவன் குணங்களுள்ளி உள்ளம் தூயராய்'' (திருச்ச. 75) என்கிறபடியே நித்யகர்மாநுஷ்டா₂நம் முதலாக ப₄க₃வத்ஸமாராத₄நமெல்லையாக ப₂லஸங்க₃கர்த்ருத்வத்யாக₃பூர்வகமாக உண்டான கர்மாநுஷ்டா₂நத்தாலும் ப₄க₃வத்₃கு₃ணாநுஸந்த₄ாநத்தாலும் ''கஷாயே கர்மபி₄: பக்வே ததோ ஜ்ஞாநம் ப்ரகாஶதே'' என்கிறபடியே கர்மாநுஷ்டா₂நத்தாலே ம்ருதி₃தகஷாயனானவாறே ஜ்ஞாநவிகாஸத்துக்கடியான மநோநைர்மல்யத்தை உடையராய்.

(வாரிப்புன்புலவகத்தினுள்) ''வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிரீ,'' (மூ.திருவ. 47) என்றும், ''புன்புலவழியடைத்தரக்கிலச்சினை செய்து நன்புல வழிதிறந்து ஞானநற்சுடர்கொளீஇ'' (திருச்ச. 76) என்றும், ''ஐம்புலனகத்தினுள் செறுத்து'' (திருவெழு.) என்றும், ''ப்ரகீர்ணே விஷயாரண்யே ப்ரத₄ாவந்தம் ப்ரமாதி₂நம் । ஜ்ஞாநாங்குஶேந க்₃ருஹ்ணீயாத்₃வஶ்யமிந்த்₃ரியத₃ந்திநம்'' என்கிறபடியே இந்த்₃ரியங்களாகிற மத₃முதி₃தமான ஆனைகளை த்யாஜ்யோபாதே₃யவிவேகஜ்ஞாநமாகிற அங்குஶத்தாலே வணக்கி, விஷயங்களாகிற சேரியில் திரியாதபடி ப₄க₃வத்₃விஷயமாகிற யத₂ாஸ்த₂ாநமாகிற தறியிலே சேர்த்தென்றும், இந்த்₃ரியங்களை க்ஷுத்₃ரவிஷயங்களிலே போகாதபடி வாஸனையோடே விடுவித்து ப்ராப்தவிஷயத்திலே மூட்டி ஜ்ஞாநமாகிற ப்ரகாஶமான தீ₃பத்தைக் கொளுத்தி. இப்படி நிக்₃ருஹீதேந்த்₃ரியக்₃ராமராய், (இளைப்பினையடைவே விளக்கினைக்கண்டு) ''இளைப்பினை இயக்கம் நீக்கி இருந்து முன்னிமையைக்கூட்டி அளப்பிலைம்புலனடக்கி அன்பவர் கண்ணே வைத்துத் துளக்கமில் சிந்தை செய்து தோன்றலும் சுடர்விட்டாங்கே விளக்கினை விதியிற்காண்பார்'' (திருக்குறு. 18) என்றும் சொல்லுகிறபடியே யோகா₃ப்₄யாஸவிரோதி₄யாயிருந்துள்ள யாதாயாதங்களை மாற்றி ஓராஸநவிஶேஷங்களிலே இருந்து நாஸாக்₃ரந்யஸ்தலோசநனாய், இந்த்₃ரியங்களை நியமித்து த்₄யேயவஸ்துவின் பக்கலிலே நிரதிஶயமான ஸ்நேஹத்தைப்பண்ணி தத₃நந்தரம் ஸ்வயம்ப்ரகாஶமாய்க் கொண்டு தோற்றுகிற ஆத்மஸ்வரூபத்தை ஶாஸ்த்ரோக்தப்ரகாரத்திலே ஸாக்ஷாத்கரித்து.

(யோகநீதிநண்ணி) என்று யோகம் தலைநின்று. (அறந்திகழும் மறையோர் மனந்தன்னுள் அமர்ந்துறையும் அரும்பெருஞ்சுடரை) ''மறந்திகழுமனமொழித்து வஞ்சமாற்றி ஐம்புலன்களடக்கி இடர்ப்பாரத்துன்பம் துறந்து இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத் தொன்னெறிக்கண் நிலைநின்ற தொண்டரான அறந்திகழுமனத்தவர்தம் கதியை'' (பெருமாள் திரு. 1 - 7) என்றும், ''மறையோர்மனந்தன்னுள்'' (திருமொழி 7 - 3 - 7) என்றும், ''மாதவமானவர்தங்கள் சிந்தை'' (திருமொழி 2 - 1 - 1) என்றும், ''ஆரமார்வனரங்கனென்னுமரும்பெருஞ்சுடரொன்றினைச் சேரும் நெஞ்சினராகி'' (பெருமாள்திரு. 2 - 7) என்றும் சொல்லுகிறபடியே பரமயோகி₃களுடைய ஹ்ருத₃யங்களிலே அதிப்ரகாஶமான விக்₃ரஹத்தோடே எழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரனை.

(கண்கள்சிவந்திற்படியே மனவுட்கொண்டு) ''கண்கள்சிவந்து'' (திருவா. 8 - 8 - 1)

என்கிறபாட்டின்படியே அவயவஶோபை4யோடும் ஆப4ரணஶோபை4யோடும் கூடி காளமேக4நிப4ஶ்யாமமாயிருக்கிற விலக்ஷணவிக்3ரஹத்தை "கற்றவர்தந்தம் மனவுட்கொண்டு" (திருமொழி 7 - 3 - 1) என்கிறபடியே ஹ்ருத3யகமலத்திலே த்4யாநம்பண்ணி. (நிரந்தரம் மறவாமை) "நிரந்தரம் நினைப்பதாக" (திருச்ச. 101) என்றும், "மன்னு சேவடிக்கே மறவாமை" (திருமொழி 3 - 5 - 7) என்றும் சொல்லுகிறபடியே அந்த த்4யாநத்துக்கு விஸ்ம்ருதியும் விச்சே2த3முமின்றிக்கே. (துடக்கறு ஸ்ம்ருதியாய்) "சோர்விலாத காதலால் துடக்கறு மனத்தராய்" (திருச்ச. 78) என்கிறபடியே ஸர்வகாலமும் விஷயாந்தரங்களால் அபஹ்ருதமாகாத ப்ரேமத்தை உடையராகையாலே தத்ஸம்ஶ்லேஷவியோகைக3ஸுக2து3:க2ராய், ப4க3வத்ஸ்ம்ருதிஸந்ததிரூபேண செல்லாநின்றால் விச்சே2த3மில்லாத த்4ருவாநுஸ்ம்ருதிரூபமாய், "ஸத்த்வஶுத்3தௌ4 த்4ருவா ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிலம்பே4 ஸர்வக்3ரந்தீ2நாம் விப்ரமோக்ஷ:" (சா2ந்தோ3. 7 - 26 - 2) என்னக்கடவதிறே. (கனவில்மிக்க த3ர்ஶநஸமமாய்) "கனவில் மிகக்கண்டேன்" (இ. திருவ. 81) என்கிறபடியே அந்த ஸ்ம்ருதி ப்ரத்யக்ஷஸமாநாகாரையாய். (ஆகத்துப் புல்கும் அத்யர்த்த2ப்ரியமாய்) "ஆகத்தணைப்பாரணைவரே" (மூ.திருவ. 32) என்றும், "ஆர்வம் புரிய பரிசினால் புல்கில்" (மூ.திருவ. 50) என்றும் சொல்லுகிறபடியே அந்த த3ர்ஶநஸமாநாகாரையான ஸ்ம்ருதிதான் அந்த த்4யேயவஸ்துவை ஹ்ருத3யகமலத்திலே அணைக்கும்படி ஸ்மர்த்தவ்யவிஷயஸாரஸ்யத்தாலே தானும் அத்யர்த்த2ப்ரியரூபையாய்.

(வைகும் சிறப்புவிட்டுக் குற்றேவலென்னாத அநந்யப்ரயோஜநமாய்) "நின்புகழில் வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ நீ அவர்க்கு வைகுந்தமென்றருளும் வான்" (பெரியதிருவ. 53) என்றும், "உலகுபடைத்துண்டவெந்தை" (திருவாசி.2) என்று தொடங்கி, "அமுதவெள்ளத்தானாம் சிறப்புவிட்டு ஒருபொருட்கசைவோரசைக - நல்வீடு பெறினும் கொள்வதெண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே" என்றும், "மேலாஸ் பிறப்பின்மைபெற்றடிக்கீழ்க் குற்றேவலன்று மறப்பின்மை யான் வேண்டும் மாடு" (பெரியதிருவ. 58) என்றும் சொல்லுகிறபடியே இவ்வநுஸந்த4நரஸத்தாலே தே3ஶவிஶேஷத்திலநுப4வத்தை உபேக்ஷிக்கும்படி தானே பரமப்ரயோஜநமாம்படி இருக்கையாலே அநந்யப்ரயோஜநமாய்.

(வேத3ந-உபாஸந-ஸேவா-த்4யாநாதி3களென்னுமவை) வேத3நம், உபாஸநம், ஸேவை, த்4யாநம், த்4ருவாநுஸ்ம்ருதி, த3ர்ஶநஸமாநாகாரம், ப4க்தி என்றும் சொல்லப்படுகிறவையாகையாலே இந்த ப4க்தி ஸாத்4யஸாத4நப4க்தியாக ஶாஸ்த்ரஸித்3த4ம். "உப4யபரிகர்மிதஸ்வாந்தஸ்ய ஐகாந்திகாத்யந்திகப4க்தியோகை3கலப்4ய:" (ஆத்மஸித்3தி4) என்று கர்மஜ்ஞாநஸம்ஸ்க்ருதாந்த:கரணனுக்குப் பிறக்குமதொன்றாகையாலே ஸாத்4யமாய், ப4க3வத்ப்ரஸாத3நோபாயமாகையாலே ஸாத4நமான ப4க்தி என்று ஶாஸ்த்ரங்களாலே சொல்லப்பட்டதென்கிறார். ஆக இத்தால் சேதநனாலே ஸாத்4யமாய், உபாயரூபமான ப4க்திவிஶேஷம் சொல்லிற்று. (99)

100. ஸ்வீக்ருதஸித்3த4ஸாத4நர் இத்தை ஸாத்4யமாக இரக்க,

ப்ராப்திக்கு முன்னே ஸித்$_3$தி$_4$க்கும்.

இனி உபேயமான கைங்கர்யோபகரணமாய், ப்ரார்த்$_2$யமான ப$_4$க்திவிஶேஷம் சொல்லுகிறது மேல் (ஸ்வீக்ருதஸித்$_3$த$_4$ஸாத$_4$நர் என்று தொடங்கி). (ஸ்வீக்ருதஸித்$_3$த$_4$-ஸாத$_4$நர்) "த்வத்பாத$_3$மூலம் ஶரணம் ப்ரபத்$_3$யே" (ஸ்தோ.ர.22) என்றும், "ஸ்ரீமந்-நாராயணசரணாரவிந்த$_3$ம் ஶரணமஹம் ப்ரபத்$_3$யே" (ஶர.க$_3$த்$_3$யம்) என்றும், "லோக-விக்ராந்தசரணௌ ஶரணம் தேSவ்ரஜம் விபோ$_4$" (ப$_4$வி.பு.) என்றும் சொல்லுகிறபடியே இப்படி ஸித்$_3$த$_4$ஸாத$_4$நஸ்வீகாரம் பண்ணினவர்கள் இத்தை ஸாத்$_4$யமாக இரக்க, இந்த ப$_4$க்தி கைங்கர்யோபகரணமாய்க்கொண்டு ப்ராப்யாந்தர்க$_3$தமாகையாலே "ப$_4$கவந் ப$_4$க்திமபி ப்ரயச்ச$_2$ மே" (ஸ்தோ.ர.) என்றும், "பரப$_4$க்திபரஜ்ஞாநபரமப$_4$க்த்யேக-ஸ்வபா$_4$வம் மாம் குருஷ்வ" (ஶர.க$_3$த்$_3$யம்) என்றும் சொல்லுகிறபடியே இந்த ப$_4$க்தியை ஸாத்$_4$யமாக அவன்பக்கலிலே அபேக்ஷிக்க, ப்ராப்திக்கு முன்னே ஸித்$_3$தி$_4$க்கும், இது கைங்கர்யத்துக்கு பூர்வபா$_4$வியாகையாலே ப$_4$க$_3$வத்ப்ராப்திக்குமுன்னே ஸித்$_3$தி$_4$க்கும் என்கிறார். (100)

101. இது உப$_4$யமுமின்றிக்கே அறியாக்காலத்துள்ளே ஒக்கப் பிறந்து தழுவிநின்று கட்டமே நோயாயுலர்த்தி வீழ்ந்தலப்பாய் த்யாக$_3$ஸ்வீகாரநிஷ்ட$_2$ாஹாநிகளாக்கி ஸத்தாபே$_4$ாக$_3$வ்ருத்த்யுப-கரணமான ஒன்று.

(இது உப$_4$யமுமின்றிக்கே) இவருடைய ப$_4$க்தி உபாஸகர் கர்மஜ்ஞாநங்களாலே ஸாதி$_4$த்து ப$_4$க$_3$வத்ப்ரஸாத$_3$த்துக்கு ஸாத$_4$நமாகக் கொள்ளுகிற ப$_4$க்தியுமன்றிக்கே, ஸித்$_3$த$_4$ஸாத$_4$ந-பரிக்$_3$ரஹம் பண்ணினவர்கள் கைங்கர்யோபகரணமாக அபேக்ஷித்துப் போருகிற ப$_4$க்தியு-மன்றிக்கே; (அறியாக்காலத்தே ஒக்கப்பிறந்து) "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்புசெய்வித்து" (திருவா. 2 - 3 - 3) என்றும், "பா$_3$ல்யாத்ப்ரப்$_4$ருதி ஸுஸ்நிக்$_3$த$_4$:" (ரா.) என்றும் சொல்லுகிறபடியே அறிவு நடையாடுகைக்கு யோக்$_3$யதையில்லாத அதிபா$_3$ல்யத்திலே கைங்கர்யத்தைப் பெற்றல்லது நிற்கவொண்ணாத அதிமாத்ர-ப்ராவண்யத்தை விளைத்தான் என்றுசொல்லும்படி "ஸஹஜப$_4$க்திரஸ்மாகம்" என்று ஸஹஜையாய், "தழுவிநின்றகாதல்" (திருவா. 4 - 7 -11) என்று உடன்வந்தியாய், "கட்டமே காதல்" (திருவா. 7 - 2 - 4) என்றும், "வேட்கைநோய்கூர" (திருவா. 9 - 6 - 7) என்றும் அபி$_4$நிவேஶாநுகு$_3$ணமாக அநுப$_4$வம் ஸித்$_3$தி$_4$யாமையாலே இது கஷ்டம் என்று சொல்லும்படி வ்யாதி$_4$ரூபமாகையாலே பா$_3$த$_4$கமாய், "வேவாரா வேட்கைநோய் மெல்லாவி உள்ளுலர்த்த" (திருவா. 2 - 1 - 10) என்றும், "உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து" (திருவா. 5 - 7 - 2) என்றும், "உன்னைக்காண்பான் நானலப்பாய்" (திருவா. 5 - 8 - 4) என்றும் அஶோஷ்யமான ஆத்மவஸ்துவை ஶோஷிப்பித்து, அபி$_4$நிவேஶத்திலே ஆழ்ந்து, காணவேணுமென்று அலமாக்கப்பண்ணி. (த்யாக$_3$ஸ்வீகாரநிஷ்ட$_2$ாஹாநி-களாக்கி) த்யஜித்த உபாயத்திலே மூட்டி, த்யாக$_3$நிஷ்டை$_2$யைக்குலைத்து, ஸக்ருத்-ஸ்வீகாரம் அமைந்திருக்க *நோற்றநோன்புதொடங்கி, அடுத்தடுத்து ப்ரபத்தி பண்ணு-கையாலே ஸ்வீகாரத்தில் நிஷ்டை$_2$யைக்குலைத்து. (ஸத்தாபே$_4$ாக$_3$வ்ருத்த்யுபகரண-

மானதொன்று) ''நாகிஞ்சித்குர்வதஶ்ஶேஷத்வம்'' (வேத$_3$ா.ஸம்) என்று ஶேஷத்வைக-நிரூபணீயமான இவருடைய ஸத்தை கிஞ்சித்காரத்தாலேயாகையாலே இவருடைய ஸத்தாஹேதுவாய், ''தனக்கேயாக'' (திருவா. 2 - 9 - 4) என்றும், ''உன்தன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும்'' (திருவா. 10 - 3 - 9) என்றும் ''கதா$_3$ த்$_3$ரக்ஷ்யதி மாம் பதி:'' (ரா.ஸூ.) என்றும், ''கதா$_3$ ப்ரஹர்ஷயிஷ்யாமி'' (ஸ்தோ.ர.) என்றும், ''உன்னைமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல் மாய்த்ததே'' (திருவா. 4 - 3 - 3) என்றும் ஸர்வேஶ்வரனை ப$_2$லியாகச் சொல்லுகையாலே அவனுக்கு போ$_4$க$_3$மாயிருக்கிற கைங்கர்யத்துக்கு உபகரணமாயிருப்பதொரு ப$_4$க்தி என்கிறார். ஆக, இதுக்குக்கீழ் இவருடைய பரப$_4$க்தி ஸாதி$_4$த்துப் பெற்ற ப$_4$க்தியுமன்று, அபேக்ஷித்துப் பெற்ற ப$_4$க்தியுமன்று, ஸஹஜையாய், ஸத்தாப்ரயுக்தையான ப$_4$க்தி என்றார். (101)

102. இடகிலேன் நோன்பறிவிலேன் கிற்பன் கீழ்நாள்கள் என்கை-யாலே ஸாத$_4$நத்ரயபூர்வாப்$_4$யாஸஜமல்ல.

இவருடைய பரப$_4$க்தி ஜந்மாந்தரங்களிலே கர்மஜ்ஞாநாதி$_3$களை அநுஷ்டி$_2$த்து தத்ப$_2$லமாய்க்கொண்டு வந்ததானாலோ என்னில், ஜந்மாந்தரங்களில் அவை தமக்கு இல்லை என்னுமிடம் தாமே அருளிச்செய்தார் என்கிறார் (இடகிலேன் இத்யாதி$_3$). ''இடகிலேன் ஒன்றட்டகில்லேன் ஐம்புலன் வெல்லகில்லேன் கடவனாகிக்காலந்தோறும் பூப்பறித் தேத்த கில்லேன்'' (திருவா. 4 - 7 - 9) என்று ப$_4$க$_3$வத்$_3$விபூ$_4$திபூ$_4$தர் என்றுஅந்நபாநாதிகளை பூ$_4$தங்களுக்கு இட்டுக்கொடுபோரில் கர்மயோக$_3$த்திலே நிவேஶிப்பிக்கலாம். இந்த்$_3$ரியஜயம் பண்ணினேனாகில் ஜ்ஞாநயோக$_3$த்திலே நிவேஶிப்பிக்கலாம். ஶாஸ்த்ரோக்தமான ப்ரகாரங்களிலே புஷ்பாத்$_3$யுபகரணங்களைக் கொண்டு ப$_4$க$_3$வத்ஸமாராத$_4$நம் பண்ணினேனாகில் ப$_4$க்தியோக$_3$த்திலே நிவேஶிப்பிக்-கலாம். இவை இத்தனையும் செய்யப் பெற்றிலேன் என்றும், ''நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்'' (திருவா. 5 - 7 - 1) என்று ப$_2$லத்தோடே வ்யாப்தமாய் இருப்பதொரு கர்மத்தை அநுஷ்டி$_2$க்கப்பெற்றிலேன்; ஆத்மயாத$_2$ாத்ம்யஜ்ஞாநபூர்வகமான ப$_4$க$_3$வஜ்ஜ்ஞாநத்தை உடையேனல்லேன்; ஆக இவை இல்லாமையாலே உப$_4$ய-ஸாத்$_4$யமான ப$_4$க்தியை உடையேனல்லேன் என்றும். (கிற்பன் கீழ்நாள்கள் என்கை-யாலே) ''கிற்பன் கில்லேன் என்றிலன் முனநாளால்'' (திருவா. 3 - 2 - 6) 'விஹிதத்தைச் செய்து அவிஹிதத்தைத்தவிர்' என்கிறவிடத்தில் அப்படிச் செய்கிறேன் என்னாதே விஹிதத்தைத்தவிர்ந்து அவிஹிதத்தைச்செய்து போந்தேன்நெடுங்காலம் என்றும்.

''ஆழியங்கை அம்மானை ஏத்தாதயர்த்து - தீவினையேன் வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்'' (பெரியதிருவ. 82) என்றும், ஸர்வாதி$_4$கனை ஸர்வேஶ்வரனை மங்களாஶாஸநம் பண்ணாதே விஸ்மரித்து அநாதி$_3$காலம் வ்யர்த்த$_2$மே இருந்தேன் என்கையாலும், இப்படி ஜந்மாந்தரங்களில் தமக்கு கர்மஜ்ஞாநாதி$_3$களில் அந்வயமில்லை என்று அருளிச்செய்கையாலே. (ஸாத$_4$நத்ரயபூர்வாப்$_4$யாஸஜமல்ல) ஜந்மாந்தரங்களில் கர்மஜ்ஞாநப$_4$க்திகளை அநுஷ்டி$_2$த்து தத்ப$_2$லமாய் வந்த ப$_4$க்தியன்று என்கிறார். (102)

103. இப்பிறப்பே சிலநாளில் என்றபோதே இரண்டும் கழியும்.

ஜந்மாந்தரங்களிலே ஸாதி$_4$த்துப்பெற்றதன்றுகிலும் இந்த ஜந்மத்திலே சிலநாள் ஸாதி$_4$த்துப்பெற்றதாலேலோ என்னில், அதுவுமல்ல என்கிறார் (இப்பிறப்பே சிலநாளில் என்று). "குறிக்கொள் ஞானங்களால் எனையூழிசெய்தவமும் கிறிக்கொண்டிப்பிறப்பே சிலநாளிலெய்தினன் யான்" (திருவா. 2 - 3 - 8) என்று யமநியமாத்$_3$யவஹிதராய்க் கொண்டு ஸம்பாதி$_3$க்கவேண்டும் வேத$_3$ந-த்$_4$யாந-உபாஸநாத்$_3$யவஸ்த$_2$ாவிஶேஷங்களான ஜ்ஞாநங்களாலே அநேககல்பம் கூடி ஶ்ரவணமாய், மநநமாய், த்$_4$ருவாநுஸ்ம்ருதியாய், வரக்கடவதான தப:ப$_2$லத்தை ஒரு யத்நமின்றியிலே இருக்க, நல்விரகனை அவனாலே இஜ்ஜந்மத்திலே, அதுதன்னிலும் அல்பகாலத்திலே பெற்றேனென்கையாலே ஜந்மாந்தரஸாத்$_4$யமுமல்ல; இஜ்ஜந்மத்திலும் ஸாதி$_4$த்து வந்ததுமல்ல என்கிறார். (103)

104. பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ்செய் கலியாரேவ ஆளும் வன்குறும்பர் குடியேறிப்பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கிப் படிந்துண்ணும் போகத்தே தூராதே பொறுக்கொணப் போகத்துக்குக் காவல்செய்து குமைத்துத் திரித்து வீழ்த்து வலித்தெற்றி அருவியறுத்துக் கடனுயின இறுப்பிக்கப் பாழ்த்த விதியானவாறே தன்பால் மனம் வைப்பிப்பதாகத் தேய்ந்தறமன்னி ஒள்வாளுருவி வினைத்தூற்றை வேரறுவித்துத் தீக்கொளீஇக் கவ்வை எருவிட்டு அமுதவாறு தலைப்பற்றி ஈரியாய்க்கசிந்ததிலே ஈரநெல் வித்தி எழுநாற்றுக்களையையும் வேர்முதல்மாய்த்துப் பட்டிச்சேவதக்கி மீதுகொள்ளாமல் குறிக்கொள்வித்துக் கடல்புரையவிளைந்து தலைவணக்கினவாறே நாளுநாள் கோட்குறையாக நின்றுரறியாமல் குணங்கொண்டு ஆராமையுண்டு காலக்கழிவாலே நிலத்துகாமல் பற்றறுத்துத் தண்டாலடித்துப் பதரறுத்துப் போர்த்ததோல்விடுத்து ஸூக்ஷ்மவொட்டும் நீரிலே கழுவி வேறுர் கலத்திட்டு பைந்தொடி மடந்தையரைக்கொண்டு ஷட்$_3$கு$_3$ணரஸாந்நமாக்கி வானோர்க்காராவமுதானவாறே முற்றுமுண்ண முன்னம் பாரித்து உழுவதோர் நாஞ்சில்கொண்டு பெருக முயலும் பத்தியுழவன் க்ருஷிப$_2$லமிறே.

ஆனுல் இவர்க்கு இந்த ப$_4$க்தி உண்டாகைக்கு ஹேது ஏதென்னில் ப$_2$லபே$_4$ாக்தாவான ஸர்வேஶ்வரனுடைய க்ருஷிப$_2$லம் என்னுமிடத்தை க்ஷேத்ரமும், கர்ஷகனும், க்ருஷியும், தத்ப$_2$லமுமான வேஷத்தாலே அருளிச்செய்கிறார் (பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் என்று தொடங்கி). (பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன்) "முடிவில் பெரும்பாழேயோ" (திருவா. 10 - 10 - 10) என்று அபரிச்சே$_2$த்$_3$யமாய், சேதநர்க்கு பே$_4$ாக$_3$மோக்ஷங்களை விளைத்துக்

கொள்ளுகைக்கு நிலமான மூலப்ரக்ருதியிலே ப$_3$த்$_3$த$_4$னான சேதநன், ''நெஞ்சப் பெருஞ்செய்யுள்'' (திருவா. 5 - 3 - 4) என்று ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்திக்கு விளைநிலமான சேதநருடைய நெஞ்சாகிற பெரும் செய்யிலே.
(கலியாரேவ) ''ஏவினார் கலியார் நலிக'' (திருமொழி 1 - 6 - 8) என்று கலியுகமாகிற வறியன் தன் ப$_4$டரான இந்த்$_3$ரியங்களை ப்ரேரிக்க. (ஆளும் வன்குறும்பர்) ''மனமாளுமோரைவர் வன்குறும்பர்'' (பெ.திருவ.51) என்று ப்ரதா$_4$நகரணமான மநஸ்ஸையும் தங்கள்வஶமாக்கிக்கொண்டு ஆளுமவர்களுமாய் முன்கைமிடக்கருமாய் அநியாமயருமான அத்$_3$விதீயரை வரும் ''பொய்யாலைவரென் மெய்குடியேறி'' (திருமொழி 7 - 7 - 9) என்கிறபடியே குடியேறி.

(பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாக்கி) ''ஐம்புலன்கருதும் கருத்துளே திருத்தினேன் மனத்தை'' (திருமொழி 1 - 1 - 8) என்கிறபடியே ப்ரதா$_4$நகரணமான மநஸ்ஸாகிற பெருங்குடியும் தங்கள் கருத்துள்ளேயாம்படிபண்ணி. (படிந்துண்ணும் போகத்தே தூராதே) ''புலம்படிந்துண்ணும் போகமே பெருக்கிப்போக்கினேன்'' (திருமொழி 1 - 6 - 2) என்று ஶப்$_3$தா$_3$தி$_3$விஷயங்களிலே அவகா$_3$ஹித்து பு$_4$ஜிக்கிற போ$_4$க$_3$த்தை அபி$_4$வ்ருத்$_3$த$_4$மாக்கி. ''தூராக்குழி'' (திருவா. 5 - 8 - 6) என்கிறபடியே அத்தால் ஒருகாலும் பர்யாப்தி பிறவாதே. (பொறுக்கொணாப் போகத்துக்குக் காவல் செய்து) ''பொறுத்துக்கொண்டிருந்தால் பொறுக்கொணாப்போகமே நுகர்வான் புகுந்து'' (திருமொழி 7 - 7 - 7) என்று சேதநனாலே பொறுக்கப்போகாத ஶப்$_3$தா$_3$நுப$_4$வத்துக்கு, ''கடியார் காளையர் ஐவர் புகுந்து காவல்செய்த'' (திருமொழி 7 - 7 - 8) என்று நெஞ்சில் க்ரௌர்யத்தை உடையராய், பா$_3$தி$_4$க்க பா$_3$தி$_4$க்க மேலே இளகிப்பதித்து வருகிற அந்த விஷயங்கள் {இந்த்$_3$ரியங்கள்} கீழேசொன்ன போ$_4$க$_3$த்துக்கு விருத்$_3$த$_4$மான ப$_4$க$_3$வத்ஸம்ரம்ப$_4$மாகிற ராஜபரிகரம் புகுராதபடி காவல்செய்து.

(குமைத்துத்திரித்து வீழ்த்தி வலித்தெற்றி அருவியறுத்தென்றும்) ''கூறைசோறிவை தாவென்று குமைத்துப்போகார்'' (திருமொழி 7 - 7 - 9) என்றும், ''செக்கிலிட்டுத் திரிக்குமைவரை'' (திருவா. 7 - 1 - 5) என்றும், ''கொடுவன்குழியினில் வீழ்க்குமைவரை'' (திருவா. 7 - 1 - 9) என்றும், ''திசைதிசை வலித்தெற்றுகின்றனர்'' (திருவா. 7 - 1 - 10) என்றும், ''அருவித்தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்'' (திருமொழி 7 - 7 - 1) என்றும், ''ஐவரறுத்துத்தின்றிட அஞ்சி'' (திருமொழி 7 - 7 - 7) என்றும் சொல்லுகிறபடியே இப்படி ஆராய்ச்சியற்றுத் தங்கள் வஶமானவாறே பலபடியாலும் தண்டித்து. (கடனாயின இறுப்பிக்க) ''பொருளின்பமென இரண்டுமிறுத்தேன் ஐம்புலன்கட்கடனாயின'' (திருமொழி 6 - 2 - 1) என்று ஶ்ரோத்ராதி$_3$களுக்கு ப்ராப்தமாயிருக்கிற அர்த்த$_2$காமங்கள் என்று சொல்லப்படுகிற இரண்டையும் கடமையிறுப்பாரைப்போலே அவற்றாலே பரிபூ$_4$தனாய்க் கொடுத்துப்போந்தேன் என்று அவற்றுக்கு ப்ராப்தங்களை இறுப்பித்துக் கொள்ள.

(பாழ்த்த விதியானவாறே) ''வாழ்த்தி அவனடியைப் பூப்புனைந்து நின் தலையைத் தாழ்த்திருகை கூப்பென்றால் கூப்பாத பாழ்த்தவிதி'' (பெ.திருவ. 84) என்று இப்படி இந்த்$_3$ரியபாரவஶ்யதையாலே ஒரு கரணமும் ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் ப்ரவணமாகாத

தீர்ப்பாரென்னுமவற்றிலே தோன்றும்) "நூற்றுவரை அன்று மங்கநூற்ற" (திருவா. 7 - 3 - 10) இத்யாதி₃ - து₃ர்யோத₄நாதி₃கள் மண்ணுண்ணும்படி மந்த்ரித்த க்ருஷ்ணன் என் நெஞ்சை அபஹரித்தான் என்றும், "குரரி விலபஸி த்வம் வீதநித்₃ரா ந ஶேஷே ஸ்வபதி ஜக₃தி ராத்ர்யாமீஶ்வரக்₃ரஸ்தபே₃ாதே₄ । வயமிவ ஸகி₂ கச்சித்₃க₃ாட₄₄நிர்விண்ணசேதா நளிநநயநஹாஸோத₃ாரலீலேக்ஷணேந" (ப₄ாக₃.10) இத்யாதி₃களால் ஸ்ரீமத்₃த்₃வாரகையில் பெண்கள் க்ருஷ்ணவிஷயத்திலே பேசினப்போலே *வாயுந்திரையுகளிலே நாரை அன்றில் தொடக்கமானவற்றுக்கு த₄ாவள்யாதி₃ஸ்வப₄ாவங்கள் நியதம் என்றறியாதே அவையும் தம்மைப்போல் நோவுபடுகிறனவாகக்கொண்டு தாம் நோவுபடுகையாலும், *தீர்ப்பாரையாமினியிலே "தேர்ப்பாகனார்க்கிவள் சிந்தைதுழாய்த்திசைக்கின்றதே" (திருவா. 4 - 6 - 1) என்று அவனுடைய ஸாரத்₂யவேஷத்தில் அகப்பட்டு இவள் நெஞ்சு கலங்கினாள் என்று தொடங்கி, "வண்டுவராபதிமன்னனை ஏத்துமின்" (திருவா. 4 - 6 - 10) என்று ஸ்ரீமத்₃த்₃வாரகைக்கு நிர்வாஹகனானவனை மங்களாஶாஸநம் பண்ணவே இவர்வ்யாதி₄ பரிஹ்ருதமாம் என்று தலைக்கட்டுகையாலே இவர்க்கு உண்டானமை தோன்றும். (124)

125. இராமனெனில் ந ச வாகக்குழைத்தவன் பின்தொடரவிருந்த வன்சிறையிலும் விதி₃தன் புணை என்று ஜீவிதாதி₃களால் குறைவின்றி மாயும்வகை விஷஶஸ்த்ரங்கள்தேடி வில்வலவா ஹா என்று இரக்கமெழாக்கொடுமைகள் ஶங்கித்து என்னையும் ஜீவந்தீம் என்று ஆள்விட்டுச் சுடரையடைந்து அகலகில்லா முற்றுவமை பெருமகளோடே.

ஆகக்கீழ், ப்ரத₄ாநமஹிஷிகளான மூவரோடும் மற்றும் ப₄க₃வத்பரிக்₃ரஹமுடையாரோடும் ஆழ்வாருக்கு ஸாம்யமுண்டென்று சொல்லிற்றாய்த்து. இவர்களெல்லாரும் இவர்க்கு ஒருபுடைக்கு ஒப்பாய், ஸர்வதா₂ ஸாம்யமுள்ளது ஜநககுலஸுந்த₃ரியான பெரியபிராட்டியாரோடே என்கிறார் (இராமனெனில் ந ச ஆக என்று தொடங்கி). "மராமரமெய்தமாயவன் என்னுளிராமனெனில் பின்னை யானொட்டுவேனோ" (திருவா. 1 - 7 - 6) என்றும், "ந ச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராக₄வ । முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்₃த்₄ருதௌ" (ரா. அ.) என்று சக்ரவர்த்தித்திருமகனைப்பிரியில் ஜலாது₃த்₃த்₄ருதமான மத்ஸ்யம்போலே முடியும்படியான பிராட்டியைப்போலே, இவரும் அவனைப்பிரியில் தாம் உளராகாதபடி "இலங்கைசெற்றாய் உன்னை என்னுள்ளே குழைத்தவெம்மைந்தா" (திருவா. 2 - 6 - 9) என்று இவரோடு ஏகதத்த்வமென்னலாம்படி ஸம்ஶ்லேஷித்த சக்ரவர்த்தித்திருமகன் லங்காத்₃வாரத்தளவும் அவளைத்தேடிப்பின் தொடர்ந்தாப்போலே "எதிர்சூழல்புக்கு" (திருவா. 2 - 7 - 6) என்று இவர்பிறந்த ஜந்மங்கள்தோறும் தானும் பின்தொடரும்படி, அவள் ராவணப₄வநத்திலே சிறையிருந்தாப்போலே இவரும் "வன்சிறையில் அவன்வைக்கில்" (திருவா. 1 - 4 - 1) என்று ஸம்ஸாரத்திலே சிறையிருந்தவிடத்தில், ப்ரதிகூலனான ராவணனுக்கு "விதி₃தஸ்ஸ ஹி த₄ர்மஜ்ஞஶ்ஶரணாக₃தவத்ஸலஃ। தேந மைத்ரீ ப₄வது தே யதி₃ ஜீவிதுமிச்ச₂ஸி" (ரா. ஸு. 21 - 20) என்று ஹிதம் சொன்னாப்போலே இவரும் ப்ரதிகூலரான ஸம்ஸாரிகளுக்கு

''புணேவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே'' (திருவா. 2 - 8 - 1) என்று ஹிதமருளிச்செய்கையாலும்.

(ஜீவிதாதி$_3$களால் குறைவின்றி) ''ந ஹி மே ஜீவிதேநார்த்தே$_2$ா நைவார்த்தை$_2$ர் ந ச பூ$_4$ஷணை:'' (ரா. ஸு.)என்று மஹாரத$_2$ரான சக்ரவர்த்தித்திருமகனையொழிய ராக்ஷஸிகள்நடுவே இருக்கிற எனக்கு என் ஆத்மாத்மீயங்களால் என்ன ப்ரயோஜநம் உண்டென்று பிராட்டி அவற்றை உபேக்ஷித்தாப்போலே ''மாருளன் கவராத மணிமாமை குறைவிலமே'' (திருவா. 4 - 8 - 1) என்று தொடங்கி, ''உயிரினுல் குறைவிலமே'', (திருவா. 4 - 8 - 10), ''உடம்பினுல் குறைவிலமே'' (திருவா. 4 - 8 - 9) என்று இவரும், அவனுக்குறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்று ஆத்மாத்மீயங்களை உபேக்ஷிக்கையாலும். (மாயும் வகை விஷஶஸ்த்ரங்கள்தேடி) ''மாயும் வகையறியேன் வல்வினையேன்'' (திருவா. 4 - 8 - 1) என்றும், ''விஷஸ்ய த$_3$ாதா ந ஹி மேஸ்தி கஶ்சித் ஶஸ்த்ரஸ்ய வா வேஶ்மநி ராக்ஷஸஸ்ய'' (ரா.ஸு.) என்று உயிர்க்கொலையாக்கிவைத்த ராவணக்$_3$ருஹத்திலே நற்கொலையாக்குவதித்தனை விஷம் தருவாரில்லையோ? விஷம்போலே நின்றுகொல்லுகையன்றிக்கே அப்போதே முடிப்பதொரு ஶஸ்த்ரம் தருவாரில்லையோ? என்று பிராட்டி முடியும் வகை தேடினுப்போலே இவரும் மாயும் வகை தேடுகையாலும்.

(வில்வலவா ஹா என்று) ''புணராநின்ற மரமேழன்றெய்த ஒருவில்வலவாவோ'' (திருவா. 6 - 10 - 5) என்று - ''ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராமமாதஸ்ஸஹ மே ஜநந்யா । ஹா ராம ஸத்யவ்ரத தீ$_3$ர்க்க$_4$ப$_3$ாஹோ ஹா பூர்ணசந்த்$_3$ரப்ரதிமாநவக்த்ர'' (ரா.ஸு.), ''ஹா ஜீவலோகஸ்ய ஹிதப்ரியஸ்ய வத்$_4$யம் ந மாம் வேத்ஸி ஹி ராக்ஷஸாநாம்'' (ரா. ஸு.) என்று பிராட்டி பெருமாளுடைய ஶௌர்யாதி$_3$களைச் சொல்லிக் கூப்பிட்டாப்போலே இவரும் கூப்பிடுகையாலும். (இரக்கமெழாக்கொடுமைகள் ஶங்கித்து) ''க்$_2$யாத: ப்ராஜ்ஞ: க்ருதஜ்ஞஶ்ச ஸாநுக்ரோஶஶ்ச ராக$_4$வ: । ஸத்$_3$வ்ருத்தோ நிரநுக்ரோஶஶ்ஶங்கே மத்$_3$ப$_4$ாக்$_3$யஸங்க்ஷயாத்'' (ரா.ஸு.)என்று பெருமாளை நிர்க்$_4$ருணராக ஶங்கியாநின்றேன், என்னுடைய ப$_4$ாக்$_3$யஹாநியாலே என்று பிராட்டி அப்படி ஶங்கித்தாப்போலே, இவரும் ''இரக்கமெழீரிதற்கென்செய்கென்'' (திருவா. 2 - 4 - 3) என்றும், ''இலங்கைக்குழாநெடுமாடம் இடித்தபிரானுர் கொடுமைகளே'' (திருவிரு. 36) என்றும், ''அறிவொன்றும் சங்கிப்பன்வினையேன்'' (திருவா. 8 - 1 - 4) என்றும் சொல்லுகிறபடியே அவரை நிர்க்ருணராக ஶங்கிக்கையாலும்.

(என்னையும் ஜீவந்தீமென்று ஆள்விட்டு) ''ஜீவந்தீம் மாம் யத$_2$ா ராமஸ்ஸம்ப$_4$ாவயதி கீர்த்திமாந் । தத்த்வயா ஹநுமந் வாச்யோ வாசாத$_4$ர்மமவாப்நுஹி'' (ரா.ஸு.) என்று தம்முடைய ரக்ஷ்யவர்க்க$_3$த்திலே நானுமொருத்தி உளேனுகைப்பெருமாளுக்கு விண்ணப்பம் செய் என்று பிராட்டி ஆள்விட்டாப்போலே, இவரும் ''மாறில்போரரக்கன் மதிள் நீறெழச்செற்றுகந்த ஏறுசேவகனுர்க்கென்னையுமுளளென்மின்கள்'' (திருவா. 6 - 1 - 10) என்று ஆர்த்தரக்ஷணத்திலே தீ$_3$க்ஷித்தவர்க்கு ஆர்த்தரிலே நானும் ஒரு ஆர்த்தையுளேனுகச் சொல்லுங்கோள் என்று பிராட்டியைப்போலே சதுஷ்பாத்தாயிருப்பதொன்றைத்தூதுவிடுகையன்றிக்கே ஷட்பத$_3$ங்களாய், பக்ஷபாதத்தை

உடையனவாய், ஶாக$_2$ஸஞ்சாரிகளாய், மது$_4$கரவ்ருத்திகளுமாய், அத ஏவ ஸாரக்$_3$ராஹிகளாயிருப்பார் பலரையும் தூதுவிடுகையாலும். (சுடரையடைந்து) "அநந்யா ராக$_4$வேணாஹம் பா$_4$ஸ்கரேண ப்ரபா$_4$ யதா$_2$" (ரா.ஸு. 21 - 15) என்று பிராட்டி தன்னை அநந்யையாகப் பேசினாப்போலே, இவரும் "அரக்கியை மூக்கீர்ந்தாயை - சுடரை - அடியேனடைந்தேன் முதல்முன்னமே" (திருவா. 2 - 3 - 6) என்று தம்மை அநந்யார்ஹமாகப் பேசுகையாலும்.

(அகலகில்லா) "அகலகில்லலேனிறையுமென்றலர்மேல்மங்கையுறைமார்பா" (திருவா. 6 - 10 - 10) என்று பெரியபிராட்டியார் அவனுடைய திருமார்வைப்பற்றி அகலஶக்தையல்லேனென்னுமாப்போலே, "அடியேனுனபாதமகலகில்லேன்" (திருவா. 6 - 10 - 9) என்று இவரும் அவன்திருவடிகளைப்பற்றி அகலஶக்தனல்லேனென்கையாலும் முற்றுவமை *பெருமகள்பேதைமங்கைதன்னோடே என்கிறார். அவள் மார்வைப்பற்றி அகலகில்லேனென்னும்; இவர் தாளைப்பற்றி அகலகில்லேனென்பர். இதுவே இருவர்க்கும் வாசி. ஆனாலும் அவளைப்பற்ற இவர்க்குக் கால்கூறேற்றமுண்டிறே. (125)

126. பிரியிலிலேனுக்கு இளங்கோவும் அக்குளத்தில் மீனிறே.

இனிமேல், மற்றும் ப$_4$க$_3$வத்ப்ரத்யாஸத்தியையுடையரான லக்ஷ்மண-ப$_4$ரத-ஶத்ருக்$_4$ந-த$_3$ஶரத$_2$-யஶோதா$_3$-ப்ரஹ்லாத$_3$-விபீ$_4$ஷண-மாருதி-அர்ஜுநன் என்கிற இவர்களோடு ஸாம்யமுண்டென்கிறார். (பிரியிலிலேனுக்கு) அவனைப்பிரியுமளவில் "நின்னலாலிலேன் காண்" (திருவா. 2 - 3 - 7) என்று இவரைப்போலே ஸத்தை அழிகைக்கு (இளங்கோவும்) "நேரிழையுமிளங்கோவும்" (பெருமா.தி. 9 - 2) என்றும், "ந சாஹமபி ராக$_4$வ" (ரா.அ.53-31) என்று - பிராட்டியோடொக்கத் தம்மை ஏகப்ரக்ருதியாகச் சொன்ன இளையபெருமாளும். (அக்குளத்தில் மீனிறே) கீழ் ப்ரஸ்துதமான ஜலாந்-மத்ஸ்யமிறே. இத்தால் அவனைப்பிரியில் த$_4$ரியாமைக்குப் பிராட்டியும் இளையபெருமாளும் இவருமொக்குமென்றபடி. இத்தால் இளையபெருமாள்ஸாம்யம். (126)

127. அழுந்தொழும் ஸ்நேஹபா$_3$ஷ்பாஞ்ஜலியோடே ருசிர-ஸாநுக்-களில் கூவிக்கொள்ளும் பிரியாவடிமைக்குச் சரணே சரண் என்று வாளும் வில்லுங்கொண்டு ப$_3$ந்து$_4$வும் பிதாவுமவரே என்கையும், அன்னையென்செய்யிலென் ராஜ்யமும் யானே என்று பெருஞ்-செல்வமும் இச்சியாமல் வேண்டிச்சென்று திருவடியே சுமந்து விரைந்துவருமளவும் கண்ணநீர் பங்கமாக நிலந்துழாவிக் குடிக்கிடந்த கையறவும் கோதிலடிமை உறுமோ என்பித்த புலங்கொள் நித்ய-ஶத்ருவிசிந்தநமுமான ப்$_4$ராதாக்கள், அப்பொழுதைக்கப்பொழுது போனாய் என்னும் மாதாபிதாக்கள், செந்தீ தண்காற்று இளநாகம் முதலான பகையறச்சிந்தைசெய்து எங்குமுளனென்னும் பள்ளிப் பிள்ளை, முற்றவிட்டு மற்றிலேனென்னும் த$_4$ர்மாத்மா வாளிபொழிந்த

நிர்கு$_3$ணவிஶ்வாத்மா உள்ளே உறைய ஊனை வீரசரிதம் கற்பார் ப$_4$ாவம் மற்றிலேன் என்னும் ராமத$_3$ாஸன் பல்வகையும் கண்டு வெண்சங்கேந்தின ரூபப$_4$ரனை ஶ்வேதன் முதலானோர்படிகளும் காணலாம்.

(அழுந்தொழும் ஸ்நேஹபா$_3$ஷ்பாஞ்ஜலியோடே) "ப$_3$ால்யாத்ப்ரப்$_4$ருதிஸுஸ்நிக்$_3$த$_4$ஃ" (ரா. ப$_3$ா. 18 - 27) என்றும், "பா$_3$ஷ்பபர்யாகுலமுக$_2$ஃ" (ரா. அ. 31 - 1) என்றும், "ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்தி$_2$தம்" (ரா. அ. 16 - 26) என்றும் இளையபெருமாள் பெருமாளைப் பிரியில் த$_4$ரியாத ஸ்நேஹத்தாலே கண்ணும் கண்ணநீருமாய், அஞ்ஜலிஹஸ்தராய்க் கொண்டு "குருஷ்வ மாமநுசரம் வைத$_4$ர்ம்யம் நேஹ வித்$_3$யதே" (ரா. அ. 31 - 24) என்றும், "ஸ்வயந்து ருசிரே தே$_3$ஶே க்ரியதாமிதி மாம் வத$_3$" (ரா. ஆ. 15 - 7) என்றும், "ப$_4$வாம்ஸ்து ஸஹ வைதே$_3$ஹ்யா கி$_3$ரிஸாநுஷு ரம்ஸ்யதே । அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்$_3$ரதஸ்ஸ்வபதஶ்ச தே" (ரா. அ. 31 - 27) என்றும் சொல்கிறபடியே என்னை அநுசரனாகப் பண்ணவேணுமென்று ப்ரார்த்தி$_2$த்துச்செய்கிற அடிமைக்கு உபாயமாக "ஸ ப்$_4$ராதுஶ்சரணௌ கா$_3$ட$_4$ம் நிபீட்$_3$ய ரகு$_4$நந்த$_3$நஃ । ஸீதாமுவாசாதியஶா ராக$_4$வஞ்ச மஹாவ்ரதம்" (ரா. அ. 31 - 2) என்று நாச்சியார் புருஷகாரமாகத் திருவடிகளைக் கட்டிக்கொண்டு "அக்$_3$ரதஃ ப்ரயயௌ ராமஸ்ஸீதா மத்$_4$யே ஸுமத்$_4$யமா । ப்ருஷ்ட$_2$தஶ்ச த$_4$நுஷ்பாணிஃ லக்ஷ்மணோநுஜகா$_3$ம ஹ" (ரா. ஆ. 11 - 1) என்று ஸாயுத$_4$ராய்க்கொண்டு அவரைப்பின்சென்று "ப்$_4$ராதா ப$_4$ர்த்தா ச ப$_3$ந்து$_4$ஶ்ச பிதா ச மம ராக$_4$வஃ" (ரா.அ.58-31) என்று பெருமாளை எல்லா உறவுமாகப் பற்றினாப்போலே.

இவருமப்படியே (அழுந்தொழுமித்யாதி$_3$ - பிரியாவடிமைக்கு) "அழுந்தொழும்" (திருவா. 7 - 2 - 8) என்று அழுவது தொழுவதாய், "திருவேங்கடத்தெழில்கொள்சோதி எந்தை தந்தை தந்தைக்கு - ஒழிவில்காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும் நாம்" (திருவா. 3 - 3 - 1) என்று திருமலையிலே நின்றருளின பரமஸ்வாமிக்கு ஸர்வதே$_3$ஶ-ஸர்வகால-ஸர்வாவஸ்தோ$_2$சிதமான ஸர்வஶேஷவ்ருத்திகளையும், "முகப்பே கூவிப்பணிகொள்ளாய்" (திருவா. 8 - 5 - 7) என்கிறபடியே ஏவி அடிமைகொள்ளவேணுமென்று ப்ரார்த்தி$_2$த்து, "பிரியாவடிமை என்னைக்கொண்டாய்" (திருவா. 5 - 10 - 11) என்று விச்சே$_2$தி$_3$யாதபடியான கைங்கர்யத்துக்கு. (சரணே சரணென்று) "நாகணைமிசைநம்பிரான் சரணேசரண்நமக்கு" (திருவா.)என்று அவன் திருவடிகளை உபாயமென்று அத்$_4$யவஸித்து.

"வாளும் வில்லும் கொண்டு பின்செல்வார் மற்றில்லை" (திருவா. 8 - 3 - 3) என்று அவற்றைக்கொண்டு தாம் பின்னே திரிய ஆசைப்பட்டு. (ப$_3$ந்து$_4$வும் பிதாவும் அவரே என்கையும்) "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையுமவரே இனியாவார்" (திருவா. 5 - 1 - 8) என்று ஸர்வேஶ்வரனே எல்லா உறவு முறையாகப் பற்றுகையாலும்.

(அன்னை என் செய்யிலென் இத்யாதி$_3$) ஶ்ரீப$_4$ரதாழ்வான் பெருமாளுடைய

திருவபி$_4$ஷேகத்தைக் கைகேயி விலக்கின சீற்றத்தாலே ''ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் து$_3$ஷ்டசாரிணீம்' (ரா. அ. 78 - 22) என்கிறபடியே கைகேயியைச்சீறி உபேக்ஷித்து ''ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய'' (ரா. அ. 82 - 12) என்று - ராஜ்யமும் நானும் பெருமாளுக்கு ஶேஷமென்றும், ''ம்ருதே து தஸ்மிந் ப$_4$ரதோ வஸிஷ்ட$_2$ப்ரமுகை$_2$ர்-த்$_3$விஜை: । நியுஜ்யமாநோ ராஜ்யாய நைச்ச$_2$த்$_3$ராஜ்யம் மஹாப$_3$ல:'' (ரா. ப$_3$ா. 1 - 33) என்றும் வஸிஷ்ட$_2$ாதி$_3$புரோஹிதர் ராஜாவாக வேணுமென்று அபேக்ஷிக்க, ''இக்ஷ்வாகூணுமியம் பூ$_4$மிஸ்ஸஶைலவநகாநநா ।'' (ரா. கி. 18 - 6) என்கிற மஹதை$_3$ஶ்வர்யத்தை இச்சி$_2$யாதே, ''அயாசத்$_3$ப்$_4$ராதரம் ராமமார்யப$_4$ாவபுரஸ்க்ருத:'' (ரா. ப$_3$ா. 1 - 35) என்று பௌரஜநங்களோடே பெருமாள்திருவடிகளிலே சென்று மீண்டெழுந்தருளவேணும் என்றபேக்ஷிக்க, ''பாது$_3$கே சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் த$_3$த்த்வா புந:புந:'' (ரா. ப$_3$ா. 1 - 37) என்று அவரும் அப்படிச்செய்யாதே திருவடிநிலையைக் கொடுத்துவிட.

''பாது$_3$கே தே புரஸ்க்ருத்ய'' (ரா. யு. 124 - 4) என்று அத்திருவடிநிலையை முன்னிட்டுக் கொண்டிருந்து, ''ஶிரஸா யாசதோ யஸ்ய வசநம் ந க்ருதம் மயா'' (ரா. யு. 121 - 19) என்கிற இழவு திருவுள்ளத்திலே கிடக்கையாலே ''ந மே ஸ்நாநம் ப$_3$ஹுமதம் வஸ்த்ராண்யாப$_4$ரணநி ச । தம் விநா கைகயீபுத்ரம் ப$_4$ரதம் த$_4$ர்மசாரிணம்'' (ரா. யு. 121 - 6) என்று - நாம் பிள்ளை ப$_4$ரதனையொழியக் குளித்தல் ஒப்பித்தல் செய்யக்கடவோமல்-லோமென்று பெருமாள் த்வரையோடே மீண்டு வருமளவும் ''பங்கதி$_3$க்$_3$த$_4$ஸ்து ஜடில:'' (ரா. யு. 124 -4) என்று கண்ணீராலுண்டான சேற்றிலே தரைக்கிடைகிடந்து இக்ஷ்வாகு-குலமர்யாதை தப்பாமலிருந்து, ''க்ருதம் த$_3$ஶகு$_3$ணம் மயா'' (ரா. யு. 127 - 56) என்று பெருமாளுடைய தி$_3$வ்யைஶ்வர்யத்தை ஒன்று பத்தாகப் பெருக்கி, ''ஸ காமமநவாப்-யைவ'' (ரா.ப$_3$ா. 1 - 38) என்று தாம் ஆசைப்பட்ட பொருள் கைப்படாத இழவோடே இருந்தாப்போலே.

இவரும் அப்படியே ''அன்னை என் செய்யிலென்'' (திருவா. 5 - 3 - 6) என்று - தாயார் முடியிலென்? பிழைக்கிலென்? என்று உபேக்ஷித்து. (ராஜ்யமும் யானே என்று) ''யானே நீ என்னுடைமையும் நீயே'' (திருவா. 2 - 9 - 9) என்று ஆத்மாத்மீயங்கள் அவனுக்கு ஶேஷமென்று. (பெருஞ்செல்வமும் இச்சி$_2$யாமல்) ''கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு'' (திருவா. 4 - 9 - 4) என்று ஐஶ்வர்யத்தை அக்$_3$நிஸமமாகக்கண்டு, ''ஐங்கருவிகண்ட இன்பம் - ஒழிந்தேன்'' (திருவா. 4 - 9 - 10) என்கிறபடியே உபேக்ஷித்து. (வேங்கடவாணனை வேண்டிச்சென்று) அவனை அநுப$_4$விக்கவேணுமென்று வேண்டிச்சென்றுஇவர் அபேக்ஷித்தபடி கிடையாமை-யாலே. (திருவடியே சுமந்து) ''திருவடியே சுமந்துழலக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை'' (திருவா. 4 - 9 - 9) என்று அவன் திருவடிகளை ஶிரஸா வஹிப்பிக்க ஶிரஸா வஹித்து. (விரைந்து வருமளவும்) வீடுதிருத்துவான்போய் விண்ணுலகம் தருவானாய் விரைந்துவருமளவும். (கண்ணநீர் பங்கமாக்கி) ''கண்ணநீர் கைகளாலிறைக்கும்'' (திருவா. 7 - 2 - 1) என்று கண்ணநீர் வெள்ளமிட இருந்து. (நிலந்துழாவி) ''இருநிலம் கைதுழாவிருக்கும்'' (திருவா. 7 - 2 - 1) என்று ஆற்றாமையாலே நிலம் துழாவி.

(குடிக்கிடந்த) ''குடிக்கிடந்தாக்கம் செய்து'' (திருவா. 9 - 2 - 2) என்கிறபடியே

ப்ரபந்நகுலத்தில் செய்துபோருகிற மர்யாதையைத் தப்பாமலிருந்து. (கையறவும்) ''காமுற்ற கையறவோடு'' (திருவா. 2 - 1 - 3) என்று ஆசைப்பட்டபொருள் கைபுகுராத இழவோடே இருக்கையாலும். (கோதிலடிமை உறுமோ என்பித்த) ஸ்ரீஶத்ருக்$_4$நாழ்வான் ''க$_3$ச்ச$_2$தா மாதுலகுலம் ப$_4$ரதேந தத$_3$ாநக$_4$ஃ । ஶத்ருக்$_4$நோ நித்யஶத்ருக்$_4$நோ நீதஃ ப்ரீதி-புரஸ்க்ருதஃ'' (ரா. அ. 1 - 1) என்று - ''அநக$_4$ஃ'', ''நித்யஶத்ருக்$_4$நஃ'' என்று ஸ்ரீப$_4$ரதாழ்வானுடைய பாவநத்வபே$_4$ாக்$_3$யத்வங்களிலே கால்தாழ்கையாலே ''பும்ஸாம் த்$_3$ருஷ்டிசித்தாபஹாரிணம்'' (ரா. அ. 3 - 29) என்று ஸஜாதீயரையும் ஈடுபடுத்தவற்றான பெருமாளுடைய விக்$_3$ரஹத்திலே துவக்குண்ணாதே, அந்த வடிவழகுதான் ப$_4$ரதாநு-வ்ருத்தியில் போகாதபடி துவக்கவற்றாகையாலே நித்யஶத்ருவாக நினைக்கிறாப்போலே.

இவரும் ''கோதிலடிமை'' (திருவா. 8 - 10 - 9) என்று சொல்லப்படுகிற ப$_4$ாக$_3$வதஶேஷத்வ-ரஸம். (உறுமோ என்பித்த) ''அவனடியார் சிறுமாமனிசராய் என்னையாண்டார் இங்கே திரிய - அதுவன்றி உலகமூன்றுமுடன் நிறைய சிறுமாமேனி நிமிர்த்த என் செந்தாமரைக் கண் திருக்குறளன் - நறுமாவிரைநாண்மலரடிக்கீழ்ப்புகுதல் - பாவியேனுக்குறுமோ'' (திருவா. 8 - 10 - 3) என்னும்படி பண்ண அந்த ப$_4$ாக$_3$வதஶேஷத்வரஸத்தாலே. (புலங்-கொள் நித்யஶத்ருவிசிந்தநமும்) ''புலங்கொள்வடிவு'' (திருவா. 8 - 10 - 4) என்று ஸர்வேந்த்$_3$ரியாபஹாரக்ஷமமான வடிவழகையும் உபேக்ஷிக்கையாலும். (ஆன ப்$_4$ராதாக்கள்) இப்படியிருந்துள்ள இளையபெருமாள், ஸ்ரீப$_4$ரதாழ்வான், ஸ்ரீஶத்ருக்$_4$நாழ்-வான் என்கிற ப்$_4$ராதாக்கள்.

(அப்பொழுதைக்கப்பொழுது போனாய் என்னும் மாதாபிதாக்கள்) ''ந ததர்ப்ப ஸமாயாந்தம்'' (ரா. அ. 3 - 30) என்று பெருமாளை ஸர்வகாலமும் அநுப$_4$வியாநிற்கச் செய்தேயும் பர்யாப்தனாகாத சக்ரவர்த்தியைப்போலே இவரும் ''அப்பொழுதைக்கப்-பொழுதென் ஆராவமுதம்'' (திருவா. 2 - 5 - 4) என்று ஸர்வகாலமும் அநுப$_4$வியாநிற்கச்செய்தேயும் பர்யாப்தி பிறவாத அபி$_4$நிவேஶத்தை உடையராகை-யாலும், ''போனாய் மாமருதின் நடுவே'' (திருவா. 5 - 1 - 2) என்று யமளார்ஜுநங்களின் நடுவே போனபோது யஶோதைப்பிராட்டி வயிறெரிந்தாப்போலே இவரும் அதீதகால-மாயிருக்கச்செய்தேயும் ஸமகாலத்திற்போலே வயிறுபிடிக்கையாலும்.

(செந்தீ தண்காற்று இத்யாதி$_3$) ''நாக்$_3$நிர்த$_3$ஹதி நைவாயம் ஶஸ்த்ரைஶ்சி$_2$ந்நோ மஹோரகை$_3$ஃ । க்ஷயம் நீதோ ந வாதேந ந விஷேண ந க்ருத்யயா'' (வி. பு. 1 - 19 - 59), ''ஸ த்வாஸக்தமதிஃ க்ருஷ்ணே த$_3$ஶ்யமாநோ மஹோரகை$_3$ஃ । ந விவேத$_3$ாத்மநோ கா$_3$த்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாத$_3$ஸம்ஸ்தி$_2$தஃ'' (வி. பு. 1 - 17 - 39) என்று அக்$_3$நிமுதலான ப$_3$ாத$_4$க-பத$_3$ார்த்த$_2$ங்களும் தன்னை ப$_3$ாதி$_4$யாதபடி ''ஸர்வபூ$_4$தாத்மகே தாத ஜக$_3$ந்நாதே$_2$ ஜக$_3$ந்மயே । பரமாத்மநி கோ$_3$விந்தே$_3$ மித்ராமித்ரகத$_2$ா குதஃ''(வி. பு. 1 - 19 - 37) என்று ஸர்வத்தினுடையவும் ப$_4$க$_3$வத$_3$ாத்மகத்வாநுஸந்த$_4$ாநத்தாலே ஶத்ருமித்ரவிப$_4$ாக$_3$மற ஸர்வமும் தனக்கு அநுகூலமாக அநுஸந்தி$_4$த்து, ''எங்குமுளன் கண்ணன்'' (திருவா. 2 - 8 - 9) என்கிறபடியே ''உர்வ்யாமஸ்தி'' என்று தொடங்கி ''ஸர்வத்ராஸ்தி'' என்று பிறர்க்கு உபதேஶிக்கவும் வல்லனாய், ''பள்ளியிலோதிவந்ததன் சிறுவன்'', ''பிள்ளையைச்சீறி'' (திருமொழி 2 - 8 -8) என்று சொல்லப்படுகிற பள்ளிப்பிள்ளையான

ஸ்ரீப்ரஹ்லாதா3ழ்வானைப்போலே.

இவரும் (செந்தீ தண்காற்று இத்யாதி3 பகையறச்சிந்தைசெய்து) "அறியும் செந்தீயைத்தழுவி அச்சுதனென்னும் மெய்வேவாள் எறியும் தண்காற்றைத் தழுவி என்னுடைக் கோவிந்தனென்னும்" (திருவா. 4 - 4 - 3), "போமிளநாகத்தின் பின்போய் அவன் கிடக்கை ஈதென்னும்" (திருவா. 4 - 4 - 5) என்றும் அப்படியே அக்3நிமுதலான பா3த4கபதா3ர்த்த2ங்களும் ப4க3வதா3த்மகத்வாநுஸந்தா4நத்தாலே அநுகூலமானபடி, "என் முன்னைக் கோளரியே - உன்னைச்சிந்தைசெய்துசெய்து - என் முன்னைத்தீவினைகள் முழுவேரரிந்தனன் - முடியாததென் எனக்கேலினி" (திருவா. 2 - 6 - 6) என்று அநுஸந்தி4த்து, "கரந்தசிலிடந்தொறுமிடந்திகழ்பொருடொறும் கரந்தெங்கும் பரந்துளன்" (திருவா. 1 - 1 - 10) என்று அவனுடைய ஸர்வக3தத்வத்தை அருளிச்செய்கையாலும்.

(முற்றவிட்டும் மற்றிலேன் என்னும் த4ர்மாத்மா) "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த4நாநி ச । ப4வத்3க3தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகா2நி வை" (ரா. யு. 19 - 5), "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தா3ராம்ஶ்ச ராக4வம் ஶரணம் க3த:" (ரா. யு. 17 - 16) என்றும் லங்கையோடே கூட புத்ரதா3ராதி3களான ஸர்வத்தையும் விட்டு எல்லாம் சக்ரவர்த்தித் திருமகனைப்பற்றின "விபீ4ஷணஸ்து த4ர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:" (ரா. ஆ. 17 - 24) என்ற, "ராமோ விக்3ரஹவாந் த4ர்ம:" (ரா. ஆ. 37 -13) என்று த4ர்மஸ்வரூபமான சக்ரவர்த்தித்திருமகனைத் தனக்கு தா4ரகமாக உடையனாகையாலே த4ர்மாத்மா என்று சொல்லப்படுகிற ஸ்ரீவிபீ4ஷணப்பெருமாளைப்போலே இவரும். (முற்றவிட்டு) "பாதமடைவதன்பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்ற விட்டு" (திருவா. 8 - 2 - 11) என்று ஸாம்ஸாரிகமான ஸகலஸங்க3த்தையும் ஸவாஸநமாக விட்டு. (மற்றிலேன் என்று) "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (திருவா. 3 - 6 - 8) என்று சக்ரவர்த்தித்திருமகனையே தஞ்சமாகப் பற்றுகையாலும்.

(வாளிபொழிந்த இத்யாதி3) "நிர்கு3ண: பரமாத்மாஸௌ தே3ஹம் தே வ்யாப்ய திஷ்ட2தி" (பா. ஆ. 147 - 8) என்று - ஏறிட்ட நாணை இறங்கிட்ட சக்ரவர்த்தித்திருமகனைத் தனக்குள்ளே உடையனாய், "ஸோத்ரைவ ஹந்த ஹநுமாந் பரமாம் விமுக்திம் பு3த்3த்4யா விதூ4ய சரிதம் தவ ஸேவதேஸௌ" (அதிமாநு. 32) என்று அந்த சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரசரிதத்தை போ4க்3யமாக உடையனாய், "ஸ்நேஹோ மே பரமோ ராஜம்ஸ்த்வயி நித்யம் ப்ரதிஷ்டி2த: । ப4க்திஶ்ச நியதா வீர பா4வோ நாந்யத்ர க3ச்ச2தி" (ரா.உ.40-16) என்று சக்ரவர்த்தித்திருமகனுடைய வீரசரிதத்தை போ4க்3யமாக உடையனான திருவடியைப்போலே.

இவரும் (கற்பார்பா4வம் மற்றிலேன்) "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" (திருவா. 7 - 5 - 1) என்று ப்ரியஹிதங்களிலொன்றைக் கற்குமவர்களைப்பற்ற உன்னைக் கற்குமவர்கள் சக்ரவர்த்தித்திருமகனையொழியப் பரத்வாதி3களையும், அவதாராந்தரங்களையும் கற்பரோ என்று தமக்கு இவ்விஷயத்திலுண்டான ப்ராவண்யத்தாலே "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லா" (திருவா. 7 - 11 - 10) என்று பரத்வத்தின் பேருங்கூட அஸஹ்யமாம்படி "தயரதற்கு மகன்தன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" (திருவா.

3 - 6 - 8) என்று அந்த சக்ரவர்த்தித்திருமகனையே தஞ்சமாகப் பற்றுகையாலும்.

(பல்வகையுங்கண்டு வெண்சங்கேந்தின ரூபபரனான ஶ்வேதன்) "பஶ்யாமி தே3வாம்ஸ்தவ தே3வ தே3ஹே ஸர்வாம்ஸ்தத2ா பூ4தவிஶேஷஸங்க4ாந் । ப்3ரஹ்மாண-மீஶம் கமலாஸநஸ்த2ம்ருஷீம்ஶ்ச ஸர்வாநுரக3ாம்ஶ்ச தீ3ப்தாந்" (கீதை 11 - 15) என்று விஶ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்த அநந்தரம் தன்னால் அமைத்தநுப4விக்கவொண்ணாமை-யாலே "க்ருதாஞ்ஜலிர்வேபமாந: கிரீடீ" (கீதை 11 - 35) என்று பீ4தியாலே நடுங்கி அஞ்ஜலிஹஸ்தனாய்க்கொண்டு "கிரீடிநம் க3தி3நம் சக்ரஹஸ்தமிச்ச2ாமி த்வாம் த்3ரஷ்டு-மஹம் ததை2வ । தேநைவ ரூபேண சதுர்பு4ஜேந ஸஹஸ்ரபா3ஹோ ப4வ விஶ்வமூர்த்தே" (கீதை 11 - 46) என்று ஶங்க2சக்ரக3த3ாத4ரமாய் அஸாத4ாரணமான உன்னுடைய விக்3ரஹத்தைக் காட்டவேணுமென்று அவ்வடிவிலே தத்பரனாய் அபேக்ஷித்த அர்ஜுநனைப்போலே.

இவரும் "நல்குரவும்" (திருவா. 6 - 3 - 1) என்று தொடங்கி "பல்வகையும் பரந்த பெருமானை - திருவிண்ணகர்க்கண்டேன்" என்று விருத்3த4விபூ4தியுக்தனானவனைக் கண்டு. (வெண்சங்கேந்தின) "நீராய் நிலனாய்" (திருவா. 6 - 9 - 1) என்று தொடங்கி, "சிவனாயயனாய்" என்று கார்யகாரணங்களிரண்டையும் ஶரீரமாகக்கொண்டு நீ ஜக3ச்ச2ரீரனாயிருந்தாயேயாகிலும், அத்தால் நான் பெற்றது 'விபூ4தி என்னதுமல்ல, பிறரதுமல்ல; உன்னதே' என்கிற ப்ரதிபத்தியொழிய எனக்கு அநுப4ாவ்யமாகிறதில்லை. ஆனபின்பு எனக்கு அநுப4ாவ்யமாம்படி "கூராராழிவெண்சங்கேந்தி - வாராய்" (திருவா. 6 - 9 - 1) என்று ஶங்க2சக்ரக3த3ாத4ரமான உன்னுடைய அஸாத4ாரணவிக்3ரஹத்தோடே வரவேணுமென்று அபேக்ஷிக்கையாலும், இப்படி இளையபெருமாள் முதலானவர்க-ளெல்லாரோடும் ஸாம்யம் சொல்லிற்று. (127)

128. குழலில் நெஞ்சும் அருகலில் சுவையுமான இவர் அவர்கள-ளவல்லர்.

இனிமேல் இவர்களெல்லார்க்கும் இவரோடு ஏகத2ா ஸாம்யமல்லது ஸர்வத2ா ஸாம்யமில்லை என்று அவர்களில் இவருக்குண்டான வ்யாவ்ருத்தியை அருளிச்-செய்கிறார் (குழலில் நெஞ்சும் அருகலில் சுவையுமான இவர் அவர்களளவல்லரென்று). "குழற்கோவலர் மடப்பாவையும்" (திருவிரு. 3) என்கிற பாட்டிற்படி மஹிஷீ-த்ரயத்துக்கும் வல்லப4னாய் பூ4ஷணாயுத4விஶிஷ்டனாய்க்கொண்டு ஸர்வஸ்வாமியாய், கருடவாஹநனான ஸர்வேஶ்வரவிஷயத்தில் அவகா3ஹித்த என்னுடைய நெஞ்சானது அவனுடைய பரத்வத்தைக்கண்டு மீளுமோ? பே4ாக்3யதையையும், ஸௌலப்4யத்தை-யும் கண்டு நிற்குமோ? என்னும்படியான நெஞ்சையுடையராய், அத்தால் "அப்புள்-ளின் பின்போன தனிநெஞ்சமே" (திருவிரு. 4) என்கையாலே இவருடைய திருவுள்ளம் ப்ரமாணாநுஸாரியாய்க்கொண்டு ப்ரமாணஸாரப்ரதிபாத்3யமான ஸ்வாராத4த்வ-ரக்ஷகத்வ-பே4ாக்3யத்வங்களிலே கால்தாழ்ந்து மேன்மை முதலாக நீர்மை ஈறாக அவகா3ஹித்ததென்றபடி.

"அருகலிலாய" (திருவா. 1 - 9 - 3) என்கிறபாட்டிற்படி ஹேயப்ரத்யநீகனாய், கல்யாண-கு₃ணங்களையுடையனாய், நித்யஸூரிகளுடைய ஸத்தாதி₃களுக்கெல்லாம் காரணபூ₄தனாய், விலக்ஷணவிக்₃ரஹயுக்தனாய், புண்டரீகாக்ஷனாய், கருடவாஹநனாய், ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன், பிராட்டி நித்யஸூரிகளெல்லாரோடும் ஒரோ வகைகளாலே பரிமாறும் பரிமாற்றமெல்லாம் என்னொருவனோடே பரிமாறி அத்தால் வந்த ரஸத்தை எனக்குத்தந்து பின்னையும் விட க்ஷமனாகிறிலன் என்னும்படியான ரஸத்தையுடையராய், இப்படிப்பட்ட சுவையையும் நெஞ்சையுமுடைய இவர், ப₄க₃வத்₃விஷயத்தில் ப்ராவண்யம் காத₃ாசித்கமாய், புறம்பே பரந்த நெஞ்சையுடையராய், விஷயாந்தரங்களிலும் ரஸஜ்ஞராய்ப் போருகிற இவர்களளவல்லர் என்கிறார். ஆக இதுக்குக்கீழ் ப₄க₃வத்ப்ரத்யாஸந்நரான லக்ஷ்மணாதி₃களோடு இவ்வாழ்வாருக்கு ஸாத₄ர்ம்ய-வைத₄ர்ம்யங்களிரண்டும் சொல்லிற்றாய்த்து. (128)

129. எற்றைக்கும் என்றது தோன்றப் பிறந்து ஒப்பித்து வீசிக் காப்பிட்டுக் காட்டுக்கு முற்பட்டு த₄ர்மம் சொல்லிக் கேட்டு ஶிஷ்யா-தா₃ஸீ-ப₄க்தைகளாய்ப் பாடி வருடி இன்றுவந்தென்பாரையும் சென்றாலாரும் நிவாஸ-தா₃ஸ-பே₄த₃ம் கொள்வாரையும் தாம் அவனாக ப₄ாவிப்பர்.

இப்படி ஸாம்யம் சொல்லுகிறமாத்ரமேயன்றிக்கே தம்முடைய ப₄ாவத்தாலும் வ்ருத்தி-களாலும் பிராட்டிமாரையும், திருவடி திருவநந்தாழ்வான் தொடக்கமானவர்களையும் தாம் அவர்களாக ப₄ாவிப்பர் என்கிறார் (எற்றைக்கும் என்று தொடங்கி). "எற்றைக்கு-மேழேழ் பிறவிக்குமுன்றன்னோடுற்றோமேயாவோம்" (திருப்பாவை 29) என்று அபேக்ஷித்தமை தோன்ற "ராக₄வத்வேப₄வத்ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி । அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாநபாயிநீ" (வி.பு. 1 - 9 - 144) என்கிறபடியே அவன் வந்தவதரித்த அவதாரங்கள்தோறும் தாமுமவதரித்து. (ஒப்பித்தென்று) திருவபி₄ஷேகமஹோத்ஸவத்துக்கீடாம்படி பெருமாளை அலங்கரித்து. (வீசி) "ஸ்தி₂தயா பார்ஶ்வதஶ்சாபி வாலவ்யஜநஹஸ்தயா । உபேதம் ஸீதயா பூ₄யஶ்சித்ரயா ஶஶிநம் யதா₂" என்று திருவெண்சாமரம் பரிமாறி. (காப்பிட்டு) "பதிஸம்மாநிதா ஸீதா ப₄ர்த்தாரமஸிதேக்ஷணா । ஆத்₃வாரமநுவவ்ராஜ மங்க₃ளாந்யபி₄த₃த்₄யுஷீ", "பூர்வாம் தி₃ஶம் வஜ்ரத₄ரோ த₃க்ஷிணாம் பாது தே யம: । வருண: பஶ்சிமாமாஶாம் த₄நேஶஸ்தூத்தராம் தி₃ஶம்" என்று பெருமாள்வைலக்ஷண்யத்தைக்கண்டு இவ்வழகு நமக்குத் தொங்கப் புகுகிறதோ என்னும் வயிறுபிடியாலே மங்களாஶாஸநம் பண்ணி.

(காட்டுக்கு முற்பட்டு) "அக்₃ரதஸ்தே க₃மிஷ்யாமி ம்ருத்₃நந்தீ குஶகண்டகாந்" என்று பெருமாள் வநத்துக்கு எழுந்தருளுகிறபோது தான் முற்பட்டு. (த₄ர்மம் சொல்லி) பெருமாள் தண்டகாரண்யத்திலே கையும் வில்லுமாய்க்கொண்டு நின்ற நிலையைக்கண்டு இவர் ஸாயுத₄ராய் நிற்கில் ஆரேனையும் மேல்விழுந்து ப்ரமாத₂ம் விளையக்கூடுமென்று ப₄யப்பட்டு, பெருமாளைப்பார்த்து 'நாயன்தே, த₄ர்மமூலமாயிருக்கும் ஸர்வமும், ஆனபின்பு தேவரீர் ஆயுத₄த்தை வைத்து தாபஸவேஷத்தோடே த₄ர்மத்தை அநுஷ்டிக்க

அமையும்' என்று த$_4$ர்மோபதே$_3$ஶத்தையும் பண்ணினாள் பிராட்டி.

(த$_4$ர்மம் கேட்டு) ஸ்ரீபூ$_4$மிப்பிராட்டியார் ஸகலத$_4$ர்மங்களையும் ஸ்ரீவராஹநாயனார் பக்கலிலே கேட்டு. (ஶிஷ்யாதா$_3$ஸீப$_4$க்தைகளாய்) "அஹம் ஶிஷ்யா ச தா$_3$ஸீ ச ப$_4$க்தா ச த்வயி மாத$_4$வ। மத்க்ருதே ஸர்வபூ$_4$தாநாம் லகூ$_4$பாயம் வத$_3$ ப்ரபோ$_4$" என்று ஶிஷ்யா-தா$_3$ஸீப$_4$க்தையாய்விஶேஷத$_4$ர்மத்தையும் கேட்டு.

(பாடி) "பாடிப்பறைகொண்டு" (திருப்பாவை 27) என்கிறபடியே க்ருஷ்ணனைப்பாடு-வதும் செய்தாள். (வருடி) இவர்களிருவரும் "ஒருமதிமுகத்துமங்கையரிருவரும் மலரன அங்கையின்முப்பொழுதும் வருட" (திருவெழு.), "செங்கமலத்திருமகளும் புவியும் செம்பொன்திருவடியினிணை வருட" (திருமொழி 7 - 8 - 1) என்று இருவரும் திருவடியை வருடினார்கள். "இன்றுவந்தித்தனையும் அமுதுசெய்திடப்பெறில் நான் ஒன்று நூறாயிர-மாகக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன்" (நா. தி. 8 - 7) என்று தம்மைக்கொண்டு கைங்கர்யம் கொண்டால் அதுக்கு ப்ரத்யுபகாரமும் பண்ணுவர் என்கிறார்.

(சென்றால் ஊரும் நிவாஸ) திருவநந்தாழ்வான் "சென்றால் குடையாம்" (மு.திருவ. 53) என்கிறபடியே "நிவாஸஶய்யாஸநபாது$_3$காம்ஶுகோபதா$_4$நவர்ஷாதபவாரணாதி$_3$பி$_4$:। ஶரீரபே$_4$தை$_3$ஸ்தவ ஶேஷதாம் க$_3$தைர்யதோ$_2$சிதம் ஶேஷ இதீரிதே ஜநை:" (ஸ்தோ. ர.40) என்று ஸர்வேஶ்வரனுடைய விநியோகா$_3$த்துக்கு அநுகு$_3$ணமாக ஶரீரபே$_4$த$_3$ங்களைக் கொண்டு அஶேஷஶேஷவ்ருத்திகளையும் பண்ணினார். "ஊரும் புட்கொடியுமஃதே" (திருவா. 10 - 2 -3) என்றும், "தா$_3$ஸஸ்ஸகா$_2$ வாஹநமாஸநம் த்$_4$வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய:। உபஸ்தி$_2$தம் தேந புரோ க$_3$ருத்மதா த்வத$_3$ங்க்$_4$ரிஸம்மர்த்த$_3$கிணாங்க-ஶோபி$_4$நா" (ஸ்தோ. ர.41) என்று பெரியதிருவடிநாயனார் வாஹநத்$_4$வஜாதி$_3$முக$_2$த்தாலே ஸகலவித$_4$கைங்கர்யங்களையும் பண்ணினார். அப்படியே இவரும் "பிறந்திட்டாள்" (திருவா. 6 - 5 - 10) என்கிறபடியே பிறந்து அந்த நாச்சிமார் மூவரையும் திருவநந்தாழ்-வானையும், பெரியதிருவடியையும் தாமவர்களாக ப$_4$ாவிப்பர் என்கிறார். (129)

130. எழுவதோருரு அழிக்க, செய்கிற வழுவிலா அடிமைக்குப் பாஞ்சாலி படுத்துமதும் கௌஸல்யாநுவ்ருத்தியும் ஒப்பாக்குகை பரிசு.

இவர்க்கு இந்த நாச்சிமாருடைய ப$_4$ாவமும் இந்த வ்ருத்திபே$_4$த$_3$த்தில் அபி$_4$நிவேஶமு-முண்டானபடி எங்ஙனே என்னில், அப்ராக்ருதமான விக்$_3$ரஹம் பும்ஸ்த்வத்தை அழித்து ஸ்த்ரீத்வத்தை உண்டாக்கினதுக்கும், அநுரூபப்ராப்தமான அவ்விஷயத்திலுண்டான வ்ருத்த்யபி$_4$நிவேஶத்துக்கும், ப்ராக்ருதமாய் ஔபாதி$_4$கமாயிருக்கிற விஷயங்களிலுண்-டானவற்றை த்$_3$ருஷ்டாந்தமாக்குகை ஸ்தூ$_2$லம் என்கிறார் (எழுவதோருரு என்று தொடங்கி). (எழுவதோருரு அழிக்க) "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு" (திருவா. 5 - 5 - 40) என்று தேஜஸ்தரங்க$_3$ங்களுக்கு நடுவே உந்நேயமான "பும்ஸாம் த்$_3$ருஷ்சித்தாபஹாரிணம்" (ரா.அ. 3 - 29)என்று ஸஜாதீயரையும் விஜாதீயராக்கவற்றான

அப்ராக்ருதவிக்₃ரஹம் இவருடைய பும்ஸ்த்வத்தை அழிக்க, இவர்க்குண்டான ஸ்த்ரீத்வத்-துக்கும். (வழுவிலா அடிமைக்கு) ஸ்வரூபப்ராப்தமான அவ்விஷயத்தில் இவர்க்கு உண்டான வ்ருத்திபே₄த₃ங்களுக்கும்.

(பாஞ்சாலிபடுத்துமதும்) "பாஞ்சால்யா: பத்₃மபத்ராக்ஷ்யா: ஸ்நாயந்த்யா ஜக₄நம் க₄நம் । யா ஸ்த்ரியோ த்₃ருஷ்டவத்யஸ்தா: பும்ப₄ாவம் மநஸா யயு:" என்று ப்ராக்ருதமாய், பூதிக₃ந்தி₄யாய், மாம்ஸாஸ்ருக₃ாதி₃மலமயமான த்₃ரௌபதி₃யினுடைய ஶரீரம் ஸஜாதீயருடைய ஸ்த்ரீத்வத்தை அழித்து பும்ப₄ாவத்தை அடைவித்தத்தையும். (கௌஸல்யாநுவ்ருத்தியும்) "யத₃ா யத₃ா ஹி கௌஸல்யா த₃ாஸீவச்ச ஸகீ₂வ ச । ப₄ார்யாவத்₃ப₄கி₃நீவச்ச மாத்ருவச்சோபதிஷ்டதி" (ரா.அ. 12 - 68) என்று கௌஸலையார் ஶீளபாதி₄கமான ப₄ர்த்ருவிஷயத்தில் தத்தத₃வஸ்த₂ாநுகு₃ணமாகப் பண்ணின அநு-வ்ருத்தியையும் த்₃ருஷ்டாந்தமாக்குகை அதில் ஸ்தூ₂லம் என்கிறார். (130)

131. பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமாப்போலே நெக்-கொசிந்து கரைந்து அலைந்து இடிந்து உடையப் பெருகுகாதல் கடலிடங்கொண்ட கடலை ப₃ஹுமுக₂மாக அவகாஹிக்கும்.

ஆனால் தாமான தன்மையும் பிராட்டிமார்த₃ஶையுமுண்டான இதில் தாமான தன்மையில் அபி₄நிவேஶம் அளவுபட்டிருக்குமோ? என்னில்; ஆறு பெருகாநின்றால் பல வாய்த்தலை-களிலும் போராநிற்கச்செய்தே, தானும் கடலில் போரும் அம்ஶம் குறையாதிருக்குமாப் போலே பிராட்டிமார்த₃ஶையோடும், தாமான தன்மையோடும் வாசியற அபி₄நிவேஶம் கரைபுரண்டு ப₄க₃வத்₃விஷயத்தை அவக₃ாஹிக்கும் என்கிறார் (பெருக்காறு என்று தொடங்கி). (பெருக்காறு பலதலைத்துக் கடலை நோக்குமாப்போலே நெக்கொசிந்து கரைந்து அலைந்து இடிந்து உடையப் பெருகுகாதல்) "நினைந்தெந்னுள்ளே நின்று நெக்கு" (பெரியா. தி. 5 - 4 - 8), "நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க நெக்கொசிந்து கரையும்" (திருவா. 6 - 5 - 2), "என் மனம் உடைவதும் அவர்க்காகவே" (திருவா. 9 - 3 - 6) என்று அபி₄நிவேஶத்துக்குக் கரைப்பற்றான நெஞ்சானது விட்டுச்சரிந்து கரைந்து அலைந்து இடிந்து உடைந்து ஶிதி₂லமாய்ப்போம்படி "பெருகுகாதலடியேன்" (திருமொழி 5 - 2 - 9) என்று இவருடைய அபரிச்சே₂த்₃யமான ப₄க்தியான ஆறானது. (கடலிடங்கொண்ட கடலை) க்ஷீராப்₃தி₄ஶாயியாய், ஸர்வேஶ்வரனாய், ஶ்ரமஹரமான வடிவையுடைய பெரியபெருமாளாகிற கடலைப் பலமுகமாக அவக₃ாஹிக்கும் என்கிறார்.

132. அச்சே₂த்₃யமென்னுமது ஈரும் வேம் ஈரியாய் உலர்த்த என்னப்பட, சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க, கரணங்கள் முடியானேயிலவையாக உடலம் ஆத்மத₄ர்மம் கொள்ள, காற்றும் கழியும் கட்டியழக் கொண்ட பெருங்காதலுக்குப் பத்திமைநூல் வரம்பில்லையே.

இப்படி இராநிற்கிற இவருடைய ப$_4$க்திதான் ஸக்ரமமாயிருக்கமோ? என்னில், இவருடைய ப$_4$க்திக்கு "ந ஶாஸ்த்ரம் நைவ சக்ரம:" என்கிறபடியே தே$_3$ஶவிஶேஷத்தில் ப$_4$க்திபோலே இதுவும் வைத$_4$மல்லாமையாலே க்ரமாபேக்ஷை இல்லை என்கிறார் (அச்சே$_2$த்$_3$யமென்று தொடங்கி). "அச்சே$_2$த்$_3$யோயமதா$_3$ஹ்யோயமக்லேத்$_3$யோ-ऽஶோஷ்ய ஏவ ச" (கீ$_3$. *2 - 24*) என்று சே$_2$த$_3$ந-த$_3$ஹந-ப்லாவந-ஶோஷணாதி$_3$களுக்கு அயோக்$_3$யமாயிருக்கிற ஆத்மவஸ்து. (ஈரும் வேம் ஈரியாய் உலர்த்த என்னப்பட) "சிவனொடு பிரமன் வண்திருமடந்தை சேர் திருவாகமெம்மாவி ஈரும்" (திருவா. *9 - 9 - 6*), "வேம் எமதுயிரழல் மெழுகிலுக்கு" (திருவா. *10 - 3 - 6*) "கண்ணனுக்கென்-றீரியாயிருப்பாள்" (திருவா. *6 - 3 - 6*), "வேவாரா வேட்கைநோய் மெல்லாவி உள்ளுலர்த்த" (திருவா. *2 - 1 - 1*) என்று அவனுடைய ஶீலகு$_3$ணம் என் ஆத்மாவை ஈராநின்றது என்றும், அக்$_3$நிஸகாஶத்துக்குள்ளே புகுந்த மெழுகுபோலே என் ஆத்மாவானது த$_3$க்$_3$த$_4$மாகாநின்றது என்றும், விலக்ஷணபதா$_3$ர்த்த$_2$ங்களைக் காணில் கண்ணனுக்கு என்று த்$_3$ரவீபூ$_4$தையாகாநின்றாள் என்றும், ப்ரேமவ்யாதி$_4$யானது என் ஆத்மாவைக் குருத்துபற்றாக உலர்த்தாநின்றது என்றும், இப்படி சே$_2$த$_3$நாதி$_3$களுக்கு யோக்$_3$யமாய்த்தென்று இவர்தாமே சொல்லும்படியாக, ஆத்மவஸ்து பா$_3$ஹ்ய-பதா$_3$ர்த்த$_2$ங்களாலே சே$_2$த$_3$நாதி$_3$களுக்கு அயோக்$_3$யமென்றது இத்தனைபோக்கி, தன்னிலும் அச்ச$_2$மான ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணங்கள் புக்கழிக்க, அழியாதாகில் இதுதான் ஜ்ஞாந-த்$_3$ரவ்யமன்றியிலே ஒழியுமிறே.

(சித்தம் சித்தாய் அல்லேனென்று நீங்க) "என்னெஞ்சென்னை நின்னிடையே-னல்லேனென்று நீங்கி" (திருவா. *8 - 2 - 10*) என்று அசேதநமான சித்தமானது சேதநஸமாதி$_4$யாலே இவரை "ஸந்ந்யஸ்தம் மயா" என்று விட்டு நீங்க. (கரணங்கள் மூடியானேயிலவையாக) *முடியானேயிற்படியே சேதநஸமாதி$_4$யாலே விடாய்த்த கரணங்களை உடையராய். (உடலம் ஆத்மத$_4$ர்மம் கொள்ள) "அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய" (திருவா. *5 - 8 - 1*) என்று த்$_3$ரவ்யமிருந்த கு$_3$ஹை உருகுமாப்போலே ஆத்மா ப$_4$க$_3$வத்ப்ரேமவஶ்யதையாலே ஶிதி$_2$லமாகாதபடி கட்டினகரையான ஶரீரமானது அந்தராத்மாவைப்போலே ப$_4$க$_3$வத்ப்ராவண்யத்தை உடைத்தாய்கொண்டு ஶிதி$_2$லமாக.

(காற்றும் கழியும் கட்டியழ) "கடலும் மலையும்" இத்யாதி$_3$ (திருவா. *2 - 1 - 4*), "எம் ஆற்றாமைசொல்லி அழுவோமை" (திருவா. *2 - 1 - 7*) என்று வாயுவுக்கு ஸததகதித்வம் ஸ்வாப$_4$ாவிகமென்றும், கழிக்கு ஏறுதல் வடிதல் செய்கை ஸ்வாப$_4$ாவிகமென்றும், மற்றும் நாரை தொடக்கமானவற்றுக்கு அவ்வோ ஸ்வப$_4$ாவம் நியதமென்றும் அறியாதே தம்மைப்போலே ப$_4$க$_3$வத்$_3$விஶ்லேஷத்தாலே இவையும் நோவுபடுகிறனவாக இவற்றோடே க்லேஶிக்கும்படியாகக் கொண்ட பெருங்காதலுக்கு, "அலர் தூற்றிற்றது முதலாக் கொண்ட என்காதல்" (திருவா. *7 - 3 - 8*) என்று இப்படியிருக்கிற இவருடைய அபரிச்சே$_2$த்$_3$யமான ப$_4$க்திக்கு.

(பத்திமைநூல்வரம்பில்லையே) "ந ஶாஸ்த்ரம் நைவ சக்ரம:" என்று தே$_3$ஶவிஶேஷத்தில் அநுப$_4$வோபகரணமான ப$_4$க்திபோலே இவருடைய ப$_4$க்திக்கு, ஸாத$_4$நப$_4$க்திபோலே

வைத$_4$மாகையும் க்ரமாபேக்ஷையும் இல்லையிறே.

ஆக இதுக்குக்கீழ், ஜ்ஞாநத$_3$சையில் தாமான தன்மையிலே பேசுவர்; ப்ரேமத$_3$சையில் ஸ்த்ரீஸ்வப$_4$ாவத்தாலே பேசுவர் என்றும், அந்த ஸ்த்ரீத்வம் இவர்க்கு ஸ்வாப$_4$ாவிகம் என்றும், ஸ்த்ரீத்வந்தான் ஸாமாந்யமன்றிக்கே அநந்யார்ஹஶேஷத்வாதி$_3$களாலே பிராட்டியோடொப்பர் என்றும், மற்றுமுண்டான பிராட்டிமார் ப$_4$க$_3$வத்பரிக்$_3$ரஹ-முடை யாரெல்லாரோடும் ஒப்பர் என்றும், ஸர்வத$_2$ா ஸாம்யமுள்ளது பெரியபிராட்டி-யாரோடே என்றும், மற்றும் ப$_4$க$_3$வத்ப்ரத்யாஸந்நரான லக்ஷ்மணாதி$_3$கள்படியும் இவர்க்கு உண்டென்றும், அவர்களிலும் வ்யாவ்ருத்தர் என்றும், அவர்களோடு ஸாம்யமன்றிக்கே அவர்களைத் தாமாக ப$_4$ாவிப்பர் என்றும், இந்த ப$_4$ாவவ்ருத்திகள் இவர்க்கு உண்டாகைக்கு நித$_3$ாநம் இன்னதென்னுமிடத்தையும், இந்த ப$_4$ாவவ்ருத்திகளுக்கு அடியான ப$_4$க்தி-ப்ரகாரங்களையும் சொல்லிநின்றது கீழ். ஆக இத்தால் ப$_4$க்தித$_3$சையில் இவர்-பேச்சிருக்கும்படி சொல்லிற்று. *(132)*

133. ஸம்ப$_3$ந்தோ$_4$பாயப$_2$லங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞாவஸ்தை$_2$களுக்குத் தோழி தாயார் மகள் என்று பேர்.

ஆனால் ப$_4$க்தித$_3$சையில் பெண்பேச்சாகில் பிராட்டி ஒருத்தியாகப் பேசுகை ப்ராப்தம், தோழி தாய் மகள் என்கிற த்ரைவித்$_4$யமான பேச்சுக்கு தாத்பர்யம் என் என்னில், இந்த அதிப்ராவண்யத்துக்கு ஸஹகாரியாயும், நிரோத$_4$கமாயுமிருக்கிற ஸம்ப$_3$ந்தோ$_4$பாயங்-களில் ஜ்ஞாநவ்யவஸாயங்களென்ன, அந்த ப்ராவண்யத்துக்கு விஷயமான உபேயத்-தில் த்வரையென்ன, இவற்றைத் தோழி தாயார் மகள் என்கிறார் (ஸம்ப$_3$ந்த$_4$மென்று தொடங்கி). (ஸம்ப$_3$ந்தோ$_4$பாயப$_2$லங்களில் உணர்த்தி துணிவு பதற்றமாகிற ப்ரஜ்ஞா-வஸ்தை$_2$களுக்குத் தோழி தாயார் மகள் என்று பேர்) தோழியாவாள் நாயகநாயகிகளை இணக்கிச் சேர்க்குமவளாகையாலே திருமந்த்ரத்தில் ப்ரத$_2$மபத$_3$மான ப்ரணவத்தில் அகாரத்தாலே சொல்லப்பட்ட, காரணமாய் ரக்ஷகமாய் ஶேஷியாய் ஶ்ரிய: பதியா-யிருக்கிற ப$_4$க$_3$வத்ஸ்வரூபத்துக்கும், தத்ப்ரதிஸம்ப$_3$ந்தி$_4$யாய், கார்யத்வ-ரக்ஷ்யத்வ-ஶேஷத்வங்களை ஸ்வரூபமாக உடைத்தாய், ப்ரக்ருதே: பரமாய், ஜ்ஞாநாநந்த$_3$மயமாய், ஜ்ஞாநகு$_3$ணகமாயிருக்குமென்று மகாரத்தாலே சொல்லப்பட்ட ஆத்மஸ்வரூபத்துக்கும் சதுர்த்தி$_2$யாலும் உகாரத்தாலும் சொல்லப்பட்ட நிருபாதி$_4$கஶேஷத்வ-அநந்யார்ஹ-ஶேஷத்வாதி$_3$ஸம்ப$_3$ந்த$_4$த்தை விஷயீகரித்த ஜ்ஞாநத்தைத் தோழி என்றும்,

தாயாராவாள் நாயகன்பக்கலிலே அதிமாத்ரப்ராவண்யம் பெண்பிள்ளைக்கு உண்டானா-லும் நாயகன்தானே வந்து பரிக்$_3$ரஹித்துக்கொண்டு போமதொழியப்படிகடந்து புறப்படுகை குலமர்யாதை$_3$க்குப் போராதென்று அவளை நிஷேதி$_4$த்து அவன்வரவு பார்த்திருக்குமவளாகையாலே, ஸம்ப$_3$ந்த$_4$ஜ்ஞாநஸமநந்தரம் ஸம்ப$_3$ந்த$_4$ாநுரூபமான பரிமாற்றத்திலே த்வரை உண்டானாலும், ஸ்வப்ரவ்ருத்தியில் இழிகை நமஸ்ஸில் சொன்ன பாரதந்த்ர்யத்துக்கு விருத்$_3$த$_4$மாகையாலே அத்தை நிவர்த்திக்க, அதில் ஶாப்$_3$த$_3$மாகவும், ஆர்த்த$_2$மாகவும் சொல்லுகிற ப$_4$க$_3$வதே$_3$கோபாயத்வத்தாலே ப்ராப்ய-ஸித்$_3$தி$_4$ என்கிற அத்$_4$யவஸாயஜ்ஞாநத்தைத் தாயார் என்றும்,

தலைமகளாவாள், இயற்கையிலே புணர்ந்து நாயகன்வைலக்ஷண்யத்திலே ஈடுபட்டு, குலமர்யாதைகளையும் பாராதே கிட்டியல்லது தரியேன் என்னும் பதற்றத்தை உடையாளொருத்தியாகையாலே, நாராயணபதத்தாலே சொல்லப்பட்ட, ஶேஷியாய், ஶரண்யனானவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளால் வந்த வைலக்ஷண்யத்தை அநுபவித்து அத்தால் வந்த விளம்பாக்ஷமத்வத்தாலே ததேகோபாயத்வாத்யவஸாயத்தையும் அதிக்ரமித்துக்கிட்டி, அநுபவித்து, அநுபவஜநிதப்ரீதிகாரிதமான கைங்கர்யத்தை இப்போதே பெறவேணுமென்கிற த்வராஜ்ஞாநத்தைத் தலைமகள் என்றும் சொல்லும்.

''ஸ்ம்ருதிர்வ்யதீதவிஷயா மதிராகாமிகேசரா । புத்திஸ்தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா'' என்று அதீத-அநாகத-வர்த்தமாந-விஷயஜ்ஞாநத்தை ஸ்ம்ருதி-மதி-புத்தி என்று சொல்லுகையாலே பூர்வமேவ உண்டாயிருக்கிற ஸம்பந்தத்தை விஷயமாக உடைத்தாயிருக்கிற ஜ்ஞாநத்தை ஸ்ம்ருதி என்றும், மேல்வரக்கடவதான கைங்கர்யத்தில் த்வராஜ்ஞாநத்தை மதி என்றும், ஸம்பந்தஜ்ஞாநஸமநந்தரம் யாவத்-பலப்ராப்தி நடக்கக்கடவதான உபாயத்வாத்யவஸாயத்தை புத்தி என்றும் சொல்ல வேண்டியிருக்க, ப்ரஜ்ஞாவஸ்தைகள் என்பானென்? என்னில், மூன்றும் ஏககாலிகமாக நடக்கையாலே ஒரொன்றினுடைய ப்ராதாந்யம் தோற்றப் பேசுகையாலே ப்ரஜ்ஞாவஸ்தைகள் என்றது.

ஆக இப்படி ஸ்வஸ்வரூப-பரஸ்வரூப-ஸம்பந்தஜ்ஞாநம், ஈஶ்வரைகோபாயத்வத்தில் வ்யவஸாயம், பலமான கைங்கர்யத்தில் த்வரை இவையாகிற ப்ரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி தாயார் மகள் என்று சொல்லுகிறது என்கிறார். (133)

134. ஸகி வெறிவிலக்கி ஆசையறுத்து அறத்தொடு நின்றமூன்றில் அநந்யார்ஹத்வமும், வாடி மெலிந்து பித்தேறி ஏறப்பேசிக் கட்டிழந்தகன்று சார்வதே வலித்தமை ஸாதநமாமோ என்று மாதா அஞ்சி முறைப்பட்டு முறையிடுகிற ஏழில் அத்யவஸாயமும், புத்ரி பலகால் ஆள்விட்டு ஆற்றாமை சொல்லிக் கவராதவை விட்டு, இரைக்க மடலெடுத்துக் கண்புதையப் போக்கற்று, உரு-நெஞ்சுள்ளெழக் கூடுநாள்தேடித் தாழ்த்ததுக்கு ஊடி, உசாத்துணை-யற்றுச் சூழவும் பகைமுகம் செய்யத்தடைநில்லாதே புயக்கற்று மாலையும் காலையும் பூசலிடுகிற பதினேழில் த்வரையும் தெரியும்.

இனிமேல் மூன்றுதஶையின் பேச்சினுடைய ப்ரகாரங்களையும் அவ்வோ தஶைகளில் திருவாய்மொழி இன்னதென்னுமத்தையும் அருளிச்செய்கிறார் (ஸகி வெறிவிலக்கி என்று தொடங்கி). வெறிவிலக்காவது - இயற்கையிலே புணர்ந்து பிரிந்த தலைமகள் மோஹங்கதையாய்க் கிடக்க, அவளுடைய பந்துக்கள் இது க்ஷுத்ரதேவதைகளால்வந்ததோ என்று ஶங்கித்து, இத்தை பரிஹரிப்பதாக வெறியாடலுற, அவ்வளவில் இவள்-

ப்ரக்ருதியறிந்த உயிர்த்தோழியானவள் 'இது க்ஷுத்3ரதே3வதைகளால் வந்ததன்று; இது ஒரு விஷயத்தில் ஸங்க3த்தாலே வந்தது' என்று அத்தை விலக்கி, அதுக்கு யோக்3யமான பரிஹாரத்தைச் சொல்லுகை.

இத்தால் ஸம்ஸாரகாந்தாரத்திலே ஶப்3த3ாதி3களாகிற போ4க்3யோபஜீவநத்துக்காக ஸ்வர்க்க3-நரக-க3ர்ப்ப4ங்களாகிற போ4க3ஸ்த2லங்களிலே ஸஞ்சரிக்கிறவனுமாய், பாரதந்த்ர்ய-போ4க்3யதா-அநந்யார்ஹத்வங்களாலே ஸ்த்ரீத்வத்தை உடையனான ஆத்மாவை அவ்விடத்திலே ஆத்மம்ருக3யாத்ராவ்யாஜத்தாலே ஸஞ்சரிக்கிற ஈஶ்வரன் "ஏவம் ஸம்ஸ்ருதிசக்ரஸ்தே2 ப்4ராம்யமாணே ஸ்வகர்மபி4: । ஜீவே து3:க2ாகுலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" என்றும், "நாஸௌ புருஷகாரேண" இத்யாதி3யிற்படியே க4டகரும், ஜ்ஞாபகருமன்றியிலே உப4யருடையவும் த4ர்மப்ரயுக்தமாக கடாக்ஷிக்க, அத்தாலே இத்தலைக்குமுண்டான க்ரமப்ராப்திபற்றாத அதிப்ராவண்யத்தாலே வந்த கலக்கத்தாலே தத்3கோபாயத்வாத்4யவஸாயம் குலைந்து 'இந்த ப்ராவண்யஹேது ஏது? ப்ராவண்யகார்யமான கலக்கத்தை பரிஹரிக்கலாவது எத்தாலே?' என்று தே3வதாந்தர்யாமிபரமான கர்மகலாபங்களாலே பரிஹரிக்கலாமோ என்று ஶங்கிக்க, ஸம்ப3ந்த4ஜ்ஞாநம், 'அநந்யார்ஹமான இவ்வஸ்துவிலுண்டான இந்த ப்ராவண்யம் நிர்ஹேதுகக்ருபாகார்யமாகையாலே தத்3கோபாயத்வத்தாலே பரிஹரிக்கலாமத்தனையல்லது தத்3வ்யதிரிக்தங்கள் பரிஹாரமாகாதவளவேயன்றிக்கே அநந்யார்ஹஶேஷத்வாதி3ஸம்ப3ந்த4ங்களுக்கு விருத்3த4மாகையாலே ஸ்வரூபத்துக்கு நாஶகமாகையாலே இவை நிவர்த்யங்கள்' என்று அந்யஸ்பர்ஶத்தை நிவர்த்திப்பிக்கிற வெறிவிலக்காகிற *தீர்ப்பாரையாமினியிலும்.

(ஆசையறுத்து)திருத்தொலைவில்லிமங்கலத்திலே அதிப்ரவணையாயிருக்கிற இவளை மீட்கப்பார்க்கிற தாய்மாரைக்குறித்துத் தோழியானவள் 'நீங்களேயன்றோ திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு அதிப்ராவண்யத்தை விளைத்திகோள்; இனி உங்களால் ப்ராப்தவிஷயப்ரவணையான இவளை மீட்கப்போகாது; ஆனபின்பு இவள்பக்கல் நீங்கள் ஆசையறுங்கோள்' என்று ஆசையறுக்கிறது.

இத்தால் உபாயாத்4யவஸாயமானது உபேயவைலக்ஷண்யத்தை முன்னிட்டுக்கொண்டல்லது இராமையாலே அந்த உபேயவைலக்ஷண்யத்தை விஷயீகரித்த ப்ராவண்யகார்யமான த்வரை உபாயத்திலே அந்வயிக்கிறதோ என்னும் அதிஶங்கையாலே அந்த ப்ராவண்யத்தை வ்யவஸாயம் நிவர்த்திப்பிக்கத்தேட, இந்த ப்ராவண்யம் ஶேஷவஸ்துக3தமாகையாலே ஶேஷியினுடைய ப்ரியோபயோகி3யாமத்தனையல்லது உபாயத்தில் அந்வயியாதென்கிற ஶங்கையை நிவர்த்திப்பிக்கிறது ஸம்ப3ந்த4ஜ்ஞாநம்.

இத்தால் ப்ராப்தவிஷயவைலக்ஷண்யாதீ4நமாக உண்டான அந்த ப்ராவண்யத்தை, 'இது ஸ்வரூபாதிரேகியாய்க்கொண்டு ஸாத4நத்திலே அந்வயிக்குமாகில் "தத்தஸ்ய ஸத்3ருஶம் ப4வேத்" (ரா.ஸு. 39 -30) என்றிருக்கிற ஸ்வரூபத்துக்கு விருத்3த4மாம்; ஆகையாலே இது நிவர்த்யம்' என்று இந்த ப்ராவண்யம் ஸ்வநிவர்த்யம் என்று தடுக்க, இவ்வுபாயாத்4யவஸாயத்தில் ஸ்வாதீ4நதாப்ரதிபத்தியை பரேச்ச2ானுகு3ணவிநியோக3ார்-

ஹதாரூபமான ஶேஷத்வஜ்ஞாநமானது, ஶேஷவஸ்துக3தமாய், ஶேஷியினுடைய வைலக்ஷண்யாதீ4நமான இது ஶேஷிக்கு அதிஶயகரமாகையாலே ஸ்வரூபாதிரேகி-யன்று; த4ாரகமாகையாலே ஸ்வநிவர்த்யமுமன்று. இத்தை ஸ்வநிவர்த்யமாக நினைத்திருக்கையாகிற ஸ்வாதந்த்ர்யம் கீழ்ச்சொன்ன ஸ்வரூபத்தோடு விருத்3த4-மாகையாலே த்யாஜ்யம் என்று ஸ்வஸ்பர்ஶத்தை நிவர்த்திப்பிக்கிற *துவளில் மாமணியிலும்.

(அறத்தொடுநின்ற) அறத்தொடுநிற்கையாவது - தலைமகளுடைய பருவத்தையும், வடிவில் வேறுபாட்டையும் கண்ட ப3ந்து4க்கள் ஸ்வயம்வரத்துக்கு ராஜலோகத்தைத் திரட்டுகைக்கு மணமும் செறிவிக்க, இவளுடைய உயிர்த்தோழியானவள் கேட்டு, 'இது இவள்செவிப்படில் இவளைக்கிடையாது, இத்தை ஏற்கவே பரிஹரிக்கவேணும்' என்று இவளுடைய ப3ந்து4ஜநங்களைப்பார்த்து, 'இவளுக்குத் திருப்புலியூர்நாயனுரோடே ஸங்க3ம் உண்டுபோலே இராநின்றது; ஆனபின்பு நீங்கள் செய்கிறது த4ர்மமல்ல' என்ன, 'ஆனுல் இவளுக்குத்தக்க அவயவஶோபை4தொடக்கமான நாயகலக்ஷணங்கள் அவனுக்குண்டோ' என்ன, 'அவை எல்லாத்தாலும் ஒரு குறையில்லை. அவையொன்று-மில்லையேயாகிலும் இவள் அவனுக்கு அநந்யார்ஹையானுள் என்னுமிடத்துக்கு அடை-யாளம் ஸுவ்யக்தமாகக் காணலாம். ஆனபின்பு நீங்கள் செய்கிறவிது அத4ர்மம்' என்று மத்4யஸ்தை2யாய்க்கொண்டு த4ர்மம் சொல்லுகிருளாய் அந்த மணத்தை விலக்குகை.

ஆக இத்தால் ப்ராப்யத்வரையினுடைய பரிபாகத்தை அநுஸந்தி4த்த உபாயாத்4யவ-ஸாயம், 'இந்த த்வரை அப்ராப்தவிஷயாவலம்பி3யோ?' என்று அதிஶங்கைபண்ண, ஸம்ப3ந்த4ஜ்ஞாநம், 'இது ப்ராப்தனுன ஶேஷிவிஷயீகாரத்தாலே உண்டானது, இதுக்கு அப்ராப்தவிஷயஶங்கையும் ஸ்வரூபநாஶகரம்; இனி அந்த ஶேஷியினுடைய போ4ாக்3யதையாலும், அந்த போ4ாக்3யதை ஒழியவே நிருபாதி4கஶேஷித்வத்தாலும் இவ்வஸ்து அவனுக்கு அநந்யார்ஹம்' என்று அந்த அதிஶங்கையை நிவர்த்திப்பிக்கிற *கருமாணிக்கமலையிலும், ஆகத் தோழிப்பேச்சான மூன்று திருவாய்மொழியிலும் இவ்-வாத்மா த4ர்மித4ர்மவிப4ாக3மற அந்யஶேஷமுமன்று; ஸ்வஶேஷமுமன்று; ப4க3வத3நந்-யார்ஹஶேஷமாயிருக்குமென்று ஸம்ப3ந்த4ஜ்ஞாநதஶையில் பேச்சாயிருக்கிறது.

(வாடி மெலிந்து என்று தொடங்கி) - (ஏழில் அத்4யவஸாயமும்) *ஆடியாடியில் "வாடி வாடுமிவ்வாணுதல்" (திருவா. 2 - 4 - 1) என்று ஆஶ்ரயத்தையொழிந்த தளிர்போலே வாடாநின்ருளென்றும், *பாலனுயேழுலகில் "பொன்செய்பூண்மென்முலைக்கென்று மெலியும்" (திருவா. 4 - 2 - 10) என்று ப4க3வத்3போ4ாக்3யதையை அநுப4விக்க வேணுமென்று மெலியாநின்ருளென்றும், *மண்ணையிருந்துதுழாவியில் "என்பெண்-கொடியேறியபித்தே" (திருவா. 4 - 3 - 7) என்று என்பெண்பிள்ளை அவனேடு ஸத்3ருஶபத3ார்த்த2ங்களையும் ஸம்ப3ந்தி4பத3ார்த்த2ங்களையும் அவனுகச் சொல்லும்படி பிச்சேறினுள் என்றும், *கடல்ஞாலத்திலே "ஈசன்வந்தேறக்கொலோ" (திருவா. 5 - 6 - 1) என்று ஆற்ருமையாலே அநுகரிக்கிருள் என்று அறியமாட்டாதே ஸர்வேஶ்வரன் இவள்பக்கலிலே ஆவேஶித்தாப்போலே பேசாநின்ருள் என்றும், *மாலுக்குவையத்தில் "கற்புடையாட்டி இழந்ததகட்டே" (திருவா. 6 - 6 - 10) என்று அறிவுடையாளான இவள் ஸர்வேஶ்வரனை ஆசைப்பட்டு ஸர்வத்தையும் இழந்தாள் என்றும், உண்ணும்

சோற்றிலே "எனக்குதவாதகன்ற இளமான்" (திருவா. 6 - 7 - 6) என்று தன்னைப்பிரிந்து க்லேமப்படுகிற இவ்வாபத்$_3$த$_3$மையில் எனக்குதவாதே அகன்றுள் என்றும், *கங்குலும் பகலில் "சந்தித்துன்சரணம் சார்வதேவலித்த தையல்" (திருவா. 7 - 2 - 5) என்று உன் திருவடிகளைக்கிட்டி உன்முன்னே முடியவேணுமென்று வ்யவஸிதையானுள் என்றும் சொல்லுகிற இவளுடைய விரஹகார்யத்தையும், அந்த விரஹக்லேமத்தாலே அடைவு கெடப்பேசுகையும், பெற்றல்லது த$_4$ரியாத அதிமாத்ரப்ராவண்யமும், உபாஸகனுக்கும் உபாயாநுஷ்ட$_2$ாநது$_3$ஷ்கரதையாலும், ப$_4$க்திபாரவம்யத்தாலும் ப்ராப்தவைலக்ஷண்யா-நுஸந்த$_4$ாநத்தாலும் அவை உண்டாகுமாகையாலே இவளுக்கும் இவை ஸாத$_4$நத்திலே அந்வயிக்கில் தத்$_3$கோபாயத்வத்துக்கு விருத்$_3$த$_4$மாமென்று மாதா அஞ்சி, "முறையோ அரவணைமேல் பள்ளிகொண்ட முகில்வண்ணனே" (திருவிரு. 60) என்று தேவர்க்ருபை-யொழிய இவள்பக்கல் உள்ளவையொன்றும் ஹேதுவல்ல; ஆனபின்பு இவளை இப்படித் துடிக்கவிட்டிருக்கை தேவரீருடைய க்ருபைக்கும், ரக்ஷகத்வத்துக்கும் போருமோ என்று சொல்லிக் கூப்பிடுகிற தாய்பேச்சான ஏழுதிருவாய்மொழிகளிலும் உபாயாத்$_4$யவஸாயமான த$_3$மையில் பேச்சுத்தோன்றும்.

(புத்ரி) தலைமகளானவள், (பலகால் ஆள்விட்டு) *அஞ்சிறையமடநாரை (திருவா. 1 - 4), *வைகல்பூங்கழிவாய் (திருவா. 6 - 1), *பொன்னுலகாளீரோ (திருவா. 6 - 8), *எங்கானல் (திருவா. 9 - 7) என்கிற நாலு திருவாய்மொழிகளிலும் க்ரமப்ராப்திபற்றுமல் தூதுவிட்டு, (ஆற்றுமைசொல்லி) "ஆற்றுமைசொல்லி அழுவோமை" (திருவா. 2 - 1 - 7) என்று *வாயும்திரையுகளிலே ஸகலபத$_3$ார்த்த$_2$ங்களும் ப$_4$க$_3$வத$_3$லாப$_4$த்தாலே நோவு படுகிறனவாக க்லேமித்து, (கவராதவைவிட்டு) *ஏறுளுமிறையோனிலே "மாறுளன் கவராத மணிமாமை குறைவிலமே" (திருவா. 4 - 8 - 1) என்று அவன்விரும்பாத ஆத்மாத்மீயங்கள் வேண்டா என்று உபேக்ஷித்து, (இரைக்கமடலெடுத்து) *மாசறு சோதியிலே "யாமடலூர்ந்தும் ... நாடுமிரைக்கவே" (திருவா. 5 - 3 - 10) என்று ஜக$_3$த்க்ஷோப$_4$ம் பிறக்கும்படி மடலூரக்கடவேனென்று, (கண்புதையப்போக்கற்று) *ஊரெல்லாம் துஞ்சியிலே "பின்னின்றகாதல்நோய் நெஞ்சம் பெரிதடுமால் முன்னின்-றிராவூழி கண்புதைய மூடிற்றுல்" (திருவா. 5 - 4 - 6) என்று ப்ரேமவ்யாதி$_4$யும், ராத்ரியாகிற கல்பமும் க்ருதஸங்கேதிகளாய்க்கொண்டு சூழப்பொருகையாலே போக்கடியற்று.

(உருநெஞ்சுள்ளெழ) *எங்ஙனேயோவிலே "சோதிவெள்ளத்தினுள்ளே எழுவதோருரு என்னெஞ்சுள்ளெழும்" (திருவா. 5 - 5 - 10) என்று தேஜஸ்தரங்க$_3$மத்$_4$யே உந்நேயமான அப்ராக்ருதவிக்$_3$ரஹம் நெஞ்சிலே ப்ரகாமிக்கும்படியான உருவுவெளிப்பாட்டாலே ப்ரீத்யப்ரீதிஸமமாய், (கூடுநாள்தேடி) *மானேய்நோக்கியிலே "திருவல்லவாழுறையும் கோனுரை அடியேனடிகூடுவதென்றுகொலோ" (திருவா. 5 - 9 - 1) என்று அவன்-திருவடிகளைக்கிட்டும் நாளை ப்ரார்த்தி$_2$த்து, (தாழ்த்ததுக்கு ஊடி) இப்படி ப்ரார்த்தி$_2$க்கச் செய்தேயும் தாம் தாழ்த்தவாறே, *மின்னிடைமடவாரிலே "போகுநம்பீ" (திருவா. 6 - 2 - 2) என்று ப்ரணயரோஷத்தாலே ஊடி.

(உசாத்துணையற்று) *வெள்ளைச்சுரிசங்கிலே "என்னெஞ்சினுருமங்கே ஒழிந்தார் ஆரைக்-கொண்டென்னுசாகோ" (திருவா. 7 - 3 - 4) என்று அபஹ்ருதசித்தையாகையாலே

உசாத்துணையுமின்றிக்கே, (பகைமுகம்செய்ய) *ஏழையராவியிலே "கண்ணன் கோளிழைவாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றதே" (திருவா. 7 - 7 - 8) என்று உருவெளிப்பாட்டாலே பாதகவர்க்கங்களெல்லாம் ஒருமுகமாய் நலியத்தேட நில்லாதே, *நங்கள்வரிவளையிலே "காலம்பலசென்றும் காண்பதாணை உங்களோடெங்களிடையில்லை" (திருவா. 8 - 2 - 7) என்று அதிமாத்ரப்ராவண்யமாகாதென்று நிஷேதிக்கிற தோழிமாரையும் தாய்மாரையும் அதிக்ரமித்து.

(புயக்கற்று) *இன்னுயிர்ச்சேவலிலே "இழைநல்லவாக்கையும் பையவே புயக்கற்றது" (திருவா. 9 - 5 - 10) என்று முடிகையிலே வ்யவஸிதையாய், (மாலையும் காலையும் பூசலிடுகிற) *மல்லிகைகமழ்தென்றலிலும், *வேய்மருதோளிணையிலும் ஸந்த்யாகாலத்தில் க்ருஷ்ணனைப் பசுக்களின் முற்கொழுந்தில் வரக்காணாமையாலும், அக்காலத்தில் பாதகபதார்த்தங்களாலும் நோவுபட்டுக்கூப்பிட்டும், ப்ராதஃகாலத்திலே க்ருஷ்ணன் பசுமேய்க்கப்போனுகை அதிஶங்கைபண்ணி, க்ருஷ்ணன்முகத்தைப் பார்த்து, 'நீ பசுமேய்க்கப்போனல் நலியக்கடவதான பாதகபதார்த்தங்களும் நலியாநின்றது' என்று கூப்பிட்டும், இப்படித்தலைமகள்பேச்சான பதினேழுதிருவாய்மொழியிலும் க்ரமப்ராப்திபற்றுதபடியான அதிமாத்ரப்ராவண்யகார்யமான ப்ராப்யத்வரை தோன்றும். (134)

135. தோழிமார் அன்னையர் என்கிற பன்மை ரக்ஷகத்வாதிபந்தவாத்ஸல்யாதிவ்யவஸாயபுத்திபேதத்தாலே.

ஆனல் தோழி என்றும், தாய் என்றும் சொல்லுகிறது ஸம்பந்தஜ்ஞாநத்தையும் உபாயாத்யவஸாயஜ்ஞாநத்தையுமாகில் இவற்றினுடைய பன்மைக்கு தாத்பர்யம் என் என்னில்; அந்த ஸம்பந்தோபாயங்களினுடைய விதாபேதங்களை விஷயீகரித்த ஜ்ஞாநவ்யவஸாயங்களினுடைய பேதத்தாலே சொல்லுகிறதென்கிறுர் (தோழிமார் அன்னையர் என்று தொடங்கி). "ஊரென்சொல்லிலென் தோழிமீர்" (திருவா. 5 - 3 - 8), "எங்ஙனேயோ அன்னைமீர்காள்" (திருவா. 5 - 5 - 1), "அன்னையரும் தோழியரும்" (திருவா. 5 - 4 - 5), "ஏலமலர்க்குழலன்னைமீர்காள்" (திருவா. 8 - 2 - 3), "என்னுடைத் தோழியர்காள்" (திருவா. 8 - 2 - 7) என்று தோழிமாரையும், தாய்மாரையும் பலவாகச் சொல்லுகிறது - ரக்ஷகத்வாதிபந்தவாத்ஸல்யாதிவ்யவஸாயபுத்திபேதத்தாலே; 'ரக்ஷகரக்ஷ்யஸம்பந்தம், ஶேஷஶேஷிஸம்பந்தம், பித்ருபுத்ரஸம்பந்தம், பர்த்ருபார்யாஸம்பந்தம், ஜ்ஞாத்ருஜ்ஞேயஸம்பந்தம், ஸ்வஸ்வாமிஸம்பந்தம், ஶரீரஶரீரிஸம்பந்தம், ஆதாராதேயஸம்பந்தம், நியந்த்ருநியாம்யஸம்பந்தம், போக்த்ருபோக்யஸம்பந்தம்' என்று இவைமுதலான ஸம்பந்தங்களை விஷயீகரித்த ஜ்ஞாநங்கள் பலவாகையாலே அவற்றையும், வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌஶீல்யம், ஸௌலப்யம், ஜ்ஞாநம், ஶக்தி, க்ருபை, ப்ராப்தி, பூர்த்தி என்கிற குணனுஸந்தாநத்தாலே அந்த வ்யவஸாயபுத்திகளும் பலவாகையாலே பன்மையாகச் சொல்லுகிறதென்கிறுர். (135)

136. அபிலாஷா-சிந்தந-அநுஸ்ம்ருதி-இச்சா-ருசி-பர- பரம-

ப₄க்திகளிலே பேதை முதலான பருவம் கொள்ளும்.

தலைமகளுக்கும் இந்த ப₄க்தியினுடைய அவஸ்த₂ாபே₄த₃ங்களிலே பேதை முதலான பருவங்கள் உண்டென்கிறார் (அபி₄லாஷை என்று தொடங்கி). அபி₄லாஷையாவது - ப்ரத₂மத₃ர்ஶநத்தில் பிறக்கும் ஆசை. சிந்தனையாவது - த்₃ருஷ்டமான விஷயத்தில் உண்டான ஸ்மரணம். அநுஸ்ம்ருதியாவது - அந்த ஸ்மரணம் இடைவிடாமல் நடக்கை. இச்சை₂யாவது - அவ்விஷயத்தை அவஶ்யம் அநுப₄விக்கவேணுமென்கிற ஆசை. ருசி-யாவது - ரஸாந்தரத்தால் மாற்றவொண்ணாதபடி அந்த ஆசை முதிருகை. பரப₄க்தியாவது - அந்த வஸ்துவினுடைய ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களே ஸுக₂து₃:க₂ங்களாகை. பரம-ப₄க்தியாவது - அவ்வஸ்துவினுடைய விஶ்லேஷத்தில் ஸத்தை கிடையாதொழிகை. ஆகையாலே இந்த அவஸ்த₂ாபே₄த₃ங்களிலே பேதை முதலான பருவம் கொள்ளக்கடவது என்கிறார். *(136)*

137. மயில் பிறை வில் அம்பு முத்து பவளம் செப்பு மின் தேர் அன்னம் தெய்வவுரு விகாஸ ஶுத்₃தி₄ தா₃ாந்தி ஜ்ஞாநாநந்த₃ாநுராக₃-ப₄க்த்யணுத்வபே₄ாக்₃யதாக₃திகளையுடைய அகமேனியின் வகுப்பு.

மேல் அந்தத் தலைமகளுக்குச் சொல்லுகிற அவயவவைலக்ஷண்யம் இவ்வாத்மா-வினுடைய ஜ்ஞாநவிகாஸாதி₃களாகக் கடவதென்கிறார் (மயில் பிறை என்று தொடங்கி). "தோகைமாமயிலார்கள்" (திருவா. 6 - 2 - 2) என்று ஸ்த்ரீகளை மயில் என்பது - அளக-ப₄ாரத்தினுடைய விஸ்த்ருதியைப்பற்றவாகையாலே, ஆத்மாவினுடைய ஜ்ஞாநவிகா-ஸத்தைச் சொல்லுகிறது. "பிறையுடைவாணுதல்" (திருமொழி 2 - 9 - 9) என்று ஸ்த்ரீகளுடைய நெற்றியைப் பிறையாகச் சொல்லுகையாலே, அதினுடைய த₄ாவள்யத்தையிட்டு அந்த ஜ்ஞாநத்தினுடைய ஶுத்₃தி₄யோக₃த்தைச் சொல்லுகிறது. "விற்புருவக்கொடி" (திருவா. 6 - 6 - 6) என்று புருவத்தின் வளைவாலே வில்லாகச் சொல்லுகையாலே, அதுகொண்டு ஜ்ஞாநத்தினுடைய தா₃ாந்திருபதையைச் சொல்லு-கிறது. "அம்பன்னகண்ணாள்" (திருமொழி 6 - 8 - 6) என்று கண்ணை அம்பாகச் சொல்லுகிறது - லக்ஷ்யபாதியாகையாலே, அத்தாலே விஷயக்₃ராஹியான ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது.

*முத்தன்னவெண்முறுவலை முத்தாகச் சொல்லுகிறது - அதினுடைய ஒளியையும், நீர்மையையும் இட்டாகையாலே, "முத்ப்ரீதிः ப்ரமதே₃ா ஹர்ஷः" என்று அந்த ஜ்ஞாநத்தினுடைய ஆநந்தரூபதையைச் சொல்லுகிறது. "பவளவாயாள்" (திருமொழி 4 - 8 - 1) என்று அத₄ரத்தை ப்ரவாளமாகச் சொல்லுகிறது - சிவப்பையிட்டாகையாலே, ப₄க₃வத்₃விஷயத்தில் அந்த ஜ்ஞாநத்தினுடைய அநுராக₃த்தையைச் சொல்லுகிறது. "செப்பன்னமென்முலை" (திருப்பாவை 20) என்று முலைகளைச் செப்பாகச் சொல்லு-கையாலே, ஶேஷிக்கு பே₄ாக்₃யமாம்படி அந்த ஜ்ஞாநம் ப₄க்திரூபாபந்நமானமையைச் சொல்லுகிறது. "மின்னனையநுண்மருங்குல்" (திருமொழி 3 - 9 - 5) என்று இடையின் நுண்மையையிட்டு மின்னாகச்சொல்லுகையாலே ஆத்மாவினுடைய அணுத்வம் சொல்லுகிறது.

''தேரணங்கல்குள்'' என்று நிதம்ப₃த்தினுடைய விஸ்த்ருதியைச் சொல்லுகையாலே ஆத்மாவினுடைய பே₄ாக்₃யதையைச் சொல்லுகிறது. ''பெடையன்னமென நடந்து'' (திருமொழி 3 - 7 - 5), ''தூவிசேரன்னமன்ன நடையாள்'' (திருமொழி 3 - 7 - 9) என்று நடையையிட்டு அன்னமாகச் சொல்லுகையாலே, ஆத்மாவினுடைய ஶேஷத்வாநுரூபாநுஷ்ட₂ாநத்தைச் சொல்லுகிறது. ஆக இத்தால், ''என் தெய்வவுருவில் சிறுமான்'' (திருவா. 4 - 4 - 2) என்று அப்ராக்ருதஸ்வப₄ாவமாய், ''அகமேனியொழியாமே'' (திருவா. 9 - 7 - 10) என்று ஸர்வேஶ்வரனுக்கு அந்தரங்க₃ஶரீரமான ஆத்மாவுக்கு அவயவபூ₄தமான ஜ்ஞாநத்தினுடைய பி₄தை₃கள் என்கிறார். (137)

138. சூழ்ச்சி அகற்றினீர் என்னும்பழி, இணக்கி எங்ஙனே என்னும் மேலெழுத்து, முன்னின்றாய் இவளை நீரென்னும் இருபடை மெய்க்காட்டு, நீரென்னேயென்னுமுடன்பாடு, இடையில்லையென்னுமுதறுதல், இருந்திருந்து நடந்தாளென்னும் கொண்டாட்டம் - அவஸ்த₂ாத்ரயவ்ருத்தி.

இனிமேல்கீழ்ச்சொன்ன அவஸ்த₂ாத்ரயத்தினுடைய வ்ருத்தியைச் சொல்லுகிறது (சூழ்ச்சி அகற்றினீர் என்று தொடங்கி). ''தோழிமார்பலர் கொண்டுபோய்ச்செய்த சூழ்ச்சியை யார்க்குரைக்கேன்'' (பெரியா. திரு. 3 - 7 - 4) என்று தாயார் தோழிமார்மேலே பழியிட, ''அமுதமென்மொழியாளை நீருமக்காசையின்றியகற்றினீர்'' (திருவா. 6 - 5 - 2) என்று தோழி தாய்மார்மேல் பழியிட, ''இணக்கி எம்மையெம் தோழிமார் விளையாடப் போதுமின் என்னப்போந்தோமை'' (திருவா. 6 - 2 - 8) என்றும், ''எங்ஙனேயோ அன்னைமீர்காளென்னை முனிவது நீர்'' (திருவா. 5 - 5 - 1) என்றும் தலைமகள், 'உங்களாலேயன்றோ எனக்கு இந்த ப்ராவண்யம் உண்டாய்த்து' என்று பழி இரண்டுக்கும் மேலெழுத்திட. (முன்னின்றாய் இத்யாதி₃ - மெய்க்காட்டு) ''முன்னின்றுயென்று தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்'' (திருவா. 5 - 5 - 9) என்று தோழி தாய்மாரோடே கூடிநின்று தலைமகளைப்பொடிந்தும், ''தொலைவில்விமங்கலம் தொழுமிவளை நீரினி அன்னைமீர் உமக்காசையில்லை விடுமினோ'' (திருவா. 6 - 5 - 1) என்று தோழி, தாய்மார்க்கு கார்யோபதே₃ஶம் பண்ணுவாரைப்போலே தலைமகளுக்கும் ஸஹகரித்தும் இப்படி இருபடை மெய்க்காட்டு.

(நீரென்னேயென்னுமுடன்பாடு) ''அன்னையரும் தோழியரும் நீரென்னேயென்னுதே நீளிரவும் துஞ்சுவரால்'' (திருவா. 5 - 4 - 5) என்று தலைமகள் தாய்மாரொடும் தோழிமாரோடும் உடன்பாடாக வார்த்தைசொல்ல; (இடையில்லையென்னுமுதறுதல்) அவர்கள், 'நீ எங்கள்வார்த்தை கேட்கில் மீளவமையும்' என்ன, ''உங்களோடெங்களிடையில்லையே'' (திருவா. 8 - 2 - 7) என்று 'நீங்கள் இவ்விஷயத்தினின்றும் மீட்கத்தேடில் உங்களுக்கும் எனக்கும் ஒரு ஸம்ப₃ந்த₄மில்லை' என்று அவர்களை அதிக்ரமிக்க, (இருந்திருந்து நடந்தாள் என்னும் கொண்டாட்டம்) ''இருந்திருந்தரவிந்தலோசன என்றென்றே நைந்திரங்குமே'' (திருவா. 6 - 5 - 8) என்று தோழி கொண்டாட்டமும், ''நேரிழை நடந்தாள் எம்மை ஒன்றும் நினைத்திலளே'' (திருவா. 6 - 7 - 9) என்று தாயார்

கொண்டாட்டமுமான இவை அவஸ்த2ாத்ரயவ்ருத்தி.

இத்தால் இந்த வ்ருத்திகளினுடைய அவஸ்த2ாத்ரயத்துக்கும் ஸ்வாபதே3ஶம் - 'சூழ்ச்சி அகற்றினீர்' என்று அந்யோந்யம் பழியிடுகிறவித்தால் ஶேஷத்வஜ்ஞாநம் ஶேஷ-வ்ருத்திபர்யந்தமாயல்லதிராமையாலே அந்த ஸம்ப3ந்த4ஜ்ஞாநம் ப்ராப்யருசிக்கு ஹேது என்றும், உபாயாத்4யவஸாயம் உபேயவைலக்ஷண்யத்தை முன்னிட்டுக்கொண்டல்ல-திராமையாலே அந்த அத்4யவஸாயம் உபேயருசிக்கு ஹேதுவென்றும், மேலெழுத்து என்று ப்ராப்யத்வரைதன்னை நிரூபித்தாலும் இது ஸம்ப3ந்தோ4பாயங்களிரண்டாலும் வந்ததென்று சொல்லுகிறவித்தாலும், ஸம்ப3ந்த4ஜ்ஞாநமும் உபாயாத்4யவஸாயமும் ப்ராப்யத்வரைக்கு ஹேதுவென்று அந்த ஸம்ப3ந்தோ4பாயங்களிரண்டினுடையவும் ப்ராதா4ந்யம் தோற்றிநிற்கிறது.

ப்ரத2மத3ஶையில் - வ்ருத்தி இருபடைமெய்க்காட்டென்கிறவித்தால் ஸம்ப3ந்த4ஜ்ஞாந-மானது, ஶேஷத்வம் ஸ்வரூபமானபின்பு அந்த ஶேஷிதானே வந்து விஷயீகரிக்கக் கண்டிருக்குமத்தனையல்லது தான் த்வரிக்கை ஸ்வரூபவிருத்3த4ம் என்று உபாயாத்4யவ-ஸாயத்துக்கு ஸஹகரித்தும், ஶேஷத்வம் வ்ருத்திபர்யந்தமாகையல்லது ஸித்3தி4யா-தென்று அந்த வ்ருத்தியில் ருசியை விளைக்கையாலே ப்ராப்யத்வரைக்கு ஸஹகரித்தும், உடன்பாடென்கிறவித்தால் ப்ராப்யம் ஸம்ப3ந்தா4நுகு3ணமாகவும் வேண்டுகையாலே ப்ராப்யத்வரை இவையிரண்டும் கூடி நின்றபடி சொல்லிற்று.

ஆக இருபடைமெய்க்காட்டு உடன்பாடென்கிற இரண்டாலும் ஸம்ப3ந்த4ஜ்ஞாநம் உபாயவ்யவஸாயம் உபேயருசி என்கிற இவற்றில் சேர்ந்துநின்றது மத்4யமத3ஶையில் வ்ருத்தி; உதறுதல் கொண்டாட்டம் என்கிற இரண்டாலும் ப்ராப்யத்வரையானது ஸம்ப3ந்தோ4பாயங்களை அதிக்ரமிக்க, ப2லத3ஶையில் ஸ்வரூபம் ப்ராப்யாநுகு3ணம் என்னுமிடத்தையும், "எம்மையொன்றும் நினைத்திலளே" (திருவா. 6 - 7 - 9) என்று உபாயாத்4யவஸாயஸத்3ப4ாவம் இல்லையென்னுமிடத்தையும் சொல்லுகிறது, சரம-த3ஶையில் வ்ருத்தி; ஆக அவஸ்த2ாத்ரயவ்ருத்தி. (138)

139. தாயார், ஏதலர் உற்றார்கள் என்னும் ஸாத்4யஸித்3த4ஸாத4ந-நிஷ்ட2ரை; மகள், நம்முடை ஏதலர் யாமுடைத்துணை என்னும் ஸித்3த4ஸாத4நஸாத்4யபரரை.

(தாயார் ஏதலர் இத்யாதி3) தாயாரான உபாயாத்4யவஸாயத3ஶையில் ஸ்வரூபம் ப்ராப்யாநுகு3ணம் என்னுமிடத்தையும், "எம்மையொன்றும் நினைத்திலளே" (திருவா. 6 - 9 - 7) என்று உபாயாத்4யவஸாயஸத்3ப4ாவமில்லை என்னுமிடத்தையும் சொல்லுகிறது ஆரை என்னில், ஸித்3த4ஸாத4நத்துக்கு எதிர்த்தட்டான உபாயாந்தரநிஷ்ட2ரையும், அநுகூலரான ஸித்3த4ஸாத4நநிஷ்ட2ரையும் சொல்லுகிறது. (மகள் நம்முடை ஏதலர் யாமுடைத்துணை என்னும்) மகள் என்று சொல்லுகிற ப்ராப்யத்வராத3ஶையில் "நம்முடை ஏதலர் முன்பு நாணி" (திருவா. 8 - 2 - 1) என்று அந்த விரோதி4களாகவும்,

"யாமுடைத்துணையென்னும் தோழிமாரும்" (திருவா. 9 - 9 - 5) என்று தன்னோடு ஸம-ஸுக$_2$து$_3$:கி$_2$களான ப$_3$ந்து$_4$க்களாகவும் சொல்லுகிறது ஆரை என்னில், தன்னைப்போலே ப$_4$க$_3$வத்$_3$விஷயமொன்றிலும் இழிந்திருக்கச்செய்தேயும் அத்தை ப்ராப்யம் என்று கொள்ளாதே ப்ராபகம் என்று கொள்ளுகிற ஸித்$_3$த$_4$ஸாத$_4$நநிஷ்ட$_2$ரையும், தன்னைப் போலே ப்ராப்யமென்றிருக்கிற ஸாத்$_4$யபரரையும் சொல்லுகிறது. (139)

140. நாலயலார் அயற்சேரியார் உபாயசதுஷ்டயாந்தர்யாமித்வபரர்.

(நாலயலார் இத்யாதி$_3$ அந்தர்யாமித்வபரர்) "நாலயலாருமறிந்தொழிந்தார்) (நா.தி.12 - 2) என்றும், "அயற்சேரியுள்ளாருமெல்லே" (திருவா. 6 - 7 - 4) என்றும் நாலசலாகவும், அயல்தெருவாகவும் சொல்லுகிறது ஆரை என்னில், கர்மஜ்ஞாநப$_4$க்திப்ரபத்தி என்கிற நான்கு உபாயநிஷ்ட$_2$ரையும், பரத்வம் முதலான மற்றை நாலிடத்திலும் உறவற்று கேவலம் ஸ்வரூபாந்தர்யாமியளவிலே உறைத்திருக்குமவர்களையும் சொல்லுகிறது.

141. கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன்பற்றுள்ளசல்.

ஆனால் ப்ரபத்திநிஷ்ட$_2$ரையும் அசலாகச் சொல்லுமோ என்னில், (கீழை மேலை வடக்கிலவை புறம்பாகத் தன்பற்றுள்ளசல்) என்கிறார். "கீழையகத்துத்தயிர்கடைய" (பெரு.தி. 6 - 2) இத்யாதி$_3$யாலே சொல்லுகிற கர்மநிஷ்ட$_2$ரையும், "மேலையகத்துநங்காய் வந்து காண்மின்கள்" (திருமொழி 10 - 8 - 2) என்று சொல்லுகிற ஜ்ஞாநயோக$_3$-நிஷ்ட$_2$ரையும், "வடக்கிலகம் புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்துவைத்த அன்பா" (பெரியா. தி. 3 - 1 - 2) என்றும் சொல்லுகிற ப$_4$க்தியோக$_3$நிஷ்ட$_2$ர்க்கும் ஸித்$_3$த$_4$ஸாத$_4$நநிஷ்ட$_2$ர்க்குப் புறவாசலாகையாலும் இவ்-விஷயத்திலே இழிந்திருக்கச்செய்தேயும் தன்பற்றை உபாயமென்றிருக்குமவர்கள் உள்ளசலாயிருக்கையாலும் சொல்லுகிறது. (141)

142. ஊரார் நாட்டார் உலகர் கேவலைஶ்வர்யகாமஸ்வதந்த்ரர்.

(ஊரார் நாட்டார் உலகர்) "ஊரும் நாடுமுலகமும்" (திருவா. 6 - 7 - 2) என்றும், "ஊரவர் கவ்வை" (திருவா. 5 - 3 - 4) என்றும், "நாட்டாரோடியல்வொழிந்து" (திருவா. 10 - 6 - 2) என்றும், "எங்கள்கண்முகப்பே உலகர்கள்" (திருவா. 9 - 2 - 8) என்றும் சொல்லுகிற இது - ஊரார் என்று கேவலரையும், நாட்டார் என்று புத்ரபஶ்வந்நாதி$_3$களான ஐஹ-லௌகிகைஶ்வர்யகாமரையும், உலகத்தவர் என்று ஸ்வர்க்க$_3$ாதி$_3$பரலோகைஶ்வர்ய-காமரான ஸ்வதந்த்ரரையும் சொல்லுகிறது. (142)

143. இறுகலிறப்புக்கும் இறந்தால் தங்குமூரொக்குமே.

கேவலனையும் ஓருராகச் சொல்லுவானென் என்னில், (இறுகலிறப்புக்கும் இறந்தால் தங்குமூரொக்குமே) "எல்லாம்விட்ட இறுகலிறப்பு" (திருவா. 4 - 1 - 10) என்று ஐஶ்வர்யத்தையும், ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வத்தையும் விட்டு ஆத்மாநுப$_4$வமாத்ரமான ஸங்கோ-

சத்தை மோக்ஷமென்று சொல்லுகிற கேவலனுக்கு அவ்வநுப$_4$வம் நித்யமாம்போது "ஜராமரணமோக்ஷாய" (கீதை) என்று அதுக்கு விரோதி$_4$யான ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களுக்கு கர்மீப$_4$விக்கைக்கடியான ப்ரக்ருதிப்ராக்ருதஸம்ப$_3$ந்த$_4$ம் அற வேண்டுகையாலே "யோகி$_3$நாமம்ருதம் ஸ்த$_2$ாநம் ஸ்வாத்மஸந்தோஷகாரிணம்" என்கிறபடியே "இறந்தால் தங்குமூரண்டமே கண்டுகொண்மின்" (திருமொழி 10 - 2 - 10) என்று அவனுக்கு வஸ்தவ்யம் தே$_3$ஶவிஶேஷமாக வேண்டுகையாலே ஊர் என்கிறது.(143)

144. சிறு சீரார் சுளகுகள் உப$_4$யவிவேகபரிகரம்

(சிறு சீரார் சுளகுகள் உப$_4$யவிவேகபரிகரம்) "சிறுசுளகும் மணலுங்கொண்டு" (நா.தி. 2 - 8) என்று சிறுசுளகாவது - பெருமணலையும் நுண்மணலையும் பிரிப்பதொன்றுகையாலே தே$_3$ஹாத்மவிவேகத்துக்கு பரிகரமான ப்ரமாணம். "சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா" (சிறியதிருமடல்) என்று தொடங்கி "பேராயிரமுடையானென்றாள்" என்று இவளுக்கு இவ்வ்யாமோஹத்தை விளைத்தான் ஸர்வேஶ்வரனுகையாலே, சீரார் சுளகென்பது - ஆத்மபரமாத்மவிவேகத்துக்கு பரிகரமாய்ப் போருகிற ப்ரமாணம். (144)

145. மாலை கங்குல் காலை பகல் ரஜஸ் தமஸ் ஸத்த்வ ஶாஸ்த்$_3$த$_4$ஸத்த்வஜ்ஞாநங்கள்.

(மாலை கங்குல் இத்யாதி$_3$ - ரஜஸ் தமஸ் ஸத்த்வ ஶாஸ்த்$_3$த$_4$ஸத்த்வஜ்ஞாநங்கள்) "மாலையும் வந்தது" (திருவா. 9 - 9 - 10) என்றும், "செங்களம்பற்றி நின்றெள்குபுன்மாலை" (திருவிரு. 77) என்றும் சொல்லுகையாலே, மாலையாவது - ஸந்த்$_4$யை; அது ராகே$_3$ாத்தரமாயிருப்பதொன்றுகையாலே ராஜஸஜ்ஞாநம். "கங்குல் நாழிகை ஊழியில்" (திருமொழி 9 - 5 - 3) என்றும், "செல்கின்றகங்குல்வாய்" (திருவா. 5 - 4 - 10) என்றும் கங்குல் என்பது - மத்$_4$யராத்ரி; அது தமோபூ$_4$தமாயிருக்கையாலே தாமஸஜ்ஞாநம். "காலையெழுந்திருந்து" (நா.தி. 9 - 8) என்று காலையாவது - ப்ராதஃகாலம்; அது ப்$_3$ராஹ்மமுஹூர்த்தமாய் ஸத்த்வோத்தரகாலமாகையாலே ஸாத்த்விகஜ்ஞாநம். "பகல்கண்டேன் நாரணனைக்கண்டேன்" (இ.திரு. 71) என்று, பகலாவது - ஸகலபதா$_3$ர்த்த$_2$ங்களையும் யதா$_2$த$_3$ர்ஶநம் பண்ணுவிப்பதொரு காலமாகையாலே கு$_3$ணவிக்$_3$ரஹவிபூ$_4$திவிஶிஷ்டனை ஸர்வேஶ்வரனை யதா$_2$வாக ஸாக்ஷாத்கரிக்கிற ஶாஸ்த்$_3$த$_4$ஸத்த்வஜ்ஞாநம். இத்தால் அந்யதா$_2$ஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம், யதா$_2$ர்ஜ்ஞாநம், தத்ப$_2$லமான ஸாக்ஷாத்காரஜ்ஞாநம் என்கிற இவற்றைச் சொல்லுகிறது. (145)

146. நிலாமுற்றம் ப்ரஜ்ஞாப்ராஸாத$_3$மென்னுமெல்லைநிலம்.

(நிலாமுற்றமித்யாதி$_3$ - எல்லைநிலம்) "நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினாள்" (திருமொழி 8 - 2 - 2) என்று நிலாமுற்றமாகச் சொல்லுகிறது - "ப்ரஜ்ஞாப்ராஸாத$_3$மாருஹ்யாஶோச்யஶ்ஶோசதோ ஜநாந் । பூ$_4$மிஸ்தா$_2$நிவ ஶைலஸ்தே$_2$ா ஹ்யஜ்ஞாந் ப்ராஜ்ஞ: ப்ரபஶ்யதி" என்று சொல்லுகிறபடியே "காணுமோ கண்ணபுரமென்று

காட்டினாள்'' (திருமொழி 8 - 2 - 2) என்று சொல்லுகையாலே ததீ$_3$யரை ப்ராப்யர் என்கிற எல்லைநிலமான புருஷார்த்த$_2$ஜ்ஞாநத்தை என்கிறார். (146)

147. கலைவளை அஹம் மம க்ருதிகள்.

(கலைவளை என்று தொடங்கி - மமக்ருதிகள்) ''கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்குதோளும்'' (திருநெடு. 22) என்றும், ''கலையாளாவகலல்குல் கனவளையும் கையாளா என்செய்கேன்நான்'' (திருமொழி 5 - 5 - 2) என்றும் கலை வளையாகச் சொல்லுகிறது - ப$_4$க$_3$வத$_3$நுப$_4$வவிரோதி$_4$யான அஹங்கார-மமகாரங்களை. (147)

148. பட்டம் சூடகமாவன பராவரகுருக்கள் பூட்டும் ஆத்ம-பூ$_4$ஷணங்கள்.

(பட்டம் சூடகமாவன - பூ$_4$ஷணங்கள்) ''பட்டங்கட்டிப்பொற்றோடுபெய்திவள் பாடகமும் சிலம்பும் இட்டமாக வளர்த்து'' (பெரியா. திரு. 3 - 7 - 6) என்றும், ''சூடகமே தோள்வளையே'' (திருப்பாவை 27) என்று தொடங்கி இவற்றாலே சொல்லுகிற ஆப$_4$ரணங்களாவன - ''க்ருஷ்ணாங்க்$_4$ரிதுளஸீமௌளி: பட்டம் க்ருஷ்ணாபி$_4$வந்த$_3$நம் । குண்ட$_3$லே க்ருஷ்ணசரிதஶ்ரவணம் கங்கணோஞ்ஜலி:'' என்கிறபடியே ப்ரத$_2$மத்திலே இவனை அங்கீ$_3$கரித்த ஆசார்யன் உண்டாக்குமவை. இவ்வாத்மாவுக்கு அலங்காரமா-யிருக்கிற நாமரூபங்களும், ப$_4$க$_3$வத்$_3$வந்த$_3$நாதி$_3$களும், பின்பு அவ்வாசார்யவைப$_4$வத்தை உணர்த்தினவன் உண்டாக்கின ஶேஷத்வஜ்ஞாநாதி$_3$களும் என்கிற இவை. (148)

149. பந்து கழல் பாவை குழமணன் யாழ் தென்றல் மதியம் அடிசில் சாந்தம் பூண் அகில் சிற்றில் தூதை முதலாவன குணத்ரயவிசித்ரகர்ம-ஸூத்ரத்தாலே கட்டி லீலையாக ப்ரேரிக்க விழுந்தெழுந்தும் சுழன்-றுழன்றும் பறிபட்டும் அற்பசாரமாமவையுமாய், மதீ$_3$யமென்னில் விட்டகலவும், ததீ$_3$யமென்னில் இகழ்வறவும் முனிவதும் இக்காலம் ஈதோ என்னப்படும் பொங்கைம்புலனில் போ$_4$க்$_3$யாதி$_3$ஸமூஹம்.

(பந்து கழல் இத்யாதி$_3$ - போ$_4$க்$_3$யாதி$_3$முதலானவை) போ$_4$கோ$_3$பகரணமாகவும் சொல்லப்படுகிறவற்றுக்கு ஸ்வாபதே$_3$ஶம் அருளிச்செய்கிறார். ''பந்தும் கழலும் தந்து போகு நம்பீ'' (திருவா. 6 - 2 - 1) என்று பந்து கழல் என்பது - போ$_4$க$_3$ஸ்தா$_2$நமாகிற ஸ்தூ$_2$லஸூக்ஷ்மஶரீரங்களை. ''கன்மமன்றெங்கள் கையில் பாவை பறிப்பது'' (திருவா. 6 - 2 - 7) என்றும், ''குழகியெங்கள் குழமணன்கொண்டு'' (திருவா. 6 - 2 - 6) என்றும் சொல்லுகையாலே பாவை குழமணன் என்பது - போ$_4$க்த்ருவர்க்க$_3$மான ஸ்த்ரீபுருஷ-விப$_4$ாக$_3$த்தை. ''சீருற்ற அகில்புகை யாழ் நரம்பு'' (திருவா. 9 - 9 - 7) என்றும், ''தைவந்த தண்தென்றல்'' (திருவா. 5 - 4 - 8) என்றும், ''மேவுதண்மதியம்'' (திருவா. 9 - 9 - 4)

என்றும், "இன்னடிசிலொடு பாலமுதூட்டி" (நா.தி. 5 - 5) என்றும், "சாந்தமும் பூணும் சந்தனக்குழம்பும்" (திருமொழி 2 - 7 - 3) என்றும் சொல்லுகிற யாழ் தென்றல் மதியம் அடிசில் சாந்தம் பூண் அகில் என்கிறவை ஶப்3த3ாதி3களான போ4க்3யங்கள். சிற்றில் என்பது - போ4க3ஸ்த2ானம், தூதை என்பது - பத3ார்த்த2ங்களை இட்டுவைப்பதொன்றாகையாலே போ4கோ3பகரணங்களுக்கு உபலக்ஷணம்.

(கு3ணத்ரயவிசித்ரகர்மஸூத்ரத்தாலே கட்டி) பந்தானது - வெண்ணூல் செந்நூல் கருநூலாலே கட்டியிருப்பதொன்றாகையாலே, ப்ரக்ருதியும், "லோஹிதஶுக்ல-க்ருஷ்ணாம்" (தை.உ.) என்று ஸத்த்வரஜஸ்தமஸ்ஸுக்களாலே விசித்ரமாய். "த்வம் ந்யஞ்சத்3பி4ருத3ஞ்சத்3பி4ஃ கர்மஸூத்ரோபபாதி3தைஃ। ஹரே விஹரஸி க்ரீடா3கந்து3கைரிவ வஸ்துபிஃ" என்கிறபடியே கர்மஸூத்ரத்தாலே கட்டி. (லீலையாக ப்ரேரிக்க விழுந்-தெழுந்தும் சுழன்றுழன்றும்) "அஜ்ஞோ ஜந்துரநீஶோயமாத்மநஸ்ஸுக2து3ஃக2யோஃ। ஈஶ்வரப்ரேரிதோ க3ச்சேத்2 ஸ்வர்க்க3ம் வா ஶ்வப்4ரமேவ வா" என்கிறபடியே அஜ்ஞனாய் அஶக்தனாயிருக்கிற இவன் கர்மாநுகு3ணமாக ஈஶ்வரன் ப்ரேரிக்க, "யமாலயமஹாஶைலே மாதுர்ஜட2ரதோல்பதஃ। யாதாயாதஸஹஸ்ராணாம் முநே ஜீவஸ்யஸாத4நம் ॥ க்வசித்கத3ாசித்ஸ்வர்க்க3ஸ்ய புநஃபதநது3ர்க3தேஃ" என்கிறபடியே ஸ்வர்க்க3-நரக-க3ர்ப்ப4ங்களிலே தட்டித்திரிந்து பறிபட்டு, "பந்துபறித்து" என்கிறபடியே ஈஶ்வரன் தன்னுடைய போ4க3விரோதி4 என்று விடுவிக்க விட்டும்.

(அற்பசாரமாமவையுமாய்) "அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" (திருவா. 3 - 2 - 6) என்கிறபடியே ஶப்3த3ாதி3கள் ப4க3வத்3விஷயத்தினின்றும் அகற்றுமதொழியத் தன்பக்கல் பூ4ஜிக்கலாவதொன்றில்லாதபடி அல்பஸாரங்களாய். (மதீ3யமென்னில் விட்டகலவும்) இவற்றை ப4க3வதீ3யத்வாகாரமொழிய மதீ3யமென்று பார்த்தபோது "சிற்றில் மென்பூவையும் விட்டகன்ற செழுங்கோதை" (திருமொழி 3 - 7 - 8) என்கிற படியே த்யாஜ்யங்களாய். (ததீ3யமென்னில் இகழ்வறவும்) ததீ3யத்வாகாரத்தாலே கண்டபோது "இகழ்விலிவ்வனைத்துமென்கொ" (திருவா. 3 - 4 - 1) என்கிறபடியே கட்டடங்க உபாதே3யங்களாயும்.

(முனிவதுமிக்காலமீதோ என்னப்படும்) "அன்னை முனிவதும் அன்றிலின் குரலீர்வதும்" இத்யாதி3 (திருமொழி 11 - 2 - 5), "இக்காலமிவ்வூர்ப்பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரி வீசும்" (திருவிரு. 5) என்கிறபடியே அவனையொழியக்கண்டபோது ப்ரதிகூலங்க-ளாயும், "அவ்வாடை ஈதோ வந்து தண்ணென்றதே" (திருவிரு. 27) என்று அவனோடே சேர்த்துக்கண்டபோது அநுகூலங்களாயுமிருக்கிற. (பொங்கைம்புலனில் போ4க்3யாதி3-ஸமூஹம்) "பொங்கைம்புலன் என்கிற பாட்டிற்சொல்லுகிற போ4க்3ய-போ4க்த்ரு-வர்க்க3-போ4கோ3பகரண-போ4க3ஸ்த2ானங்களைச் சொல்லுகிறதென்கிறார்.

இரண்டாம் ப்ரகரணம் முற்றிற்று
அழகியமணவாளப்பெருமாள்நாயனார் திருவடிகளே ஶரணம்
திருநாராயணபுரத்தாய் திருவடிகளே ஶரணம்


ஸ்ரீ ஆயிஸ்வாமி மண்டபம்
திருநாராயணபுரம்



Kola Varahar



Swami Ayee Jananyacharyar


ஓங்குதுலாப்பூராடத்துதித்த செல்வன் வாழியே
பாங்குடனே ஞானப்பிரான் பணியுமவன் வாழியே

அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

ஆய் (என்கிற) ஜநந்யாசார்யர் அருளிச்செய்த வ்யாக்யானம்

மூன்று நான்கு ப்ரகரணங்கள்




வெளியிடுவோர்

ஸ்ரீயாதவாத்ரி ஜநந்யாசார்ய ஆயி கைங்கர்ய வர்த்திநி ஸபை

பெங்களூர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

ஆய் (என்கிற) ஜநந்யாசார்யர் அருளிச்செய்த வ்யாக்யானம்

மூன்று நான்கு ப்ரகரணங்கள்

பதிப்பாசிரியர்

முதுமுனைவர் ம. அ. வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமி

வெளியிடுவோர்

ஸ்ரீயாதவாத்ரி ஜநந்யாசார்ய ஆயி கைங்கர்ய வர்த்திநி ஸபை

பெங்களூர்

Achrya Hrudayam

Acharya Hrudayam of Swami Alagiya Manavala Perumal Nayanar
with commentary of
Thirunarayanapuram Ayee Jananyacharya Swami - Prakaranas 3,4 mem,

Edition: 2019 Price: INR 100 USD 8

ஸம்ஶ்ரிதாநாம் ஜநிச்சேத$_3$ஹேது ஜ்ஞாநத$_3$முக்திதி$_3$ம் |
யது$_3$புர்யாம் ஜநந்யாக்$_2$யம் லோகாநாமுத்தமம் கு$_3$ரும் ||
ஸம்ப்ரதா$_3$யார்த்த$_2$த$_4$நிநம் ஸௌம்யஜாமாத்ரு ஸம்ஶ்ரயே |
நிஶ்சிதார்த்த$_2$ப்ரத$_3$ம் ஶ்ரீமஜ்ஜநநீகு$_3$ருமாஶ்ரயே ||

Copies Available at: Dr.M.A.Venkatakrishnan
7, South Mada street,
Thiruvallikkeni,
Chennai 600 005
9444911192

Sri Yadavadri Jananyacharya Ayee Kainkarya Vardhini Sabha
#116, 'Sreesanudasa Nilayam', 15" cross
AECS Layout, RMV 2nd Stage, Sanjaynagar
Bangalore-560 094. INDIA
Tel: 9845013393
Email: ayeenarasimhan @ gmail.com

Sri Yadavadri Jananyacharya Ayee Kainkarya Vardhini Sabha
AyeeThirumaligal', Raja Veedhi
Melukote, Mandya District 571 431
INDIA

முன்னுரை

॥श्रीमते रामानुजाय नमः ॥श्रीजनन्याचार्य (मातृ)गुरवे नमः ॥श्रीमद्वरवरमुनये नमः ॥

श्रीस्तनाभरणं तेजश् श्रीरङ्गेशयमाश्रये ।
चिन्तामणिमिवोद्धान्तं(द्वान्तं) उत्सङ्गेऽनन्तभोगिनः ॥

सेनेश करुणालब्ध-दिव्यज्ञानप्रदं शुभम् ।
द्राविडाम्नायवक्तारं शठवैरिणमाश्रये ॥

रामानुजमुनिर्जीयाद्योहरेर्भक्तियन्त्रितात् ।
कलिकोलाहलक्रीडा-मुधाग्रहमपाहरत् ॥

ஆஸூரி சிங்கமாம் ஆதிகுரு உலகுக்கே
மாசிலா இளையாழ்வார் மண்ணுலகமாழ்ந்தன்று
தூசரிக்கும் திருப்பாவைத் திருவருளைத் தெளிவித்துப்
பேசினார் பெம்மானைப் பின்போரை வாழ்த்திடவே

मिथुने तु विशाखायां रामानुजगुरोस्सुतम् ।
पुण्डरीकाक्षदेवं तं यमयोरनुजं भजे ॥
हारीतवंशजलधेः परिपूर्णचन्द्रं
श्रीयादवाद्रिनिलयं श्रितलक्ष्मणार्यम् ।
श्रीपुण्डरीकनयनाभिधमार्यवर्यं
आसूरिदेवममलं शरणं प्रपद्ये ॥

रम्यजामातरं वन्दे रमणीयगुणोदयम् ।
शठारिसूक्तिहृदय-प्रदाय(काश)कमहर्निशम् ॥

श्रीरङ्गवासिनं धौत-वस्त्रविप्रकुलोद्भवम् ।
शिष्यं सौम्यवरेशस्य जनकाह्वमहं भजे ॥

आचार्यहृदयाख्येन प्रबन्धेन निरूपितम् ।
जनकं संश्रये धौतवस्त्रविप्रपदाश्रयम् ॥

आचार्यहृदयस्यार्थाः सकला येन दर्शिताः ।
श्रीसानुदासममलं देवराजं तमाश्रये ॥

மாதவத்தோர் வாழ்த்தும் முடும்பை மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோரான பெற்றார்-தீதற்ற
ஆசார்ய ஹ்ருதயம் பெற்றார் நம்மாயியிவர்
தேசாரத்தாள்கள் நெஞ்சே காண்.

பூதூரில் வந்துதித்த புண்ணியனோ! பூங்கமழும்
தாதாரும் மகிழ்மார்பன் தானிவனோ!-தூதூர
வந்தநெடு மாலோ! மணவாள மாமுனிவன்
எந்தையிவர் மூவரிலும் யார்?

மாதவத்தோன் மாறன்மனம்(மறை) கூறும் மணவாளன்
தோதவத்தித் தூய்மறை யோரான பெற்றார்-நீதியினால்
ஆங்கவர்கள் தாள்சேர் பெற்றார் ஆயிமணவாளமுனி
பூங்கமலத்தாள்கள் நெஞ்சே போற்று

எம்பருமானின் விஶேஷ அவதாரங்களில், கர்தம-ப்ரஜாபதியினுடைய திருமடந்தையான தேவஹூதிக்கு குமாரராய் அவதரித்தார் கபிலமஹரிஷி. ஸாங்க்யம் என்கிற ஞானதர்ஶனத்தை தம் தாய்க்கு உபதேஶித்து, அவளுக்கு தேஹாத்ம விவேகத்தை உண்டாக்கினார் இவர். இவரின் கர்தம ஆஶ்ரமம் ஹிமய மலையின் அருகிலே உள்ளது. இவர்க்குப் பல ஶிஷ்யர்கள் உண்டு. அவர்களுள் ப்ரதான ஶிஷ்யர் ஆஸூரி மஹரிஷி. ஆஸூரி மஹரிஷியின் ஶிஷ்யர் பஞ்சஶிகாசாரியார் என்று இவரின் இந்த வரலாற்றை கூறுகிறது மஹாபாரதம்; आसुरि: என்று வடமொழியில் கடுகுக்குப் பெயராகும். சாணக்யன் தகப்பனார் சணகர் (என்றால் கடலை), பூர்வ காலத்தில் இப்படி மலை, கொடி, தான்யம் இத்யாதிகளை பேர் இடும்படி வழக்கம் ஸ்ம்ருதி இதிஹாஸங்களில் காணலாம். ஆஸூரி முனி பாஞ்சராத்ர அநுஷ்டானம் அவலம்பித்து வந்தவர் என்றும் காணலாம். பாஞ்சராத்ரிகள் ஶிகை, யக்ஞோபவீதம், வைஷ்ணவாசரணம் உள்ளவர்கள். ஆகையால் ஆஸூரி வைஷ்ணவர். மேலும், ஆஸூரி, ஆஸூரி, ஆஶூரி போன்ற பல நிர்தேஶங்களும் உள்ளன.

ஆஸூரி வம்ஶத்திற்கு கோத்ரம் ஹாரீதம் (ஒரு பக்ஷி) இல்லை ஹரிதம் (என்றால் பச்சை). இரண்டையும் சேர்த்து பச்சைக்குருவி என்று சொல்லலாம். ஹாரீத கோத்ரத்துக்கு ப்ரவரர்கள் ஆங்கிரஸர், அம்பரீஷர், யௌவநாஶ்வர். ஆஸூரி ஹாரீத கோத்ரம் ஆபஸ்தம்ப ஸூத்ரம், க்ருஷ்ண யஜுர் வேதம். ஆங்கிரஸ் என்கிற ப்ரஜாபதி சதுர்முகனின் மாநஸ புத்ரர்களில் ஒருவர். ப்ருகு, ஆங்கிரஸ், மரீசி, அத்ரி இவர்கள் ஒரு கூட்டம்; சித்ரஶிகண்டி என்று பேர். இவர்கள் ப்ராச்யர்கள்.

அம்பரீஷன் க்ஷத்ரியன். யௌவநாஶ்வன் அவரின் குமாரர் மாந்தாதா. இவர் இக்ஷ்வாகு ஸூர்ய வம்ஶத்தில் பெரிய ராஜாவாய் பூமியை ஆண்டவர். ஹாரீத கோத்ரம் க்ஷத்ரியம் கலந்த ப்ராம்ஹண வம்ஶம். ஹாரீதர் பூதபுரியில் அநந்த தீர்த்தத்தில் காயத்ரீ யோகத்தால் ப்ராஹ்மண்யம் பெற்றார். இந்த விசாரத்தை பூதபுரி மாஹாத்மியத்தில் காணலாம். இந்த வம்ஶத்தில் ஆஸூரி கேஶவாசாரியர் இந்த பூதபுரிக்கு ராஜா, ''श्रीभूतपुरनायक:'' என்று கொண்டாடும்படியாய் ஸ்வாமி ராமாநுஜாசாரியர் இந்தக் குலத்தில் இவரின் குமாரராய் அவதரித்தார். 'आसूरि कुलेन्दु:'' என்ற விருது கருடவாஹந பண்டிதரின் திவ்யஸூரிசரித்திரத்தில் காணலாம். 'मन्नाथ:' என்று வடுகநம்பிகள் கூறினபடி

எம்பெருமானாருக்கு இஷ்ட தெய்வம் காஞ்சி தேவப்பெருமாள். இவர்தான் இவரின் நித்ய ஆராதனப் பெருமாள். எம்மான் என்றால் எம்பெருமான் என்றும், பெம்மான் என்றால் பெருமாள் என்றும் காஞ்சி தேவராஜனைக் குறிக்கும். எம்பெருமானாருக்கு அநுஜரின் பேர் ஆஸூரிப்பெருமாள் என்று ஸ்ரீராமாநுஜ திவ்ய சரிதத்தில் பிள்ளைலோகம் ஜீயர் விளக்கியுள்ளார். எம்பெருமானாருக்கு அவதரித்த யமளரின் பேர் எம்பெருமான் மற்றும் பெருமாள் என்று நிஶ்சயித்தார். இருவர் குமாரரில் ஆஸூரிப்பெருமாள் என்று இரண்டாவது குமாரர் பின்பு ராமாநுஜரை ஆஶ்ரயித்து மேலே எம்பெருமானாரால் 74 ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவராய் நியமிக்கப்பட்டு, கூரத்தாழ்வனிடம் அடிபணிந்து ஸகல ஶாஸ்த்ர ஸம்ப்ரதாயங்களையும் கற்றார் என்பது; இதே வம்ஶத்தில் மேலே அவதரித்த ஆஸூரி தேவராஜர் என்கிற ஆயி ஜநந்யாசார்யரின் ஆயி அந்தாதி-ஆயி ப்ரபத்தியில் மாமுநிகளாலும் அவரின் பேரன் ஜீயர் நாயனாராலும் அநுக்ரஹிக்கப் பட்டிருக்கிறதைக் காணலாம். அதில் முதல் இரண்டு ஶ்லோகத்தால் ஆஸூரிப்பெருமாள் வைபவத்தைக் கூறியுள்ளார்.

ஆஸூரியிலவதரித்த இராமாநுசர்க் கிருவர் தாமாய்
கூசாத நிலையொன்னில் தாய்வயிற்றில் பிறந்தவராய்
மாசாத கூரேசர் குருவருடன் சேர்த்துவைக்க
ஆஸூரிப் பெருமாள்தாம் ஒருவராம் இராமாநுசர்க்கே [1]

இராமாநுசர்க்கே ஶரணாம் எழுபத்து நால்வர் தன்னுள்
இராப்பகலென்னாதே தன்குருவைச் சிந்தித்தேத்தி
இராகமனைத்தையும் தொலைத்துவிட்டுப் பெருமாளென்னும்
இராகவனோடெம் பெருமாள் எதுகிரியைச் சென்றார்தாமே [2]

இவருக்கு ஆஸூரிப்பெருமாள், ஆஸூரிதேவர், புண்டரீகாக்ஷர் என்றும் திருநாமம் உண்டு. இவர் எம்பெருமானாரிடம் ஆக்ஞை பெற்று திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளினார். இவரின் பௌத்ரர் ஆஸூரி ஸ்ரீநிவாஸாசாரியர், இவரின் பௌத்ரர் ஆஸூரி லக்ஷ்மணாசாரியர். இவரின் குமாரர்தான் ஆஸூரி தேவராஜர் என்னும் மேலே திருநாரணன் இவரை ஆயி-ஜனனி என்று அபிமாநித்து, இவருக்கு ஆயி ஜநந்யாசாரியர் என்று பேர் ஆயிற்று. இவர் அருளிச்செய்த பல ப்ரபந்தங்கள் மற்றும் வ்யாக்யானங்களில் ஒன்று த்ராவிட ப்ரஹ்மசூத்ரம் என்கிற ஆசார்ய ஹ்ருதயத்துக்கு முதல் வ்யாக்யானம். மேற்கொண்டு, இவர் ஆசார்ய ஹ்ருதயத்தின் ஸகல அர்த்தத்தையும் ஸ்வாமி மணவாளமாமுனிகளுக்கு ஸாதித்தார் என்று பிள்ளைலோகம் ஜீயரின் யதீந்த்ரப்ரவண ப்ராபவத்தில் காணலாம். எம்பெருமானாரின் புநராவதாரமான ஸ்வாமி மணவாள மாமுனிகளுக்கு ஆசார்யர் என்கிற விருதை அங்கீகரிக்காமல் அவரை குருவாக அடைய அவரிடம் ஸந்யாஸ தீக்ஷை பெற்று அவரை ஸந்யாஸதீக்ஷா குருவாய் அடைந்தார். மாமுனிகளின் பௌத்ரர் ஜீயர் நாயனார் இவர் பிள்ளைலோகாசார்யருக்கும் மணவாளமாமுனிகளுக்கும் மற்றும் ஆயி ஸ்வாமிக்கும் ஒரே நடையில் ப்ரபத்தி மங்களம் அருளிச்செய்திருக்கிறார்.

அதில் முதல் பத்யம் - श्रीमान् श्रीसानुदासार्यः श्रीशकिङ्करकेसरी ।वेदान्तद्वयसारज्ञः सन्निधत्तां सदा हृदि॥ என்று ஆயிஸ்வாமி விஷயமாக அருளிச்செய்கிறார்.

ஆயி ஸ்வாமி ஸாதித்த இந்த ஆசார்யஹ்ருதயத்தின் வ்யாக்யானம் முதல் இரண்டு ப்ரகரணம் ஏற்கெனவே தெலுங்கு லிபியில் மற்றும் தமிழ் லிபியில் அச்சிடப்பட்டுள்ளன. ஆயி ஸ்வாமியின் 675-வது திருநக்ஷத்திர மஹோத்ஸவத்தின் அங்கமாக இன்று மேல் 3,4 ப்ரகரணத்தின் வ்யாக்யானத்தை வெளியிடுகிறோம். இது பல காலங்கள் ஓலைச்சுவடியில் அடியேனுடைய ஆசார்யர் திருமாளிகையில் திருவாராதனத்தில் இருந்து இன்று அது ப்ரசுரிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஓலைச்சுவடியின் ப்ரதியை அநுசரித்து மேலே ஓரியண்டல் லைப்ரரி சென்னையில் உள்ள மற்றொரு ப்ரதியை அநுசரித்து ஸ்ரீ உ.வே. வித்வான் M.A.வேங்கடக்ருஷ்ணன் ஸ்வாமிகளால் பரிசோதிக்கப்பெற்று இன்று இந்த க்ரந்தம் வெளியிடப்படுகிறது. ஸ்வாமியின் இந்த மஹத்தான கைங்கர்யத்துக்கு அடியேன் க்ருதஜ்ஞதையை தெரிவித்துக்கொண்டு நல்ல பதத்தால் மனை வாழ்ந்து ஸ்ரீவைஷ்ணவர்களுடைய கடாக்ஷத்துக்கு பாத்திரராகி இம்மாதிரி பல மஹத்கார்யங்கள் செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டுகள் பரந்த புகழுடன் பொலிந்து நிற்க திருநாரணன் திருவடிகளில் இறைஞ்சுகிறேன்.

कौतस्कुतुकसिंहाय कल्याणगुणशालिने ।
श्रीमते देवराजार्य-मुनीन्द्र-गुरवे नमः ॥
श्रीमते सौम्यजामातृमुनीन्द्राय महात्मने ।
श्रीरङ्गवासिने भूयात् नित्यश्रीर्नित्यमङ्गळम् ॥

॥ ஆழ்வார் திருவடிகளே ஶரணம் ॥ எம்பெருமானார் திருவடிகளே ஶரணம் ॥
ஆயி திருவடிகளே ஶரணம் ॥ ஜீயர் திருவடிகளே ஶரணம் ॥

आसूरि आयी नृसिम्ह श्रीसानुदासः

விகாரி ஐப்பசி பூராடம், 2019

அழகியமணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருத$_3$யம்

ஆய் (என்கிற) ஜநந்யாசார்யர் அருளிச்செய்த வ்யாக்$_2$யானம்

மூன்றாம் ப்ரகரணம்

150. சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாந கர்மங்களைச் சிறகென்று கு$_3$ரு ஸப்$_3$ரஹ்மசாரி புத்ர ஶிஷ்ய ஸ்த$_2$ாநே பேசும்.

இனிமேல் இவர் தூதுவிடுகிற பக்ஷி முதலானவை எவை என்னில், (சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி) ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் க$_4$டகரைப் பக்ஷிகளாக்கி, (ஜ்ஞாநகர்மங்களைச் சிறகென்று) "உபாப்$_4$யாமேவ பக்ஷாப்$_4$யாமாகாஶே பக்ஷிணாங்க$_3$தி: ததை$_3$வ ஜ்ஞாநகர்மப்$_4$யாம் ப்ராப்யதே புருஷோத்தம:" என்கிறபடியே ஜ்ஞாநகர்மங்களைச் சிறகாக உடையரான கு$_3$ரு ஸப்$_3$ரஹ்மசாரி ஶிஷ்யபுத்ரஸ்த$_2$ாநீயராயுள்ளாரைப் பக்ஷி முதலானவையாகப் பேசக் கடவது.

151. விவேகமுக$_2$ராய் நூலுரைத்து அள்ளலில் ரதியின்றி அணங்கின் நடையைப் பின்சென்று குடை நீழலிலே கவரியசையச் சங்கமவை முரல வரிவண்டிசை பாட மாநஸ பத்$_3$மாஸநத்திலேயிருந்து விதியினால் இடரில் அந்தரமின்றி இன்பம் படக் குடிச்சீர்மையிலேயாதல் பற்றற்ற பரமஹம்ஸராதலான நயாசலன் மெய்ந்நாவன் நாத$_2$யாமுநர் போல்வாரை அன்னமென்னும்.

கு$_3$ணஸாம்யத்தாலே ஆசார்யஸ்தா$_2$நீயராயுள்ளாரை அன்னமென்கிறதென்கிறார், விவேகமுக$_2$ராய் என்று தொடங்கி. (விவேகமுக$_2$ராய்) அன்னமாவது நீரக்ஷீர விபாகம் பண்ணுமதொன்றாகையாலே ஸாராஸாரவிவேகோந்முக$_2$ராய். (நூலுரைத்து) "அன்னமதாயன்றங்கறநூலுரைத்த" (பெரியதிருமொழி 11-4-8) என்று ஹம்ஸரூபியாய்க் கொண்டு ஶாஸ்த்ரப்ரதா$_3$நம் பண்ணினாப்போலே இவர்களும் ஶ்ரோதாக்களைக் குறித்து ஶாஸ்த்ரங்களையுபதே$_3$ஶித்து. (அள்ளலில் ரதியின்றி) "ராகா$_3$தி$_3$தூ$_3$ஷிதே சித்தே நாஸ்பதீ$_3$ மது$_4$ஸூத$_3$ந: நபத்$_4$நாதி ரதிம் ஹம்ஸ: கதா$_3$சித் கர்த்த$_3$மாம்பு$_3$ஸி" (விஷ்ணுதர்மம் 9.11) என்று அந்த அன்னமானது கர்தமஜலத்திற் பொருந்தாதாப் போலே "அழுந்தார் வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே" (திருவிருத்தம் 100) என்று ஸம்ஸாரகர்த$_3$மத்திலே பொருத்தமுடையரன்றிக்கே. (அணங்கின் நடையைப் பின்சென்று) "அன்னநடைய வணங்கே" (பெரிய திருமடல் 7) என்றும், "அன்னம் பெய்வளையார்தம் பின் சென்று" (பெரியதிருமொழி 6-5-5) என்றும் சொல்லுகையாலே அநந்யார்ஹ ஶேஷத்வாதி$_3$களாலும், புருஷகாரப$_4$ாவத்தாலும் ஹம்ஸக$_3$தியான பெரிய பிராட்டியாரைப் பின்சென்று.

(குடைநீழலிலே கவரியசைய) "அன்னமென் கமலத்தணிமலர்ப்பீடத்து அலைபுனலிலைக்குடை நீழல் செந்நெலொண்கவரி அசைய வீற்றிருக்கும்" (பெரிய திருமொழி 9-1-5) என்றும், "சங்கமவை முரலச் செங்கமல மலரை யேறி" (பெரிய திருமொழி 7-8-2) என்றும், "வரிவண்டிசைபாட அன்னம் பெடையோடுடனாடும்" (பெரிய திருமொழி 7-5-9) என்றும் மாநஸ பத்$_3$மாஸநத்திலேயிருந்து அன்னமானது மேலே எழுந்த தாமரையிலை குடையாகவும், பக்வப$_2$லமான செந்நெல்லினுடைய அசைவுகள் கவரியாகவும் சங்குகளினுடைய த்$_4$வநி தூர்யகே$_4$ாஷமாகவும் வண்டுகளுடைய மிடற்றோசை பாட்டாகவும் மாநஸ ஸரஸ்ஸில் பத்$_3$மம் ஆஸநமாகவும் அன்னம் இருக்குமாபோலே "அக்கமலத்திலை போலும் திருமேனி" (திருவாய்மொழி 9-7-3) என்று பத்$_3$மபத்ரநிப$_4$ஶ்யாமமான திருமேனியைத் தங்களுக்கு ஒதுங்க நிழலாக உடையராய் பரிபூர்ணஜ்ஞாநர் அநுகூலவ்ருத்திகளைப் பண்ண ஶுத்$_3$த$_4$ஸ்வபா$_4$வர் ஸ்தோத்ரம் பண்ண ஸாரக்$_3$ராஹிகள் ஸாமகா$_3$நம் பண்ண, "போதிற் கமல வன்னெஞ்சு" (பெரியாழ்-திரு- 5-2-8) என்கிறபடியே ஶிஷ்யர்களுடைய மாநஸபத்$_3$மத்தை வாஸஸ்த$_2$ாநமாக உடையராய் (விதியினால் இடரில் இத்யாதி குடிச்சீர்மையிலே யாதல்) "விதியினால் பெடைமணக்கும்" (திருவாய்மொழி 1-4-3) என்றும், "இடரில் போகம் மூழ்கி இணைந்தாடும் மடவன்னங்காள்" (திருவாய்மொழி 6-1-4) என்றும், "அந்தரமொன்றுமின்றி அலர்மேலசையும்" (திருவாய்மொழி 6-8-10) என்றும் "மிகவின்பம் படமேவும் மென்னடைய அன்னங்காள்" (திருவாய்மொழி 9-7-10) என்றும் சொல்லுகிறபடியே வித்$_3$யுக்தப்ரகாரத்திலே ஸாம்ஸாரிகஸகல து$_3$:க்க$_2$ங்களும் தட்டாதபடியாகவும் ஒரு விச்சே$_2$தமும் வாராதபடியாகவும் மேல்மேலென ஆநந்த$_3$மபி$_4$வ்ருத்தமாம்படியாகவும், "குடிச்சீர்மையிலன்னங்கள்" (திருவிருத்தம் 29) என்கிறபடியே புத்ரதா$_3$ராதி$_3$களோடேயிருந்து ப$_4$க$_3$வத$_3$நுபவம் பண்ணுகிற "நளிர்ந்தசீலன் நயாசலன்" (பெரியாழ்.திரு. 4-4-8) என்று சொல்லுகிற செல்வநம்பி, "மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்" (பெரியாழ்.திரு. 4-9-11) என்கிற பெரியாழ்வார் போல்வாரையும், (பற்றற்ற பரமஹம்ஸரான) "பற்றற்றார் பயிலரங்கம்" (பெருமாள் திருமொழி 1-4) என்று ஸாம்ஸாரிக ஸகல ஸங்க$_3$த்தையும் விட்டு உத்தமாஶ்ரமிகளாய் பரமஹம்ஸராயிருக்கிற நாத$_3$முனிகள் யாமுநமுனிகள் போல்வாரை அன்னம் என்கிறது என்கிறார்.

152. என்பெறுதியென்ன ப்$_4$ரமியாது உள்ளத்துளூறிய மது$_4$வ்ரதமாய் தூமதுவாய்கள் கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்$_3$ரஹித்துத் தேதெனவென்று ஆளம்வைத்துச் சிறுகாலெல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக் கொள்ளப் பாடித் துன்னிட்டு நெருக்க நீக்கென்று கடந்து புகும் தகைவறப் புக்கு வண்டொத்திருண்ட குழலிலே ஶங்கையற மருவி அருளாத யாமென்றோடி வந்து வாசமேயூதி வண்டே கரியான தெய்வவண்டோடே சேர்விக்கும் சேமமுடை நாரதன் முனிவாஹனர் தம்பிரான்மார் போல்வாரை வண்டு தும்பியென்னும்.

(என்பெறுதியென்னப்3ரமியாது) "ஏரார் மலரெல்லாமூதி நீ என்பெறுதி" (பெரிய திருமொழி 8-4-5) என்று நிவர்த்திப்பிக்க வேண்டாதபடி அப்ராப்த போ4க்3யங்களிலே ப்ரவணரன்றிக்கே, (உள்ளத்துளூறிய மது4வ்ரதமாய்) "உளங்கனிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேனை" (பெரிய திருமொழி 4-3-9) என்று ப4க3வத்3விஷயத்திலே பக்வமான ஸ்நேஹத்தை உடையராயிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திருவுள்ளத்திலே ஊறியிருப்பதாய் "ஸா ஹி ஶரீரம்ருதா ஸதாம்" என்று நிரதிஶயபோ4க்3யமான ப4க3வத்3 கு3ணமாகிற மதுவை "தவாம்ருதஸ்யந்தி3நி" என்று தொடங்கி "மது4வ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே" (ஸ்தோத்ரரத்நம் 27) என்கிறபடியே பு4ஜிக்கையே வ்ரதமாக உடைத்தாய். (தூமது வாய்கள் கொண்டு) "தண்டுளவமுண்ட தூமது வாய்கள் கொண்டு" (திருவாய்மொழி 6-8-3) என்று ப4க3வத்3 போ4க்3யதையை அநுப4விக்கையாலே பரிஶுத்3த4மாய் இனிதான வாயைக் கொண்டு. (குழல் வாய் வகுளத்தின் ஸாரம் க்3ரஹித்து) "ஓடிவந்தென் குழல் மேல் ஒளிமாமலர் ஊதீரோ" (திருவாய்மொழி 6-8-3) என்றும், "வைகுந்தமன்னாள் குழல்வாய் விரைபோல் விண்டு கள்வாரும் மலருளவோ நும் வியலிடத்தே" (திருவிருத்தம் 55) என்றும், "மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகு" (பெரிய திருமொழி 6-6-1) என்றும், "நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன்" (திருவாய்மொழி 4-10-11) என்றும் பரத்வாதி3களிலே போ4க்3யதையையும் பரிச்சி2ந்நமென்னும்படியாய் ப4க3வத3நுப4வஜநித ப்ரீதியாலே விஸ்த்ருதமாயிருக்கிற ஆழ்வாருடைய போ4க்3யதையை பு4ஜித்து. (தேதெனவென்று ஆளம் வைத்து) "வரிவண்டு தேதெனவென்று இசைபாடும்" (பெரிய திருமொழி 4-1-1) என்றும், "யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் அரங்கம்" (பெரியாழ்.திரு. 4-8-6) என்றும் இப்படி ப4க3வத்3பா3க3வத கு3ணங்களை யநுப4வித்துண்டான செருக்குக்குப் போக்குவீடாக ஆளத்தி வைத்து, (சிறுகாலெல்லியம்போது குறிஞ்சி மருள் காமரம் கந்தாரம் தலைக்கொள்ளப் பாடி) "அறுகால் வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லி சிறுகாலைப் பாடும்", (பெரியாழ்.திரு. 4-2-8) "எல்லியம்போது இருஞ்சிறைவண்டு எம்பெருமான் குணம் பாடும்" (பெரியாழ்- திரு- 4-8-8) "வண்டு குறிஞ்சி மருளிசைபாடும்" (பெரிய திருமொழி 2-1-2), "வண்டினங்கள் காமரங்களிசைபாடும்" (பெருமாள் திருமொழி 8-4), "கந்தாரமந்தேனிசைபாட" (பெரிய திருமொழி 3-8-1), "பண்கொள் தலைக் கொள்ளப் பாடி" (திருவாய்மொழி 3-5-2) என்று காலோசிதமான பண்களிலே பண்கள் தலைமேற் பொரும்படி பாடி, (துன்னிட்டு நெருக்கி நீக்கென்று) "துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்" (பெருமாள் திருமொழி 4-3), "சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க" (திருப்பள்ளியெழுச்சி 7) என்கிறபடி திருவாசல்களிலே "நேச நிலைக்கதவம் நீக்கு" (திருப்பாவை 16) என்று "பொன்னியலுமாடக் கவாடம் கடந்து புக்கு" (பெரியதிருமடல் 73) என்கிறபடியே தகைவறப் புக்கு (வண்டொத்திருண்ட குழலிலே ஶங்கையற மருவி) "நீமருவி அஞ்சாதே நின்று" (திருநெடுந்தாண்டகம் 26) என்று பாடுமவர்களாகையாலே ஶங்கையற ப4க3வத் ஸமீப வர்த்தியாய் மருவி (அருளாதயாமென்று ஓடிவந்து வாசமேயூதி) "அருளாத நீரருளி" (திருவாய்மொழி

1-4-6) என்றும், "யாமிதுவோ தக்கவாறு" (திருவாய்மொழி 6-8-4) என்றும், "ஓடிவந்தென் குழல்மேல்" (திருவாய்மொழி 6-8-3) என்றும், "துளவின்வாசமே வண்டுகொண்டு வந்தூதுமாகில்" (பெரிய திருமொழி 11-1-9) என்றும் இத்தலையிலார்த்தியை அவனுக்கறிவித்து அவனுடைய விஷயீகாரத்தை இத்தலைக்குண்டாக்கி இத்தலையில் ஸௌமநஸ்யத்தைத் தாங்களநுப₄வித்து அத்தலையில் போ₄க்₃யதையாலே இத்தலையை ஆஶ்வஸிப்பித்து (வண்டே கரியான தெய்வ வண்டோடே சேர்விக்கும்) "கொங்குண்வண்டே கரியாக" (பெரிய திருமொழி 9-3-4) என்று ஶாகா₂க்₃ர ஸாராஸாரக்₃ராஹியாய் ஷட்பத₃நிஷ்ட₂ராய் பக்ஷத்₃வயத்தை உடைத்தாகையாலே அப்ரதிஹதக₃தியான மது₄கரத்தை முன்னிட்டு அங்கீ₃கரிப்பானுமாய் "தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு" (திருவாய்மொழி 9-9-4) என்று வேதா₃ந்தவேத்₃யனாய் "தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வர:" என்கிற ஸாரக்₃ராஹியாயிருக்கிற ஈஶ்வரனோடே சேர்க்கிற "சேமமுடை நாரதனார்" (பெரியாழ்.திரு. 4-9-5) என்று ப₄க₃வத் கு₃ணாநுபவஜநித ஹர்ஷத்தாலே ந்ருத்தகீ₃தபரனாயிருக்கிற ஸ்ரீநாரத₃ப்₃ரஹ்மருஷி, முநிவாஹநரென்கிற திருப்பாணாழ்வார், திருவாய்மொழி பாடுகையே தங்களுக்கு போ₄க்₃யமாயிருக்கிற தம்பிரான்மார் போல்வாரை வண்டு தும்பி என்னும் என்கிறார். இவர்களை ஸப்₃ரஹ்மசாரிகளென்கிறது அநுபா₄வ்யவிஷயத்தில் ஐக்யத்தினாலே.

153. கண்வலைப்படாதே அகவலைப்பட்டு வளர்த்தெடுப்பார் கையிருந்து தயிர் நெய்யமர் பாலமுதுண்டு ஒருமிடறாய்ப் போற்றி ஒரு வண்ணம் திருந்த நுவலாததுக்கு என்பிழைக்கும் நீயலையே நல்வளம் துரப்பனென்னு மவற்றுக்கும் உகந்து சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே கற்பியாவைத்த மாற்றம் கைகூப்பி வணங்கப்பாடி ஆலியா அழையா பராபி₄மாநத்திலே ஒதுங்கின நம்பிக்கன்பர் தலைமீதடிப்பொடி உடையவருடையார் போல்வாரைக் கிளி பூவை குயில் மயிலென்னும்.

(கண்வலைப்படாதே அகவலைப்பட்டு) "மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டு" (திருமாலை 16) என்று இதரவிஷயங்களினுடைய த்₃ருஷ்டியாகிற வலையிலே அகப்பட்டு அநர்த்த₂ப்படாதே "தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப் படுப்பான்" (திருவாய்மொழி 6-2-9) என்றும் "யம் பஶ்யேத்" என்றும் "ப்ரேக்ஷயே கஞ்சித் கதா₃சந" என்றும் "அமலங்களாக விழிக்கும்"(திருவாய்மொழி 1-9-8) என்றும் சொல்லுகிறபடியே ஸகலபாபக்ஷபண நிபுணங்களாய் ஸம்ஸாரதாபமெல்லாம் ஆறும்படி செவ்வி குளிர்த்தி நாற்றங்களாலே தாமரைப் பூப்போலேயிருக்கிற ப₄க₃வத்கடாக்ஷமென்கிற வலையிலே அகப்பட்டு. *(வளர்த்தெடுப்பார் கையிருந்து)* "வளர்த்ததனால் பயன் பெற்றேன்" (திருநெடுந்தாண்டகம் 14) என்றும் "எடுத்தவென் கோலக் கிளி" (நாச்சியார் திருமொழி 5-5) என்றும், "மங்கைமார்முன்பென்கையிருந்து" (திருவாய்மொழி 6-8-2) என்றும் உபலாலித்து ரக்ஷிக்கிறவர்களுடைய கைவஶமாய் *(தயிர் நெய்யமர்*

பாலமுதுண்டு) "தயிர்ப்பழம் சோற்றொடு பாலடிசிலும் தந்து" (திருவாய்மொழி 9-5-8) என்றும் "நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடும்" (திருவாய்மொழி 6-8-2) என்றும், "இன்னடிசிலொடு பாலமுதூட்டி" (நாச்சியார் திருமொழி 5-5) என்றும் சொல்லுகிறபடியே அவர்கள் காலோசிதமாகவும், பாகாநுகு$_3$ணமாகவும் "உபதே$_3$க்ஷ்யந்தி தே ஜ்ஞாநம்" (கீ$_3$தை 4-34) என்கிறபடியே ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணங்களை ஆசார்யர்கள் அநுப$_4$விப்பிக்க அநுப$_4$வித்து (ஒருமிடறாய்) ஆசார்யர்களோடு ஏககண்ட$_2$ராய், (போற்றி ஒருவண்ணமித்யாதி) "போற்றியானிரந்தேன் புன்னைமேலுறை பூங்குயில்காள்" (திருவாய்மொழி 6-1-6) என்றும், "ஒருவண்ணம் சென்று புக்கு எனக்கொன்றுரை ஒண்கிளியே" (திருவாய்மொழி 6-1-7) என்றும், "திருந்தக் கண்டெனக்கொன்றுரையாய் ஒண்சிறு பூவாய்" (திருவாய்மொழி 6-1-8) என்றும் ஆத$_3$ரித்துக்கொண்டு போந்த த$_3$ஶையோடு, "நோயெனது நுவல் என்ன நுவலாதே இருந்தொழிந்தாய்" (திருவாய்மொழி 1-4-8) என்றும், "என் பிழைக்கும் இளங்கிளியே யான் வளர்த்த நீயலையே" (திருவாய்மொழி 1-4-7) என்றும் இன்னாதான த$_3$ஶையோடு, "சொல் பயிற்றிய நல்வளமூட்டினீர் பண்புடையீர்" (திருவாய்மொழி 9-5-8) என்றும், "நாராயணனை வரக்கூவாயேல் இங்குற்று நின்றும் துரப்பன்" (நாச்சியார் திருமொழி 5-10) என்றும் அநாத$_3$ரித்து த$_3$ஶையோடு வாசியற வகுத்த விஷயத்தில் நிக்$_3$ரஹாநுக்$_3$ரஹங்களிரண்டும் அங்குத்தை விநியோகப்ரகார மாகையாலே இவற்றுக்கும் உகந்து, (சொல்லெடுத்துச் சோர்ந்தவாறே) "சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லே யென்று துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே" (திருநெடுந்தாண்டம் 13) என்று திருநாமத்தைச் சொல்ல உபதே$_3$ஶித்து ப$_3$லஹாநியாலே ஒரு சொல் சொல்லும்போது மலையெடுக்குமா போலேயாய் அதுவும் மாட்டாதே பரவஶகா$_3$த்ரையானவாறே (கற்பியாவைத்த மாற்றங் கைகூப்பி வணங்கப்பாடி) "கன்மின்கள் என்று உம்மை யான் கற்பியா வைத்த மாற்றம்" (திருவாய்மொழி 6-8-8) என்று ஆசார்யருசி பரிக்$_3$ருஹீதமான திருநாமங்களை, "திருமாலைப் பாடக் கேட்டு வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" (திருநெடுந்தாண்டகம் 14) என்று அவ்வாசார்யர் தாமே அநுஸந்தி$_4$க்கும்படி ப்ரீதிப்ரேரிதராய்ப் பாடி. (ஆலியாவழையா) "குயில் நின்றால்" (கண்ணிநுண்சிறுத்தாம்பு 10) என்றும் "ஆலியாவழையாவரங்கா" (பெருமாள் திருமொழி 3-2) என்றும் சொல்லுகிறபடியே அவ்வநுபவத்தாலே வந்த ஹர்ஷத்தை உடையராய், (பராபி$_4$மானத்திலே ஒதுங்கி) "தேவு மற்றறியேன்" (கண்ணிநுண்- 2) என்று ஆசார்யாபி$_4$மானத்திலே ஒதுங்கின (நம்பிக்கன்பர்) "தென்குருகூர் நம்பிக்கன்ப"ரான (கண்ணிநுண்- 11) ஸ்ரீமதுரகவிகள். (தலைமீதடிப்பொடி) "நாவலிட்டுழிதருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே" (திருமாலை 1) என்று திருநாமத்தை அண்டைகொண்ட பலத்தாலே யமாதி$_4$கள் தலையிலே அடியிடும்படியான செருக்கை உடையராய், "அடியார்க்கென்னை ஆட்படுத்தாய்" (அமலனாதிபிரான் 1) என்கிற ஸ்ரீதொண்டரடிப்பொடிகள். (உடையவருடையார் போல்வாரை) இராமானுசனுடையார் என்று சொல்லப்படுகிற ஆழ்வான் ஆண்டான் எம்பார் அருளாளப் பெருமாள்

எம்பெருமானார் போல்வாரான ஆசார்யபரதந்த்ரராயிருப்பாரை (கிளி பூவை குயில் மயில் என்னும்) என்கிறார்.

154. ஆசறுதூவியென்னும் ப$_3$ாஹ்யாப்$_4$யந்தர ஶுத்$_3$தி$_4$யோடே திரையுகளும் வ்யஸநவ்யதை$_4$யற்றுத் தாய்வாயிலுண்ணும் பிள்ளைக்கிரை தேடி வைகலுடன் மேய்ந்து நுங்கால் பைங்கானமென்று ப்$_3$ரஹ்மரத$_2$ம் பண்ணிக் கொடுத்தவைகொண்டு நல்லபதத்தையும் வேண்டேனென்னும் தனிப்பெரும் பித்தர் நம்முதலிகள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும்.

(ஆசறுதூவியென்னும் பாஹ்யாப்யந்தரஶுத்தியோடே) "ஆசறுதூவி வெள்ளைக் குருகே" (திருவாய்மொழி 6-8-8) என்று ஆசறுகை அந்த:கரண ஶுத்$_3$தி$_4$யாய், "வெள்ளைக் குருகே" (திருவாய்மொழி 6-8-8) என்று பாஹ்ய ஶுத்$_3$தி$_4$யாய், "(அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸ்தா$_2$ம் க$_3$தோபி வா) ய: ஸ்மரேத் புண்ட$_3$ரீகாக்ஷம் ஸ பா$_4$ஹ்யாப்$_4$யந்தரஶ்ஶுசி:" என்கிற பா$_4$ஹ்யாந்தர ஶுத்$_3$தி$_4$யை உடையராய், (திரையுகளும் வ்யஸநவ்யதையற்று) "வாயும் திரையுகளும்" (திருவாய்மொழி 2-1-1) என்று "கிரயோ வர்ஷதாராபி$_4$: ஹந்யமாநா ந விவ்யது: அபி$_4$பூ$_4$யமாநா வ்யஸநைர் யதா$_2$தோ$_4$க்ஷஜ சேதஸ:" (ஸ்ரீபாகவதம் 10-20-15) என்று ப$_4$க$_3$வத்$_3$விஷயத்திலே நெஞ்சு ஊன்றுகையாலே ஸம்ஸார து$_3$:க்கோ$_2$ர்மிகளானவை அஹமஹமிகயா மேலிடா நின்றாலும், ச$_2$லியாதே. (தாய்வாயிலுண்ணும் பிள்ளைக்கிரைதேடி) "தாய்வாயில் கொக்கின் பிள்ளை வெள்ளிறவுண்ணும்" (பெரியதிருமொழி 9-6-1) என்றும், "புள்ளுப்பிள்ளைக்கிரை தேடும்" (பெரியதிருமொழி 5-1-2) என்றும், கொக்கானது தன் பிள்ளைக்கநுகு$_3$ணமாக இரைதேடியிடுமாபோலே முறைகெடாமல் அநுப$_4$விக்கவிருக்கிற ஶிஷ்யர்களுடைய ப்ரக்ருதிக்கநுகு$_3$ணமான ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தை ஸகலஶாஸ்த்ரங்களிலும் ஆராய்ந்து அருளிச்செய்து. (வைகலுடன் மேய்ந்து) "வைகல்பூங்கழிவாய் வந்து மேயும் குருகினங்காள்" (திருவாய்மொழி 6-1-1) என்றும் "காதல் மென்பெடையோடு உடன்மேயும் கருநாராய்" (திருவாய்மொழி 6-1-2) என்றும் சொல்லுகிறபடியே ஸர்வகாலமும் அநுகூலரான ஶிஷ்யபுத்ரர்களோடே ப$_4$க$_3$வத் கு$_3$ணங்களை அநுப$_4$வித்து, (நுங்கால்கள் பைங்கானம் என்று ப்$_3$ரஹ்மரத$_2$ம் பண்ணிக் கொடுத்தவை கொண்டு) "நுங்கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" (திருவாய்மொழி 9-7-1) என்றும், "பைங்கானம் ஈதெல்லாம் உனதேயாகப் பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன்" (திருநெடுந்தாண்டகம் 27) என்றும் இவர்கள் பக்கல் உபஜீவித்த ஶிஷ்யர்கள் உபகாரஸ்ம்ருதியாலே ப்$_3$ரஹ்மரத$_2$ம் பண்ணி "ஶரீரமர்த்த$_2$ம் ப்ராணஞ்ச ஸத்கு$_3$ருப்$_4$யோ நிவேத$_3$யேத்" (விஹகேச்வரஸம்ஹிதை) என்று ஆத்மாத்மீயங்களை முகமலர்த்தியோடே கொடுக்கக் கைக்கொண்டு. (நல்ல பதத்தையும் வேண்டேன் என்னும் தனிப்பெரும் பித்தர்) "நல்ல பதத்தால் மனை வாழ்வர்" (திருவாய்மொழி 8-10-11) என்று பா$_4$க$_3$வத கைங்கர்யத்துக்கு உறுப்பான கா$_3$ர்ஹஸ்த்யத்தையும் ஸம்ஸார வெக்காயத்தாலுண்டான அச்சத்தாலே "இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" (பெருமாள் திருமொழி 4-5)

என்று உபேக்ஷிக்குமவருமாய், "அங்கையாழி அரங்கன் அடியிணைத் தனிப்பெரும் பித்தன்" (பெருமாள்மொழி 4-5) என்று சொல்லப்படுகிற ஸ்ரீகுலஶேகரப்பெருமாள் (நம் முதலிகள் போல்வாரை) நம் முதலிகள் என்கிறது. ப$_4$ட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, திருத்தமப்பனார் பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, திருத்தமையனார் பிள்ளை இவர்கள் போல்வாரை நாரை கொக்கு குருகென்னும் என்கிறார்.

155. பூண்டநாள் சீர்க் கடலையுட்கொண்டு, திருமேனி நன்னிறமொத்து, உயிரளிப்பான் தீர்த்தகரராய் எங்கும் திரிந்து, ஜ்ஞாநஹ்ரத$_3$த்தைப் பூரித்துத் தீங்கின்றி வாழ நிதி சொரிந்து, கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து, வெளுத்தொளித்துக் கண்டுகந்து, பரஸம்ருத்$_3$தி$_4$யே பேறான அன்புகூரும் அடியவர், உறையிலிடாதவர், புயற்கை அருள்மாரி, குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்.

(பூண்டநாள் சீர்க்கடலை உட்கொண்டு) "மற்பொன்ற நீண்டதோள் மால் கிடந்த நீள்கடல் நீராடுவான் பூண்டநாளெல்லாம் புகும்" (முதல் திருவந்தாதி 69) என்றும், "சீர்க்கடலை யுள்பொதிந்த சிந்தனையேன்" (பெரியதிருவந்தாதி 69) என்றும் ப$_4$க$_3$வத்$_3$விஷயத்திலே அவகா$_3$ஹித்தவன்று தொடங்கி, கல்யாணகு$_3$ண ஸாகரத்தைப் பருகி *(திருமேனி நன்னிறமொத்து)* "மேகங்களோ உரையீர் திருமால் திருமேனியொக்கும் யோகங்கள்" (திருவிருத்தம் 32) என்றும், "என்னுடைய கண்ணன்பால் நன்னிறங்கொள் கார்" (பெரிய திருவந்தாதி 85) என்றும் சொல்லுகிற படியே ஸ்வரூபகு$_3$ணத்தாலும் ரூபகு$_3$ணத்தாலும் அவனோடு ஸாம்யாபத்தியை உடையராய், *(உயிரளிப்பான் தீர்த்தகரராய்)* "உயிரளிப்பான் மாகங்கள் எல்லாம் திரிந்து" (திருவிருத்தம் 32) என்றும் "தீர்த்தகரராமின் திரிந்து" (இரண்டாம் திருவந்தாதி 14) என்றும் "தீதில் நன்னெறிகாட்டி எங்கும் திரிந்து" (பெருமாள் திருமொழி 2-6) என்றும் சொல்லுகிறபடியே லோகரக்ஷணார்த்த$_2$மாக எங்கும் ஸஞ்சரித்து, ப$_4$க$_3$வத் கு$_3$ணங்களை வர்ஷித்து, எல்லாரையும் பரிஶுத்$_3$த$_4$ராக்கி, *(ஜ்ஞாநஹ்ரத$_3$த்தைப் பூரித்து)* "ஜ்ஞாநஹ்ரதே$_3$ த்$_4$யாநஜலே ராக$_3$த்$_3$வேஷமலாபஹே, ய: ஸ்நாதி மாநஸே தீர்த்தே$_2$ ஸ யாதி பரமாம் க$_2$திம்" என்கிறபடியே ஜ்ஞாநமாகிற தடாகத்தை ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணங்களாலே பூரித்து *(தீங்கின்றி வாழ நிதி சொரிந்து)* "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து" (திருப்பாவை 3) என்றும், "வாழ உலகினில் பெய்திடாய்" (திருப்பாவை 4) என்றும், "மாமுத்த நிதி சொரியும்" (நாச்சியார் திருமொழி 8-2) என்றும் அநர்த்த$_2$க$_3$ந்த$_4$மின்றியே எல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி ப$_4$க$_3$வத்$_3$கு$_3$ணங்களை வர்ஷித்து, *(கொடுத்தது நினையாதே லஜ்ஜித்து வெளுத்தொளித்துக் கண்டுகந்து பரஸம்ருத்$_3$தி$_4$யே பேறான)* ஔதா$_3$ர்யாதிஶயத்தாலே பிறருக்குபகரித்து அத்தை நினையாதே 'மேலும் உபகரிக்கப் பெற்றிலோம்' என்று இழவாளராய் எதிர்த்தலையில் ஸம்ருத்$_3$தி$_4$யைக் கண்டுகந்து அதுவே தங்களுக்குப் பேறாக நினைத்திருக்கிற *(அன்புகூரும் அடியவர்)* "ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந்து அன்பு கூரும்" (பெரிய திருமொழி 2-10-4)

அடியவர்களான முதலாழ்வார்கள் (உறையிலிடாதவர்) உருவினவாள் உறையிலிடாதே ஆதி$_3$மத்$_4$யாவஸாநம் தே$_3$வதாந்தரங்களினுடைய அவரத்வ ப்ரதிபாத$_3$ந பூர்வமாக ப$_4$க$_3$வத்பரத்வத்தை உபபாதி$_4$க்கிற திருமழிசைப்பிரான் (புயற்கை அருள்மாரி) "காரார் புயற்கைக் கலிகன்றி" (பெரிய திருமொழி 3-2-10) என்றும், "அருள்மாரி" (பெரிய திருமொழி 3-4-10) என்றும் ஔதா$_3$ர்யத்திலே மேக$_4$ஸத்$_3$ருஶராய்க் கொண்டு க்ருபையை வர்ஷிக்கிற திருமங்கையாழ்வார் "குணந்திகழ் கொண்டல்" (இராமானுச நூற்றந்தாதி 60) ஆன உடையவர் போல்வாரை மேகம் என்னும் என்கிறார். இவர்தாம் தூது விடுகையாவது ப்ராப்யருசியால் வந்த விளம்ப$_3$ாக்ஷமத்வத்தாலே ஆசார்யத்$_3$வாரா உபாயோபேய ப்ரார்த்த$_2$நை பண்ணுகை. "கைகள் கூப்பிச் சொல்லீர்" (திருவாய்மொழி 6-1-1), "பாதம் கைதொழுது பணியீர்" (திருவாய்மொழி 6-1-2), "இரங்கி நீர் தொழுது பணியீர்" (திருவாய்மொழி 6-1-3) என்றும், "திருவடிக்கீழ் குற்றேவல்" (திருவாய்மொழி 1-4-2) "வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" (திருவாய்மொழி 1-4-9) என்றும் சொல்லக் கடவதிறே.

156. தம்பிழையும் சிறந்த செல்வமும் படைத்த பரப்பும் தமரோட்டை வாஸமும் மறப்பித்த க்ஷமா தீ$_3$க்ஷா ஸாரஸ்ய ஸௌஶீல்யங்களை உணர்த்தும் வ்யூஹ விப$_3$வ பரத்வத்$_3$வய அர்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்.

இனிமேல் இவர் இப்படித் தூது விடும்படி முக$_2$ம் காட்டாதிருக்கைக்கு ஹேதுக்களையும் தூது விடுகைக்குப் பற்றாசையும் அதுதனக்கு விஷயத்தையும் அருளிச்செய்கிறார் தம்பிழை என்று தொடங்கி. தம்பிழையானது மறப்பித்த க்ஷமையை உணர்த்தும் ப்ரத$_2$ம தூதுக்கு விஷயம் வ்யூஹம் என்கிறது ப்ரத$_2$ம தூதான அஞ்சிறைய மடநாரையிலே (திருவாய்மொழி 1-4). "என்பிழையே நினைந்தருளி அருளாத திருமாலார்க்கு" (திருவாய்மொழி 1-4-7) என்று வ்யாமோஹாதிஶயத்தாலே மேல்விழுந்து விஷயீகரித்தான்; ஸர்வஜ்ஞனாகையாலே தோ$_3$ஷத$_3$ர்ஶனம் பண்ணினான்; பிரிந்தவாறே இதுவோ இதினளவென்று பிரிந்திருந்தானத்தனை. எங்களபராத$_4$த்தைக் கண்டு கைவிடுமளவன்று. "என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு என்று ஒரு வாய் சொல்" (திருவாய்மொழி 1-4-7) என்று அவர்க்கு அபராத$_4$ஸஹத்வ மென்பதொரு கு$_3$ணமுண்டு அத்தையறிவிக்கவே வரும் என்று அபராத$_4$ஸஹத்வம் பற்றாசாக, "கடலாழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும் அடலாழி யம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி விடல்" (திருவாய்மொழி 1-4-10) என்று இல்லாத வஸ்துவை உண்டாக்குகைக்காக ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளுகிறவனுக்கு உண்டாக்கின வஸ்துவுக்கு ஒரு கு$_3$ணாதாநம் பண்ணலாகாதோ என்று சொல்லென்று வ்யூஹத்திலே தூது விடுகிறார். சிறந்த செல்வமானது மறப்பித்த தீக்ஷையை உணர்த்தும் இரண்டாவது தூதுக்கு விப$_4$வம் விஷயம் என்கிறது வைகல் பூங்கழிவாயில் (திருவாய்மொழி 6-1). "சிறந்த செல்வம்மல்கு திருவண்வண்டூருறையும்" (திருவாய்மொழி 6-1-3) என்று ஆர்த்த$_2$ரக்ஷணம் பண்ணிவாரா நிற்கச் செய்தே திருவண்வண்டூரிலே போ$_4$க்$_3$யதையிலே கால்தாழ்ந்து நம்மை மறந்திருந்தானத்தனை; "மாறில்

போரரக்கன் மதிள்நீறெழச் செற்றுகந்த ஏறுசேவகனார்க்கு என்னையும் உளள்" (திருவாய்மொழி 6-1-10), "ஏதத் வ்ரதம் மம" (ரா.யு. 18-33) என்று ஆர்த்த₂ரக்ஷணத்திலே தீ₃க்ஷித்திருப்பானாய் ஆர்த்த₂ரக்ஷணமொரு தரையானால் அஸ்தமிதாந்யபா₄வம் என்றிருப்பானொருவன் ஆகையாலே நம்முடைய ஆர்த்தியை அறிவிக்கவே வருமென்று ஆர்த்த₂ரக்ஷணம் பற்றாசாக "அரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த ஏறு சேவனார்" (திருவாய்மொழி 6-1-10) என்று பிராட்டி நிமித்தமாக ராவணனுக்கு வாஸபூ₄மியான லங்கையை ப₄ஸ்மஸாத்தாக்கின ஏகவீரனான சக்ரவர்த்தி திருமகனுக்குச் சொல்லுங்கோளென்று விப₄வத்திலே தூது விடுகிறார். படைத்த பரப்பானது மறப்பித்த ஸாரஸ்யத்தை உணர்த்தும் மூன்றாம் தூதுக்கு பரத்வத்₂வயம் விஷயம் என்கிறது பொன்னுலகாளீரில் (திருவாய்மொழி 6-8). "முன்னுலகங்களெல்லாம் படைத்த முகில்வண்ணன் கண்ணன் என் நலங்கொண்ட பிரான்" (திருவாய்மொழி 6-8-1) என்று விபூ₄திரக்ஷணத்திலே பராக்கை உடையவனாகையாலே நம்மை மறந்திருந்தான் அத்தனை; "தன் மன்னு நீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்" (திருவாய்மொழி 6-8-6) என்று ஆஶ்ரிதரோடு ஏகரஸனாயிருக்கிற ஆகாரத்தை அறிவிக்கவே வரும் என்று ஐகரஸ்யம் பற்றாசாக, "வானவர்கோனைக் கண்டு யாமிதுவோ தக்கவாறு" (திருவாய்மொழி 6-8-4) என்று பரத்வத்திலும், "எங்குச் சென்றாகிலும் கண்டு" (திருவாய்மொழி 6-8-5) என்றும் "யாவையுமாய் யாவருமாய் நின்ற மாயன்" (திருவாய்மொழி 6-8-7) என்றுஞ் சொல்லுகிறபடியே அத்₃விதீயமுமாய் நித்யமுமாயிருக்கையாலே பரத்வஸத்₃ருஶமான அந்தர்யாமித்வத்திலும் தூது விடுகிறார். தமரோட்டை வாஸம் மறப்பித்த ஸௌந்த₃ர்யத்தையுணர்த்தும் நாலாம் தூதுக்கு அர்ச்சாவதாரம் விஷயமென்கிறது எங்கானலில் (திருவாய்மொழி 9-7). "தமரோடங்குறைவார்க்கு" (திருவாய்மொழி 9-7-2) என்று தம்மையுகந்த பா₄க₃வதரோட்டைச் சேர்த்தியில் இனிமையாலே நம்மை மறந்திருந்தானத்தனை. "பூந்துழாய் முடியார்க்கு" என்று தொடங்கி "தாம் தம்மைக் கொண்டகல்தல் தகவன்று" (திருவாய்மொழி 9-7-9) என்று தம்முடைய ஸௌந்த₃ர்யத்தை அநுப₄வித்துப் பிரிந்தார் த₄ரிக்க வல்லார்களோ என்று ஸௌந்த₃ர்யத்தை உணர்த்தவே வரும் என்று ஸௌந்த₃ர்யம் பற்றாசாக, திருமூழிக்களத்தாருக்கு என்று அர்ச்சாவதாரத்திலே தூது விடுகிறார்.

157. பகலோலக்கமிருந்து, கறுப்புடுத்துச் சோதித்து, காரியம் மந்த்ரித்து, வேட்டையாடி, ஆராமங்களிலே விளையாடும் ராஜநீதி ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்த வென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு விண்மீதென்கிற ஐந்திலும் காணலாம்.

இப்படிப் பரத்வாதி₃களிலே தூதுவிட்டால் இவற்றுக்கு விஷயபே₄தமுண்டோ என்னில், பகலிருக்கை தொடக்கமான ராஜநீதி போலே ஸ்த₂லபே₄தமொழிய வஸ்த்வைக்யத்தினாலே விஷயபே₄தமில்லை என்கிறார் பகலோலக்கம் என்று தொடங்கி. (பகலோலக்கமிருந்து) ஒரு ராஜாவானால் மந்த்ரிகள் முதலான ஸர்வரும் ஸேவிக்க ஓலக்கமிருந்து, (கருப்புடுத்துச் சோதித்து) நாட்டிலுள்ள குற்றங்குறைகளாராய்கைக்குப் பிறரறியாதபடி கருப்புடுத்து நக₃ரிஶோதனை வந்து

அந்த நாட்டில் ஶிக்ஷை ரக்ஷைகளுக்காக வ்ருத்த₄ மந்த்ரிகளும் தானுமாய் கார்யவிசாரங்களைப் பண்ணியும், து₃ஷ்டஸத்வ நிரஸநார்த்த₂மாக வேட்டையாடியும், அந்த ஶ்ரமம் தீரப் பூந்தோப்புக்களிலே விளையாடக் கடவதான ராஜநீதி. (ஆதும் சோராமல் செங்கோல் நடாவுகிற பாரளந்த வென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு) "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்" (நாச்சியார் திருமொழி 11-3) என்றும், "இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" (திருவிருத்தம் 33) என்றும் உப₄யவிபூ₄தியிலும் ஏகதே₃ஶமும் ஶேஷியாதபடி தன்னுடைய தி₃வ்யாஜ்ஞையை நடத்துமவனாய், "பாரளந்த பேரரசே எம்விசும்பரசே எம்மை நீத்து வஞ்சித்த ஓரரசே" (திருவிருத்தம் 80) என்று ஸௌலப்₄யம் பரத்வம் ப்ரணயித்வம் என்றும் சொல்லப்படுகிற மூன்று முடிக்குரிய வானிளவரசுக்கு (விண்மீதென்கிற ஐந்திலும் காணலாம்) "விண் மீதிருப்பாய்" (திருவாய்மொழி 6-9-5) "பகல்கண்டேன் நாரணனைக் கண்டேன்" (இரண்டாம் திருவந்தாதி 81) என்றும் "வைகுண்டே து பரே லோகே ஶ்ரியாஸார்த்த₂ம் ஜக₃த்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப₄க்தைர் பா₄க₃வதைஸ் ஸஹ" என்றும் ஒரு பகலான பரமபத₃த்திலே பிராட்டிமாரும் தானும் நித்யமுக்தர் ஸேவிக்க ஓலக்கமிருந்தும், "இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்" (திருவாய்மொழி 6-9-5) என்றும் "யமாத்மா ந வேத₃" என்றும் சொல்லுகிறபடியே வ்யாப்யபதார்த்த₂ங்களுக்குத் தெரியாதபடி அந்தர்யாமியாய் நின்று ஆராய்ந்தும், "கடல் சேர்ப்பாய்" (திருவாய்மொழி 6-9-5) என்றும், "பாற்கடல் யோகநித்திரை சிந்தை செய்தவெந்தாய்" (திருவாய்மொழி 2-6-5) என்றும் சேதநருடைய ரக்ஷணோபாயங்களை மந்த்ரித்தும் அநந்தரம் சேதநரக்ஷணார்த்த₂மாக "மண்மீதுழல்வாய்" (திருவாய்மொழி 6-9-5) என்றும் "களிறும் புள்ளும் உடன்மடிய வேட்டையாடி வருவான்" (நாச்சியார் திருமொழி 14-9) என்றும் ராமக்ருஷ்ணாதி₃ரூபேண அவதரித்து ஆஶ்ரித விரோதி₄களான ராவண கும்ப₄கர்ணாதி து₃ஷ்டஸத்வநிரஸநமாகிற வேட்டையாடியும், "மலைமேல் நிற்பாய்" (திருவாய்மொழி 6-9-5) என்றும் "ஆராமம் சூழ்ந்த" (சிறியதிருமடல் 71) என்றும் அந்த விரோதி₄ நிரஸநத்தாலுண்டான ஶ்ரமம் ஆறும்படி கோயில் திருமலை முதலான தே₃ஶங்களிலே நிற்கையாலும் காணலாம். ஆக இத்தால் பரத்வாதி₃களுக்கு ஸ்த₂லபே₄தமொழிய விஷயபே₄தமில்லை என்கிறார்.

158. தமருகந்த அடியோமுக்கே யென்னும் பின்னானார் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்.

இந்த பரத்வாதி₃களிலுண்டான கு₃ணங்களெல்லாம் அர்ச்சாவதாரத்திலே ப்ரகாஶிக்குமென்கிறார் இனிமேல். (தமருகந்த அடியோமுக்கே என்னும் பின்னானார் வணங்குமிடத்திலே எல்லாம் பூர்ணம்) "தமருகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே தமருகந்தது எப்பேர் மற்றப்பேர்" (முதல் திருவந்தாதி 44) என்று ஆஶ்ரிதருகந்த த்₃ரவ்யங்களே திருமேனியாகவும் அவர்கள் உகந்த திருநாமங்களைத் தனக்குத் திருநாமமாகவும் கொண்டு, "அடியோமுக்கே எம்பெருமான் அல்லீரோ

நீர் இந்தளூரீரே" (பெரிய திருமொழி 4-9-5) என்றும், "பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களத்தானாய்" (திருநெடுந்தாண்டகம் 10) என்றும் ஆஶ்ரிதாதீ$_4$ந ஸ்வரூபஸ்தி$_2$திப்ரவ்ருத்திகளை உடையனாய், அவதாரங்களுக்குப் பிற்பாடராகையாலே அநுப$_4$விக்கப் பெறாதவாஶ்ரிதர் இழவாதபடி தன்னை அநுப$_4$விப்பித்துக் கொடு நிற்கிற அர்ச்சாவதாரத்திலே பரத்வாதி$_3$களில் அநுப$_4$ரவ்யமான கு$_3$ணங்களெல்லாம் 'ஸர்வம் பூர்ணம் ஸஹோம்' என்கையாலே பரிபூர்ணமென்கிறார்.

159. வன்பெரு வானக முதலுய்ய இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவாளன் திருப்பதி, வடிவுடை, கடலிடம், கட்கிலீ என்னுமவற்றில் இவள் திறத்தென்கொலோ வென்பிக்கிற வ்யூஹஸௌஹார்த்த$_3$ ப்ரத$_4$ாநம்.

அதில் எல்லா ஸ்த$_2$லங்களிலும் எல்லா கு$_3$ணங்களும் பரிபூர்ணமேயாகிலும் கோயில் முதலான தி$_3$வ்யதே$_3$சங்களிலே பரத்வாதி$_3$களுக்கு அஸாதா$_4$ரணமான ஓரோ கு$_3$ணங்கள் ப்ராதா$_4$ந்யேந ப்ரகாஶிக்குமென்கிறார் 'வன்பெரு வானகமுதலுய்ய' என்று தொடங்கி. "வன்பெரு வானகமுய்ய அமரருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்ய" (பெருமாள் திருமொழி 1-10) என்று உப$_4$யவிபூ$_4$தியும் உஜ்ஜீவிக்கும்படி "திருவாளன் இனிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கம்" (பெரியாழ்வார் திருமொழி 4-9-10) என்றும் "தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம் திருப்பதி" (பெரியாழ்வார் திருமொழி 4-9-11) என்றும் சொல்லுகிற ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் திருவுள்ளமுகந்து கண்வளர்ந்தருகிற பெரிய திருப்பதியான கோயிலிலே, (வடிவுடைக் கடலிடங் கட்கிலீயென்னுமவற்றில்) "வடிவுடை வானோர் தலைவனே" (திருவாய்மொழி 7-2-10) என்றும், "கடலிடங்கொண்ட கடல்வண்ணா" (திருவாய்மொழி 7-2-7) என்றும், "கட்கிலீ உன்னைக் காணுமாறருளாய்" (திருவாய்மொழி 7-2-3) என்றும் "காகுத்தா கண்ணனே" (திருவாய்மொழி 7-2-3) என்றும் "திருவரங்கத்தாய்" (திருவாய்மொழி 7-2-4) என்றும் பரத்வாதி$_3$கள் ஐந்தும் ப்ரகாஶித்ததேயாகிலும் (இவள் திறத்தென் கொலோ என்பிக்கிற) "இவள்திறத்தென்செய்கின்றாய்" (திருவாய்மொழி 7-2-1) "இவள்திறத்து என் சிந்தித்தாய்" (திருவாய்மொழி 7-2-4) "என்கொலோ முடிகின்றதிவட்கு" (திருவாய்மொழி 7-2-2) என்று 'இவள் திறத்து தேவர் செய்தருள நினைத்ததேது? இவள் கார்யமென்னாய் முடியக்கடவது' என்று கேட்கையாலே "பாற்கடல் யோகநித்திரை சிந்தை செய்த" (திருவாய்மொழி 2-6-5) என்று ஸர்வருடையவும் ரக்ஷணோபாயசிந்தை பண்ணுகிற வ்யூஹத்தில் ப்ரகாஶிக்கிற ஸௌஹார்த$_3$ கு$_3$ணம் ப்ராதா$_4$ந்யேந ப்ரகாஶிக்குமென்கிறார்.

160. மண்ணோர்விண்ணோர்வைப்பில் போகின்ற ஏழுலகுக்குயிர்பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம் உஜ்ஜ்வலம்.

(மண்ணோர் விண்ணோர் வைப்பில்) "கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" (திருவாய்மொழி 1-8-3) என்றும், "தண்ணருவி வேங்கடமே

வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" (நான்முகன் திருவந்தாதி 45) என்றும் உப₄யவிபூ₄தியிலுள்ளார்க்கும் ஆபத்₃த₄நமாய் நிற்கிற திருமலையில் நிலையிலே (போகின்றவேழுலகுக்குயிர்) "போகின்றகாலங்கள் போயகாலங்கள் போகுகாலங்கள் தாய்தந்தை உயிராகின்றாய்" (திருவாய்மொழி 2-6-10) என்றும், "கண்ணாயேழுலகுக்கு உயிராய எங்கார்வண்ணனை" (பெரிய திருமொழி 1-9-10) என்றும் சொல்லுகிறபடியே ஸகல காலமும் ஸர்வாத்மாக்களுக்கும் ஸர்வவித₄ப₃ந்து₄வுமாய்க் கொண்டு ஸர்வர்க்கும் ஆத்மபூ₄தனாயிருக்கிற அந்தர்யாமித்வத்தில் ப்ரகாஶிப்பதாய் (பாசம் வைத்த நிகரில் வாத்ஸல்யம் உஜ்ஜ்வலம்) "என்கண் பாசம் வைத்த" (திருவாய்மொழி 3-3-4) "நிகரில் புகழாய்" (திருவாய்மொழி 6-10-10) என்று அத்யந்தம் தண்ணியனாயிருக்கிற என்பக்கலிலே ஸங்க₃த்தைப் பண்ணினான் என்னும் ஒப்பிலாத புகழை உடையவனே என்று சொல்லுகிற வாத்ஸல்யம் "வேங்கடத்தெழில் கொள் சோதி" (திருவாய்மொழி 3-3-2) என்றும் "நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி" (திருவாய்மொழி 6-10-7) என்றும் "பரஞ்சுடர்ச்சோதி" (திருவாய்மொழி 3-3-4) என்றும் சொல்லுகிறபடியே உஜ்ஜ்வலமாய்க் கொண்டு பிரகாஶிக்குமென்கிறார்.

161. உப₄யப்ரதா₄நப்ரணவமான உறைகோயிலில் எத்தேவு மென்னும் பரேஶத்வம் பொலியும்.

கடவதான வ்யாதி4 பகை பசி முதலான தே3ஹதோ3ஷமும் "ப4விஷ்யத்யத4ரோத்தரம்" என்கிறபடியே பதா3ர்த்த2ஸ்வபா4வங்கள் வேறுபட்டுவரக் கடவதான கலிப்ரயுக்தமான கால தோ3ஷமும் தங்கள் ஸஞ்சாரத்தாலே போம்படி "இரியப் புகுந்திசைபாடி எங்குமிடங் கொண்டனவே" (திருவாய்மொழி 5-2-3)என்கிறபடியே ப4க3வதநுப4வப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பெரிய ஆராவாரத்தையுடைத்தாம்படி விபரீதர்க்கு இடமில்லாதபடி விஸ்ம்ருதராய்க் கொண்டு "மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள் கீதங்கள்பாடி வெறுப்பின்றி ஞாலத்து மிக்கார் மேவித் தொழுதுய்ம்மினீரே" (திருவாய்மொழி 5-2-8) என்று ஶ்ரிய:பதியாய் ஸ்ரீவத்ஸவக்ஷஸ்த2னான ஸர்வேஶ்வரனுடைய கு3ணங்களைத் தங்களுக்கு ஸத்தாதா4ரகமாக உடையரான ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த விபூ4தி ஸ்வபா4வத்தாலே வந்த வெறுப்பற்று எங்கும் விஸ்த்ருதரானார்கள். அவர்களை அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு கிட்டி நீங்கள் உஜ்ஜீவியுங்கோள்; அவ்வளவு போகமாட்டாதே தே3வதாந்தரப்ராவண்யத்தாலே ப4க3வத்3 வைப4வமறிகைக்கீடான அளவிலிகளாகில் (நீங்கள் நிறுத்துகிறவர்களை தேவதைகளாக நிறுத்தினவன்) "நிறுத்தி நும்முள்ளத்துக் கொள்ளும் தெய்வங்கள்" (திருவாய்மொழி 5-2-7) என்றும் அஸத3ஸ்யமாகையாலே பிறரறியாதபடி ராஜஸதாமஸ யுக்தமான உங்கள் நெஞ்சாலே அவற்றுக்கு ஸ்வத: உத்கர்ஷமில்லாமையாலே நீங்கள் சேமம் சாத்தி நிறுத்தி த்4யாநம் பண்ணுகிற தேவதைகளை "நிறுத்தினான் தெய்வங்களாக அத் தெய்வநாயகன் தானே" (திருவாய்மொழி 5-2-8) என்று ராஜாவானவன் ஊர்தோறும் விடைச் சேவகரை நிறுத்துமாபோலே உங்களுக்காஶ்ரயணீயராக நிறுத்தினான் அந்த ஸர்வேஶ்வரன்தானே; அவனை (மேவிப் பரம்புமவரோடொக்கத் தொழில் யுகதோ3ஷமில்லையாமென்று) "நக்கபிரானோடயனுமிந்திரனும் முதலாகத் தொக்கவமரர் குழாங்கள் கண்ணன் திருமூர்த்தியை மேவி மிக்க உலகுகள் தோறும் எங்கும் பரந்தன ஒக்கத் தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லை" (திருவாய்மொழி 5-2-10) என்று ப்3ரஹ்மேந்த்3ரருத்3ராதி3களான தே3வதா ஸமூஹங்கள் ஸர்வஸுலப4னான ஸர்வேஶ்வரனுடைய ஶுபா4ஶ்ரயமான விக்3ரஹத்தை யாஶ்ரயித்துத் தங்கள் லோகங்களிலே விஸ்த்ருதரானார்கள்; அவர்களைப் போலே நீங்களும் அவனையாஶ்ரயிக்கப் பெறில் விபரீதப்ரவர்த்தகமான யுக3தோ3ஷம் உங்களுக்குத் தட்டாதென்று (விஷ்ணுப4க்தி பரராக்கி) என்றிப்படி உபதே3ஶித்து "விஷ்ணுப4க்திபரோதே3வ: விபரீதஸ்ததா2ஸுர:" என்று ப4க3வத் ப4க்தியுக்தராம்படி திருத்தி, (கண்ணுக்கினியன காட்டலாம்படியானார் கண்ணிலே நோக்கிக் காணும் ப4க்தி ஸித்3தா4ஞ்ஜனத்தை இடுகிறார் அஞ்சாம் பத்தில்) "கண்ணுக்கினியன கண்டோம் தொண்டீர் எல்லீரும் வாரீர்" (திருவாய்மொழி 5-2-2) என்று பா4க3வத ஸமாஜ த3ர்ஶனம் இனிதாம்படி அவ்விஷயத்தில் சாபலமுடையார்க்கு "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் என்னை முனியாதே" (திருவாய்மொழி 5-5-2) என்று உபாயத3ஶையிலே நின்று ப்ராப்யத3ஶையிலே நிற்கிற தம்மைப் பொடியும்படியான அவர்களுடைய உபாயாத்4யவஸாய ஜ்ஞாநத்தின்மேலே

"மநஸி விலஸதாக்ஷணா ப₄க்தி ஸித்₃தா₄ஞ்ஜநேந" (ஸ்ரீகு₃ணரத்நகோசம் 12) என்கிறபடியே ப்ராப்யவைலக்ஷண்யத்தை விஷயீகரித்த ப₄க்தியை உபதே₃ஶிக்கிறார் என்கிறார் அஞ்சாம் பத்தில்.

௨௨௪. என்னையும் யாவர்க்கும் சுரர்க்காய் அடியீர் வாழ்மினென்று கருணையாலே ஸர்வலோகபூ₄தேப்₄ய: என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலும் ஆகாமல் உபாயத்வம் கல்வெட்டாக்குகிற ஶரண்யன் அஜ்ஞாநாஶக்தி யாதா₂த்ம்ய ஜ்ஞாநங்களளவால் அன்றிக்கே அங்குற்றேன் என்னான் புணரா யென்னும்படி மெய்யமர் ப₄க்தி பூ₄மப₂லமாகவும் அநந்யக₃தித்வமுடைய தமக்குப் பாதமே சரணாக்க அவையே சேமங்கொண்டு ஏகசிந்தையராய் திர்யக்குக்களையிட்டு ஸ்வாபி₄ப்ராயத்தை நிவேதி₃த்து விளம்ப₃ரோஷம் உபாயத்தாலேயழிய உருகாமல் வலித்ததும் நண்ணி வணங்க, ப₂லித்தவாறே ஸப்ரகாரமாக ஸக்ருத் கரணீயமென்று புராண பௌராணிகர் த்யாஜ்யாம்ஶமாக்கின சித₃சித் ப்ராப்ய ப்ராபகாப₄ாஸங்களைக் கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும் ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீ₃ய ஶேஷமாக்கியும் புறத்திட்டுக் காட்டியென்று ப்ரஸங்கி₃க்கில் முடியும்படி விட்டு, தந்தை தாய் உண்ணும்சோறு மாநிதி₄ பூவையாவையுமொன்றேயாக்கி, தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ என்னும் ஆர்த்தியோடே திரிவிக்கிரமனாகக் குறள்கோலப் பிரானாய் அடியை மூன்றையிரந்த வன்கள்வன் கண்முகப்பே அகல்கொள் திசை வையம் விண்ணும் தடவந்த தடந்தாமரைகளை இணைத் தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்று சேர்ந்த உலகத் திலதத்தே கண்டு அகலகில்லேனென்று பூர்வ வாக்யமநுஸந்தி₄த்தவர் பிணக்கறத் தொடங்கி வேதப் புனித விறுதி சொன்ன ஸாத்₄யோபாய ஶ்ரவண ஸஶோக ஸஜாதீயர்க்குத் தந்தனன் மற்றோர் களைகணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்₃தே₄ாபாய நிஷ்டை₂யை உக்த்யநுஷ்ட₂ாநங்களாலே காட்டுகிறார் ஆறாம் பத்தில்.

தன்னுடைய பரமக்ருபையாலே ஸர்வரும் வந்தாஶ்ரயிக்கும்படி யிருக்கிற ஸர்வஶரண்யனான ஸர்வேஶ்வரன் ப₄க்திபாரவஶ்யத்தாலே அநந்யக₃திகளான இவர்க்குத் தன் திருவடிகளே நிரபேக்ஷாபாயமென்னுமிடத்தைக் காட்டிக் கொடுக்க, அந்த உபாயத்திலே விச்சே₂த₃மில்லாதபடி வ்யவஸாயத்தை யுடையராய்த் தம்முடைய வ்யவஸாயத்தை க₄டகர் முக₂த்தாலே யவனுக்கறிவித்துத் தம்முடைய விளம்ப₃ாக்ஷமத்வத்தால் வந்த இன்னாப்பைப் பரிஹரித்தவனுடைய ஸாமர்த்₂யத்தை அநுஸந்தி₄த்து கு₃ணாநுப₄வத்துக்குப் பண்ணின ப்ரபத்தியும் பலித்தவாறே ப்ராப்திக்குப் ப்ரபத்தி பண்ணுவதாக ஸித்₃தோ₄பாயஸ்வீகாரம் இதரோபாயத்யாக₃பூர்வகமாக வேண்டுகையாலே பௌராணிகவசந ப்ரக்ரியையாலே உபாயவிரோதி₄களான த்யாஜ்யங்களை வாஸநையோடே அவற்றினுடைய ப்ரஸங்க₃மும் அஸஹ்யமாம்படி விட்டு விட்டவையெல்லாம் தமக்கு ப்ராப்தவிஷயமேயாக்கி நிரதிஶயமான பரப₄க்தியோடே திருவுலகளந்த

ஸர்வஸுலப4மான திருவடிகளை நித்யஸூரிகளும் வந்தனுப4விக்கும்படி நிற்கிற திருமலையிலே கண்டு பூர்வவாக்ய ப்ரக்ரியையாலே ஶரணம் புக்கவர் பத்துடையடியவரிலே தொடங்கி அஞ்சாம்பத்தளவாக உபதே3ஶித்த ப4க்த்யுபாயத்தினுடைய து3ஷ்கரத்வாதி3 தோ3ஷாநுஸந்தா4னத்தாலே ஶோகம் ஜநிக்கும்படியான அதி4காரம் பிறந்தவர்களுக்குத் தம்முடைய ப்ரபத்தி நிஷ்டை2யை ப்ரகாஶிப்பிக்கிறார் என்கிறார்.

(என்னையும் இத்யாதி3 ஶரண்யனென்கிறதளவாக) "ஏறு சேவகனார்க்கு என்னையும் உளளென்மின்களே" (திருவாய்மொழி 6-1-10) "யாவர்க்கும் வன் சரணே" (திருவாய்மொழி 6-3-7) "வன்சரண் சுரர்க்காய்" (திருவாய்மொழி 6-3-8) என்று ஆர்த்தரக்ஷணத்திலே தீ3க்ஷித்திருக்கிறவனுக்கு ரக்ஷ்யவர்க்க3த்திலே நானுமொருத்தி உளள் என்று சொல்லுங்கோள் என்றும், திருவிண்ணகரிலே நின்றருளினவனுடைய திருவடிகளல்லது ஸர்வர்க்கும் வலியரக்ஷை இல்லை; தேவர்களுக்கும் வலிய ரக்ஷை என்று இவர்தாமே பேசும்படி "அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்றென்றருள் கொடுக்கும்" (திருவாய்மொழி 6-10-11) என்று நமக்கு ஶேஷபூ4தராயுள்ளா ரெல்லாரும் நம்மடியின் கீழே அநந்யப்ரயோஜநராய்ப் புகுந்து உஜ்ஜீவியுங்கோள் என்று அவன்தானே அருளிச்செய்யும்படியான க்ருபையாலே (ஸர்வலோக பூ4தேப்4ய: என்கிறவை கடலோசையும் கழுத்துக்கு மேலுமாகாமல்) "ஸர்வலோக ஶரண்யாய ராக4வாய மஹாத்மநே நிவேத3யத மாம் க்ஷிப்ரம் விபீ4ஷணமுபஸ்த்தி2தம்" (ரா.யு. 17-14) என்றும், "ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதிச யாசதே அப4யம் ஸர்வபூ4தேப்4யோ த3தா3மி ஏதத்3வ்ரதம் மம" (ரா.யு. 18-33)என்றும் சொல்லுகிற ஶரணாக3தனுடையவும் ஶரண்யனுடையவும் உக்தி ஸமுத்3ரகோஷம் போலே நிரர்த்த2கமாகாத படியாகவும், கண்டா2து3பரியாகாதபடியாகவும் "வானவர் வானவர் கோனொடும் நமன்றெழும் திருவேங்கடம்" (திருவாய்மொழி 3-3-7) என்றும் "வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடம்" (முதல் திருவந்தாதி 26) என்றும் "வானரமும் வேடுமுடை வேங்கடம்" (நான்முகன் திருவந்தாதி 47) என்றும் "கண்டு வணங்கும் களிறு" (மூன்றாம் திருவந்தாதி 70) என்றும் சொல்லுகிறபடியே நித்யஸூரிகளோடு நித்ய ஸம்ஸாரிகளோடு திர்யக்குகளோடு வாசியற ஆஶ்ரயிக்கலாம்படி நிற்கையாலே தன்னுடைய ஸமாஶ்ரயணீயத்வம் ஶிலாலிகி2தமாம்படி திருமலையிலே யெழுந்தருளி நிற்கிற அநாலோசித விஶேஷாஶேஷலோகஶரண்யனான ஸர்வேஶ்வரன் (அஜ்ஞாந அஶக்தியித்யாதி3 அநந்ய க3தித்வமுடைய தமக்கு) "அவித்3யாதோ தே3வே பரிப்3ருட3தயா வா விதி4தயா ஸ்வப4க்தேர் பூ4ம்நா வா ஜக3தி க3திமந்யா விது3ஷாம் க3திர் க3ம்யஶ்சாஸௌ ஹரிரிதி ஜிதந்தாஹ்வயமநோ: ரஹஸ்யம் வ்யாஜஹ்ரே ஸ க2லு ப4க3வாந் ஶௌநகமுநி:" (பட்டர் ஸ்ரீஸூக்தி)என்று உபாயாந்தரங்களை அறிகைக்கும் அநுஷ்டி2க்கைக்குமீடான ஜ்ஞாநஶக்திக ளில்லாத அளவால் வந்த அந்த உபாயாந்தரங்களில் அந்வயமேயன்றிக்கே ஸ்வரூபபாரதந்த்ர்யத்தாலே ப4க3வதே3க ரக்ஷ்யமாகையொழிய வ்யதிரிக்தோபாயங்கள் ஸ்வரூபவிருத்3த4ங்கள் என்கிற யாதா2த்ம்ய ஞானத்தாலே "யாவராலும் ஒன்றும் குறை வேண்டேன்"

(திருவாய்மொழி 5-8-3) என்று அவற்றிலுண்டான அநந்வயத்தளவன்றிக்கே "அங்குற்றேனல்லேன் இங்குற்றேன் அல்லேன் உன்னைக் காணும் அவாவில் வீழ்ந்து நான் எங்குற்றேனுமல்லேன்" (திருவாய்மொழி 5-7-2) "என் நான் செய்கேன்" (திருவாய்மொழி 5-8-3) "புணரா நின்ற மரமேழ் அன்றெய்த ஒரு வில்வலவாவோ" (திருவாய்மொழி 6-10-5) என்று நித்யஸூரிகள் ஸம்ஸாரத்திலே உலாவினாப்போலே ஸித்$_3$த$_4$ஸாத$_4$நம் பண்ணி வர்த்திக்கிறேனல்லேன் ஸாத$_4$நாநுஷ்டா$_2$நம் பண்ணுகிறவர்களிலே ஒருவனாய் வர்த்திக்கிறேனல்லேன், அன்றிக்கே உன்னை அநுப$_4$விக்கிற நித்யஸூரிகளிலே ஒருவனாய் அங்கே வர்த்திக்கிறேனல்லேன் உன்னையொழிய ஶப்$_3$தா$_3$தி$_3$ விஷயாநுப$_4$வம் பண்ணுகிற ஸம்ஸாரிகளிலேயாய் இங்கே வர்த்திக்கிறேனல்லேன். உன்னுடைய ஸௌந்த$_3$ர்யாதி$_3$களிலே ஈடுபட்டு உன்னைத்தான் வேணுமென்று ஆசையாலே ப$_3$லஹீநனாய்த் தளர்ந்து இனி உபாயாநுஷ்டா$_2$நம் பண்ண க்ஷமனல்லேன்; உன் திருவடிகளைக் கிட்டுகைக்கு என்னால் செய்யலாவதில்லை; எனக்கும் செயலுக்கும் என்ன சேர்த்தியுண்டு? உன்னுடைய ரக்ஷணத்திலே அதிஶங்கை பண்ணின மஹாராஜருடைய ஶங்காநிராகரணார்த்த$_2$மாக இலக்குக் குறிக்கவொண்ணாதபடி திரண்டு நின்ற மராமரங்கள் ஏழையும் எய்த ஏகவீரனே ஓ என்று கூப்பிடும்படி "மெய்யமர் காதல்" (திருவாய்மொழி 6-8-2) என்று அவனுடைய திருமேனியோடேயமர வேண்டும்படியாய்த் தம்முடம்போடே அவனமர வேண்டும்படியாய் ஸத்யமாய்ப் பொருந்தி ஸ்வரூபாநுப$_3$ந்தி$_4$யாய் கீழில் பத்தில் தமக்குப் பிறந்த ப$_4$க்தி பாரவஶ்யத்தினுடைய ப$_2$லமாகவுமாம். உபாயாந்தரத்துக்கன்றிக்கே "களைகண் மற்றிலேன்" (திருவாய்மொழி 5-8-8) என்னும்படி அநந்யக$_3$தித்வமுடைய இவர் தமக்கு (பாதமே சரணாக்க அவையே சேமங்கொண்டேகசிந்தையராய்) "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" (திருவாய்மொழி 5-7-10) என்று தன் திருவடிகளே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான ஸாத$_4$நமென்னுமிடத்தைக் காட்டிக்கொடுக்க; "கழல்களவையே சரணாகக் கொண்ட" (திருவாய்மொழி 5-8-11) என்றும், "அடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" (திருவாய்மொழி 5-9-11) என்றும், "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று நாடொறுமேகசிந்தையனாய்" (திருவாய்மொழி 5-10-11) என்றும் சொல்லுகிறபடியே விரோதி$_4$ நிரஸந ஶீலனாயிருக்கிறவன் திருவடிகளே நிரபேக்ஷோபாயமென்கிற ஏகரூபமான வ்யவஸாயத்தையுடையராய் , (திர்யக்குக்களை யிட்டு ஸ்வாபி$_4$ப்ராயத்தை நிவேதி$_3$த்து) "வைகல்பூங்கழிவாய் வந்து மேயுங் குருகினங்காள் வினையாட்டியேன் காதன்மை கைகள் கூப்பிச்சொல்லீர்" (திருவாய்மொழி 6-1-1) என்றும், "சேவகனார்க்கென்னை யுமுளளென்மின்களே" (திருவாய்மொழி 6-1-10) என்றும் பெற்றல்லது த$_4$ரியாத அதிமாத்ர ப்ராவண்ய முடையராயிருக்கச் செய்தேயும், ஸ்வரக்ஷணத்தில் அந்வயமில்லாத அத்யந்தபாரதந்த்ர்யத்தினாலே ததே$_3$க ரக்ஷ்யமாயிருக்குமென்கிற தம்முடைய கருத்தை, ஶுத்$_3$த$_4$ஸ்வபா$_4$வராய் ஶாகா$_2$ஸஞ்சாரிகளாய் மது$_4$கரப்ரக்ருதிகளாய் பக்ஷபாதிகளாய் ஷட்பத$_3$நிஷ்ட$_2$ரான க$_4$டகரையிட்டறிவித்து (விளம்ப$_3$

ரோஷமுபாயத்தாலே யழிய) இப்படியறிவித்த விடத்திலும் அவன் தாழ்க்க அத்தால் வந்த ப்ரணயரோஷத்தாலே, அவன் வந்து மேல் விழுந்தவளவிலும், "போகுநம்பீ" (திருவாய்மொழி 6-2-2) "கழகமேறேல் நம்பீ"(திருவாய்மொழி 6-2-6) என்று அவனை உபேக்ஷித்து அவன் முக₂ம் பாராமலிருப்போமென்று சிற்றிலிழைப்பது சிறு சோறடுவதாக, அவனும் தன்னுடைய போ₄கவிரோதி₄ யாகையாலே "அழித்தாயுன் திருவடியால்" (திருவாய்மொழி 6-2-9) என்கிறபடியே அந்த அநாத₃ராந்யபரதைகளை தனக்கும் சரமோபாயமான திருவடிகளாலே உபலக்ஷிதமான விக்₃ரஹவைலக்ஷண்யத்தாலே குலைத்த அவனோடே சேர்ந்து. (உருகாமல் வலித்ததும் நண்ணி வணங்க பலித்தவாறே) "உகவையால் நெஞ்சமுள்ளுருகி உன் தாமரைத் தடங்கண் விழிகளின் அகவலைப் படுப்பான் அழித்தாயுன் திருவடியால்" (திருவாய்மொழி 6-2-9) என்றிப்படி அல்லோம் என்ற நம்மைச் சேர்த்துக் கொண்டதோராஶ்சர்யமிருந்தபடியென் என்றுருக, இதுதொன்று கண்டோ ஆஶ்சர்யப்படுகிறீர், தன்னில்தான் சேராதபடி விலக்ஷணங்களானவை நம்மோடே சேர்ந்திருக்கிறபடி பாரீர் என்று தன்னுடைய விருத்₃த₄விபூ₄திகத்வத்தை நல்குரவுஞ்செல்விலே காட்டி உருகாதபடி வலிக்கப்பண்ண இவரும் "நல்குரவும்" என்று தொடங்கி "திருவிண்ணகர்க் கண்டேனே" (திருவாய்மொழி 6-3-1) என்று அத்தைக் கண்டு தேறினவிதுவும் குரவையாய்ச்சியரிலே "என்ன குறை நமக்கே" (திருவாய்மொழி 6-4-1) என்று தொடங்கி "நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கார் பிறர் நாயகரே" (திருவாய்மொழி 6-4-10) என்னும்படி க்ருஷ்ணகு₃ணசேஷ்டிதங்களை த₃ரித்துநின்று அநுப₄விக்கலாம்படி ப₂லித்தவாறே. 'உருகாமல் வரித்தும்' என்று பாட₂மானபோது பிறந்தவாற்றிலே உன்னைப் பிரிந்த த₃ஶையிலே உன்னுடைய கு₃ணாநுஸந்தாநம் பண்ணி த₄ரிக்கலாமோ வென்று பாராநின்றேன்; "ஊடுபுக்கெனதாவியை நின்று நின்றுருக்கியுண்கின்ற" (திருவாய்மொழி 5-10-10) என்று அவைதானே ஶிதி₂லமாக்கா நின்றன, த₃ரித்து நின்று கு₃ணாநுஸந்தா₄நம் பண்ணும்படி பண்ணியருள வேணுமென்றும் "மற்றோர் களைகணிலம் காண்மின்களே" (திருவாய்மொழி 6-3-10) "(நாகணைமிசை நம்பிரான்?) சரணே சரண்" (திருவாய்மொழி 5-10-11) என்று உபாய வரணம் பண்ணி அந்த வரணமும் என்ன குறையெனக்கென்று தொடங்கி "விண்மிசைத் தனதாமமே புக மேவிய சோதி தன்தாள் நண்ணி நான் வணங்கப் பெற்றேன்" (திருவாய்மொழி 6-4-10) என்று க்ருஷ்ண கு₃ண சேஷ்டிதங்களை தி₃வாராத்ர விபா₄க₃மற ப்ரீதி ப்ரேரிதனாய்க் கொண்டு பேசப் பெற்ற எனக்கு என்ன குறையுண்டு, பொய்யாஸநமிடுவார் மல்லரையிட்டு நெருக்கத் தேடுவார் எதிரம்பு கோர்ப்பாராய்க் கொண்டு இருக்கிற இந்த விபூ₄தியிலிராதே "க₃தஸ் ஸ்வம்ஸ்த்தா₂நமுத்தமம்" என்கிறபடியே பரிவரேயான நிர்ப₄யஸ்த்தா₂நத்திலே எழுந்தருளின வ்ருத்தாந்தத்தை அநுஸந்தி₄த்து முறையிலே கிட்டப் பெற்றவெனக்கு வேறு நிர்வாஹகருண்டோ என்றும்; க₃ர்விக்க வேண்டும்படி ப₂லித்தவாறே என்றுமாம். (ஸப்ரகாரமாக ஸக்ருத் கரணீயமென்று) இதரோபாயத்யாக₃மாகிற ப்ரகாரத்தோடே ஸித்₃த₄ஸாத₄நஸ்வீகாரம் "ஸக்ருதே₃வ" (ரா.யு. 18-33) என்கிறபடியே

ஒருக்கால் பண்ண வேணுமென்று பார்த்து. (புராணபௌராணிகர் தயாஜ்யாம்ஶமாக்கின சித$_3$சித் ப்ராப்யப்ராபகாபா$_4$ஸங்களை) புராணேதிஹாஸங் களும் அவற்றை உள்ளபடியறிகையாலே பௌராணிகரான உடையவரும். "பிதரம் மாதரம் தா$_3$ராந் புத்ராந் ப$_3$ந்தூ$_4$ந் ஸகீ$_2$ந் கு$_2$ரூந், ரத்நாநி த$_4$நதா$_4$ந்யாநி க்ஷேத்ராணி ச க்$_3$ருஹாணிச, ஸர்வத$_4$ர்மாம்ஶ்ச ஸந்த்யஜ்ய ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்" (சரணாக$_3$தி க$_3$த்$_3$யம்), "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச த$_4$நாநி ச, ப$_4$வத் க$_3$தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகா$_2$நி வை, த்யக்த்வா புத்ராம்ஶ்ச தா$_3$ராம் ச ராக$_4$வம் ஶரணம் க$_3$த:" (ரா.யு.19-5) என்று த்யாஜ்யாம்ஶமாக்கினவற்றில் பித்ராதி$_3$களான சேதநருடைய ரக்ஷணம் "மாத்ருதே$_3$வோ ப$_4$வ" (தைத்திரீயோபநிஷத்) இத்யாதி$_3$ப்படியே ஸாத$_4$நாந்தரத்துக்கு உபகாரகமாகையாலே ப்ராபகங்களாயும் அவர்களுடைய வியோகம் அஸஹ்யமாம்படி ப்ரியவிஷயமாகையாலே ப்ராப்யங்களாயு மிருக்கையாலும்; ரத்நாதி$_3$கள் உபாயாந்தரத்துக்கு தா$_3$நாதி$_3$முக$_2$த்தாலே ஸஹகாரிகளா யிருக்கையாலே ப்ராபகங்களாயும் தன்னை யழியமாறியும் இவற்றை ஆர்ஜிக்க வேண்டும்படி ஸ்வயம்ப்ரயோஜநங்க ளாகையாலே ப்ராப்யங்களாயுமிருக்கிற இந்த ப்ராப்யப்ராபகாபா$_4$ஸங்களை; ஸாக்ஷாத் ப்ராப்யப்ராபகங்கள் அல்லாமையாலே ஆபா$_4$ஸங்களென்கிறது. (கைவலிந்து கைகழலக் கண்டும் எல்லாம் கிடக்க நினையாதகன்றும்) "நம்மைக் கை வலிந்து" (திருவாய்மொழி 6-5-7) "இழந்தது சங்கே" (திருவாய்மொழி 6-6-1) "இதெல்லாம் கிடக்க இனிப் போய் எம்மையொன்றும் நினைத்திலளே" (திருவாய்மொழி 6-7-9) "இன்றெனக்கு உதவாதகன்ற" (திருவாய்மொழி 6-7-6) என்று சித$_3$சித் வர்க்க$_3$மான இவற்றைக் கைவிட்டும், உறங்கினவன் கையிலே எலுமிச்சம் பழம் போலே ஸ்வரூபயாதா$_2$த்ம்ய ஜ்ஞாநத்தாலே தன்கையில் நின்றும் நெகிழும்படி கண்டு "ஸர்வாந் போ$_4$கா$_3$ந் பரித்யஜ்ய" என்கிறபடியே இவற்றை மதியாமல் அகன்றும் (ஆளீர் மேவீர் ஊதீர் என்று ததீ$_3$ய ஶேஷமாக்கியும்) "பொன்னுலகாளீரோ" (திருவாய்மொழி 6-8-1) "நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ" (திருவாய்மொழி 6-8-2) "ஓடிவந்தென் குழல்மேலொளி மாமலரூதீரோ" (திருவாய்மொழி 6-8-3) என்று கீழ் தாம் விட்டவிடத்திலும் தம்மை விடாதபடி பற்றிக் கிடக்கிற ஆத்மாத்மீயங்களை ப$_4$க$_3$வத்$_3$விஷயத்தில் உபகாரகரானவர்களுக்கு "ஸத்$_3$கு$_3$ருப்யோ நிவேத$_3$யேத்" என்கிறபடியே ஸமர்ப்பித்து. (புறத்திட்டுக்காட்டி யென்று ப்ரஸங்கி$_3$க்கில் முடியும்படி விட்டு) "புறத்திட்டின்னம் கெடுப்பாயோ பலநீகாட்டிப் படுப்பாயோ" (திருவாய்மொழி 6-9-8) என்று ஸம்ஸாரிகளுக்கு போ$_4$க்$_3$யமான ஶப்$_3$தா$_3$தி$_3$ விஷயங்களினுடைய தர்ஶநத்திலே ஸத்தாஹாநி பிறக்கும்படி அஸஹ்யமாயிருக்கையாலே அவற்றைவிட்டு, (தந்தைதாயுண்ணுஞ் சோறுமாநிதி$_4$ பூவையாவையுமொன்றேயாக்கி) "ப$_4$வத் க$_3$தம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகா$_2$நி வை" (ரா.யு) என்றும், "த்வமேவ மாதாச பிதா த்வமேவ, த்வமேவ ப$_3$ந்து$_4$ஶ்ச கு$_3$ருஸ் த்வமேவ, த்வமேவ வித்$_3$யா த்$_3$ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தே$_3$வதே$_3$வ" என்றும் "வாஸுதே$_3$வஸ் ஸர்வம்" (கீதை 7-) என்றும் "மாதா பிதா ப்$_4$ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் க$_3$திர் நாராயண:" (ஸுபாலோபநிஷத்)

என்றும் சொல்லுகிறபடியே "தேவபிரானையே தந்தை தாயென்றடைந்த" (திருவாய்மொழி 6-5-11) என்று அயர்வறுமமரர்களதிபதியே மாதா பித்ரு ப்ரப்3ருதிகளான ஸர்வவித4ப3ந்து4வும் என்றும், "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" (திருவாய்மொழி 6-7-1) என்று தா3ரகபோஷக போ4க்3யங்களெல்லாம் ஸர்வ ஸுலப4னான கருஷ்ணனே என்றும், "வைத்தமாநிதியாம் மதுசூதனையே அலற்றி" (திருவாய்மொழி 6-7-11) என்று ஆபத்ரக்ஷகமாகச் சேமித்துவைத்த அக்ஷயமான நிதி4யும் விரோதி4 நிரஸநஶீலனான அவனேயென்றும், "பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் யாவையும் திருமால் திருநாமங்களே கூவியெழும்" (திருவாய்மொழி 6-7-3) என்று லீலோபகரணங்களால் பிறக்கும் ரஸமெல்லாம் ஶ்ரிய:பதியினுடைய திருநாமங்களைச் சொல்லவே யுண்டாகா நின்றதென்றும், இப்படி கீழ் விட்டவையெல்லாம் ப4க3வத்3விஷய மொன்றிலுமேயாக்கி, (தளர்வேனோ திரிவேனோ குறுகாதோ முதல்வாவோ வென்னுமார்த்தியோடே) "கோலத் திருமாமகளோடு உன்னைக்கூடாதே சாலப்பலநாள் அடியேனின்னம் தளர்வேனோ" (திருவாய்மொழி 6-9-10) "தீயோடுடன் சேர் மெழுகாயுலகில் திரிவேனோ" (திருவாய்மொழி 6-9-6) "கூவிக்கொள்ளுங்காலமின்னம் குறுகாதோ" (திருவாய்மொழி 6-9-9) "புணரேய் நின்ற மரமிண்டின் நடுவே போன முதல்வாவோ" (திருவாய்மொழி 6-10-5) என்று ஸர்வப்ரகாரரக்ஷகனாய் பெரிய பிராட்டியாரோடே யிருக்கிற உன்னைக் கிட்டப்பெறாதே ஸம்ஸாரத்திலேயிருந்து எத்தனைகாலம் இப்படியே அவஸந்நனாகக்கடவேன் என்றும், த்ரிவிக்ரமாபதா3நம் பண்ணினவுன்னைக் காணவாசைப்பட்டுக் கிடையாமையாலே அக்3நிஸகாஶத்தில் மெழுகுபோலே ஸம்ஸாரத்திலே இப்படி எத்தனை காலம் திரியக்கடவேன் என்றும், ஸர்வஸுலப4மாய் நிரதிஶயபோ4க்3யமான உன் திருவடிகளிலே என்னை அருளப்பாடிடுங்காலம் இன்னமணித்தாகாதோ என்றும், யமளார்ஜுநங்களின் நடுவே போன ஸர்வகாரணபூ4தனே என்றும் உன் திருவடிகள் மாநஸாநுப4வ மாத்ரமன்றிக்கே ப்ரத்யக்ஷமாகக் கிட்டுவதென்றோ என்கிற ஆர்த்தியோடே (ப்ரபத்தி முக்2யாதி4காரமான பரமார்த்தியை உடையராய்) (த்ரிவிக்ரமனென்று தொடங்கி தடந்தாமரை யென்கிறதளவாக) "லோக விக்ராந்த சரணௌ ஶரணம் தே(அ)வ்ரஜம் விபோ4" என்று ஸம்ஸாரிகளுடைய தோ3ஷங்களை போ4க்3யமாகக் கொண்டு அவர்களுடைய தண்மை பாராதே "தலை விளாக் கொண்ட எந்தாய்" என்கிறபடியே ஒரு நீராகவும் அவர்கள் தாங்களே ப்ரத்யக்ஷிக்கும்படி வடிவைக் காட்டி திருவடிகளை எல்லாருடைய தலைகளிலும் வைக்கையாலே ஆஶ்ரயணோபயோகி3யான வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸௌலப்4யங்களும், "தே" என்று தன்பேறாகச் செய்கைக்குறுப்பான ஸ்வாமித்வமும், "விபோ" என்று கார்யோபயோகி3யான ஜ்ஞாநஶக்திகளும் த்ரிவிக்ரமாபதா3நத்திலே ப்ரகாஶிக்கையாலே "தெய்வநாயகன் நாரணன் திரிவிக்கிரமன்" "மாண்குறள் கோலப்பிரான்" (திருவாய்மொழி 5-9-6) "அடியை மூன்றை இரந்தவாறும்" (திருவாய்மொழி 5-10-9) "மின்கொள்சேர் புரிநூல் குறளாய் அகல்ஞாலம் கொண்ட

வன் கள்வன்'' (திருவாய்மொழி 6-1-11) என்றும் ஸூரிபோ₄க்₃யனாய் ஸர்வ ஸ்வாமியானவன் த்ரிவிக்ரமாபதா₃நம் பண்ணுகைக்காகப் பெருவிலையனான அழகைச் சிறாங்கித்தனுப₄விக்கலாம்படி வாமநவேஷபரிக்₃ரஹம் பண்ணி மஹாப₃லியுடைய யஜ்ஞவாடத்திலே சென்று மூன்றடியென்றிரந்து ப்₃ரஹ்மசாரி வேஷத்தோடே நிற்கிற மஹாவஞ்சகன், "காண்மின்களுலகீரென்று கண்முகப்பே நிமிர்ந்த" (திருவாய்மொழி 6-3-11) நோக்குவித்₃யை காட்டுவாரைப்போலே லௌகிகர் ப்ரத்யக்ஷிக்கும்படி "அகல்கொள் திசை வையமளந்தமாயன்" (திருவாய்மொழி 6-4-6) "திசைஞாலம்தாவியளந்ததும்" (திருவாய்மொழி 6-5-3) "வையமளந்த மணாளன்" (திருவாய்மொழி 6-6-1) "மண்ணும் விண்ணும் கொண்ட மாயவம்மான்" (திருவாய்மொழி 6-9-2) "ஓரடியால் எல்லாவுலகும் தடவந்த" (திருவாய்மொழி 6-9-6) "தாவிவையம் கொண்ட தடந்தாமரைகட்கே'' (திருவாய்மொழி 6-9-9) என்று விஸ்த்ருதமாய் தி₃க்குகளோடே கூடின பூ₄மியையும் உபரிதநலோகங்களையும் தென்றலுலாவினாப் போலே ஸூகதரமாம்படி எங்குமொக்கப் பரப்பியளந்துகொண்ட நிரதிஶயபோ₄க்₃யமாய் அதிஸூகுமாரமான திருவடிகள். (இணைத்தாமரைகள் காண இமையோரும் வரும்படி சென்றுசேர்ந்த உலகத்திலதத்தே கண்டு) "எந்நாளே நாம் மண்ணளந்த" (திருவாய்மொழி 6-10-6) இத்யாதி₃ திருவுலகளந்தருளின ஸர்வ ஸூலப₄மாய் நிரதிஶயபோ₄க்₃யமாய்ச் சேர்த்தியழகை யுடைத்தான திருவடிகளை நாம் காண்பதெப்போதோ என்று நித்யஸூரிகளும் வந்தநுப₄விக்க ஆசைப்பட்டுவரும்படி "அன்று ஞாலம் அளந்த பிரான் பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை" (திருவாய்மொழி 3-3-8) என்று திருவுலகளந்தருளின ஶ்ரமந்தீர அச்செயலாலே ஸர்வஸ்மாத்பரனானவன் விடாயர் மடுவிலே சேருமாப்போலே உகந்து நிற்கிற "உலகுக்குத் திலதமாய் நின்ற திருவேங்கடம்" (திருவாய்மொழி 6-10-1) என்று ஸ்ரீபூ₄மிப்பிராட்டிக்கு முக்₂யமான ஆப₄ரணமாயிருக்கிற திருமலையிலே கண்டு (அகலகில்லேன் என்று பூர்வவாக்ய ப்ரக்ரியையாலே அநுஸந்தி₄த்தவர்) "அகலகில்லேன் இறையும்" (திருவாய்மொழி 6-10-10) இத்யாதி₃. புருஷகாரபூ₄தையான பெரியபிராட்டியாரை முன்னிட்டு வாத்ஸல்யாதி₃ கு₃ணங்களை அநுஸந்தி₄த்துக் கொண்டு தம்முடைய அநந்யக₃தித்வாநுஸந்தா₄ந பூர்வகமாக பூர்வவாக்யப்ரக்ரியையாலே பூர்ணப்ரபத₃நம் பண்ணினவர் (பிணக்கறத் தொடங்கி வேத₃ப்புனிதவிருக்கை நாவில் கொண்டு) "பூவில் புகையும் விளக்கும் சாந்தமும் நீரும் மலிந்து ஞானவிதி பிழையாமே அச்சுதன் தன்னை மேவித் தொழுதுய்ம்மினீர்கள்" (திருவாய்மொழி 5-2-9) என்கிறதளவாகக் கீழுபதே₃ஶித்த ஸாத்₄யஸாத₄நப₄க்தி ஶ்ரவணத்தாலே அதினுடைய து₃ஷ்கரத்வாதி₃ தோ₃ஷாநுஸந்தா₄நத்தாலும் ஸ்வபாரதந்த்ர்யாநுஸந்தா₄னத்தாலும் ஶோகம் பிறக்கையாலே தம்முடைய ப்ரபத்திநிஷ்டை₂ துணையாம்படியான அதிகாரம் பிறந்தவர்களுக்கு (தந்தனன் களைகணிலம் புகுந்தேனென்று ஸ்வஸித்₃தோ₄பாய நிஷ்டை₂யை உக்த்யநுஷ்டா₂ங்களாலே காட்டுகிறார் என்கிறார்) "தந்தனன் தனதாள் நிழலே" (திருவாய்மொழி 6-3-9) "திருவிண்ணகர் மன்னுபிரான் கழல்களன்றி மற்றோர்

களைகணிலம் காண்மின்களே'' (திருவாய்மொழி 6-3-10) என்கிற தம்முடைய உக்தியாலும் "அடிக்கீழ் அமர்ந்து புகுந்து" (திருவாய்மொழி 6-10-11) என்கிற தம்முடைய அநுஷ்டா₂னத்தாலும் தமக்கிந்த ஸித்₃தோ₄பாயத்திலுண்டான நிஷ்டை₂யை ப்ரகாஶிப்பிக்கிறார் என்கிறார் ஆறாம் பத்தில்.

225. எண்ணிலாக் குணங்கள் பாலதுன்ப வேறவன் மாயாப் பல்யோகு செய்தி யென்னும் ஆஶ்சர்ய ஶக்தியோக₃த்தாலே தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும் ப்ராபகத்வம் புற்பா எறும்பு பகைவனுக்கும் ஆக்கவல்ல ஸர்வஶக்தி பாதமகலகில்லாத தம்மை அகற்றுமவற்றின் நடுவேயிருத்தக் கண்டு நலிவான் சுமடுதந்தாய் ஓவென்று ஸாத₄னபூ₂லமான ஆக்ரோஶத்தோடே பழியிட்டுக் கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியைக் கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கித் தேற்றவொண்ணாதபடி தோற்று ஒன்றி நிற்கப் பண்ணின பூ₂லாத₃ாநம் மற்றும் கற்பாரிழவிலே சுவறிப் பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்துச் சூழவும் பகைமுகம் செய்ய, எடுப்பும் சாய்ப்புமான க்லேஶம் நடக்க உபாயாதி₄காரதே₃ாஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்ரியைக் கேட்க, ஐச்ச₂மாக இருத்தி உறக்கொண்ட ஸ்வபர ப்ரயோஜநத்தை அருளிச்செய்ய, என்சொல்லி எந்நாள் பார் விண்ணீர் இறப்பெதிர் எதுவுமென்கிற உபகார ஸ்ம்ருதியோடே தன்சரிதை கேள்வி யாகாமல் இன்பம் பயக்கவிருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக க₃ாநகோ₃ாஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர் சரமோபாய பரரானார்க்கு நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் உள்ளித் தொழுமின் என்று ப்ராப்ய ஸாத₄நாவதி₄யை ப்ரீதியாலே ப்ரகாஶிப்பிக்கிறார் ஏழாம் பத்தில்.

இப்படி ப்ரபந்நரான இவர்களுடைய அநிஷ்டநிவ்ருத்திபூர்வகமாக இஷ்டப்ராப்தியை பண்ணுகைக்கீடான ஆஶ்சர்யமான ஜ்ஞாநஶக்த்யாதி₃ யுக்தனாகையாலே யதா₂ஜ்ஞாநம் பிறந்தவர்களுக்குக் கொடுக்கக் கடவதான பரமபத₃த்தைத் தானே உபாயமாய்க் கொண்டு கொடுக்குமிடத்தில் ஶத்ருவுக்கும் திர்யக்ஸ்த்தா₂வரங்களுக்குமுட்படக் கொடுக்கவல்ல ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரன் தன் திருவடிகளிலே ஸாங்க₃ப்ரபத₃நம் பண்ணின தம்மை விஷயாந்தரங்களிலே மூட்டி நஶிப்பிக்கக் கடவதான இந்த்₃ரியங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைக்கக் கண்டு விஷண்ணராய்க் கூப்பிட்டு தம் த₃ஶை தாம் பேசமாட்டாதே அபஹ்ருதசித்தராக அவன் தன் விஜயத்தைக் காட்டி த₄ரிப்பிக்க அந்த த₄ரிப்பும் ஸம்ஸாரிகளிழவை நினைத்துச் சுவறிப் பழையவார்த்தியே தலையெடுத்து அநுப₄ாவ்யவிஷயம் ஸ்ம்ருதி விஷயமாய் ஒருமுக₂ஞ்செய்து நலிய நோவுபட்டு இப்படி க்லேஶப்படுகிற இவர் உபாயபூ₄தனாயிருக்கிற உனக்கு ஜ்ஞாநஶக்திகளில் குறைவற்றிருக்க எனக்கு ஆகிஞ்சந்ய அநந்யக₃தித்வங்களிலும் ஆர்த்தியிலும் குறைவற்றிருக்க என்னை ஸம்ஸாரத்திலே வைக்கைக்கடியென் என்று அவனைக் கேட்க அவனும் நமக்கும் நம்மடியார்க்கும் திருவாய்மொழிபாடுகைக்கு வைத்தோங்காணும் என்று தான் இவரை வைத்ததுக்கு ஹேதுவை அருளிச்செய்ய

முதலாழ்வார்கள் வ்யாஸாதி$_3$கள் கவிபாடுகைக்கு உண்டாயிருக்க நம்மைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ளுவதே என்று அவன் பண்ணின உபகாரத்தை அநுஸந்தி$_4$த்து அதுக்குப் ப்ரத்யுபகாரம் தேடிக் காணாமையாலே திருவாறன்விளையிலே அவன் பெரியபிராட்டியாரோடே கூட எழுந்தருளியிருக்கிற விருப்பிலே திருவாய்மொழி பாடி அடிமை செய்யப் பாரித்து அங்கே தம்முடைய திருவுள்ளம் ப்ரவணமாகையாலே பரமபத$_3$த்திலிருப்பை உபேக்ஷிக்கும்படியான ப்ரகாரத்தை உடையரான இவர் கீழ் தம்முடைய உபாயத்தில் நிஷ்டை$_2$யை வெளியிடும்படி புகுர நின்றவர்களுக்கு அந்த திருவாறன்விளையில் நின்றருளினவனுடைய திருவடிகளே உபாயம் அத்தே$_3$ஶமே ப்ராப்யமென்று தாமறுதியிட்ட ப்ராப்யப்ராபகங்களினுடைய முடிவைத் தம்முடைய திருவுள்ளத்தில் உகப்பாலே வெளியிடுகிறார் என்கிறார்.

(எண்ணிலாக் கு$_3$ணங்கள் இத்யாதி$_3$) ஆஶ்சர்யயோக$_3$த்தாலே "எண்ணிலாப் பெருமாயனே" (திருவாய்மொழி 7-1-1) "குணங்கள் கொண்ட மூர்த்தியோர் மூவராய்ப் படைத்தளித்துக் கெடுக்கும்" (திருவாய்மொழி 7-1-11) "பாலதுன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்" (திருவாய்மொழி 7-2-7) "ஊழிதோறூழி உருவும் பேரும் செய்கையும் வேறவன் வையங்காக்கும்" (திருவாய்மொழி 7-3-11) "மாயா வாமனனே" (திருவாய்மொழி 8-8-1) "உள்ளப்பல்யோகு செய்தி" (திருவாய்மொழி 7-8-4) என்று எண்ணிறந்த கல்யாணகு$_3$ணங்களையுடையனாய் ஸத்வாதி$_3$கு$_3$ணப்ரசுரமான மூர்த்திகளைக் கொண்டு ஸ்ருஷ்ட்யாதி$_3$களைப் பண்ணுமவனாய் இடமறிந்து ஸுக$_2$து$_3$:க்க$_2$ங்களை ஸங்கல்பிக்குமவனாய் ஆஶ்ரிதரக்ஷணார்த்த$_2$மாகக் கல்பந்தோறும் திருமேனியும் சேஷ்டிதங்களும் வேறுபடக் கொள்ளுமவனுமாய் ஆஶ்சர்யசேஷ்டிதங்களை உடையவனுமாய் ஸர்வருடையவும் ரக்ஷணோபசிந்தை பண்ணுமவனுமாய் இப்படி உபாயக்ருத்யத்துக்கு அபேக்ஷிதமான ஆஶ்சர்யஶக்தி யோக$_3$த்தை உடையவனாகையாலே *(தெளிவுற்றவர்க்கு ஏற்றரும் வைகுந்தத்தை அருளும்ப்ராபகத்வம் புற்பாவெறும்பு பகைவனுக்குமாக்க வல்ல ஸர்வஶக்தி)* "தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு இன்பக் கதிசெய்யும் தெளிவுற்ற கண்ணன்" (திருவாய்மொழி 7-5-11) "ஏற்றரும் வைகுந்தத்தை அருளும்" (திருவாய்மொழி 7-6-10) என்று ப்ராப்யமும் ப்ராபகமும் தானேயென்று அத்$_4$யவஸித்துப் பின்பு நாட்டார் செயல் கண்டாதல் உக்த்யாபா$_4$ஸங்கள் கண்டாதல் பிற்காலியாதே நின்றவர்களுக்கு நிரதிஶயாநந்த$_3$மாய் ஒருவராலும் ஸ்வயத்நத்தாலே ப்ராபிக்கவொண்ணாதிருக்கிற ஸ்ரீவைகுண்ட$_2$த்தைத் தன்னருளாலே கொடுக்கைக்குத் தான் உபாயமாமிடத்தில் "புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே நற்பாலுக்குய்த்தனன்" (திருவாய்மொழி 7-5-1) என்றும் "நாட்டை அளித்துய்யச் செய்து" (திருவாய்மொழி 7-5-2) என்றும் "சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடி தாட்பாலடைந்த" (திருவாய்மொழி 7-5-3) என்றும் முதலிலே ஜ்ஞாநலேஶமில்லாத திர்யக் ஸ்தா$_2$வரங்களுக்கும் ப்ராதிகூல்யத்திலே முதிர நின்ற ஶத்ருவுக்கும் கொடுக்க வல்லனாம்படி ஸர்வஶக்தியுக்தனான ஸர்வேஶ்வரன் *(பாதமகலகில்லாத தம்மை)* "அடியேனுனபாதம் அகலகில்லேனிறையும்" (திருவாய்மொழி 6-10-9) என்று தன்

திருவடிகளை க்ஷணகாலம் அகல ஶக்தரன்றியிலே "அடிக்கீழமர்ந்து புகுந்தேனே" (திருவாய்மொழி 6-10-10) என்று ஶரணம் புகுந்த தம்மை (அகற்றுமவற்றின் நடுவே இருத்தக் கண்டு) "அகற்ற நீ வைத்த மாய வல்லைம்புலன்களாமவை" (திருவாய்மொழி 5-7-8) என்று ப₄க₃வத்₃விஷயத்தைக் கிட்டாதபடி அகற்றவற்றான இந்த்₃ரியங்களின் நடுவே வைக்கக் கண்டு (நலிவான் சுமடு தந்தாய் ஓவென்று ஸாத₄நப₂லமான ஆக்ரோஶத்தோடே பழியிட்டு) "நலிவான் இன்னம் எண்ணுகின்றாய்" (திருவாய்மொழி 7-1-1) "அன்புருகி நிற்கும் அது நிற்கச் சுமடு தந்தாய்" (திருவாய்மொழி 7-1-10) "விண்ணுளார் பெருமானேயோ" (திருவாய்மொழி 7-1-5) "முன் பரவை கடைந்தமுதம் கொண்ட மூர்த்தீயோ" (திருவாய்மொழி 7-1-10) என்று வ்யவதா₄ந விளம்ப₃மில்லாத உபாயத்தைக் கீழே பரிக்₃ரஹிக்கையாலே ப்ரதிகூலமான ஸம்ஸாரத்திலே பொருந்தாமையோடே தம் தலையிலுள்ளதையும் அவன் தலையிலே ஏறிடும்படியான ப்ராப்தியை யுணர்ந்தவாராகையாலே "ஶாகா₂ம்ருகா ராவணஸாயகா₃ர்த்தா₂ ஜக்₃முஶ்ஶரண்யம் ஶரணம் ஸ ராமம்" (ரா.யு. 59-44) என்கிறபடியே இவரும் அவன் பரமபத₃த்தில் இருப்புங் குலைந்து வந்து விஷயீகரிக்கும்படி பெரிய ஆக்ரோஶத்தோடே அவன்மேலே பழியாம்படி கூப்பிட்டு (கங்குலும் பகலும் அடைவற்ற ஆர்த்தியை கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கி) "கங்குலும் பகலும் கண்டுயில் அறியாள்" (திருவாய்மொழி 7-2-1) "இட்டகால் இட்டகையளாயிருக்கும்" (திருவாய்மொழி 7-2-4), "சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்" (திருவாய்மொழி 7-2-5) என்று தி₃வாராத்ர விபா₄க₃மற அரதியாய்த் துடிக்கும்படி அடைவுகெட்ட ஆர்த்தியை "திருவரங்கத்தாய் இவள் திறத்து என் செய்கின்றாயே" (திருவாய்மொழி 7-2-1) "என் செய்திட்டாய்" (திருவாய்மொழி 7-2-3) "என் சிந்தித்தாயே" (திருவாய்மொழி 7-2-4) "என் செய்கேன் என் திருமகட்கே" (திருவாய்மொழி 7-2-8) என்று திருவாசலிலே பெண்பிள்ளையைப் பொகட்டுக் கூச்சுமுறை தவிர்ந்து அவன்தன்னையே கேட்டுக் கூப்பிடும்படியான ஆர்த்தியாலே வந்த அவஸ்தா₂பே₄தத்தையுடையராய் (தேற்றவொண்ணாத தோற்று) "அன்னையர்காள் என்னைத் தேற்ற வேண்டா கண்ணபிரானுக்கென் பெண்மை தோற்றேன்" (திருவாய்மொழி 7-3-9) என்று பார்ஶ்வஸ்த₂ராலும் தேற்றி த₄ரிப்பிக்க வொண்ணாதபடி அபஹ்ருத சித்தராய்க் கொண்டு பாரதந்த்ர்யத்தையுமிழந்து (ஒன்றி நிற்கப் பண்ணின ப₂லாதா₃நம்) இப்படியிருக்கிற இவரை த₄ரிப்பிக்கைக்காக ஈஶ்வரன் தன்னுடைய விஜயபரம்பரைகளைக் காட்டிக் கொடுக்கக் கண்டு ப்ரீதராய் "குன்றமெடுத்தபிரானடியாரொடும் ஒன்றி நின்ற சடகோபன்" (திருவாய்மொழி 7-4-11) என்று அவனுடைய விஜய பரம்பரைகளிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களோடே ஒரு சேர்த்தியாக நிற்கும்படி ப₂லாதா₃நம் பண்ணி (மற்றும் கற்பாரிழவிலே சுவறி) "கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" (திருவாய்மொழி 7-5-1) என்று "அபவரகே ஹிரண்யநிதி₄ம் நிதா₄ய உபரிஸஞ்சரந்தோ ந த்₃ரக்ஷ்யந்தி" என்கிறபடியே அவதாரப்ரயுக்த ஸௌலப்₄யத்தை உடையனாய் ப்ரியபரனுமாய் தான் அங்கீகரிக்க நினைத்தாரை நிர்ஹேதுகமாக மோக்ஷபர்யந்தம் நடத்துமவனுமாயிருக்கு மிவனை ஸம்ஸாரிகள் இழப்பதே

என்று அவர்களுடைய இழவை அநுஸந்தி₄த்து அதிலே அந்த ப₂லாதா₃நமும் சுவறி (பழைய தனிமைக் கூப்பீடு தலையெடுத்து) "பாமரு மூவுலகும் படைத்த பற்பநாபாவோ" என்று தொடங்கி "தனியேன் தனியாளாவோ" (திருவாய்மொழி 7-6-1) என்று அவனுடைய ஜகத்காரணத்வாதி₃களைச் சொல்லிக் கூப்பிடும்படி முன்புற்றை உண்ணிலாவியில் தனிமைக் கூப்பீடே மீண்டும் தலையெடுத்து (சூழவும் பகை முகஞ்செய்ய) "சூழவும் தாமரை நாண்மலர்போல் வந்து தோன்றும் கண்டீர் இணைக்கூற்றங்கொலோ அறியேன்" (திருவாய்மொழி 7-7-1) "கண்ணன் கோளிழை வாண்முகமாய்க் கொடியேனுயிர் கொள்கின்றதே" (திருவாய்மொழி 7-7-8) என்று முன்பு அநுபூ₄தமான அவனுடைய முக₂த்தில் அவயவஶோபை₄யானது விஶத₃ஸ்ம்ருதிவிஷயமாய்க் கொண்டு பாதிக்க நலிவுபட்டு (எடுப்பும் சாய்ப்புமான க்லேஶம் நடக்க) தம்முடைய ஆர்த்தியாலே வருகிற எடுப்பும் அவனுடைய கு₃ணாநுஸந்தா₄நத்தாலே வந்த சாய்ப்புமாய்க் கொண்டு க்லேஶமானது உருவ நடக்க (உபாயாதி₄கார தோ₃ஷமொழிய மாயங்கள் செய்து வைத்த வைசித்ரியைக் கேட்க) உபாயபூ₄தனாயிருக்கிறவுனக்கு அஜ்ஞாந அஶக்திகளாகிற தோ₃ஷமின்றிக்கே யிருக்க ஶரணாக₃தனான எனக்கு ஆகிஞ்சந்யாநந்யக₃தித்வங்களும் ஆர்த்தியும் உண்டாயிருக்கையாலே அதி₄காரத்திலே தோ₃ஷமின்றிக்கே இருக்க "பாசங்கள் நீக்கி இத்யாதி₃ மாயங்கள் செய்து வைத்தி" (திருவாய்மொழி 7-7-5) என்று ஸம்ஸாரத்தில் ஸங்க₃த்தை வாஸநையோடே அறுத்து உனக்கநந்யார்ஹஶேஷமாக்கிக் கொண்டு பின்பு என்னை ஸம்ஸாரத்திலே வைத்த ஆஶ்சர்யத்தை அருளிச்செய்யவேணுமென்று கேட்க (ஐச்சி₂கமாக இருத்தியறக்கொண்ட ஸ்வபரப்ரயோஜநத்தை அருளிச் செய்ய) அவன் நமக்கும் நம்முடையார்க்கும் உம்மைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொள்ளுகைக்காக நம்முடைய இச்சை₂யாலே வைத்தோம் காணும் என்று வைத்ததுக்கு ஹேதுவை அருளிச்செய்ய (என் சொல்லி எந்நாள் பார்விண்ணீரிறப்பெதிர் எதுவும் என்கிற உபகாரஸ்ம்ருதியோடே) வ்யாஸ பராஶர வால்மீகி ப்ரப்₄ருதிகள் முதலாழ்வார்களளவுண்டாயிருக்கத் தம்மைக் கொண்டு கவி பாடுவித்துக் கொண்ட உபகாரத்தை அநுஸந்தி₄த்து "என் சொல்லி நிற்பனோ" "எந்நாள் சிந்தித்தார்வனோ" (திருவாய்மொழி 7-9-7) "பார் விண்ணீர் முற்றுங் கலந்து பருகிலுமார்வனோ" (திருவாய்மொழி 7-9-7) "இறப்பெதிர்காலம் பருகிலுமார்வனோ" (திருவாய்மொழி 7-9-9) என்று எங்ஙனே நான் தரையில் கால் பாவுவது அவ்வுபகாரத்தைக் காலதத்வமுள்ளதனையும் அநுஸந்தி₄த்தாலும் பர்யாப்தனாகிறிலேன். ஸகலஸ்த₂லங்களிலு முண்டாயிருக்கிற ஸகல சேதநருடைய வாகா₃த்₃யுபகரணங்களை நானொருவனுமே உடையேனுமாய் காலத்ரயத்திலும் பேசியநுப₄வித்தாலும் பர்யாப்தனாகிறிலேன். "உதவிக்கைம்மாறு இத்யாதி₃. எதுவுமொன்றுமில்லை செய்வதிங்குமங்கே" (திருவாய்மொழி 7-9-10) இதுக்கு ப்ரத்யுபகாரம் பண்ணுமிடத்தில் ஆத்மாவும் ததீ₃யமாயறிகையாலே உப₄யவிபூ₄தியிலும் செய்யலாவது ஒன்றில்லை என்னும்படியான உபகாரஸ்ம்ருதியை உடையராய் (தன்சரிதை கேள்வியாகாமல்

இன்பம் பயக்கவிருந்த நிலத்தேவர் குழுவிலே பாட்டுக் கேட்பிப்பதாக கா$_3$நகோ$_3$ஷ்டி$_2$யையும் தேவபிரானறிய மறந்தவர்) "செம்பவளத் திரள்வாய்த் தன்சரிதை கேட்டான்" (பெருமாள் திருமொழி 10-8) என்று நாச்சியாரையொழிய பெருமாள்தாமே தனியிருந்த இடத்தே ஸ்ரீராமாயணம் கேட்பித்த குஶலவர்களைப் போலன்றிக்கே "இன்பம் பயக்கவெழில் மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை இன்பம் பயக்க நிலத்தேவர் குழுவணங்கும் சிந்தைமகிழ் திருவாறன்விளை" (திருவாய்மொழி 7-10-1) என்று ஆநந்த$_3$மயனான அவன்தனக்குமாநந்த$_3$வர்த$_4$கையான பிராட்டியும் ஸர்வேஶ்வரனுமான சேர்த்தியிலே லோகமடங்க வாழும்படி உப$_4$ய விபூ$_4$திநாயகத்வத்தால் வந்த வேறுபாடெல்லாம் தோற்ற எழுந்தருளியிருக்கிற அவனை கரணத்ரயத்தாலும் அநுப$_4$விக்கிற பூ$_4$ஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரட்சியையுடைத்தான திருவாறன்விளையிலே ப்ரத்யுபகாரமாகத் திருவாய்மொழி பாடி அடிமை செய்யப் பாரித்து (கா$_3$நகோ$_3$ஷ்டியையும் தேவபிரானறிய மறந்தவர்) "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரானறியும் திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கற்றபின்" (திருவாய்மொழி 7-10-10) என்று அந்தத் திருவாறன் விளையிலே தம்முடைய நெஞ்சு ப்ரவணமாகையாலே "ஹாவு ஹாவு ஹாவு" (தைத்திரியோபநிஷத்) என்று ஸாமகா$_3$நம் பண்ணுகிற பரமபத$_3$த்தில் கோ$_3$ஷ்டியையும் அயர்வறுமமரர்கள் அதிபதியாய் ஸர்வருடைய ஹ்ருத$_3$யமும் அறியும்படி ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனாயிருக்கிற அவனும்கூட அறியும்படி விஸ்மரித்தவிவர் (சரமோபாயபரரானார்க்கு) கீழ் தாமருளிச்செய்யக் கேட்ட ஸித்$_3$த$_4$ஸாத$_4$நத்தாலே தத்பரரானார்க்கு (நீணகரமது துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் உள்ளித்தொழுமின் என்று ப்ராப்ய ஸாத$_4$நாவதி$_4$யை ப்ரீதியாலே ப்ரகாஶிப்பிக்கிறார்) "நீணகரமதுவே மலர்ச் சோலைகள் சூழ் திருவாறன்விளை வாணனை யாயிரந்தோள் துணித்தான் சரணன்றி மற்றொன்றிலம் உள்ளித் தொழுமின் தொண்டீர்" (திருவாய்மொழி 7-10-7) என்று நிரதிஶய போ$_4$க்$_3$யமான திருவாறன்விளையாகிற மஹாநக$_3$ரமே ப்ராப்யம், அங்கெழுந்தருளியிருக்கிற உஷாநிருத்$_3$த$_4$ க$_4$டகனானவனுடைய திருவடிகளே ப்ராபகம், இவ்வர்த்த$_2$த்தில் மாறாட்டமில்லை, ஆகையால் இவ்வர்த்த$_2$த்தில் ருசியுடையராய் பு$_3$த்$_3$தி$_4$ பண்ணுங்கோள் என்று ப்ராப்யத்தினுடைய அவதி$_4$ ததீ$_3$யமென்றும் ப்ராபகத்தினுடைய அவதி$_4$ அர்ச்சாவதாரஸுலப$_4$னானவன் திருவடிகளே என்றும் இவ்வர்த்த$_2$த்தைத் தம்முடைய திருவுள்ளத்திலுகப்பாலே வெளியிடுகிறார் என்கிறார்.

௨௨௬. தேவிமார் பணியா நேர்பட்ட நல்ல கோட்பாடு என்னும்படி ஶக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதி$_3$களை யுடைய ஸத்யகாமன் கொண்ட வாக்$_3$வ்ருத்தியையும் மறப்பிக்கும் கலக்கமும் ஶங்கையும் அச்சமும்தீர, தலைச் சிறப்பத் தங்கவதில் க்ருதஜ்ஞதாபூ$_2$ல ப்ரத்யுபகாரமாக வேந்தர் தலைவன் கங்யகாத$_3$ாநம் போலே ஆரத்தழுவி அறவிலை செய்த ஆத்ம லாப$_4$த்தாலே அதீவ விளங்கிப் பணைத்து ஜங்மபாஶம்விட்டு ஆத்$_3$வாரம் ஆளுமாளாரென்று பரிந்து அநுரூபனோடே அமர்ந்து பிரிவில்

க்ருபணத3ஶையாகத் துவரும் ஸீதா கு3ணங்களாலே ப்ரீதி வர்த்3தி4த்து, தித்திக்கவுள்ளே உறைந்து கண்டு கொண்டிருந்து அமாநுஷபே4ாக3மாக்கினவன் மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினை நோய் மறுவலிடாமல் சிறியேனென்றதின் பெருமையைக் காட்ட தே3ஹாதி3களில் பரமாய் நின்றுநினைக்கில் லக்ஷ்மீதுல்யமாய் அவர்க்கே குடிகளாம் பரதந்த்ர ஸ்வரூபத்தை அநுஸந்தி4த்தவர் ஸ்வஸாத4நஸாத்4யஸ்த2ர் இருகரையராகாமல் மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்தென்று ப்ராப்யைகபரராக்குகிறார் எட்டாம் பத்தில்.

இப்படிப்பட்ட ஶக்தி தன்னாலே நித்யமாக கல்பிதமான போ4க்3ய போ4கோ3பகரண போ4க3ஸ்தா2நங்களை உடையனாகையாலே ஸத்யகாமனான ஸர்வேஶ்வரன் கீழ் தம்மைக் கொண்ட வாசிகமான அடிமையையும் விஸ்மரித்து ப4க3வதலாப4த்தாலே கலங்கி அவனுடைய கு3ணங்களிலும் ஸ்வரூபத்திலும் அதிஶங்கை பண்ணி ஸம்ஸாரதோ3ஷாநுஸந்தாநத்தா4லே அஞ்சின இவரை த4ரிப்பிக்கைக்காக பூர்வோக்த உபகாரத்தை ஸ்மரிப்பிக்க அத்தாலே க்ருதஜ்ஞராய் அதுக்குப் ப2லமாக அவர் ஆத்மஸமர்ப்பணம் பண்ண அத்தாலே பெறாப்பேறு பெற்றானாய் இவர்க்குண்டான ஆத்மகு3ணங்களாலே ப்ரீதனாய் இவர் திருவுள்ளத்திலேயிருந்து நிரதிஶயமாக அநுப4விப்பித்து இவர் இனி அயோக்3யரென்று அகலாதபடி ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை ப்ரகாஶிப்பிக்க அதனுடைய யாதா2த்ம்யத்தை அநுஸந்தி4த்த இவர் கீழ் தம்முடைய ப்ராப்யப்ராபகங்களைக் கேட்டு உகந்தவர்களுக்கு ப்ராப்யமொன்றும் ப்ராபகமொன்றுமாகாதபடி ப்ராப்யமொன்றிலுமே தத்பரராக்குகிறார். (தேவிமார் பணியா நேர்பட்ட நல்லகோட்பாடென்னும்படி ஶக்தியாலே நித்யமாகக் கல்பித்த பத்நீ பரிஜநாதி3களையுடைய ஸத்யகாமன்) "தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்" (திருவாய்மொழி 8-1-1) "பணியாவமரர் பணிவும் பண்பும் தாமேயாம் அணியாராழியும் சங்குமேந்துமவர்" (திருவாய்மொழி 8-3-6) "நேர்பட்ட நிறைமூவுலகுக்கும் நாயகன்" (திருவாய்மொழி 8-9-11) "நல்லகோட்பாட்டுலகங்கள் மூன்றினுள்ளும் தான்நிறைந்த அல்லிக்கமலக் கண்ணன்" (திருவாய்மொழி 8-10-11) என்று லக்ஷ்மீப்3ரப்4ருதி தி3வ்யமஹிஷிகளுக்கு வல்லப4னாய், நித்யஸூரிகளை அடிமை கொள்ளுமவனுமாய், அவர்களுடைய ஸ்தோத்ராதி3களுக்கு விஷயபூ4தனுமாய், போ4க்3யாதி3களால் குறைவற்றுக் கட்டளைப் பட்ட லோகத்ரயத்துக்கும் நிர்வாஹகனுமாய் இருக்குமென்கையாலே கீழ்ச்சொன்ன ஶக்திதன்னாலே நித்யமாகக் கல்பிக்கப்பட்ட பத்நீபரிஜநஸ்தா2ந போ4க்3ய போ4கோ3பகரணங்களை உடைய ப்ரக்ருதியாலே தனக்கென்று தேடவேண்டாதபடி நித்யமான போ4க3த்தை உடையனாகையாலே ஸத்யகாமனான ஸர்வேஶ்வரன். (கொண்ட வாக்3வ்ருத்தியை மறப்பிக்கும்) கீழும் கைக் கொண்டு கவிபாடுவித்துக் கொள்ள வைத்தோம் என்று அவன் கொண்ட வாசிகமான அடிமையையும் விஸ்மரிப்பிக்கவற்றான (கலக்கமும் ஶங்கையும் அச்சமும் தீர) "காணுமாறருளாய் என்றென்றே கலங்கி" (திருவாய்மொழி 8-1-2) "அறிவொன்றும்

சங்கிப்பன்'' (திருவாய்மொழி 8-1-7) ''நரகம் நானடைதல் நன்றுமஞ்சுவன்'' (திருவாய்மொழி 8-1-9) என்று ப₄க₃வத₃லாப₄த்தாலே கலங்கி ப₄க₃வத் கு₃ணங்களிலும், ஸ்வரூபத்திலும் அதிஶங்கை பண்ணி ஸம்ஸாரதோ₃ஷாநுஸந்தா₄னத்தாலே அஞ்சின இவர்க்கு அவையும் நிவ்ருத்தமாம்படி. (தலைச்சிறப்பத் தந்தவதில் க்ருதஜ்ஞதா ப₂லப்ரத்யுபகாரமாக) ''ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்து'' (திருவாய்மொழி 5-7-10) ''தந்தனன் தனதாள் நிழலே'' (திருவாய்மொழி 6-3-9) என்று உபாயமாக முன்னிவர்க்கு உபகரித்த தன் திருவடிகளை ''தாள்களை எனக்கே தலைத்தலைச் சிறப்பத் தந்த'' (திருவாய்மொழி 8-1-10) என்று விஶத₃ஸ்ம்ருதி விஷயமாக்க அத்தை அநுஸந்தி₄த்து அத்தால் வந்த க்ருதஜ்ஞதைக்குப் ப₂லம் ஸத்₃ருஶப்ரத்யுபகாரம் பண்ணுகையாலே ''உதவிக்கைமாறு என்னுயிர் என்னவுற்றெண்ணில் அதுவுமற்றாங்கவன்றன்னது'' (திருவாய்மொழி 7-9-10) என்று கீழ் ப்ரத்யுபகாரமாக ஆத்மாவை ஸமர்ப்பிக்கத் தேடி ப₄க₃வதீ₃யத்வாகார அநுஸந்தா₄னத்தாலே நிவ்ருத்தரானவர் இங்கு உபகாரஸ்ம்ருதியாலே வந்த கலக்கத்தாலே (வேந்தர் தலைவன் கந்யகாதா₃நம் போலே ஆரத்தழுவியறவிலை செய்த) ''வேந்தர் தலைவன் சனகராசன்தன் வேள்வியில் கண்டாருளர்'' (பெரியாழ்வார் திருமொழி 4-1-2) என்கிறபடியே க்ஷத்ரியாக்₃ரேஸரனாய் ஜ்ஞாநாதி₄கனான ஜநகசக்ரவர்த்தி மாஹேஶ்வரமான த₄நுர்ப₄ங்கம் பண்ணின பெருமாளுடைய ஆண்பிள்ளைத்தனத்தைக் கண்டு கலங்கி ''விஷ்ணோஶ்ரீரநபாயிநீ'' (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-17) ''அநந்யா ராக₄வேணாஹம் பா₄ஸ்கரேண ப்ரபா₄ யதா₂'' (ரா.) என்கிறபடியே ப்ருத₂க்ஸித்₃தி₄ அநர்ஹையாய் ததர்த்த₂மாக ''ராக₄வத்வே அப₄வத் ஸீதா'' (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-9-144) என்றவனுடைய அவதாராநுகூலமாக அவதரித்து நாச்சியாரை ''இயம் ஸீதா மம ஸுதா ஸஹத₄ர்மசரீ தவ ப்ரதீச்ச சைநாம் ப₄த்₃ரம் தே பாணிம் க்₃ருஹ்ணீஷ்வ பாணிநா'' (ரா.பா. 73-26) என்று கந்யகாதா₃நமாக ஸமர்ப்பித்தாப்போலே ''பேருதவிக் கைம்மாறா தோள்களை ஆரத் தழுவி என்னுயிரை அறவிலை செய்தனன்'' (திருவாய்மொழி 8-1-10) என்று ஸமர்ப்பணோந்முக₂ரான வளவிலே தாளும் தோளுமாகப் பணைத்தவந்த ஆத்மவஸ்துவை அவனுக்கு ப்ரத்யுபகாரமாக ஸமர்ப்பிக்க ஆத்மலாப₄த்தாலே தன்னதல்லாததொன்றை அதீவ விளங்கிப் பணைத்து அவனும் ''அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா'' (ரா.ஆ. 37-18) என்று அவளைப் பெற்று விளங்கினாப்போலே ''சோதீ'' (திருவாய்மொழி 8-1-10) என்றிவர் பேசும்படி இவருடைய ஆத்மலாப₄த்தாலே தன்னதல்லாததொன்றைப் பெற்றாப் போலே அதீவ உஜ்ஜ்வலனாய் ''தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய் தாள்களாயிரத்தாய் பேர்களாயிரத்தாய்'' (திருவாய்மொழி 8-1-10) என்னும்படி அந்த ப்ரீதியாலே ஶதஶாக₂மாகப் பணைத்து (ஜந்மபாசம் விட்டு ஆத்₃வாரம் ஆளுமாளார் என்று பரிந்து அநுரூபனோடேயமர்ந்து பிரிவில் க்ருபணத₃ஶையாகத் துவரும் ஸீதா கு₃ணங்களாலே ப்ரீதி வர்த்தித்து) அந்த நாச்சியார் பெருமாளைக் கைப்பிடித்த பின்பு ஜந்மபூ₄மியான மிதி₂லையை நினையாதாப்போலே ''பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்ற

விட்டு'' (திருவாய்மொழி 8-2-11) என்கிறபடியே இவரும் திருவடிகளைக் கிட்டுகையிலுண்டான ஸங்க3த்தாலே புறம்புண்டான வலிய ஸங்க3ங்களை நிஶ்ஶேஷமாக விட்டு, "ஆத்3வாரமநுவவ்ராஜ மங்க3ளாந்யபி த3த்3யுஷீ" (ரா.அ. 14-21) என்று அவள் பெருமாளுடைய அழகுக்குப் பரிந்து மங்க3ளாசாஸனம் பண்ணினாப்போலே "ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம்" (திருவாய்மொழி 8-3-3) என்று இவரும் ரக்ஷணபரிகரமாய் அஸாதா4ரணமான தி3வ்யாயுத4ங்களும் சுமையாம்படியான அவனுடைய ஸௌகுமார்யத்தைக் கண்டு பரிந்து பெருமாளுடைய ஶௌர்யாதி3களைக் கண்டு துல்யஶீலேத்யாதி3ப்படியே ஶீலாதி3களால் "அநுரூபஸ்வைநாத:" என்கிறபடியே அவள்தனக்கு அநுரூபமான பெருமாளோடே பொருந்தினாப்போலே இவரும் "திருச்சிற்றாற்றங்கரை செல்சார்வே" (திருவாய்மொழி 8-4-1) என்று தொடங்கி "அமர்ந்த மாயோனை முக்கணம்மானை நான்முகனை யமர்ந்தேனே" (திருவாய்மொழி 8-4-4) என்று அவனுடைய ஶௌர்யாதி3களையநுஸந்தி4த்து நிர்ப்ப4யராய்ப் பொருந்தி யநுப4வித்து விஶ்லேஷத3ஶையில் அவள் "ஹிமஹதநளிநீவ நஷ்டஶோபா4 வ்யஸநபரம்பரயாதி3பீட்3யமாநா ஸஹசரரஹிதேவ சக்ரவாகீ ஜநக ஸுதா க்ருபணாம் த3ஶாம் ப்ரபந்நா" (ரா.ஸு.16-30) என்று நிர்க்4ருணருமிரங்கும்படியான த3ஶையை ப்ராப்தையானாப் போலே இவரும் "காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து" (திருவாய்மொழி 8-5-2) அவனைக் காண ஆசைப்பட்டு எங்கும் பார்த்துக் கூப்பிடுகையாலே நீர்ப்பசையறும்படியாக உலர்ந்து இப்படிப்பட்ட ஜநககுல ஸுந்த3ரியான நாச்சியாருடைய கு3ணங்களை இவர்பக்கலிலே காண்கையாலே நிரதிஶயப்ரீதியுக்தனாய் (தித்திக்க உள்ளே உறைந்து) "உள்ளுந்தோறும் தித்திப்பான் ஒருக்கடுத்துள்ளே உறையும்பிரான்" (திருவாய்மொழி 8-6-3) என்று அநுஸந்தா4ந த3ஶைகள் தோறும் நிரதிஶயபோ4க்3யனாய்க் கொண்டு இவர் திருவுள்ளத்திலே நித்யவாஸம் பண்ணி (கண்டுகொண்டிருந்து அமாநுஷபோ4க3மாக்கினவன்) "இருந்தான் கண்டு கொண்டு" என்று த3ரித்3ரனானவனுக்கு நிதி4லாப4முண்டானாப்போலே இவரைப் பெற்ற ப்ரீதியாலே பார்த்துக் கொண்டிருந்து "ஸமா த்3வாதஶ தத்ராஹம் ராக4வஸ்ய நிவேஶநே, பு3ஞ்ஜாநாமாநுஷாந் போ4கா3ந் ஸர்வகாம ஸம்ருத்3தி4நீ" (ரா.ஸு.33-17) என்று அவன் விஶ்லேஷித்த த3ஶையிலும் வ்ருத்தகீர்த்தநம் பண்ணி த4ரிக்கலாம்படி அவளை அநுப4விப்பித்தாப்போலே இவரையும் "தருந்தானருள்தானினி யானறியேன்" (திருவாய்மொழி 8-7-2) என்றும், "மூவுலகும் பொருளல்ல" (திருவாய்மொழி 8-7-3) என்றும் "செவ்வாய் முறுவலோடு எனதுள்ளத்திருந்த அவ்வாயன்றி யானறியேன் மற்றருளே" (திருவாய்மொழி 8-7-7) என்றும் இவர்தாமே பேசும்படி இவரை அப்ராக்ருதபோ4க3ங்களை பு4ஜிப்பித்தவன் (மூன்று தத்துக்குப் பிழைத்த அருவினைநோய் மறுவலிடாமல் சிறியேன் என்றதின் பெருமையைக் காட்ட) "மருள்தானீதோ" (திருவாய்மொழி 8-7-3) "பின்னை யார்க்கவன்தன்றைக் கொடுக்கும்" (திருவாய்மொழி 8-7-6) "அருள்தானினி யானறியேன்" (திருவாய்மொழி 8-7-3) என்கிற உகப்புச் செல்லா நிற்கச் செய்தே "சிறியேன்" (திருவாய்மொழி 8-7-8)

என்று தம்முடைய சிறுமையை அநுஸந்தி$_3$க்க அவ்வளவில் வளவேழுலகில் "களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா என்பன் அருவினையேன்" (திருவாய்மொழி 1-5-1), "வணங்கினால் உன் பெருமை மாசூணாதோ மாயோனே" (திருவாய்மொழி 1-5-2) என்றும், "அடியேன் காண்பானலற்றுவன் இதனில் மிக்கோர் அயர்வுண்டே" (திருவாய்மொழி 1-5-7) என்றும், "சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்" (திருவாய்மொழி 1-7-1) என்றும் இப்படி மும்மறுவலிட்ட அயோக்$_3$யதாநுஸந்தா$_4$ந வ்யாதி$_4$க்குத் தப்பின இவர் மீண்டும் மறுவலிட்டு "சிறியேன்" (திருவாய்மொழி 8-7-8) என்று இவர் அகலில் செய்வதென் என்று கலங்கி, இவர் இப்படி அகலுகிறது வந்தேறியான அசித்ஸம்ப$_3$ந்த$_4$த்தையிட்டு இது நமக்கநர்ஹமென்றிறே இதினுடைய யதா$_2$வஸ்தி$_2$த வேஷத்தைக் கண்டால் அகலவொண்ணாதே என்று நமக்கு ஸ்ரீகௌஸ்துப$_4$த்தோபாதி$_3$ தேஜஸ்கரமாய் ஸ்ரீஸ்த$_2$நம் போலே போ$_4$க்$_3$யமாய் அப்ராக்ருதாதி$_3$களைப்போலே(?) அப்ருத$_2$க்ஸித்$_3$த$_4$மாய் அநந்யார்ஹ ஶேஷமாய்க் காணும் உம்முடைய ஆத்மவஸ்து இருப்பது என்று ஸ்வரூபவைலக்ஷண்யத்தைக் காட்டிக் கொடுக்க (தே$_3$ஹாதிகளில் பரமாய்) அவ்வாத்மவஸ்துவை "யானும் தானாய் ஒழிந்தானை" (திருவாய்மொழி 8-8-4) என்கிறபடியே அவனுடைய அபி$_4$மாநாந்தர்பூ$_4$தமாம்படி அப்ருத$_2$க்ஸித்$_3$த$_4$ விஶேஷணமாய் "தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகித் தித்தித்து" (திருவாய்மொழி 8-8-4) என்னும்படி ஆநந்த$_3$ரூபமாகையாலே அவனுக்கு நிரதிஶயபோ$_4$க்$_3$யமாய் "சென்று சென்று பரம்பரமாய்" (திருவாய்மொழி 8-8-5) என்கிறபடியே தேஹேந்த்$_3$ரியாதி$_3$ விலக்ஷணமாய் (நின்று நினைக்கில் லக்ஷ்மீதுல்யமாய்) "நினையும் நீர்மையதன்று இவட்கிது நின்று நினைக்கப் புக்கால்" (திருவாய்மொழி 8-9-5) "அருமாயன்பேரன்றிப் பேச்சிலள்" (திருவாய்மொழி 8-9-1) "அன்றி மற்றோருபாயமென்" (திருவாய்மொழி 8-9-10) என்று யதா$_2$ நிரூபணம் பண்ணில் பிராட்டிமாரோபாதி அநந்யார்ஹமாய் அவ்வளவில் பர்யவஸியாதே (அவர்க்கே குடிகளாய் பரதந்த்ரஸ்வரூபத்தை அநுஸந்தி$_4$த்தவர்) "மாகாயாம் பூக்கொள் மேனி நான்கு தோள் பொன்னாழிக்கை யென்னம்மான் நீக்கமில்லா அடியார்தம் அடியாரடியாரடியார் எங்கோக்கள் அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே ஊழிதோறூழி வாய்க்க தமியேற்கு" (திருவாய்மொழி 8-10-10) என்று விலக்ஷணவிக்$_3$ரஹயுக்தனான ஸர்வேஶ்வரனுக்குப் பிரியாவடிமை செய்கிற பா$_4$க$_3$வதர்களுடைய ஶேஷத்வத்தின் எல்லையிலே நிற்கிறவர்களே எனக்கு ஶேஷிகள், என்னோடு ஸம்ப$_3$ந்த$_4$முடையாரும் நானும் அவர்களுக்கு க்ரயவிக்ரஹார்ஹமாம்படியான பாரதந்த்ர்யம் காலதத்த்வம் உள்ளதனையும் எனக்கொருவனுக்குமே ஸித்$_3$தி$_4$க்கவேணுமென்று இப்பாரதந்த்ர்ய காஷ்டை$_2$யான ததீ$_3$யபாரதந்த்ர்யமே ஸ்வரூபம் என்றநுஸந்தி$_4$த்தவர் (ஸ்வஸாத$_4$நஸாத்$_4$யஸ்தர் இருகரையராகாமல்) தம்முடைய ஸாத$_4$நஸாத்$_4$யங்களே தங்களுக்கும் என்றிருக்கிறவர்கள் தத்$_3$விஷயத்திலும் ததீ$_3$யவிஷயத்திலுமாய் ப்ராப்யமொன்றும் ப்ராபகமொன்றுமாய் இருகரையராகாதபடி (மண்ணவரும் வானவரும் நண்ணுமத்தையே குறிக்கொண்மின் உள்ளத்தென்று) "கோவிந்தன் மண்ணும்

விண்ணும் அளந்த வொண்டாமரையை மண்ணவர்தாம் தொழ வானவர்தாம் வந்து நண்ணு திருக்கடித்தான நகரை உள்ளத்துக் கொண்மின் இடர்கெட" (திருவாய்மொழி 8-6-7) என்று ஸர்வேஶ்வரனுடைய ஸர்வஸுலப₄மான திருவடிகளை உப₄யவிபூ₄தியிலுள்ளாரும் வந்தனுப₄விக்கும்படியான திருக்கடித்தான நகரை உங்கள் ஸமஸ்த து₃:க்க₂ங்களும் போம்படி நெஞ்சாலே நினையுங்கோளென்று கீழ்ப்பத்திலே ப்ராப்யமாக உபதே₃ஶித்த அர்ச்சாவதாரபூ₄மியே து₃:க்க₂நிவர்த்தகமுமென்கையாலே ப்ராப்யமே ப்ராபகமென்று ப்ராப்யமொன்றிலுமே அவர்களை தத்பரராக்குகிறார் எட்டாம் பத்தில் என்கிறார்.

227. எண்டிசையும் அகல்ஞாலம் எங்கும் அளிக்கின்ற ஆலின் மேலென்னும்படி நித்யபே₄ாக₃பாத லீலோபகரணத்தின் லயாதி₃களைப் போக்குமாபத்ஸக₂ன் ஆருயிரென்னப்படுத்தின ஆத்ம த₃ர்ஶநபூ₂லாநுப₄வ பரம்பரையைக் கூவுதல் வருதலென்று முடுகவிட்டு ஏகமெண்ணிக் காணக்கருதி எழ நண்ணி நினைதொறும் உருகியலற்றிக் கவையில் மனமின்றி, பதினாலாண்டு பத்துமாஸம் ஒருபகல் பொறுத்தவர்கள் ஒருமாஸ தி₃ன ஸங்க்₄யையில் படுமது க்ஷணத்திலேயாக இரங்குகிற த்வரைக் கீடாக இனிப்பத்திலொன்று த₃ஶம த₃ஶையிலே பேறென்று நாட்கடலாகத் தம்பிக் கிட்டதாகாமல் நாளை வதுவை போலே நாளிடப் பெற்றவர் இம்மடவுலகர் கண்டதோடு பட்ட அப₃ாந்த₄வ-அரக்ஷக-அபே₄ாக்ய-அஸுக₂-அநுபாய ப்ரதிஸம்ப₃ந்தி₄யைக் காட்டி மற்றொன்று கண்ணனல்லால் என்கிற வைகல் வாழ்தலான ஸித்₃தே₄ாபாயம், அதில் துர்ப₃லபு₃த்₃தி₄களுக்கு மாலை நண்ணி காலைமாலை விண்டு தேனை வாடாமலரிட்டு அன்பராம் ஸாங்க₃ப₄க்தி, அதில் அஶக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி, அதில் அஶக்தர்க்கு உச்சாரணமாத்ரம், ஸர்வோபாய ஶூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் த₃ண்ட₃னென்று கீ₃தாசார்யனைப் போலே அதி₄காராநுகு₃ணம் நெறியெல் லாம் உரைக்கிறார் ஒன்பதாம் பத்தில்.

இப்படி அவாப்தஸமஸ்தகாமத்வத்தால் வந்த நைரபேக்ஷ்யத்தாலே அபேக்ஷாநிரபேக்ஷமாக ப்ரளயாத்யாபத்த₃ஶைகளிலே உதவி ரக்ஷிக்கும் ஆபத்ஸகனான ஸர்வேஶ்வரன் கீழ் ப்ரகாஶிப்பித்த ஆத்மத₃ர்ஶநத்துக்கு ப₂லம் ஸ்வஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுப₄வமாய் அவ்வநுப₄வத்திலுண்டான த்வரையாலே க்ஷணகாலவிளம்ப₃ம் பொறுக்கமாட்டாமல் ஆர்த்தரான இவர்க்கு ஆரப்₃த₄ஶரீராவஸாநத்திலே பேறாகக் கடவதென்று நாளிட்டுக் கொடுக்கப் பெற்ற இவர் கீழ்த் தாமுபதே₃ஶித்த ஹிதவசநம் கேட்டுத் திருந்தினவர்களையொழிய அல்லாதாரையும் விடமாட்டாத தம்முடைய க்ருபையாலே யதா₂தி₄காரம் ஸர்வோபாயங்களையும் அருளிச்செய்கிறார் என்கிறார்.

(எண்டிசையும் அகல்ஞாலம் எங்கும் அளிக்கின்ற இத்யாதி₃) "எண்டிசையும் கீழும் மேலும் முற்றவும் உண்டபிரான்" (திருவாய்மொழி 9-1-1) "அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான் அவனே அஃதுண்டுமிழ்ந்தான் அளந்தான்" (திருவாய்மொழி

9-3-2) "அகலிடம் படைத்திடந்துண்டுமிழ்ந்தளந்து எங்கும் அளிக்கின்ற ஆயன்" (திருவாய்மொழி 9-9-2) "ஆலின்மேலாலமர்ந்தான்" (திருவாய்மொழி 9-10-1) என்று ஸகலலோகங்களையும் ஸஹகாரிநிரபேக்ஷமாக ப்ரளயாத்யாபத்துக்களிலே உதவி ரக்ஷிக்கும் என்கையாலே கீழ்ச்சொன்ன ஸத்யகாமத்வத்தால் வந்த நைரபேக்ஷ்யத்தாலே "பாதோ₃ஸ்ய விஶ்வாபூ₄தாநி த்ரிபாத₃ஸ்யாம்ருதம் தி₃வி" (புருஷஸூக்தம்) அந்த நித்யவிபூ₄த்யேகதே₃ஶமான லீலாவிபூ₄திக்குண்டான ஆபத்துக்களிலே அபேக்ஷாநிரபேக்ஷமாக உதவித் தன்பேறாக ரக்ஷிக்கும் ஆபத்ஸக₂த்வனான ஸர்வேஶ்வரன் (ஆருயிரென்னப்படுத்தின இத்யாதி₃) "ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது" (திருவாய்மொழி 9-6-9) என்று என்னாத்மா பட்டது நித்யவிபூ₄தியிலுள்ளாராரேனும் பட்டாருண்டோ என்று இவர்தாமே பேசும்படி அவன்மேல்விழுந்து அநுப₄விக்கைக்கு அடியாக கீழில் பத்தில் ஆத்மஸ்வரூபத்தை யதா₂வாகக் கண்டவதுக்குப் ப₂லம் ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யத்தை யநுப₄விக்கையாய், அதிலே த்வரை விளைகையாலே "தாமரைக் கண்களால் நோக்காய்" (திருவாய்மொழி 9-2-1) "பாதபங்கயமே தலைக்கணியாய்" (திருவாய்மொழி 9-2-2) "உன் தாமரை மங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகும் தொழ இருந்தருளாய்" (திருவாய்மொழி 9-2-3), "கனிவாய் சிவப்ப நீ காணவாராய்" (திருவாய்மொழி 9-2-4) "நின் பன்னிலாமுத்தம் தவழ்கதிர் முறுவல் செய்து நின் திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்" (திருவாய்மொழி 9-2-5) என்று என்னார்த்தி தீரத் திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேணும், திருவடிகளை என் தலையிலே வைத்தருளவேணும், தேவரீரும் பிராட்டிமாரும் கூட எழுந்தருளியிருக்கிற இருப்பை எனக்குக் காட்டியருளவேணும், என் முன்னே நாலடி உலாவியருளவேணும், அநுகூலத₃ர்ஶனத்திலே பிறக்கும் ஸ்மிதம் நான் காணவேணும், ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேணும், என்றிப்படி அநுப₄வபரம்பரைகளை ஆசைப்பட்டு அது க்ரமப்ராப்தமாகாமல் கூவுதல் வருதல் செய்யாயே என்று நிரதிஶயபோ₄க்₃யமான உன்னுடைய திருவடிகளிலே நானும் வந்தடிமை செய்யும்படி என்னை அங்கே அழைத்தல் இங்கே வருதல் செய்தருளவேணும் என்று இப்படி முடுகவிட்டு (ஏகமெண்ணி இத்யாதி₃) "கவையில் மனமின்றி" (திருவாய்மொழி 9-8-3) "மாகவைகுந்தம் காண்பதற்கு என்மனம் ஏகமெண்ணும் இராப்பகலின்றியே" (திருவாய்மொழி 9-2-7) என்று அவன் நித்யவாஸம் பண்ணுகிற பரமபத₃த்தைக் காண்கையிலே ஸர்வகாலமும் ஏகரூபமாக மநோரதி₂த்து "காணக் கருதும் என் கண்ணே" (திருவாய்மொழி 9-4-1) என்று பெரியபிராட்டியாரோடும் தி₃வ்யாயுத₄ங்களோடும் தி₃வ்ய விக்₃ரஹத்தோடும் கூடியிருக்கிற அவனைக் காணவேணுமென்று ஆசைப்பட்டு "எழநண்ணி நாமும் நம் வானநாடனோடொன்றினோம்" (திருவாய்மொழி 9-5-10) என்று ஸ்மாரகபதா₃ர்த்த₂ த₃ர்ஶநத்திலே நோவுபடுகையாலே முடிந்துபோகையிலே ஒருப்பட்டு "நினைதொறும் சொல்லுந் தொறும் நெஞ்சிடிந்துகும்" (திருவாய்மொழி 9-6-2) "உருகுமால் நெஞ்சம் உயிரின் பரமன்றி பெருகுமால் வேட்கையும்" (திருவாய்மொழி 9-6-1) என்று, அவனுடைய

அநுப$_4$வத்தை நினைக்கும்தொறும் அநுப$_4$வ உபகரணமான நெஞ்சானது ஶிதி$_2$லமாய்க் கரைய "தக்கிலமே கேளீர்கள்" (திருவாய்மொழி 9-7-2) என்று ஆள்விட்டு "கிளிமொழியாளலற்றிய சொல்" (திருவாய்மொழி 9-7-111) என்று ஆற்றாமையாலே அக்ரமமாகக் கூப்பிட்டு "கவையில் மனமின்றிக் கண்ணீர்கள் கலுழ்வன்" (திருவாய்மொழி 9-8-3) என்று இருதலைத்த நெஞ்சின்றிக்கே கண்ணீர் காட்டாறு போலே பெருக (பதினாலாண்டு இத்யாதி$_3$ இரங்குகிற த்வரைக்கீடாக) பெருமாளைப் பிரிந்து பதினாலாண்டு பொறுத்திருந்த ஸ்ரீப$_4$ரதாழ்வான் அந்த அவதி$_4$ கழிந்த ஒருநாள் பட்ட க்லேஶமும், பத்து மாஸம் பிரிந்து பொறுத்திருந்த பிராட்டி "மாஸாதூ$_3$ர்த்$_4$வம் ந ஜீவிஷ்யே" (ரா.ஸு. 40-10) என்று ஒரு மாஸத்தில் பட்ட க்லேஶமும், க்ருஷ்ணன் பசுமேய்க்கப் போக ஒரு பகலெல்லாம் அவனைப் பிரிந்து பொறுத்திருந்த ஸ்ரீ கோ$_3$பிமார் ஸந்த்$_4$யாகாலத்திலே பசுக்களின் முற்கொழுந்திலே காணாமல் அவர்கள் பட்ட க்லேஶமுமெல்லாம் அவனை "விட்டகல்வதற்கே யிரங்கி அணிகுருகூர்ச் சடகோபன்" என்று ஒரு க்ஷணத்திலேயாம்படி யீடுபடுகிற தம்முடைய த்வரைக்கீடாக (இனிப் பத்திலொன்று தஶமத$_3$ஶையிலே பேறென்று) "நயநப்ரீதி: ப்ரத$_2$மம் சித்தாஸங்க$_3$ஸ் ததோநுஸங்கல்ப: நித்$_3$ராச்சேதஸ் தநுதாவிஷய விரக்திஸ் த்ரபாநாஶ: உந்மாதோ$_3$ மூர்ச்சா மரணம் இத்யேதா ஸ்மரத$_3$ஶா த$_3$ஶைவ ஸ்யு:, ப்ரத$_2$மஸ்த்வபி$_4$லாஷ: ஸ்யாத் த்$_3$விதீயம் சிந்தநம் ப$_4$வேத் அநுஸ்ம்ருதிஸ் த்ருதீயந்து சதுர்த்த$_2$ம் கு$_3$ணகீர்த்தநம் உத்$_3$யோக: பஞ்சம: ப்ரோக்த: ப்ரலாப: ஷஷ்ட உச்யதே உந்மாத$_3$ஸ் ஸப்தமோ ஜ்ஞேய: அஷ்டமோ வ்யாதி$_4$ருச்யதே நவமே ஜட$_3$தா சைவ த$_3$ஶமம் மரணம் ததா$_3$" என்று காமுகராயிருப்பார்க்கு த$_3$ஶமாவஸ்தை$_2$யிலே மரணமாமாபோலே நம்பக்கல் பரப$_4$க்தி யுக்தரான உமக்கு நம்மைப் பெறாவிடில் முடியும்படி பரமப$_4$க்தித$_3$ஶையான பத்தாம்பத்திலே பெறக்கடவதென்று (நாட்கடலாகத் தம்பிக்கிட்டதாகாமல் நாளைவதுவை போலே நாளிடப்பெற்றவர்) "நாட்கடலைக் கழிமினே" (திருவாய்மொழி 1-6-7) என்று ஒரு நாள் ஒரு கடல் போலே விஶ்லேஷ வ்யஸநத்தாலே து$_3$ஸ்தரமாம்படி "பூர்ணே சதுர்த$_3$ஶே வர்ஷே" (ரா.யு. 127-1)என்று தம்பியான ஸ்ரீ ப$_4$ரதாழ்வானுக்கு நெடுக நாளிட்டுக் கொடுத்தாப்போலேயன்றியே "நாளை வதுவை மணமென்று நாளிட்டு" (நாச்சியார் திருமொழி 6-2) என்று இன்றென்னில் வெள்ளக்கேடாம் சிலநாள் கழித்தென்னில் வறட்கேடாமென்று "நாளை" என்று நாச்சியார்க்கு நாளிட்டாற்போலே "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்" (திருவாய்மொழி 9-10-5) என்று ஆரப்$_3$த$_4$ஶரீராவதி$_4$யாக அவனாலே நாளிட்டுக் கொடுக்கப்பெற்று ஹ்ருஷ்டரான இவர் (இம்மடவுலகர் கண்டதோடு பட்ட இத்யாதி$_3$ ப்ரதிஸம்ப$_3$ந்$_4$தியைக் காட்டி) சரமோபாயோபேய பர்யந்தமாக தாமருளிச்செய்த ஹிதவசநம் கேட்டுத் திருந்தினவர்களையொழிய அல்லாதாரையும் விடமாட்டாத தம்முடைய க்ருபையாலே "இம்மடவுலகர்" (திருவாய்மொழி 9-2-7) என்று ஸம்ஸாரத்தில் அறிவுகேடரானவர்களையும் பார்த்து$_2$ "கொண்டபெண்டிர்" (திருவாய்மொழி 9-1-1) என்று தொடங்கி த்$_3$ரவ்யாதி$_3$களாலே ஸம்பாதிக்கப் பட்டு ஸந்நிதி$_4$யிலே ஸ்நேஹித்திருக்குமதொழிய காணாதபோது

ஸ்நேஹமொன்று மின்றிக்கே யிருக்கிற புத்ரதா$_3$ராதி$_3$கள் ப$_3$ந்து$_4$க்களன்று ப்ரளயாபத்ஸக$_2$னானவனே பரமப$_3$ந்து$_4$வென்று "துணையும் சார்வும்" (திருவாய்மொழி 9-1-2) இத்யாதி$_3$ "பொருள் கை" (திருவாய்மொழி 9-1-3) இத்யாதி$_3$ "அரணமாவர்" (திருவாய்மொழி 9-1-4) இத்யாதி$_3$ அவனையொழிந்தார் தாங்கள் உபகாரகரைப்போலே ப்ரயோஜநமுள்ளபோது ப$_3$ந்து$_4$க்களாய்க் கொண்டாடி ஆபத்து வந்தவாறே கண்ணற்று உபேக்ஷிப்பர்கள். ஆகையாலே இவர்கள் ரக்ஷகரல்லர். நிர்ஹேதுகமாக ஆபத்ஸக$_2$னான க்ருஷ்ணனையொழிய வேறு ரக்ஷகரில்லை. "சதிரம்" (திருவாய்மொழி 9-1-5) இத்யாதி$_3$. தங்களுக்கு போ$_4$க்$_3$யைகளாக ஸம்பாதி$_3$த்த ஸ்த்ரீகள் ஆபத்து வந்தவாறே உபேக்ஷிப்பர்கள். ஏகப்ரகாரமாக ஸ்நிக்$_3$த$_4$னாயிருப்பானவனே. ஆனபின்பவனே நிரதிஶய போ$_4$க்$_3$யன். "இல்லைகண்டீர் இன்பம்" (திருவாய்மொழி 9-1-5) என்று து$_2$:க்க$_2$மிஶ்ரமான சிலவற்றை ஸுக$_2$மென்று ப்$_3$ரமிக்கிறவத்தனை போக்கி அவனையொழிய ஸுக$_2$ரூபமாயிருப்ப தொன்றில்லை. "யாதுமில்லை" (திருவாய்மொழி 9-1-9) இத்யாதி$_3$. இவனையொழிய வேறேயொருவனை ரக்ஷகமென்று பற்றினவர்கள் பண்டைநிலையுங் கெட்டு அநர்த்த$_2$ப்பட்டுப் போவர்கள்; ஆனபின்பு அவனையொழிய உபாயமில்லை என்று அவனை யொழிந்தவற்றினுடைய அப$_3$ந்து$_4$த்வத்தையும், அரக்ஷகத்வத்தையும், அபோ$_4$க்$_3$யத்வத்தையும், அஸுக$_2$த்வத்தையும், அநுபாயத்வத்தையும் அவர்களுக்கு உபதே$_3$ஶித்து (மற்றொன்று கண்ணனல்லால் என்கிற வைகல் வாழ்தலான ஸித்$_3$தோ$_4$பாயம்)"மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம்"(திருவாய்மொழி 9-1-7) என்று இதுக்கு மேலொன்று இன்றியிலேயிருப்பதாய் ஸம்க்ஷேபேணவுபதே$_3$ஶிக்கலாம்படியுமாய் ஸர்வாதி$_4$காரமுமாய் ஸ்வரூபாநுரூபமுமாய் ஸுகரமுமாய் நிரதிஶயபோ$_4$க்$_3$யமுமாய் "கண்ணனல்லாலில்லை கண்டீர் சரண்" (திருவாய்மொழி 9-1-9) என்று "மாமேகம் ஶரணம் வ்ரஜ" (கீ$_3$தை 18-66) என்று திருத்தேர்த்தட்டிலே நின்றருளிச்செய்த க்ருஷ்ணனையொழிய வேறு நிரபேக்ஷோபாயமில்லை. இவ்வுபாயந்தான் "வைகல் வாழ்தல் கண்டீர் குணம்" (திருவாய்மொழி 9-1-7) என்று யாவதாத்மபா$_4$வியநுப$_4$வம் என்று ஸித்$_3$தோ$_4$பாயத்தை அவர்களுக்குபதே$_3$ஶித்தும் (அதில் து$_3$ர்ப$_4$லபு$_3$த்$_3$தி$_4$களுக்கு) "ஸக்ருதே$_3$வஹி ஶாஸ்த்ரார்த்த$_2$: தப்நாம் பயநாஶக: நராணாம் புத்திதௌ$_3$ர்பல்யாத் உபாயாந்தரமிஷ்யதே" என்று அந்த ஸித்$_3$தோ$_4$பாயத்தில் மஹாவிஶ்வாஸம் பிறக்கைக்கடியான பா$_4$க்$_3$யமின்றிக்கே ஸாத்$_4$யங்களான உபாயாந்தரங்களில் ருசிகுலையாமையாலே அவன் ப$_2$லப்ரத$_3$னாமோ என்று பு$_3$த்$_3$தி$_4$தௌ$_3$ர்ப்ப$_3$ல்யமுடையார்க்கு (மாலை நண்ணிக் காலை மாலை விண்டு தேனை வாடா மலரிட்டு அன்பராம் ஸாங்க$_3$ப$_4$க்தி) "மாலை நண்ணித் தொழுதெழுமினோ காலை மாலை கமலமலரிட்டு நீர்" (திருவாய்மொழி 9-10-1) "விண்டு வாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்" (திருவாய்மொழி 9-10-3) "தேனை வாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின்" (திருவாய்மொழி 9-10-4) "தனதன்பர்க்கு" (திருவாய்மொழி 9-10-5) என்று நிரதிஶயப்ரீதியுக்தராய்க் கொண்டு ஸர்வகாலமும் புஷ்பாத்$_3$யுபகரணங்களைக் கொண்டு அவனை ஸமாராத$_4$நம்

பண்ணி அவன் பக்கலிலே ப4க்தியைப் பண்ணுங்கோள் என்று அங்க3ஸஹிதையான ப4க்தியை உபதே3ஶித்தும் (அதிலஶக்தர்க்குத் தாளடையும் ப்ரபத்தி) அதில் து3ஷ்கரத்வத்தாலே அநுஷ்டிக்க ஶக்தி இல்லாதார்க்கு "சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்" (திருவாய்மொழி 9-10-5) என்று ஸர்வாதி4காரமுமாய் ஶரீராவஸாநத்திலே ப2லமுமான ப்ரபத்தியை வெளியிட்டும் (அதிலஶக்தர்க்கு உச்சாரணமாத்ரம்) உபாய பல்கு3த்வம் ப2லகௌரவ விரோதி4பூ4யஸ்த்வங்களாகிற ஶங்காத்ரயத்தாலே அதில் வ்யவஸாயத்துக்கடியான ஶக்தியில்லாதார்க்கு "திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர் பாடு சாராவே" (திருவாய்மொழி 9-10-10) என்று உச்சாரணமாத்ரத்தை வெளியிட்டும் (ஸர்வோபாயர்க்கும் இப்பத்தும்பாடியிடும் தண்டனென்று) கீழ்ச்சொன்ன உபாயாங்களெல்லாவற்றிலும் அயோக்3யராயிருப்பார்க்கு "இப்பத்தும் பாடியாடிப் பணிமின் அவன் தாள்களே" (திருவாய்மொழி 9-10-11) என்று இத்திருவாய்மொழியை ப்ரீதிப்ரேரிதராய்க் கொண்டு பாடி அவன் திருவடிகளிலே விழுங்கோளென்று கீ3தோபநிஷதா3சார்யன் தன் பரமக்ருபையாலே "நெறியெல்லாம் எடுத்துரைத்த" (திருவாய்மொழி 4-8-6) என்கிறபடியே ருச்யநுகு3ணமான உபாயங்கள் எல்லாவற்றையும் வெளியிட்டாற்போலே இவர் தமக்கு ப்ராப்தி அணித்தானவாறே ஸம்ஸாரிகள் இழக்கவொண்ணாதென்று பார்த்து அவ்வவருடைய அதி4காராநுகு3ணமாந உபாயங்கள் எல்லாவற்றையும் வெளியிடுகிறார் என்கிறார்.

௨௨௮. **சுரிகுழல் அஞ்சனப் புனல்மைந்நின்ற பொல்லாப்புனக் காயாவென்னும் ஆபத்திற்கொள்ளும் காமரூப கந்த3 ரூபத்தாலே ப்ரபந்நார்த்திஹரனானவன் அருள்பெறும் போதணுகவிட்டதுக்குப் ப2லமான வானேறும் க3திக்கு அண்ட மூவுலகும் முன்னோடிக் கால் விழுந்திடத்தே நிழல் தடங்களாக்கி அமுதமளித்த தயரதன் பெற்ற கோவலனாகையாலே வேடன், வேடுவிச்சி, பக்ஷி, குரங்கு, சராசரம், இடைச்சி, இடையர், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருந்து, வேண்டடிசில் இட்டவர், அவன்மகன், அவன்தம்பி, ஆனை, அரவம், மறையாளன், பெற்ற மைந்தனாகிற பதினெட்டு நாடன் பெருங்கூட்டம் நடத்தும் ஆத்தனை வழித்துணையாக்கி அறியச்சொன்ன ஸுப்ரப4ாதத்தே துணைபிரியாமல் போக்கொழித்து மீள்கின்றதில்லை யென்று நிச்சித்திருந்தவர் ஸஞ்சிதம் காட்டும் த3ஶையானவாறே முந்துற்ற நெஞ்சுக்குப் பணி மறவாது மருளொழி நகு கைவிடேலென்று க்ருத்யாக்ருத்யங்களை விதி4த்து நெஞ்சுபோல்வாரைத் தொண்டீரென்றழைத்து, வலம் செய்து எண்ணுமின் பேசுமின் கேண்மின் காண்மின் நடமின் புகுதுமென்று கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ஶ்ரோதவ்யம் த்3ரஷ்டவ்யம் க3ந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டுப் பிணக்கறவைச் சார்வாக நிக3மித்து எண்பெருக்கிலெண்ணும் திருநாமத்தின் ஶப்3த3ார்த்த2ங்களைச் சுருக்கி மாதவனென்று த்3வயமாக்கி, கரணத்ரயப்ரயோக3வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்துச் செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவழி காவலிட்டு மனம் திருத்தி**

வீடுதிருத்தப் போய் நாடு திருந்தின வாறே வந்து விண்ணுலகம் தர விரைந்து அத்தை மறந்து குடிகொண்டு தாம் புறப்பட்ட வாக்கையிலே புக்குத் தானநகர்களை அதிலே வகுத்துக் குரவை துவரைகளில் வடிவு கொண்ட சபலனுக்கு தே₃ஹதே₃ாஷம் அறிவித்து மாயையை மடித்து வானேதரக் கருதிக் கருத்தின்கண் பெரியனானவனை இன்று அஹேதுகமாக ஆதரித்த நீ அநாத்₃யநாத₃ர ஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க, இந்த்₃ரிய கிங்கரராய்க் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில், அவை யாவரையும் அகற்ற நீ வைத்தவையென்பர்; அது தே₃ஹ யோக₃த்தாலேயென்னில், அந்நாள் நீதந்த சுமடென்பர்; முன்செய்த முழுவினையாலே என்னில், அது துயரமே உற்ற விருவினை உன் கோவமும் அருளுமென்பர்; ஈவிலாத மதியிலேன் என்னும் உம்மதன்றோ கர்த்ருத்வ போ₄க்த்ருத்வங்களென்னில், ஆங்காரமாய்ப் புக்குச் செய்கைப் பயனுண்பேனும் கருமமும் கரும பலனுமாகிய நீ கர்த்தா போ₄க்தா என்பர்; யானே எஞ்ஞான்றும் என்றத்தாலே யென்னில்; அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழிலென்பர்; ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது; அகமேனியிலழுக்கறுக்கை அபி₄மாநிக்ருத்யம்; தான் நல்கும் ப₃ந்த₄ம் நிருபாதி₄கம்; ஸௌஹார்த₃ம் எஞ்ஞான்றும் நிற்கும்; பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநாதி₃வைகல்யமில்லை; ஏகமூர்த்தியில் அல்லல்மாய்த்த யத்ந ப₂லித்வங்கள் நம்மது; நாம் தனி நின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே அறிந்தனமே யென்னும் ஸர்வஜ்ஞரிவர்; நெறிகாட்டி அருகும் சுவடும் போலே இதுவும் நிருத்தரமென்று கவிழ்ந்து நிற்க, அமந்த்ரஜ்ஞோத்ஸவ கோஷம் போலே ஏறப் பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிற மேக₄ஸமுத்₃ர பே₄ரீகீ₃த காஹள ஶங்காஶீஸ்ஸ்துதி கோலாஹலம் செவிப் பட்டவாறே ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்குத் தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு போகாமல் தடுத்துத் திருவாணையிட்டுக் கூசம் செய்யாத செய்திப் பிழை; பற்றுக் கொம்பற்ற கதிகேடு போரவிட்ட பெரும்பழி; புறம்போனால் வருமிழவு, உண்டிட்ட முற்றீம்பு, அன்புவளர்ந்த அடியுரம், உயிருறவு முதலளவு துரக்கைகளாலே பெறாவாணை அல்லவாக்கின பேரவா குளப்படியாம்படி கடல் போன்ற ஆத₃ரத்தோடே சூழ்ந்து தாபங்களை ஹரித்தமையை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில்.

ஆபத்ஸக₂னாகையாலே ப்ரபந்நரானவர்களுடைய ஆபத்துக்களிலே ஶுபா₄ஶ்ரயமாய் அஸாதா₄ரணமான திருமேனியோடேவந்துதவி அவர்களுடைய தாபங்களைப் போக்கும் ஆர்த்திஹரனானவன் கீழில் பத்தில் இவர் த்வரைக்கீடாக அணித்தாக நாளிட்டுக் கொடுத்ததற்குப் ப₂லம் அர்ச்சிராதி₃ க₃தியாலே துணைபெற்றுப் போகையாகையாலே அதுக்கு ஆப்தனானவன் தன்னையே துணையாகப் பற்றி ப்ராப்தி நிஶ்சிதமென்ற போக்கிலே ஒருப்பட்ட இவர் தாம் தஞ்சமாக நினைத்திருந்தவர்த்த₂மும் பேசியிடும்படியான த₃ஶையானவாறே முற்பட்ட உபதே₃ஶவிஷயமான திருவுள்ளத்துக்கு க்ருத்யாக்ருத்யங்களை விதி₄த்து

அப்படி ப$_4$வ்யரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு கர்த்வ்யாதி$_3$களை வெளியிட்டு முதலிலே உபக்ரமித்த ப$_4$க்தி ப்ரபத்திகளையும் நிக$_3$மித்து ஸம்ஸாரிகளுக்கு ஸுகரமாக ஆஶ்ரயணத்தை உபதே$_3$ஶித்து அநுப$_4$வகைங்கர்யங்களிலே நிற்கிறவர்களுக்கு ஶீலகு$_3$ணமாகிற ஆழங்காலையும் காட்டித் தம்பக்கல் வ்யாமுக்$_3$த$_4$னான ஈஶ்வரனுக்குத் தம்முடைய திருமேனியில் தமக்குண்டான உபேக்ஷையை வெளியிட்டு இப்போது தமக்குப் பரதந்த்ரனாய் நிற்கிறவவனை அநாதி$_3$காலம் தம்மைக் கைவிட்டதுக்கு ஹேதுவென்னென்று கேட்க அவனும் இந்த்$_3$ரியவஶ்யதை தொடக்கமான ஹேதுபரம்பரைகளையெண்ணி அதுவும் ததா$_3$யத்தமென்றறியும் ஸர்வஜ்ஞரான இவர்க்குப் போக்கிடம் சொல்லுகை யரிதென்று நிருத்தரனாய் அர்ச்சிராதி$_3$ மார்க்க$_3$த்தையும் அங்குள்ளாருடைய ஸத்காரத்தையும் காட்டிக்கொடுக்க அத்தை ஸாக்ஷாத்கரித்தவிவர் அதுவும் மாநஸாநுப$_4$வமாய் பா$_4$ஹ்யகரணயோக்$_3$ய மல்லாமையாலே அவனுக்கு மறுக்கவொண்ணாதவாணையிட்டுத் தடுத்து அது பெறாவாணையல்லாமைக்கு ஹேதுக்களைச் சொல்லும்படியான தம்முடைய பரமப$_4$க்தியெல்லாம் குளப்படியாம்படியான அபி$_4$நிவேஶத்தோடே வந்து தம்முடைய தாபத்தைப் போக்கிப் பேற்றோடே தலைக்கட்டிக் கொடுத்தபடியை வெளியிடுகிறார் என்கிறார் பத்தாம்பத்தில். (சுரிகுழலஞ்சனப்புனலித்யாதி$_3$ ப்ரபந்நார்த்திஹரனான ஸர்வேஶ்வரன்) "சுரிகுழல் கமலக் கண்கனிவாய்" (திருவாய்மொழி 10-1-1) "அணிக்கொள் நால்தடந்தோள்" (திருவாய்மொழி 10-1-9) "மணிமிகு மார்பு அணிமிகு தாமரைக் கை" (திருவாய்மொழி 10-3-5) "கைகளும் பீதகவாடையும்" (திருவாய்மொழி 10-3-8) "செங்கமலவண்ண மென்மலரடி" (திருவாய்மொழி 10-3-7) "மணிநின்ற சோதி" (திருவாய்மொழி 10-4-7) "அஞ்சன மேனி" (திருவாய்மொழி 10-3-3) "புனல் மைநின்றவரை போலும் திருவுருவம்" (திருவாய்மொழி 10-6-8) "பொல்லாத் தாமரைக்கண் கருமாணிக்கம்" (திருவாய்மொழி 10-10-1) "புனக்காயா நிறத்த" (திருவாய்மொழி 10-10-6) "நீரார் முகில் வண்ணன்" (திருவாய்மொழி 10-5-8) "கார் மேகவண்ணன்" (திருவாய்மொழி 10-4-1) "மெய்ந்நின்று கமழ் துளப விரையேறு திருமுடியன்" (திருவாய்மொழி 10-6-8) "திகழ்கின்ற திருமார்பில் திருமங்கை" (திருவாய்மொழி 10-6-9) "அணிநின்ற செம்பொன் அடலாழி" (திருவாய்மொழி 10-4-7) "காமனைப் பயந்த காளை" (திருவாய்மொழி 10-2-8) என்று அவயவங்களோடும் ஔதா$_3$ர்யம் முதலான கு$_3$ணங்களோடும் ஸ்ரக்$_3$வஸ்த்ர ஆப$_4$ரண ஆயுத$_4$ங்களோடும் கூடி "காமரூபங்கொண்டு எழுந்தளிப்பான்" (திருவாய்மொழி 10-1-10) என்று ஆஶ்ரிதருடைய ஆபத்$_3$ரக்ஷணத்துக்கு அநுரூபமாகக் கொள்ளும் விக்$_3$ரஹங்களுக்கெல்லாம் கந்த$_3$மாய் ஶுபா$_4$ஶ்ரயமான அந்த விக்$_3$ரஹத்தையுடையனாய்க் கொண்டு தன்பக்கல் ந்யஸ்தப$_4$ரரானவர்களுடைய ஆர்த்தியைத் தீர்க்கையாலே ப்ரபந்நார்த்திஹரனான ஸர்வேஶ்வரன் (அருள்பெறும்போதணுக விட்டதித்யாதி$_3$ தயரதன் பெற்ற கோவலனாகையாலே) "அவனுடையருள்பெறும் போதரிதால் அவனருள் பெருமளவாவி நில்லாது" (திருவாய்மொழி 9-9-6) என்று கீழில் பத்திலே க்ஷணகால விஶ்லேஷம் பொறாமை

ஆர்த்தரான இவ்வாழ்வார்க்கு "மரணமானால்" (திருவாய்மொழி 9-10-5) என்று ஆரப்3த4 ஶரீராவஸாநத்திலே உமக்கு மோக்ஷம் தருகிறோம் என்று அணித்தாக நாளிட்டுக் கொடுத்ததுக்குப் ப2லம் "வானேற வழிதந்த" (திருவாய்மொழி 10-6-5) என்று அவன் காட்டிக் கொடுத்த அர்ச்சிராதி3 மார்க்க3த்துக்குத் துணை பெற்றுப் போகையாலே இவரை இவ்வழியாலே கொடு போவதாக ராஜகுமாரன் போம்போது நிலவரானார் முன்னே போய் நிலம் சோதித்து நிழலாம்படி சோலை செய்து தடாகங்கள் சமைத்து வைத்துப் பின் கொண்டு போவரைப் போலே "அண்டமூவுலகளந்தவன்" (திருவாய்மொழி 10-1-5) என்று திருவுலகளக்க என்றொரு வ்யாஜத்தாலே முன்னோடி நிலம் ஶோதித்து "அவனடிநிழல் தடமன்றி யாமே" (திருவாய்மொழி 10-1-2) என்று காளமேக4மான தன்கால் விழுந்தவிடத்தே நிழலும் தடாகமுமாம்படி பண்ணி அமுதமளித்த பெருமானாகையாலே "பாதே2யம் புண்டரீகாக்ஷ நாம ஸங்கீர்த்தநாம்ருதம்" (கா3ருடம்) என்றிவர்க்கு பாதே2யமாகத் தன் தி3வ்யகு3ணாம்ருதத்தை வர்ஷிக்குமவனாய் "தயரதன் பெற்ற மரதக மணித்தடம்" (திருவாய்மொழி 10-1-8) என்றும் "கூத்தன் கோவலன்" (திருவாய்மொழி 10-1-6) என்றும் சக்ரவர்த்தி திருமகனாயும் க்ருஷ்ணனாயும் வந்தவதரித்தவனாகையாலே. (வேடன் வேடுவச்சி என்று தொடங்கி ஆத்தனை வழித்துணையாக்கி) "உகந்த தோழன் நீ" (பெரிய திருமொழி 5-8-1) என்று பெருமாளுடைய ஸ்வீகாரத்துக்கு விஷயபூ4தனான ஸ்ரீ கு3ஹப் பெருமாள், "சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகு4நந்த3ந" (ரா. ஆ. 74-14) என்று அவன் கடாக்ஷலக்ஷ்யபூ4தையான ஶப3ரீ, "யா க3திர் யஜ்ஞஶீலாநாம் ஆஹிதாக்3நேசயா க3தி: அபரா வர்த்திநாம் யாசயாசபூ4மிப்ரதா3யிநாம் மயா த்வம் ஸமநுஜ்ஞாத: க3ச்ச லோகாநநுத்தமாந்" (ரா.ஆ. 68-29, 30) என்று விஷயீகரிக்கும்படியான ஸ்ரீஜடாயுமஹாராஜர், "ராமபா3ணாஸந க்ஷிப்தமாவஹத் பரமாங்க3திம்" (ரா. ஸு. 17-8) என்னும்படியான வாலி, ஸுக்ரீவ மஹாராஜர் தொடக்கமான வாநரஸேனைகள், அயோத்தியில் வாழும் சராசரம், "சிந்தயந்தீ ஜக3த்ஸூதிம் பரப்3ரஹ்ம ஸ்வரூபிணம் நிருச்வாஸதயா முக்திம் க3தாந்யா கோ3பகந்யகா" என்னும்படி இடைச்சியான சிந்தயந்தி, த3தி4பா4ண்டன், அவனுடைய தயிர்த்தாழி, "ஸுக3ந்த4மேதத் ராஜார்ஹம் ருசிரம் ருசிராநநே ஆவயோர் கா3த்ரஸத்3ருஶம் தீ3யதாமநுலேபநம்" (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-20-6) என்று விஷயீகரிக்கும்படியான கூனி, "த4ர்மே மநஶ்ச தே ப4த்ர ஸர்வகாலம் ப4விஷ்யதி யுஷ்மத் ஸந்ததி ஜாதாநாம் தீ3ர்க்க3மாயுர் ப4விஷ்யதி" (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-9-26) என்று விஷயீகரிக்கும்படியான ஸ்ரீமாலாகாரர், "நவம் ஶவமித3ம் புண்யம் வேத3பாரக3மச்யுத, யஜ்ஞஶீல மஹாப்ராஜ்ஞ ப்3ராஹ்மணம் ஶவமுத்தமம்" (ஹரிவம்சம்) என்று பிணவிருந்திட்ட கண்டாகர்ணன், "வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும்" (நாச்சியார் திருமொழி 12-6) பத்தவிலோசநத்தில் ருஷிபத்நிகள், "மீளவவன்மகனை" (பெரியாழ்வார் திருமொழி 1-5-2) என்று ஹிரண்யபுத்ரனான ஸ்ரீப்ரஹ்லாத3ன், "அவன் தம்பிக்கு" (பெருமாள் திருமொழி 10-7) என்று ராவணாநுஜனான ஸ்ரீவிபீ4ஷணப்பெருமாள், ஸ்ரீகஜேந்த்3ராழ்வான், "நஞ்சு சோர்வதோர் வெஞ்சினவரவம்" (பெரிய திருமொழி

5-8-4) என்கிற ஸுமுக$_2$ன், "மலரடி கண்ட மாமறையாள"னான (பெரிய திருமொழி 5-8-5) கோவிந்த$_3$ஸ்வாமி, "மாமுனி பெற்ற மைந்தன்" (பெரிய திருமொழி 5-8-6) என்று ம்ருகண்டு$_3$புத்ரனான மார்க்கண்டே$_3$யன் இவர்கள் தொடக்கமான பதினெட்டு நாட்டிலுள்ள அநுகூலவர்க்கமான பெருங்கூட்டத்தை அர்ச்சிராதி$_3$மார்க்க$_3$த்தாலே தானே துணையாய்க் கொண்டு நடத்துகிறவனாய் "திருமோகூராத்தன் தாமரையடியன்றி மற்றொன்றிலம் அரணே" (திருவாய்மொழி 10-1-6) "காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே" (திருவாய்மொழி 10-1-1) என்று பரமாப்தனான காளமேக$_4$த்தை வழித்துணையாகப் பெற்று. (அறியச் சொன்ன ஸுப்ரபா$_4$தத்தே) "நாமுமக்கறியச் சொன்ன நாள்களும் நணியவான" (திருவாய்மொழி 10-2-9) "மரணமானால்" (திருவாய்மொழி 9-10-5) என்று அவனறுதியிட்டுத் தந்தானாய் நான் உங்களுக்குச் சொன்ன நாள் கிட்டிற்றென்று பிறர்க்கும் பேசும்படியாய் "ஸுப்ரபா$_4$தா ச மே நிஶா" (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-17-3) "ஸுப்ரபா$_4$தாத்$_3$ய ரஜநீ மது$_4$ராவாஸ யோஷிதாம்" (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-18-24) என்று ப$_4$க$_3$வத்ப்ராப்தி அணித்தான நல்விடிவான நாளிலே (துணை பிரியாமல் போக்கொழிந்து மீள்கின்றதில்லை என்று நிச்சித்திருந்தவிவர்) "துணை பிரிந்தார் துயரமும் நினைகிலை பசுமேய்க்கப்போகேல்" (திருவாய்மொழி 10-3-4) "என் கை கழியேல்" (திருவாய்மொழி 10-3-8) "பசுநிரை மேய்ப்பொழிப்பானுரைத்தன" (திருவாய்மொழி 10-3-11) என்று தமக்குத் துணையாக அவனை பசுமேய்க்கப் போகையாகிற அபி$_4$மதத்தில் நின்றும் தவிர்த்து "மீள்கின்றதில்லை பிறவித்துயர் கடிந்தோம்" (திருவாய்மொழி 10-4-3) "நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேன்" (திருவாய்மொழி 10-4-4) என்று ஸம்ஸாரது$_3$ரிதம் மறுவலிடாதென்று "ந பி$_3$பே$_4$தி குதஶ்சந" (தைத்திரீயோபநிஷத்) என்கிறபடியே ஒன்றுக்கும் அஞ்சாதபடி நிஶ்சித்திருந்தவிவர் (ஸஞ்சிதம் காட்டும் த$_3$ஶையானவாறே) மரணாவஸ்தை$_2$களிலே ஸஞ்சிதமாய்ப் புதைத்துக் கிடந்த நிதி$_4$களைப் புத்ராதி$_3$களுக்குக் காட்டுவாரைப் போலே தமக்கு ப்ராப்தியணித்தானவாறே ஒருவரும் இழக்கவொண்ணாது, இவ்வளவிலே எல்லார்க்கும் ஹிதாஹிதங்களை அறிவிக்கவேணுமென்று பார்த்து, (முந்துற்ற நெஞ்சுக்குப் பணியித்யாதி க்ருத்யாக்ருத்யங்களை விதி$_4$த்து) "தொழுதெழென் மனனே" (திருவாய்மொழி 1-1-1) என்று ப்ரத$_2$மத்திலே உபதே$_3$ஶிக்கும்படி ப$_4$க$_3$வத்$_3$விஷயத்திலே தம்மிலும் முந்துற்று நிற்கிற தம்முடைய திருவுள்ளத்தைப் பார்த்து$_2$ "பணிநெஞ்சே நாளும் பரமபரம்பரனை" (திருவாய்மொழி 10-4-7) "வாழியென் நெஞ்சே மறவாது வாழ்கண்டாய்" (திருவாய்மொழி 10-4-8) "மருளொழி நீ மடநெஞ்சே" (திருவாய்மொழி 10-6-1) "நரகத்தை நகு நெஞ்சே" (திருவாய்மொழி 10-6-5) "வாழி மனமே கைவிடேல்" (திருவாய்மொழி 10-7-9) என்று நம் ப்ரதிப$_3$ந்த$_4$கங்களை யெல்லாம் தானே போக்கி அடிமை கொள்ளும் ஸர்வஸ்மாத் பரனை அநுப$_4$விக்கப்பார். உனக்கிந்த ஸம்ருத்$_3$தி$_4$ மாறாதே சென்றிடுக. கைபுகுந்ததென்னா இதரவிஷயங்களிலே செய்யுமத்தை இவ்விஷயத்திலும் செய்யாதே கிடாய். இன்பம் பயக்கவிலே "திருவாறன்விளையதனை மேவி வலஞ்செய்து கை தொழக்கூடுங்கொலோ" (திருவாய்மொழி 7-10-9) என்று

ப்ராப்யவஸ்து கிட்டிற்றாகில் இங்கேயடிமை செய்யவமையாதோவென்று ப்₄ரமிப்பதொன்றுண்டு; உனக்கு அத்தைத் தவிரப்பார். உத்தே₃ஶ்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தென்று அத்தையே பார்க்குமத்தனையோ, நம்மைப் பார்க்க வேண்டாவோ நான் பரமபத₃த்தேறப் போகாநின்றேன். நெடுநாள் நம்மைக் குடிமக்களாக்கி எளிவரவு படுத்தின ஸம்ஸாரத்தைப் புரிந்து பார்த்து சிரித்துப் போரு கிடாய்; நமக்கு இந்த ஸம்பத்தெல்லாம் திருமலையாழ்வாராலே வந்ததாய்த்து. அத்திருமலையைக் கைவிடாதேகொள் என்று க்ருத்யாக்ருத்யங்களை அவஶ்யகரணீயமாம் படி விதி₄த்து (நெஞ்சுபோல்வாரைத்தொண்டீரென்றழைத்து) திருவுள்ளம் போலே அந்தரங்க₃ரான ஸ்ரீவைஷ்ணவர்களை "தொண்டீர் வம்மின்" (திருவாய்மொழி 10-1-4) என்று அழைத்து (வலஞ்செய்தித்யாதி நடமின் புகுதுமின் என்று) கொண்ட "கோயிலை வலஞ்செய்திங்காடுதும் கூத்தே" (திருவாய்மொழி 10-1-5) "எண்ணுமின் எந்தை நாமம்" (திருவாய்மொழி 10-2-5) "பேசுமின் கூசமின்றி" (திருவாய்மொழி 10-2-4) "நமர்களோ சொல்லக் கேண்மின்" (திருவாய்மொழி 10-2-8) "பாதங்காண நடமினோ நமர்களுள்ளீர்" (திருவாய்மொழி 10-2-1) "அனந்தபுர நகர் புகுதுமின்" (திருவாய்மொழி 10-2-1) என்று அவனெழுந்தருளியிருக்கிற தே₃ஶத்திலே அநுகூலவருத்திகளைப் பண்ணுங்கோள்; ஸ்வாமியுடைய திருநாமங்களை அநுஸந்தி₄யுங்கோள்; உங்கள் அயோக்₃யதை பார்த்துக் கூசாதே திருவனந்தபுரத்திலே ஸ்நேஹத்தைப்பண்ணி வர்த்திக்கிறவனைப் பேசுங்கோள்; என்னோடு ஸம்ப₃ந்த₄முடையரானார் சொன்ன வார்த்தையைக் கேளுங்கோள்; திருவனந்தபுரத்திலே திருக்கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளைக் காணப் போருங்கோள்; இச்சை₂ பிறந்த இன்றே அங்கே போய்ப்புகப் பாருங்கோள் என்று அவர்களுக்குக் கர்த்தவ்யம் ஸ்மர்த்தவ்யம் வக்தவ்யம் ஶ்ரோதவ்யம் த்₃ரஷ்டவ்யம் க₃ந்தவ்யம் வஸ்தவ்யமெல்லாம் வெளியிட்டு (பிணக்கறவைச் சார்வாக நிக₃மித்துக் கொண்டு) உக்தநிக₃மநம் பண்ணுகை ஶாஸ்த்ரமாகையாலே முதலிலே "பிணக்கற" என்கிற பாட்டில் "வணக்குடைத் தவநெறி" (திருவாய்மொழி 1-3-5) என்று உபக்ரமித்த ஸாத்₄யஸித்₃த₄ரூபமான ப₄க்தி ப்ரபத்திகளாகிற உபாயத்தையும் சார்வே தவநெறியிலே "சார்வே தவநெறிக்குத் தாமோதரன் தாள்கள்" (திருவாய்மொழி 10-4-1) என்றும் "பண்டே பரமன் பணித்த பணிவகையே கண்டேன் கமலமலர்ப்பாதம்" (திருவாய்மொழி 10-4-9) "இருமை வினைகடிந்து இங்கென்னை யாள்கின்றான்" (திருவாய்மொழி 10-4-2) என்று நிக₃மித்துக் கொண்டு (எண்பெருக்கில் எண்ணும் திருநாமத்தின் ஶப்₃தா₃ர்த்த₂ங்களைச் சுருக்கி) "எண்பெருக்கந்நலத்து ஒண்பொருள் ஈறில வண்புகழ் நாரணன்" (திருவாய்மொழி 1-2-10) என்றும் "திண்ணம் நாரணமே" (திருவாய்மொழி 10-5-1) என்றும் ப₄க்திக்காலம்ப₃நமாக உபதே₃ஶித்த திருமந்தரத்திலர்த்த₂த்தையும் ஶப்₃த₃த்தையும் பரவாதபடி சுருக்கிக் கொண்டு (மாதவன் என்றென்று த்₃வயமாக்கி) "மாதவனென்றென்று ஓதவல்லீரேல்" (திருவாய்மொழி 10-5-7) என்று அந்தத்திருநாமத்தினுடைய விஶதா₃நுஸந்தா₄நமான த்₃வயத்தையும் வெளியிட்டு (கரணத்ரயமித்யாதி₃ கையோலை செய்து கொடுத்து)

ஈஶ்வரன் தம்மைக் கொண்டுபோகையிலே த்வரிக்கிறபடியாலும் கேட்கிறவர்களுக்கு ப்ரதிபத்திக்கு விஷயமாம்படியாகவும் சுருங்கக் கொண்டு அநுஷ்டா2நார்த்த2ப்ரகாஶகமான ப்ரயோக3வ்ருத்தி போலே "பாடீரவன் நாமம் வீடே பெறலாமே" (திருவாய்மொழி 10-5-5) "சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே" (திருவாய்மொழி 10-5-10) என்று கரணத்ரயத்தாலுமுண்டான ஆஶ்ரயணத்தை ஸம்ஸாரிகளுக்கு உபதே3ஶித்து (செஞ்சொற்கவிகளுக்குக் கள்ளவழி காவலிட்டு) "செஞ்சொற்கவிகாள் உயிர்காத்தாட்செய்மின்" (திருவாய்மொழி 10-7-1) என்று அவனுக்கு அடிமை செய்வார் ஶீலாதி3களிலே அகப்படாதே கொள்ளுங்கோள், அநுப4வகைங்கர்யங்களிலே நிற்கிறவர்களுக்கு அரணழியாமல் கள்ளவழி காவலிடுவாரைப் போலே ஶீலகு3ணமாகிற ஆழங்காலிலே இழியாதே கொள்ளுங்கோள் என்று உபதே3ஶித்து (மனந்திருந்தியென்று தொடங்கி தே3ஹதோ3ஷமறிவித்து) "தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்" (திருவாய்மொழி 1-5-10) என்கிறபடியே பரமபத3த்தைக் கொடுப்பதாகப் போய் அலங்கரித்து அவன் வரக்கொள்ள "ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்" (திருவாய்மொழி 6-7-2) என்று இவருபதே3ஶத்தாலே லோகமாகத் திருந்த இவரை வைத்த கார்யம் தலைக்கட்டினவாறே "விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்" (திருவாய்மொழி 10-6-3) என்று இவரைக் கொண்டுபோகையிலே த்வரித்து இவருடைய ஶரீரம் சரமஶரீரமாகையாலே அதில் தனக்குண்டான வ்யாமோஹத்தாலே இவரைக் கொண்டு போகையையும் மறந்து "கோவிந்தன் குடிகொண்டான்" (திருவாய்மொழி 10-6-7) என்று ஸபரிகரனாய்க் கொண்டு "என் மாயவாக்கை இதனுள் புக்கு" (திருவாய்மொழி 10-7-3) இன்றிவர்தாம் குந்தியடியிட்டு த்யாஜ்யமென்று சரக்குக் கட்டிப் புறப்பட்டு நிற்கிற இவருடைய தே3ஹத்திலே தான் புகுந்து "திருமாலிருஞ்சோலை மலையே" (திருவாய்மொழி 10-7-8) என்கிறபாட்டின்படியே க்ஷீராப்3தி4 தொடக்கமாகத் தனக்கு வாஸஸ்தா2ந தி3வ்ய நக3ரங்களில் பண்ணும் விருப்பத்தையெல்லாம் ஒரோ அவயவங்களிலே பண்ணி "அங்க3நாமங்க3நாமந்தரே மாத4வோ மாத4வம் மாத4வஞ்சாந்தரேணாங்க3நா இத்த2மா கல்பிதே மண்ட3லே ஸஞ்சரந் ஸஞ்ஜகௌ3 வேணுநா தேவகீநந்த3ந:" (கர்ணாம்ருதம்) என்று திருக்குரவையில் பெண்களோடே அநேக விக்3ரஹபரிக்ரஹம் பண்ணி அநுப4வித்தாப் போலவும் ஸ்ரீமத் த்3வாரகையிலே தே3விமார்களோடே பதினாறாயிரம் விக்3ரஹம் கொண்டு அநுப4வித்தாப்போலவும் அநேக விக்3ரஹ பரிக்3ரஹம் பண்ணி இவருடைய அவயவங்கள்தோறும் அநுப4விக்கும்படி இவருடைய விக்3ரஹத்திலே சபலனானவனுக்கு "பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரியம் ஐம்பூதம் இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்கார மனங்களே உன் மாமாயை மங்கவொட்டு" (திருவாய்மொழி 10-8-10) என்று தம்முடைய தே3ஹத்தில் தோ3ஷத்தை அவனுக்கறிவித்து அத்தை விடுவிக்க வேணுமென்று (மாயையை மடித்து வானே தரக்கருதி கருத்தின்கண் பெரியனானவனை) "மடித்தேன் மனைவாழ்க்கையுள் நிற்பதோர் மாயையை" (திருவாய்மொழி 10-8-3) ஸம்ஸாரத்தில் நிற்கைக்கடியான மாயை ப்ரக்ருதி அத்தைத்

திரிய விடுத்தேன் என்று இவர்தாமே பேசும்படி அசித்ஸம்ப₃ந்த₄த்தையறுத்து "வானே தருவான்" (திருவாய்மொழி 10-8-5) என்று பரமபத₃த்தை இவர்க்குக் கொடுப்பதாக "கருத்தின்கண் பெரியன்" (திருவாய்மொழி 10-8-8) என்று இவருடைய மநோரத₂த்தினளவல்லாபடி இவரைக் கொண்டுபோகையிலே த்வரிக்கிற படியைக் கண்டு (அநாத்₃யநாத₃ரஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க) "இன்றென்னை" (திருவாய்மொழி 10-8-9) இத்யாதி₃ இன்றிப்படி நிர்ஹேதுகமாக விஷயீகரித்த நீ அநாதி₃காலம் உபேக்ஷித்து வைத்ததுக்கு ஹேதுவை அருளிச் செய்யவேணுமென்று அவன் மடியைப் பிடிக்க, (இந்த்₃ரிய கிங்கரராய் குழிதூர்த்துச் சுவைத்தகன்றீர் என்னில் அவை யாவரையுமகற்ற நீ வைத்தவை என்பர்) "வயந்து கிங்கரா விஷ்ணோ: யூயமிந்த்₃ரிய கிங்கரா:" (வில்லிபுத்தூர் பகவர் வார்த்தை) என்கிறபடியே அநாதி₃காலம் இந்த்₃ரியவஶ்யராய் "தூராக்குழி தூர்த்து எனைநாளகன்றிருப்பன்" (திருவாய்மொழி 5-8-6) "அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" (திருவாய்மொழி 3-2-6) என்று து₃ஷ்பூரமான இந்த்₃ரியங்களுக்கு இரையிட்டு எத்தனை காலம் உன்னை அகன்றிருக்கக் கடவேன் அற்பசாரமானது அது நமக்குமெட்டாதபடி ஸம்ஸாரத்திலே கைகழிப் போந்தேன் என்று நீர்தாமே பேசும்படியான ஶப்₃தா₃தி விஷயப்ராவண்யமன்றோ நீர் அநாதி₃காலம் இழக்கைக்கு ஹேது என்னில், "ஓரைவர் யாவரையும் மயக்க நீ வைத்த" (திருவாய்மொழி 7-1-8) என்றும் "அகற்ற நீ வைத்த மாயவல்லைம்புலன்கள்" (திருவாய்மொழி 5-7-8) என்றும் நீ வேண்டாதாரை அகற்றுகைக்கு வைத்தவை என்று நன்றாக அறிந்தேன் என்பர். (அது தே₃ஹயோக₃த்தாலே என்னில் அந்நாள் நீ தந்த சுமடென்பர்) அந்த இந்த்₃ரியவஶ்யதைக்கடி ஶரீர ஸம்ப₃ந்த₄மன்றோ என்னில் "அந்நாள் நீ தந்த ஆக்கை" (திருவாய்மொழி 3-2-1) "அது நிற்கச் சுமடு தந்தாய்" (திருவாய்மொழி 7-1-10) என்று அதுவும் உன்னாலே உண்டான(தென்பர்). (முன் செய்த முழுவினையாலே என்னில் அது துயரமேயுற்ற இருவினை உன் கோவமும் அருளுமென்பர்) "முன்செய்த முழுவினையால் திருவடிக்கீழ் குற்றேவல் முன்செய்ய முயலாதே அகல்வதுவோ" (திருவாய்மொழி 1-4-2) என்று அந்த தே₃ஹ ஸம்ப₃ந்த₄த்துக்கடி நீர் அநாதி₃யாகச் செய்து போந்த கர்மமன்றோ என்னில் "துயரமேதரு துன்ப இன்ப வினைகளாய்" (திருவாய்மொழி 3-6-8) "உற்ற விருவினையாய்" (திருவாய்மொழி 10-10-8) என்று புண்யபாபரூபமான கர்மங்களை அசேதநமுமாய் நஶ்வரமுமாய் இருபசைமலமுமாய்க் கொண்டு உன் கோபமும் அருளுமென்று உன்னுடைய நிக்₃ரஹாநுக்₃ரஹரூபேண ப₂லிக்குமவையாகை யாலே அந்த கர்மம் நீயிட்ட வழக்கென்பர். (ஈவிலாத மதியிலேனென்னும் உம்மதன்றோ கர்த்ருத்வ போ₄க்த்ருத்வங்கள் என்னில் ஆங்காரமாய்ப் புக்கு செய்கைப் பயனுண்பேனும் கர்த்ருத்வமும் தத் ப₂லமான போ₄க்த்ருவத்வமும் கருமமும் கரும பலனுமாகிய நீ கர்த்தா போ₄க்தா என்பர்) "ஈவிலாத தீவினைகள் எத்தனை செய்தனன் கொல்" (திருவாய்மொழி 4-7-3) என்றும் "மதியிலேன் வல்வினையே மாளாதோ" (திருவாய்மொழி 1-4-3) என்றும் அநுப₄வித்தாலும் மாளாத பாபத்தை எத்தனை பண்ணினேன், நான் பண்ணினபாபமேயோ அநுப₄வித்தாலும்

மாளாதேயிருப்பது என்று நீர் சொல்லுகையாலே அந்த கர்த்ருத்வமும் போ$_4$க்த்ருத்வமும் உம்மதன்றோ என்று நாம் சொல்லில் "தானாங்காரமாய்ப் புக்கு தானே தானே யானான்" (திருவாய்மொழி 10-7-11) என்று தானபி$_4$மாநியாய்ப் புக்கு ஆத்மாத்மீயங்களில் எனக்குண்டான அபி$_4$மானத்தைத் தவிர்த்துத் தானே அபி$_4$மாநியானானென்று, அந்த கர்த்ருத்வமும் "செய்கைப் பயன் உண்பேனும் யானே" (திருவாய்மொழி 5-6-4) என்றும் "கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை" (திருவாய்மொழி 3-5-10) என்று ப$_2$லபோ$_4$க்தாவும் நாமிட்டவழக்காகையாலே கர்த்தாவும் போ$_4$க்தாவும் நீயே என்பர். (யானே எஞ்ஞான்றுமென்றத்தாலே என்னில் அயர்ப்பாய்ச் சமய மதி கொடுத்து உள்ளம் பேதம் செய்கை உன் தொழில் என்பர்) "யானே என்னை அறியகிலாதே யானே என்றனதே என்றிருந்தேன்" (திருவாய்மொழி 2-9-9) "எஞ்ஞான்றும் மெய்ஞ்ஞான மின்றி வினையியல் பிறப்பழுந்தி" (திருவாய்மொழி 3-2-7) என்று நீர் சொல்லுகையாலே அந்த கர்மகர்த்ருத்வ ப$_2$லபோ$_4$க்த்ருத்வங்களுக்கடி உம்முடைய அஜ்ஞானமன்றோ என்னில், "அயர்ப்பாய்த் தேற்றமுமாய்" (திருவாய்மொழி 7-8-6) "மாட்டாத பல சமய மதி கொடுத்தாய்" (திருவாய்மொழி 3-1-4) "உள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும்" (திருவாய்மொழி 5-10-4) என்று ஜ்ஞாநாஜ்ஞானங்களிரண்டும் நீயிட்ட வழக்காகையாலே அத்தால் வந்த பு$_3$த்$_3$தி$_4$ பே$_4$த$_3$ங்களும் உனக்குக் காரியமென்று சொல்லுவர். (ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது அகமேனியில் அழுக்கறுக்கை அபி$_4$மாநிக்ருத்யம்) "மூதாவியில் தடுமாறுமுயிர் முன்னமே யாதானும் பற்றி நீங்கும் வ்ரதம்" (திருவிருத்தம் 95) என்று ஸூக்ஷ்மப்ரக்ருதி விஶிஷ்டனான ஆத்மாவில் கிடக்கிற சைதந்யம் ப்ரக்ருதி ப்ராக்ருதங்களைப் பற்றி நம்மை விட்டகலுகை நங்கார்யம். "அகமேனி ஒழியாமே" (திருவாய்மொழி 9-7-10) என்று நமக்கந்தரங்க ஶரீரமான இவ்வாத்மாவைப் பற்றிக் கிடக்கிற ப்ரக்ருதிரூபமான மாலிந்யத்தை அறுக்கை அவ்வாத்மாவுக்கு அபி$_4$மாநியான நம்முடைய க்ருத்யமாயிருந்ததீ. (தான் நல்கும் ப$_3$ந்த$_4$ம் நிருபாதி$_4$கம்) "நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால்" (திருவாய்மொழி 1-4-5) என்று நாம் ஸ்நேஹபூர்வமாக ரக்ஷிக்கைக்கடியான நாராயணத்வப்ரயுக்தமான ஸம்ப$_3$ந்த$_4$ம் நிருபாதி$_4$கமாகையால் (ஸௌஹார்த்த$_3$ம் எஞ்ஞான்றும் நிற்கும்) "தனிமாப் புகழே எஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த் தான்தோன்றி" (திருவாய்மொழி 8-10-7) என்று அந்த ப$_3$ந்த$_4$மடியாக எல்லாருடைய நன்மையை ஆஶாஸிக்கைக்கடியான ஸௌஹார்த்த$_3$கு$_3$ணம் ஸர்வாத்மாக்கள் பக்கலிலும் ஸர்வகாலமும் நடக்கையாலே இந்த ஸம்ப$_3$ந்த$_4$மடியான ஸ்நேஹமும் இவனுக்குக் கண்ணழிவு சொல்ல வொண்ணாதா யிருந்தது. (பிணக்கிப் பேதியாத ஜ்ஞாநவைகல்யம் இல்லை) "பிணக்கி யாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்" (திருவாய்மொழி 6-2-8) என்று ஸம்ஹாரகாலத்தில் மண்ணும் நீரும் கலசுமாப்போலே நன்றாகக் கலசி ஸ்ருஷ்டி காலத்திலே ஒருவருடைய கர்மம் ஒருவருக்குத் தட்டாதபடி பிரித்து

ஸ்ருஷ்டிக்கும்படியான நமக்கு ஜ்ஞாநஶக்த்யாதி₃களில் குறைசொல்லிக் கண்ணழிக்க வொண்ணாதாயிருந்தது. (ஏகமூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந ப₂லித்வங்கள் நம்மது) "ஏகமூர்த்தி யிருமூர்த்தி" (திருவாய்மொழி 4-3-3) என்கிற பாட்டின்படியே காரணங்களோடு கார்யங்களோடு வாசியற எல்லாவற்றையும் உண்டாக்கி அவற்றினுடைய வஸ்துத்வ நாமபா₄க்த்வங்களுக்காக அநுப்ரவேஶித்து ஸூக்ஷ்மரான சேதநர்க்கு ருசிபிறந்தபோது ஆஶ்ரயிக்கைக்காக க்ஷீராப்₃தி₄யிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வஶரீரியான நீ உன்னுடைய திருமேனிக்கு வேண்டும் போ₄கோ₃பகரணங்களை பூசும் சாந்தில் படியே என்பக்கலாக்கி நிர்து₃:க்க₂னானாயே என்று இவர் பேசும்படி இவரைப் பெறுகைக்கு யத்நம் பண்ணுகையும் பெற்றால் உகக்கைக்கீடாந அறிவுள்ளதொன்றாயிருந்து அத்தாலும் கண்ணழிவு சொல்ல வொண்ணாதாயொழிந்தது. (நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே அறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞரிவர்) "தனிநின்ற சார்விலா மூர்த்தி" (பெரிய திருவந்தாதி 71) என்று தான் வேண்டிற்றுச் செய்யும்படி நிரங்குஶஸ்வதந்த்ரனும் நீயே. "அவனே அகல்ஞாலம் படைத்திடந்தான்" (திருவாய்மொழி 9-3-2) இத்யாதி₃. "அவனே மற்றெல்லாமுமறிந்தனமே" (திருவாய்மொழி 9-3-2) என்று ஸ்ருஷ்டி முதலான ஸகலப்ரவ்ருத்திகளையும் ஸஹஜமாகத் தானே செய்ய வல்லனென்று இப்படி நம்மை உள்ளபடி அறியும் ஸர்வஜ்ஞரான இவர்க்கு உத்தரம் சொல்லுகையறிந்து (நெறிகாட்டி அருகும் சுவடும்போலே இதுவும் நிருத்தரம் என்ற கவிழ்ந்து நிற்க) "நெறிகாட்டி நீக்குதியோ" (பெரிய திருவந்தாதி 6) என்கிற பாட்டிலும் "அருகும் சுவடும் தெரிவுணரோம்" (பெரிய திருவந்தாதி 8) என்கிற பாட்டிலும் உபாயாந்தரங்களைக் காட்டி அகற்றப் பார்த்தாயோ விலக்ஷணமான திருமேனியைக் காட்டி சேர்த்துக் கொள்ளப் பார்த்தாயோ அஜ்ஞரான எங்களை என்செய்வதாக நினைத்தாய் இத்தை அருளிச்செய்ய வேணுமென்றும் உன்னைக் கண்டும் கேட்டும் அறியாதிருக்க எனக்கு உன் பக்கலிலே ஸ்நேஹமானது பெருகா நின்றது இதற்கு ஹேதுவை அருளிச் செய்ய வேணும் என்றும் கேட்டவிடங்களில் ஒரு ஹேது சொல்லவொண்ணாதாப் போலே இதுக்கும் சொல்லலாவதொரு ஹேது இல்லாமையாலே நிருத்தரமென்று தரையைக் கீறிக் கவிழ்ந்து நிற்க (அமந்த்ரோத்ஸவ கோ₄ஷம்போலே) உத்ஸவங்களில் சடங்கு காட்டும் உபாத்₄யாயன் மந்த்ரம் தோன்றாவிட்டால் கொட்டச் சொல்லுமாபோலே இவனும் (ஏறப்பெறுகிற எழுச்சியை ஸூசிப்பிக்கிறவென்று) அது கிடக்க உம்மைக் கொண்டுபோகிற வழியைப் பாரீர் என்று "நானேறப் பெறுகின்றேன்" (திருவாய்மொழி 10-6-5) என்று இவர் கீழ்ச் சொன்னபடியே பரமபத₃த்துக்குப் போகிற மார்க்க₃த்தையும், மார்க₃ஸ்த்த₂ரான புருஷர்களுடைய ஸத்காரத்தையும் காட்டிக் கொடுக்க (மேக₄ஸமுத்₃ரபே₄ரீகீ₃த காஹளஶங்கா₂ஶீஸ்துதி கோலாஹலம் செவிப்பட்டவாறே) "சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின ஆழ்கடல் அலை திரை கையெடுத்தாடின" (திருவாய்மொழி 10-9-1) "கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்" (திருவாய்மொழி 10-9-5) "காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர்

வாளொண் கண் மடந்தையர் வாழ்த்தினர்'' (திருவாய்மொழி 10-9-6) ''தொடர்ந்தெங்கும் தோத்திரம் சொல்லினர்'' (திருவாய்மொழி 10-9-7) என்று ராஜாக்கள் போகிறபோது தூர்யாதி$_3$ மங்க$_3$லகோ$_4$ஷம் பண்ணுவாரைப் போலே போகிறவர்களைக் கண்ட ப்ரீதியாலே உண்டான மேக$_4$ஸமுத்$_3$ரங்களினுடைய கோ$_4$ஷங்களாகிற தூர்யாதி$_3$ பே$_4$ரிகளையும் அங்குள்ளாருடைய கீ$_3$தகாஹள ஶங்கா$_2$ஶீஸ்துதி கோலாஹலங்களையும் இவர் செவிப்படுத்த அத்தைக் கேட்டவாறே (ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்திக்கு) அந்த அர்ச்சிராதி$_3$மார்க்க$_3$த்தையும் மார்க்க$_3$ஸ்த$_2$ரான ஆதிவாஹிக ஸத்காரத்தையும் தி$_3$வ்யதே$_3$ஶப்ராப்தியையும் அங்குள்ளாருடைய ப$_3$ஹுமாநத்தையும் பெற்று ஆநந்த$_3$மயமான ஆஸ்தா$_2$நத்தில் இருப்பையும் ஸாக்ஷாத்கரித்து, இப்படி ஸாக்ஷாத்கரித்த பரப்ராப்தி மாநஸாநுப$_4$வமாத்ரமாய் யதா$_2$மநோரத$_2$மநுப$_4$வமல்லாமையாலே (தலைமிசையாய் வந்த தாள்களைப் பூண்டு) ''தலைமிசையாய் வந்திட்டினி நான் போகலொட்டேன்'' (திருவாய்மொழி 10-10-1) என்றும் ''தலைமேல் புனைந்தேன்'' (திருவாய்மொழி 10-4-4) ''தலைமேல தாளிணைகள்'' (திருவாய்மொழி 10-6-6) என்றும் இப்படி பூர்ணமாக வந்து தோன்றின திருவடிகளைக் கட்டிக் கொண்டு போகாமல் தடுத்து (திருவாணையிட்டு) ''திருவாணை நின்னாணை கண்டாய்'' (திருவாய்மொழி 10-10-2) என்று அவனுக்கு மறுக்கவொண்ணாத ஆணையிட்டுத் தடுக்க நீர் ஶேஷபூ$_4$தரான பின்பு ஶேஷியான நான் செய்தது கண்டிருக்குமத்தனையொழிய நீர் ஆணையிட்டுத் தடுக்கை உமக்கு ஸ்வரூபமன்று; ஆனபின்பு அது பெறாவாணைகாணும்'' என்ன, (கூசஞ்செய்யாத செய்திப்பிழை) ''கூசம் செய்யாது கொண்டாய்'' (திருவாய்மொழி 10-10-2) என்று ஸர்வஜ்ஞனான நீ என் பூர்வவ்ருத்தத்தால் வந்த அயோக்$_3$யதையைப் பார்த்துக் கூசி வாசிவையாதே உன்னோடு ஆத்மபே$_4$த$_3$மில்லாதபடி என்னைப் பரிக்$_3$ரஹித்த உன்னதன்றோ செய்திப்பிழை என்றும். (பற்றுக் கொம்பற்ற கதி$_3$கேடு) ''ஆவிக்கோர் பற்றுக் கொம்பு நின்னலாலறிகின்றிலேன் நான்'' (திருவாய்மொழி 10-10-3) என்று கொடி கொழுகொம்பை ஒழிய நிற்கமாட்டாதாப் போலே என் உஜ்ஜீவந ஹேதுவாயிருப்ப தொன்று உன்னையொழிய வேறு காண்கிறிலேன் என்னும்படியான அநந்யக$_3$தித்வம் என்றும் (போரவிட்ட பெரும்பழி) ''எம்பரஞ்சாதிக்கலுற்று என்னைப் போரவிட்டிட்டாயே'' (திருவாய்மொழி 10-10-4) என்று என் கார்யம் நீ செய்யக்கடவதாக ஏறிட்டுக் கொண்டு உன்பக்கல் நின்றும் பிரித்து உன் கு$_3$ணங்கள் கால்நடையாடாத ஸம்ஸாரத்திலே தள்ளி உபேக்ஷித்தாய்; இது உனக்கும் பரிஹரிக்க வொண்ணாத பெரும்பழியன்றோ வென்றும் (புறம்போனால் வருமிழவு) ''போரவிட்டிட்டென்னை நீ புறம்போக்கலுற்றால் பின்னை யான் ஆரைக் கொண்டெத்தையந்தோ எனதென்பதென் யானென்பதென்'' (திருவாய்மொழி 10-10-5) என்று உன்பக்கல் நின்றும்பிரித்து அநந்யக$_3$தியாய் அஜ்ஞனாய் அஶக்தனான என்னை ஸ்ருஷ்டியே தொடங்கி இவ்வளவு புகுர நிறுத்தி ஸர்வரக்ஷகனான நீ என் கார்யம் நான் செய்வேனாகப் பார்த்து என்னை உபேக்ஷித்தால் நான் எந்த உபாயத்தைக் கொண்டு எந்த புருஷார்த்த$_2$த்தை

ஸாதிப்பது? எனக்கொரு புருஷார்த்த₂மென்றும் நானென்றும் உண்டோ? முடிந்தேன் என்கிற இழவாலும். (உண்டிட்ட முற்றீம்பு) "மனக்காராமை மன்னி உண்டிட்டாய் இனி உண்டொழியாய்" (திருவாய்மொழி 10-10-6) என்று மநஸ்ஸுக்கு பர்யாப்தி பிறவாமல் நிரந்தரமாக பு₄ஜித்த நீ தொடங்கின கார்யத்தை குறை கிடவாதே விஷயீகரித்து விடாய். பு₄க்தஶேஷமாக்கின உன்னதன்றோ முதல் தீம்பு என்றும் (அன்பு வளர்ந்த அடியுரம்) "கோலமலர்ப் பாவைக்கன்பாகிய என் அன்பேயோ" (திருவாய்மொழி 10-10-7) நான் அந்த:புர பரிகரமன்றோ! என்பக்கலுண்டான அன்புக்கடி யில்லையோ! அந்த புருஷகார ப₃லத்தால் வந்த அடியுரமென்றும், (உயிருறவு) "பெற்றினிப்போக்குவனோ உன்னை என் தனிப்பேருயிரை" (திருவாய்மொழி 10-10-8) என்று அத்யந்த விஸஜாதீயனாயிருந்து வைத்து எனக்கு தா₄ரகனான உன்னைவிட்டு த₄ரிக்கப் போமோ? ப்ராணனை விட்டு ப்ரக்ருதி த₄ரிக்கவற்றோ என்னும்படியான ஶரீரஶரீரி ஸம்ப₃ந்த₄ம் என்றிப்படி. (முதலளவு துரக்கைகளாலே) முதலிலே பிடித்து முடியுமளவாக புகலறத்துரந்து பெறாவாணையல்லாமையை ப₂லிப்பித்துக் கொள்ளும்படியான பேரவா குளப்படியாம்படி யென்னும்படி "அதனில் பெரியவென்னவாவறச் சூழ்ந்தாயே" (திருவாய்மொழி 10-10-10) என்று தத்வத்ரயங்களையும் விளாக்குலை கொண்டு அவை குளப்படியாம்படியான பரமப₄க்தியையும் குளப்படியாக்க வற்றான ஸமுத்₃ரம் போன்றிருக்கிற தன்னபி₄நிவேஶத்தைக் காட்டி வந்து ஸம்ஶ்லேஷித்து இவருடைய ஸகல தாபத்தையும் வாஸனையோடே போக்கி இவருடைய கூப்பீட்டையும் ஓயப் பண்ணி "அங்கே ப₄ரதமாரோப்ய முதி₃த: பரிஷஸ்வஜே" (ரா.யு. 134-39) என்கிறபடியே மீண்டெழுந்தருளிப் பெருமாள் ஸ்ரீப₄ரதாழ்வானை மடியிலே வைத்தணைத்துக் கொண்டாப்போலே இவர் விடாய் கெடும்படி கலந்து "அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச்சடகோபன்" என்று தாமே பேசும்படி இவருடைய ஸகல தாபங்களையும் போக்குகையாலே நிர்து₃:க₂ராய் நிரஸ்தஸமஸ்த ப்ரதிப₃ந்த₄கராய் பேற்றோடே தலைக்கட்டினபடியை வெளியிடுகிறார் பத்தாம் பத்தில் என்கிறார்.

௨௨௯. உறாமையோடே உற்றேன் ஆக்காது ஒழிந்தது, நாடுதிருந்த நச்சுப் பொய்கை ஆகாமைக்கு, ப்ரப₃ந்த₄ம் தலைக்கட்ட, வேர்சூடுவார் மண்பற்றுப்போலே என்னுமவற்றிலும் இனி இனியென்று இருபதின்கால் கூப்பிடும் ஆர்த்தி அதி₄கார பூர்த்திக்கென்னுமது முக்₂யம்.

இனிமேலிவர் ப்ரத₂மத்திலே ஆர்த்தராய்க் கொண்டு ஶரணம் புக்கபோதே விரோதி₄யை விடுவித்து பேற்றோடே தலைக்கட்டிக் கொடாதே இவரை இவ்வளவாக வைக்கைக்கடியேதென்னில் அதுக்கு நாலஞ்சு ஹேதுக்களை அருளிச்செய்து அவை எல்லாவற்றிலும் இவர்க்குப் பிறந்த பரமப₄க்தியை வெளியிடுகைக்காக வைத்தான் என்கிறார்.

(உறாமையோடே உற்றேனாக்காதொழிந்தது) "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பபும் இன்னின்ற நீர்மை இனியாமுறாமை" (திருவிருத்தம்1) என்று முதலிலே அவித்₃யாகர்மவாஸநாருசி ப்ரக்ருதிஸம்ப₃ந்தங் களை விடுவிக்கவேணுமென்று ஆர்த்தராய் ஶரணம்புக்க விவர்க்கு "உற்றேன்

உகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவதெந்தாய்" (திருவாய்மொழி 10-8-10) என்று திருவடிகளைக் கிட்டி ப்ரீதிபூர்வகமாக அடிமைசெய்யப் பெற்றேன் என்று பேசும்படியாகத் தலைக்கட்டிக் கொடாதே இவரை இவ்வளவவும் ஈஶ்வரன் வைக்கைக்கு ஹேதுவென்னென்னில், (நாடு திருந்த) அவன் ஸ்ருஷ்ட்யவதாரங்களாலும் திருத்த வொண்ணாத ஜக₃த்தை "ஊரும்நாடுமுலகமும் தன்னைப்போல்" (திருவாய்மொழி 6-7-2) என்னும்படி திருத்துகைக்காகவும், (நச்சுப்பொய்கையாகாமைக்கு) இவரபேக்ஷித்த(போதே) கார்யம் செய்யில் நச்சுப் பொய்கை போலே ப₄க₃வத்₃விஷயத்தில் இழிவாரில்லை என்றும், (ப்ரப₃ந்த₄ம் தலைக் கட்ட) தன்னோடு பிறரோடு வாசியற எல்லார்க்கும் போ₄க்₃யமுமாய் பாவநமுமாய் இருக்கிற இப்ப்ரப₃ந்த₄ங்களை இவரைக் கொண்டு தலைக்கட்டுவித்துக் கொள்ளுகைக்கும், (வேர்சூடுவார் மண்பற்றுப் போலே) வேர் சூடுவார் அதில் மண்பற்றுக் கழற்றதாப்போலே, சரமஶரீரமான இவருடைய விக்₃ரஹத்திலுண்டான வ்யாமோஹத்தாலே விடமாட்டாமை யாலும் வைத்தான் என்கிற இந்த ஹேதுக்களெல்லாவற்றிலும் (இனியினி யென்றிருபதுகால் கூப்பிடும் ஆர்த்தி) அவித்₃யாதி₃ து₃:க்க₂ம் "இந்நின்ற நீர்மை இனியாமுறாமை" (திருவிருத்தம் 1) என்று தொடங்கி "இனிநெஞ்சமிங்குக் கவர்வது யாமிலம்" (திருவிருத்தம் 4), "இனிவளை காப்பவரார்" (திருவிருத்தம் 13), "இனியுன்திருவருளாலன்றிக் காப்பரிதால்" (திருவிருத்தம் 62), "இனியவர்கண் தங்காது" (திருவாய்மொழி 1-4-4), "இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே" (திருவாய்மொழி 1-4-8), "இனியெம்மைச் சோரேலே" (திருவாய்மொழி 2-1-10), "எந்நாள் யானுன்னையினிவந்து கூடுவனே" (திருவாய்மொழி 3-2-1), "ஆவிகாப்பாரினியார்" (திருவாய்மொழி 5-4-2), "நெஞ்சிடர் தீர்ப்பாரினியார்" (திருவாய்மொழி 5-4-9), "இனியுன்னை விட்டொன்றுமாற்ற கிற்கின்றிலேன்" (திருவாய்மொழி 5-7-1), "தரியேனி" (திருவாய்மொழி 5-8-7), "உழந்தினியாரைக் கொண்டென்னுசாகோ" (திருவாய்மொழி 7-3-4), "அத்தனையாமினி யென்னுயிரவன் கையதே" (திருவாய்மொழி 9-5-2), "நாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி" (திருவாய்மொழி 9-5-10), "இனியிருந்தென்னுயிர் காக்குமாறென்" (திருவாய்மொழி 9-9-2), "இனிப்பிறவி யான்வேண்டேன்" (திருவாய்மொழி 10-6-1) "இனி நான் போகலொட்டேன்" (திருவாய்மொழி 10-10-1), "முடிவிலீயோ" (திருவாய்மொழி 10-10-9), "சுடர்ஞான இன்பமேயோ" (திருவாய்மொழி 10-10-10) என்னுமளவாக இருபதின்கால் கூப்பிடும்படியான ஆர்த்திபரம்பரையை விளைத்து இவருடைய பரமப₄க்தி பர்யந்தமான அதி₄காரபூர்த்தியை ப்ரகாஶிப்பிக்கைக்காக வைத்தான் என்கிறவிதுவே தாத்பர்யமென்கிறார்.

௨௩௦. கமலக்கண்ணனென்று தொடங்கிக் கண்ணுள் நின்றிறுதி கண்டேனென்ற பத்தும் உட்கண்ணாலேயாய், காண்பானவாவுதல் அதிலிரட்டி யாகையாலே கண்டு களிப்ப வளவும் பரஜ்ஞாநகர்ப்ப₄ பரப₄க்தி.

ஆர்த்திக்கடியான பரப₄க்தி பரஜ்ஞாந பரமப₄க்திகளினுடைய த₃ஶைகள் எந்தெந்த திருவாய்மொழிகள் என்ன, அத்தை அருளிச்செய்கிறார் "கமலக்கண்ணன்"

என்று தொடங்கி பரஜ்ஞாநகர்ப்ப₄பரப₄க்தி. "கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான் காண்பன்" (திருவாய்மொழி 1-9-9) என்று புண்டரீகாக்ஷனானவன் என் கண்ணுக்கு விஷயமானான்; நானுமவனை ஸாக்ஷாத்கரியா நின்றேன் என்று உபக்ரமித்து "கண்ணுள் நின்றகலான்" (திருவாய்மொழி 10-8-8) என் கண்வட்டத்தை விட்டுப் போகிறிலன் என்கிறதளவாக "என் கண்ணனை நான் கண்டேனே", (திருவாய்மொழி 2-8-10) "கலைப்பல் ஞானத்தென் கண்ணனைக்கண்டுகொண்டு" (திருவாய்மொழி 3-2-10), "நறுந்துழாயின்கண்ணியம்மா நானுன்னைக்கண்டு கொண்டே" (திருவாய்மொழி 4-7-7), "கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே", (திருவாய்மொழி 4-9-9) "கைதொழவிருந்தாயது நானுங் கண்டேனே" (திருவாய்மொழி 5-7-5), "ஏரார் கோலந்திகழக்கிடந்தாய் கண்டேனெம்மானே" (திருவாய்மொழி 5-8-1), "திருவிண்ணகர்க் கண்டேனே" (திருவாய்மொழி 6-3-1), "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக்கண்டு கொண்டேனே" (திருவாய்மொழி 9-4-8) என்று இப்பத்து சந்தையாலும் ஸாக்ஷாத்காரமாகச் சொல்லுகிறவிது "நெஞ்சென்னும் உட்கண்" (பெரிய திருவந்தாதி 28) என்கிற ஆந்தர சக்ஷுஸ்ஸான மாநஸஸாக்ஷாத்காரமாய் "கையபொன்னாழி வெண்சங்கொடுங் காண்பான் அவாவுவன் நான்" (திருவிருத்தம் 84), "அடியேன் காண்பானலற்றுவன்", (திருவாய்மொழி 1-5-7) "உம்மைக்காணு மாசையுள் நைகின்றாள்" (திருவாய்மொழி 2-4-2), "கூவுகின்றேன் காண்பான்" (திருவாய்மொழி 3-2-8), "மெய்கொள்ளக்காண விரும்பும் என்கண்களே" (திருவாய்மொழி 3-8-4), "கூவியுங்காணப் பெறேன் உனகோலமே", (திருவாய்மொழி 3-8-7) "உன்னை யெந்நாள் கண்டு கொள்வனே" (திருவாய்மொழி 3-8-8), "கோலமேனி காணவாராய்" (திருவாய்மொழி 4-7-1), "கூவுகின்றேன் காண்பான்" (திருவாய்மொழி 3-2-8) "பாவியேன் காண்கின்றிலேன்" (திருவாய்மொழி 4-7-10), "உன்னைக்காண்பான் நானலப்பாய்" (திருவாய்மொழி 5-8-4), "ஒருநாள் காணவாராயே" (திருவாய்மொழி 8-5-1) "என்றுகொல் கண்கள் காண்பதுவே" (திருவாய்மொழி 5-9-5), "விளங்க ஒருநாள் காண வாராய்" (திருவாய் மொழி 6-9-4), "உன்னைக்காண்பான் வருந்தியெனை நாளும்" (திருவாய் மொழி 6-9-6) "அலைகடல் கடைந்தவப்பனே காணுமாறருளாய்" (திருவாய்மொழி 8-1-1), "தொண்டனேனுன்கழல்காணவொருநாள்வந்து தோன்றாயே" (திருவாய்மொழி 8-5-6), "உன்னையெங்கே காண்கேனோ" (திருவாய்மொழி 8-5-10), "கனிவாய் சிவப்ப நீ காணவாராயே" (திருவாய்மொழி 9-2-4), "உன்னைக்காணக் கருதுமென்கண்ணே" (திருவாய்மொழி 9-4-1) என்று அவனைக்காண வாசைப்பட்டுக் கூப்பிட்ட சந்தைகள் அதிலிரட்டி யாகையாலே "கண்டுகளிப்பக் கண்ணுள் நின்றகலான்" (திருவாய்மொழி 10-8-7) என்று திருமாலிருஞ்சோலையளவும் அநுப₄வம் செல்லா நிற்கச் செய்தே பெற்றல்லது த₄ரியாதபடியான பா₃ஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை நடக்கையாலே பரஜ்ஞாநத்தை க₃ர்ப்பி₄த்துக்கொண்டு பரமப₄க்தியாயிருக்கிறது.

231. இருந்தமையென்றது பூர்ண பரஜ்ஞாநம்.

(இருந்தமையென்றது பூர்ணபரஜ்ஞானம்) "சூழ்விசும்பணிமுகில் தூரியம் முழக்கின" (திருவாய்மொழி 10-9-1) என்று தொடங்கி "அந்தமில்

பேரின்பத்தடியரோடிருந்தமை" (திருவாய்மொழி 10-9-11) என்று அர்ச்சிராதி$_3$ மார்க$_3$த்தையும் மார்க$_3$ஸ்த$_2$ரான புருஷர்களுடைய ஸத்காரத்தையும் தே$_3$ஶவிஶேஷப்ராப்தியையும் ப$_4$க$_3$வதநுப$_4$வத்தையும் ப$_4$க$_3$வத்ஸ்வரூபரூப கு$_3$ண விபூ$_4$திகளை ஸாக்ஷாத்கரித்தநுப$_4$விக்கிற நித்யஸூரிகளோடு ஏகரஸராய்க் கொண்டிருந்தநுப$_4$விக்கிறப்ரகாரத்தையும் யதா$_3$வாக ஸாக்ஷாத்கரிக்கையாலே சூழ்விசும்பணிமுகில் பூர்ணபரஜ்ஞாநமாய் இருக்கிறது.

௨௩௨. முடிந்த அவாவென்றது பரமப$_4$க்தி.

(முடிந்த அவா என்றது பரமப$_4$க்தி) இப்படி ஸாக்ஷாத்கரித்தவிது மாநஸாநுப$_4$வமாகையாலே யதா$_2$மநோரதா$_2$நுப$_4$வஸித்$_3$தி$_4$யாகத் திருவாணை யிட்டுத் தடுத்துப் பெருங்கூப்பீடாகக் கூப்பிட்டுப் பெற்றாலல்லது த$_4$ரிக்கவொண்ணாத படியாய் "முடிந்த அவாவில் அந்தாதி இப்பத்து" (திருவாய்மொழி 10-10-11) என்கிற "முனியே நான்முகன்" (திருவாய்மொழி 10-10) பரமப$_4$க்தித$_3$ஶையாயிருக்கிறது.

௨௩௩. இவை ஜ்ஞாந-த$_3$ர்ஶந-ப்ராப்தி அவஸ்த்தை$_2$கள்.

(இவை ஜ்ஞாநத$_3$ர்ஶநப்ராப்த்யவஸ்தை$_2$கள்) "ஜ்ஞாதும் த்$_3$ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" (கீ$_3$தை 11-54) என்றிந்த பரப$_4$க்தி பரஜ்ஞாந பரமப$_4$க்திகளை ஜ்ஞாந த$_3$ர்ஶந ப்ராப்தி அவஸ்தை$_2$கள் என்கிறார். எங்ஙனே என்னில் ப$_4$க$_3$வத் ஸம்ஶ்லேஷவிஶ்லேஷைக ஸுக$_2$து:க$_2$ராம்படியான ப்ரேமபூர்வகமான பரப$_4$க்தி ஜ்ஞாநத$_3$ஶையாயும், ப$_4$க$_3$வத்ஸ்வரூபரூப கு$_3$ண விபூ$_4$திகளை ஸாக்ஷாத்கரிக்கிற பரஜ்ஞாநம் த$_3$ர்ஶநத$_3$ஶையாயும் ஸாக்ஷாத்காரஸமநந்தரம் அப்போதே அநுப$_4$வியாவிடில் முடியும்படியான பரமப$_4$க்தி ப்ராப்தித$_3$ஶையாயுமிருக்கிற அவஸ்தா$_2$ விஶேஷம் என்கிறார்.

௨௩௪. அவித்$_3$யாநிவர்த்தக ஜ்ஞாந பூர்த்திப்ரத$_3$ ப$_4$க$_3$வத்ப்ரஸாத$_3$ாத் மோக்ஷலாப$_4$ம் என்கை மயர்வற வீடுபெற்றவென்ற ப்ரப$_3$ந்தை$_4$கார்த்$_2$யம்.

(அவித்$_3$யாநிவர்த்தக ஜ்ஞாநபூர்த்திப்ரத$_3$ப$_4$க$_3$வத்ப்ரஸாதா$_3$த் மோக்ஷலாப$_4$ம் என்கை) "மயர்வற மதிநலமருளினன்" (திருவாய்மொழி 1-1-1) என்றும் "அவாவற்று வீடு பெற்ற" (திருவாய்மொழி 10-10-11) என்றும் சொல்லுகையாலே ஸம்ஸாரகாரணமான அஜ்ஞாநத்தை நிவர்த்திப்பித்து ஜ்ஞாநபூர்த்தியை நிர்ஹேதுகமாக உபகரித்த ஜ்ஞாநாதிகு$_3$ணபூர்ணனான ப$_4$க$_3$வானுடைய ப்ரஸாத$_3$ம் பரமப$_4$க்தி த$_3$ஶையான பாகத்தையும் விளைத்து ஸ்வரூபாநுரூபமான மோக்ஷத்தையும் தரும் என்கை ஒன்றான ப்ரப$_3$ந்த$_4$த்துக்குத் தாத்பர்யமென்கிறார். (மயர்வற வீடுபெற்ற என்ற ப்ரப$_3$ந்தை$_4$கார்த்$_2$யம்) அநிஷ்டமான அஜ்ஞாநநிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டமான மோக்ஷத்தை ப்ராபிக்கை என்று ஓரர்த்த$_2$ம் என்கிறார்.

ஆக, ஸர்வேஶ்வரன் அஜ்ஞரான சேதநர்க்குத் தன் க்ருபையாலே புருஷார்த்த$_2$ ஜ்ஞாநம் உண்டாகைக்கு ஶாஸ்த்ரப்ரதா$_3$நம் பண்ணினமையையும், அந்த ஶாஸ்த்ரம் கொண்டு புருஷார்த்த$_2$ஜ்ஞாநம் பிறக்கை அரிதென்று

தாத்பர்யமான திருமந்த்ரத்தை வெளியிட்டமையையும், அந்த ஶாஸ்த்ர தாத்பர்யங்களுக்கு விஷயபே$_4$தம் தொடக்கமான வைஷம்யங்களையும், உப$_4$யத்திலும் நிஷ்ட$_2$ரான அதி$_4$காரிகளுடைய ப்ரகாரங்களையும், அந்த வ்யாஜத்தாலே ப்ரஸக்தமான திருவாய்மொழியினுடைய வைப$_4$வத்தையும், அதுக்கு வக்தாக்களான ஆழ்வார்களுடைய ப்ரபா$_4$வத்தையும், அந்த ப்ரபா$_4$வத்துக்கடியான ப$_4$க$_3$வந்நிர்ஹேதுக கடாக்ஷத்தையும், அந்த கடாக்ஷமடியாக இவர்க்குண்டான ஜ்ஞாநப$_4$க்திகளையும், அந்த ஜ்ஞாநப$_4$க்தி த$_3$ஶைகளில் இவர் பேசும் பேச்சுக்களையும், அந்த ப$_4$க்தி த$_3$ஶையில் ப$_4$க$_3$வத்ப்ரேமயுக்தர் எல்லாரோடும் இவர்க்குண்டான ஸாம்யத்தையும், அந்த ப$_4$க்தி த$_3$ஶையில் பேசும் அந்யாபதே$_3$ஶங்களுக்கு ஸ்வாபதே$_3$ஶங்களையும், அந்த ப$_4$க்திக்கு விஷயமான தி$_3$வ்யதே$_3$ஶங்களில் நிற்கிற எம்பெருமான்களுடைய கு$_3$ணங்களையும், அந்த கு$_3$ணவிஶிஷ்டவஸ்துவிலுண்டான அநுப$_4$வஜநிதப்ரீதிப்ரேரிதமாய்க் கொண்டு ப்ரப$_3$ந்த$_4$ங்கள் அவதரித்தமையையும், தத்வார்த்த$_2$ப்ரதிபாத$_3$நபரமான திருவாய்மொழி ப்ரப$_3$ந்த$_4$த்துக்கு ஸ்ரீகீ$_3$தாஸாம்ய முண்டான படியையும், அந்த கீ$_3$தையில் காட்டில் இதுக்குண்டான வ்யாவ்ருத்தியையும், இதில் இவர் உபதே$_3$ஶிக்கிற விஷய பே$_4$தத்தையும், அவ்வோவிஷயங்கள் தோறும் உபதே$_3$ஶிக்கிற அர்த்த$_2$ விஶேஷங்களையும், அந்த வ்யாஜத்தாலே உபதே$_3$ஶவிஷயமான ஶிஷ்ய லக்ஷணத்தையும், இந்த லக்ஷணமில்லாதார்க்கு உபதே$_3$ஶிக்கைக்கடியான இவருடைய க்ருபையையும், இப்படி இவர் க்ருபையாலே உபதே$_3$ஶிக்கையாலே அவ்வுபதே$_3$ஶம் ப$_2$லித்தபடியையும், உபதே$_3$ஶிக்கிற இப்ரப$_3$ந்த$_4$ங்கள்தான் தத்வஹித புருஷார்த்த$_2$ப்ரதிபாத$_3$கமான ரஹஸ்யத்ரயார்த்த$_2$மென்னு மிடத்தையும், அந்த ரஹஸ்யத்ரயத்திலும் ப்ரதிபாதி$_3$க்கப்படுகிற அர்த்த$_2$பஞ்சகங்களும் இந்த ப்ரப$_3$ந்த$_4$ங்களிலே ஸங்க்$_3$ரஹ விஸ்தரரூபேண சொல்லப்படுகிற ப்ரகாரத்தையும், ப்ரப$_3$ந்த$_4$ாரம்ப$_4$ங்களில் உண்டான லக்ஷணங்களில் ப்ரப$_3$ந்தா$_4$தியிலுண்டாயிருக்கிற ப்ரகாரத்தையும், ஸாது$_4$பரித்ராணாதி$_3$களாலே ஜக$_3$த்ரக்ஷணார்த்த$_2$மான ப$_4$க$_3$வதவதாரம் போலே ஜக$_3$த்$_3$ரக்ஷணார்த்த$_2$மாக இப்ப்ரப$_3$ந்த$_4$ம் அவதரித்ததென்னுமிடத்தையும், திருவாய்மொழியில் பத்துப்பத்தாலும் ப்ரதிபாதி$_3$க்கப்பட்ட எம்பெருமானுடைய பரத்வாதி$_3$ கு$_3$ணங்களையும், அக்கு$_3$ண விஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் அந்தப்பத்துப்பத்தாலு மிவ்வாழ்வார்க்கு தத்வஜ்ஞாநம் முதலாக ப்ராப்தி பர்யந்தமாகப் பிறப்பித்த த$_3$ஶாவிஶேஷங்களையும், இவர்தாம் பிறரைக் குறித்து உபதே$_3$ஶித்த ப்ரகாரங்களையும், இவர் ப்ரத$_2$மத்திலே ஆர்த்தி பிறந்திருக்கச்செய்தே ஈஶ்வரனிவரை வைக்கைக்கு ப்ரதா$_3$நாப்ரதா$_3$ந ஹேதுக்களையும், இவர்க்குப் பிறந்த பரப$_4$க்தி பரஜ்ஞாந பரமப$_4$க்திகளாகிற த$_3$ஶாவிஶேஷங்களையும், அஜ்ஞாந நிவ்ருத்திபூர்வகமாக ஜ்ஞாநப்ரத$_3$னான ப$_4$க$_3$வானுடைய ப்ரஸாத$_3$மே மோக்ஷ ஹேது என்னுடத்தையும், அநிஷ்டநிவ்ருத்தி பூர்வக இஷ்ட மோக்ஷப்ராபணமே இப்ரப$_3$ந்த$_4$தாத்பர்யமென்னுமத்தையும் அருளிச்செய்து தலைக்கட்டியருளினார்.

ஆயி திருவடிகளே ஶரணம்.

